# இந்தியாவில் காலனித்துவமும், தேசியவாதமும்


நூலாசிரியர்

**முரைவர் ரா. ராமசுப்பிரமணியன்**

உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,**

**திருநெல்வேலி – தமிழ்நாடு.**



**வரலாற்றுத் துறை**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**தொலைவு மற்றும் தொடர் கல்வி இயக்குனர்**

**திருநெல்வேலி – தமிழ்நாடு.012 627-**

**ஆகஸ்ட் - 2024**

| வ.எ | இயல் | உள்ளடக்கம் | ப. எ |
|---|---|---|---|
| 1 | I | காலனித்துவம் : இந்தியாவில் ஐரோப்பிய குடியேற்றங்கள் : - பிரஞ்சு - டச்சு - போர்த்துகீசியம்ஆங்கிலோ - பிரெஞ்சு மோதல்- வங்காளத்தை கையகப்படுத்துதல் -இந்திய மாநிலங்களுடனான உறவு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மற்றும் அதன் தாக்கம் - | 1-40 |
| 2 | II | இந்தியாவில் தேசியவாதத்தின் தோற்றம்: பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான அதிருப்தியின் வெளிப்பாடு -பாலயகாரர் கிளர்ச்சி - தென்னிந்தியக் கலகம் - 1806வேலூர் கிளர்ச்சி 1857 -கிளர்ச்சி முந்தைய தேசியவாதத்திற்கு - எதிர்ப்பு பழங்குடியினர் எழுச்சிகள் விவசாயிகள் :இயக்கங்கள் பிரபலமான காரணங்கள் - கிளர்ச்சிகள் சிவில் மற்றும் இயக்கங்கள், இயல்பு மற்றும் தாக்கம் இயக்கத்திற்கான தேசிய :இயக்கங்கள் சீர்திருத்த மத-சமூக - இந்திய - அடித்தளம் கருத்தியல்ேசிய காங்கிரஸின் முன்னோடி - தேசிய இந்திய தோற்றத்திற்கு .வழிவகுக்கும் இயக்கத்தின் காரணிகள் | 41-131 |
| 3 | III | பிரதிநிதித்துவ அரசியலில் முதல் சுயராஜ்யம் வரை இந்திய தேசிய காங்கிரஸின் தோற்றம் - ஆங்கிலேயர்களின் வேலை முறைகள் கொள்கைகள் கோரிக்கைகள் மற்றும் அணுகுமுறைகள் தேசிய - - எழுச்சி தீவிரவாதத்தின் - மதிப்பீடு கட்டத்தின் ஆரம்ப இயக்கத்தின் லீக் முஸ்லீம் - இயக்கம் சுதேசி மற்றும் பிரிவினை வங்காளம்தோற்றம் - புரட்சிகர இயக்கங்கள் – மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள் ரூல் ஹோம் - அரசு இந்திய - மாண்டேகு சீர்திருத்தங்கள் செல்ம்ஸ்ஃபோர்ட்- இயக்கங்கள் .1919 சட்டம் | 132-227 |
| 4 | IV | வெகுஜன இயக்கங்களின் சகாப்தம் :காந்தியின் ஆரம்பகால அரசியல் நடவடிக்கைகள் – ரவுலட் சத்தியாகிரகம் - ஒத்துழையாமை இயக்கம் - ஸ்வராஜ்ஜிஸ்ட்கள் - சைமன் கமிஷன் - வட்ட மேசை மாநாடுகள் - சிவில் ஒத்துழையாமை இயக்கம் மற்றும் அடக்குமுறை - இந்திய அரசு சட்டம், 1935மற்றும் மாகாண அமைச்சகங்கள் - சோசலிச சிந்தனைகளின் வளர்ச்சி காங்கிரஸ் மற்றும் உலக விவகாரங்கள் - வகுப்புவாதத்தின் வளர்ச்சி. | 228-261 |
| 5 | V | சுதந்திரம் மற்றும் பிரிவினை - காங்கிரஸ் மந்திரிகளின் ராஜினாமா : வெள்ளையனே வெளியேறு - கிரிப்ஸ் பணி - தனிநபர் சத்தியாகிரகம் சுதந்திரப் போராட்டத்தின் - இந்திய தேசிய இராணுவம் - இயக்கம் அமைச்சரவை பணி - சிம்லா மாநாடு - (47 - 1945) கடைசி ஆண்டுகள் முன்மொழிவு .அதிகார பரிமாற்றம் மற்றும் பிரிவினை - | 262-285 |
| | | **கூடுதல் வாசிப்பு நூல்கள்** | 286 |

# அலகு - 1

காலனித்துவம் - போர்த்துகீசியம் : இந்தியாவில் ஐரோப்பிய குடியேற்றங்கள் : - பிரஞ்சு - டச்சு ஆங்கிலோ வங் - பிரெஞ்சு மோதல்-காளத்தை கையகப்படுத்துதல் -இந்திய மாநிலங்களுடனான உறவு பிரிட்டிஷ் - ஏகாதிபத்தியம் மற்றும் அதன் தாக்கம்

**நோக்கங்கள்**

- இந்தியாவில் ஐரோப்பிய குடியேற்றங்கள்
- ஆங்கிலோவங் – பிரெஞ்சு மோதல்-காளத்தை காண்க
- இந்திய மாநிலங்களுடனான உறவு

**அறிமுகம்**

ஒரு நாடு தனது அதிகாரத்திற்கு உட்படுத்திய நாடுகளை ஆளுகைக்குட் படுத்துவதற்கான அமைப்புமுறை காலனித்துவமென அழைக்கப்படும். காலனித்துவத்திற்கு உட்படுத்தப்பட்ட நாடுகளின் மூலமாக பொருளாதார ரீதியான நன்மைகளைப் பெறுவதே இதன் பிரதான நோக்கமாகும். காலனித்துவம் நாடுகளை ஆட்சி செய்வதற்காக சுய நிர்ணயப்படுத்தப்பட்ட உரிமையை (Self-appointed right) பிரயோகித்தது. இது நீதியின் மூலமே நிறைவேற்றப்பட்டது. காலனித்துவம் மிகவும் நீண்ட காலப்பகுதியைக் கொண்டதுதொரு அதிகாரச் செயற்பாடாக அமைந்திருந்தது. ஆனால் காலனித்துவத்தில் இருந்து விடுபட்டு நீண்டகாலத்தைத் தாண்டியபோதும் காலனித்துவம் ஏற்படுத்திய விளைவுகள் தற்காலத்திலும் மக்களிடையே உள்ளது. இது காலனித்துவத்தின் பாதிப்புக்களில் இருந்து மக்கள் விடுபடாத நிலையினையே குறிக்கின்றது. தற்காலத்தில் உருவாக்கப்படும் கலையிலும் காலனித்துவத்தின் பாதிப்புக்களை இனங்காணமுடியும். உலகமயமாக்கல், பின்காலனித்துவம் அல்லது நவ காலனித்துவம் என்பனவற்றின் தாக்கத்தை வைத்துக் கொண்டு நோக்கும் போது காலனித்துவம் மிகவும் உறுதியான செயற்பாடாக காணப்பட்டது என்பதை விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது.

பழங்குடி மக்கள் அவர்கள் வாழும் நாட்டின் பூர்வீக குடிகள் என அழைக்கப்படுகின்றனர். அவர்கள் தனித்துவமான வாழ்க்கைமுறை, சமய நம்பிக்கை, மொழி, கலை, உணவுப் பழக்கவழக்கம் போன்ற பல விடயங்களின் ஊடாகத் தம் வாழ்வியல் தனித்துவத்தை அடையாளப் படுத்துபவர்கள். அவர்களால் உருவாக்கப்படும் கலைகளும் அவர்களின் வாழ்வியலின் ஒரு பகுதியாக விளங்கும். இந்த ஆய்வில் காலனித்துவம்

மற்றும் பின்காலனித்துவம் எவ்வாறு பழங்குடியினரின் கலைகளைப் பாதித்துள்ளன என்பது பிரதானப்படுத்தி நோக்கப்படும்.

**காலனித்துவ கருத்தியல்**

கடந்த காலங்களில் செல்வங்களைச் சேர்த்தல் ஒரு பெருமையாக கருதப்பட்டது. தற்காலத்திலும்கூட இந்நிலை தொடர்வதை நாம் அவதானிக்கலாம். பெரும்பாலான மக்கள் அவர்களின் வெற்றியினை செல்வங்களின் ஊடாக அளவிடுகின்றனர். இது கடந்த காலங்களில் ஏற்பட்ட ஊக்குவிப்பின் வெளிப்பாடாகவே இன்றுவரை தொடர்கிறது. செல்வம் பற்றிய ஆசையின் விளைவாக போட்டி மனோபாவம், நாடுகளை ஆக்கிரமிப்புச் செய்யும் மனோபாவம் என்பன உருவாகின்றன. முரண்பாடுகளினால் உருவாக்கப்பட்ட சித்தாந்தங்களினால் இவை மேம்படுத்தப்பட்டன. இது ஒருவரின் தனிப்பட்ட அல்லது பண்பாட்டு முன்னேற்றத்திற்குத் தேவையான ஒன்றாகவும் கருதப்பட்டது. இக் கருத்தியலே காலனித்துவச் செயற்பாட்டிலும் மையப்பொருளாக விளங்கியது.

பொருளாதார ரீதியான நன்மைகளைப் பெறுதல் பிரதானம் பெற்றதால் காலனித்துவ பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாரபட்சமான ஏற்றத்தாழ்வான மாற்றமானது பொருளாதாரத்தின் பரிணாம வளர்ச்சியில் தவிர்க் கமுடியாதகட்டமாகக் காணப்படுகினறது. இது காலனித்துவவாதிகளை அவர்களை பலம்பொருந்தியவர்களாகக் கட்டமைப்பதற்கு அடிப்படையானதாக அமைந்திருந்தது

காலனித்துவவாதிகளின் செயற்பாட்டிற்கு முன்னுதாராணமாக 19ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட டாவினின் சமூகக் கோட்பாடு (Social Darwinism) அமைகின்றது. அதிகாரம் பற்றியதாகக் காணப்பட்ட இக்கோட்பாடு அதிகாரத்தின் தன்மை, மற்றும் செயற்பாட்டில் அதன் பிரயோகம் என்பன பற்றி குறிப்பிடுகின்றது. சமூகச் செயற்பாட்டின் தீவிரமான போட்டித்தன்மையின் பிரயோகரீதியான தேவையினை விளக்குவதாக இக்கோட்பாடு சுட்டிநிற்கின்றது. டாவின்சின் “தக்கன பிளைக்கும்” என்னும் கருத்தானது 19ஆம் நூற்றாண்டின் உற்சாகரீதியான போட்டித் தன்மையில் பிரயோகிக்கப்பட்டது. சமூக விதிகளின் படி மிகவும் வன்மையானது என்பது மிகவும் சக்தியுடையது என்னும் சொல்லுடன் பெரும்பாலும் பொருத்திக் கொள்ளத்தக்கதாகக் காணப்படுகின்றது. மேற்கத்திய ஐரோப்பியர்கள், ஐரோப்பிய அமெரிக்கர்கள் மிகவும் பலம் வாய்ந்த வர்க்கங்களாகக் காணப்படின் அவர்கள் உணர்வுரீதியான வெற்றியினை அடைவதற்கு பொருத்தமானவர்கள் என்னும் கருத்தினை டாவின்சின் கோட் பாட்டினூடாக பெறுகின்றோம்.

இக்கருத்தாக்கத்தால் ஐரோப்பிய நாடுகளானவை ஏனைய நாடுகளில் இருந்து அதிகாரம் மிக்க நாடுகளாக மாத்திரம் அன்றி தார்மீக, பண்பாட்டுரீதியான விதிமுறைகளில் உயர்ந்தனவாகத் தம்மைக் கட்டமைத்துக்

கொண்டன. இந்த நாடுகள் வெற்றியை அடைவதற்கான உரிமையினைக் கொண்டனவாகக் கொள்ளப்பட்டன. ஏனெனில் அவை ஏனைய நாடுகளை ஆட்சி செலுத்துவதற்கும் அவற்றின் ஆன்மீக, தார்மீக தரங்களை உயர்த்துவதற்கான அத்தனை தகுதிப்பாடுகளையும் கொண்டனவாக கற்பிதம் செய்யப்பட்டன. இது ஏனையவர்களை ஆன்மீக ரீதியாக மாற்றி அவர்களை ஆட்சி செய்யத் தூண்டியது. இது வெள்ளையர்களின் ஆளுமை எனக் கருதப்பட்டது. காலனித்துவச் செயற்பாட்டில் மதமாற்றம் என்பது இவ்வடிப்படையில் அடிப்படையான தொரு விடயமாக அமைந்திருந்தது.

காலனித்துவம் என்பது ஒரு ஏகாதிபத்திய செயற்பாடாகவும் இது இனச்சார்பு எனப்படும் விடயத்துடன் இணைந்ததாகவும் காணப்பட்டது. பூர்வீக மக்களை நாகரிகப்படுத்தல் என்னும் பெயரில் அம்மக்களிடம் நிலைகொண்டுள்ள மரபுகள், பண்பாட்டம்சங்கள், அறிவியல், கலைகள் என்பன தொடர்புடைய அடிப்படையான அம்சங்களை குற்றமாகக் கருதி அவற்றை அழித்தனர். இங்கு காலனித்துவவாதிகளின் கருத்துக்கள், நம்பிக்கைகளே மேலானவை என்றும் அவற்றை விரிவுபடுத்தவேண்டும் என்னும் நோக்கத்தின் செயற்பாடாக இவை நிகழ்ந்தன. இதற்கெல்லாம் அவர்களின் ஏகாதிபத்திய மனோபாவத்துடன் கூடிய அதிகார செயற் பாடு காரணமாகின்றது. காலனித்துவ நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான மொழிகளின் அழிவு, உள்;ர் சமயம், பண்பாடுகளின் மீதான தாக்குதல், காலனித்துவ பாடசாலைகளுக்கு கட்டாயமாக சமூகமளிக்கவேண்டிய நிலைமை, பண்பாட்டு உணவு முறைமைகளில் ஏற்பட்ட தாக்குதல், பணப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட மாற்றம் என்பவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

நவீன காலனித்துவம் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் போக்குவரத்து என்பவற்றின் புதிய வடிவங்களுடன் ஒத்துப்போனது. தந்தி, புகையிரதம், புகைக்கப்பல் போன்றன கணினி எமது கைகளுக்கு வந்துசேர்ந்த காலப்பகுதியில் உருமாற்றம் அடைந்தன. தொடர்பாடலும் போக்குவரத்தும் பெரிய திட்டங்களுக்கு வழிவகுத்தன. பெரும்பாலான தொடர்பாடல் போக்குவரத்து வலையமைப்பானது பொருளாதார ரீதியான சுரண்டலுக்கே பயன்படுத்தப்பட்டது. குறிப்பாக பொருட்கள், மூலப்பொருட்களை துறைமுகத்திற்குக் கொண்டு செல்வதற்கே அவை இடப்பட்டன.

19ஆம் நூற்றாண்டானது காலனித்துவ வளர்ச்சியில் மிகவும் வேகமான காலப்பகுதியாக விளங்கியது. எல்லைகளின் விரிவாக்கம் கைத்தொழில் மயமாக்கத்திற்கு இட்டுச் சென்றது. மூலப்பொருட்களின் பிரித்தெடுப்பு மற்றும் பொருட்களின் உற்பத்திக்கான சந்தை என்பன கைத்தொழில் மயமாக்கத்திற்கான உதாரணமாக விளங்குகின்றது. இந்த விடயமானது தற்காலத்தில் சர்வதேசரீதியான உறவுகளை நிர்ணயிப்பதாக

இயங்குகின்றது. சர்வதேசத் தொடர்புகள் பொருளாதார ரீதியான போட்டித் தன்மையினை மேலும் அதிகரித்தது. இச்சந்தர்ப்பத்தில் காலனித்துவத்திற்கு சர்வதேச அரசியல் முறையினை நோக்கிய முன்னெடுப்பு அவசியமானதாகவிருந்தது. இங்கேயே சர்வதேச ரீதியான அரசியல் உறவுகளுக்கான ஆரம்பக் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. தேசிய இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு உலகச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. சர்வதேச அரங்கில் மிகப்பெரியது, சிறந்தது என்னும் கருத்து அழுத்தப்படுகிறது. "வல்லரசு" எனப்படும் சொல்லாடல் தேசிய போட்டியின் விளைவாக பயன்படுத்தப்படுகிறது.

**காலனித்துவ கருத்தியலுக்குள் பழங்குடியினரின் கலைகள**

காலனித்துவ ஆட்சியில் ஏற்பட்ட பாதிப்புக்களில் அடிப்படையானது பாரம்பரிய மரபுகள் அனைத்தையும் இல்லாமல் செய்து ஐரோப்பிய மரபுகளை அறிமுகப்படுத்தியதாகும். சுதேச மரபுகள் அனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாக இல்லாமல் செய்யப்பட்டன. பண்பாட்டுக்கலப்பு (Hybrid) அணுகுமுறை இதற்குப் பிரயோகிக்கப்பட்ட முதன்மையான அம்சமாகும். காலனித்துவ ஆட்சியில் கலை வரலாறு, மானிடவியல் போன்ற துறைகளில் பண்பாட்டுக் கலப்பாய்வு அணுகுமுறை முக்கியத் துவம் பெறுகின்றது. இவ்வணுகுமுறையில் குறித்த பிரதேசங்களின் கலை வரலாறு பார்க்கப்படுகின்றது. இந்த ஒழுங்குமுறைகள் அவற்றின் தோற்றத்தின் போதே மேற்கத்தியத் தன்மையுடையதாகக் காணப்பட்டதால் கலைப் பகுப்பாய்வின்போது உருவாக்கப்பட்ட கட்டமைப்பானது மேற்கத்திய தன்மையையே பிரதிபலிக்கின்றது. பண்பாட்டுக் கலப்பு முறை மேற்கத்திய மாதிரிகளை பழங்குடியினரின் பூர்வீக கலைச் செயற்பாடுகளுடன் இணைத்து உருவாக்கப்படுவதுடன் தொடர்புடையதாக விளங்குகின்றது. இக்கலப்பாக்கச் செயற்பாடு காலவோட்டத்தில் பூர்வீக முறைமைகளின் இழப்பிற்கும் ஐரோப்பிய மாதிரிகள் பிரதானப்படுத்தப் படுவதற்கும் வழியேற்படுத்தும். இன்னொருநிலையில் பூர்வீக மரபு களுடன் ஐரோப்பிய மாதிரிகள் கலக்கப்படுவதானது பூர்வீக மரபுகளின் அசல் தன்மையை இல்லாமல் செய்துவிடும். தனித்தன்மையென்பது இல்லாமல் போய்விடும். தனித்தன்மையை இழக்கச் செய்து ஐரோப்பிய முறைகளில் தங்கியிருக்கச் செய்வதற்கான ஒரு செயற்றிட்டமாக இது அமையும்.

ஒரு நிலையில் மேற்குறித்த மாற்றம் நிகழ இன்னொருநிலையில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட காலனித்துவச் செயற்பாடுகளில் ஒன்றாக பழங்குடியினரின் கலைப ˙பொருட்களின் ஒன்றுதிரட்டலானது விளங்கியது.

பழங்குடியினர் அவர்களுக்கான பண்பாட்டுத் தனித்துவத்துடன் வாழும் ஒரு இனமாவர். இவர்கள் இன்று அருகி வரும் இனங்களாகக்

காணப்படுகின்றனர். இவ்வினங்களின் அழிவில் காலனித்துவத்தின் விளைவான சிந்தனைகளின் ஆக்கிரமிப்பு முக்கிய பங்காற்றியுள்ளது. மதமாற்றம், பண்பாட்டு அழிப்பு, தாய்மொழி புறக்கணிப்பு, பிறமொழிக் கல்வி போன்ற பல காரணங்கள் இதில் தாக்கம் செலுத்துகின்றன. புதிய சூழலில் படைக்கப்படும் கலைகளும் ஐரோப்பிய மாதிரிகளின் தாக்கத்துடன் வெளிவருகின்றன. பழங்குடியினரின் கலைச் செயற்பாடுகள் மருவிச் செல்வதால், இன்று பெரும்பாலான அருங்காட்சியகங்கள் அருகிவரும் பழங்குடியினரின் பண்பாட்டின் ஒரு கூறான கலைப்பொருட் களை பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு கலைப்பொருட்களைச் சேகரிக்கின்றன. கலைப்பொருட்களின் தொகுப்பானது ஒரு விரிவான சேகரிப்பு செயற்றிட்டமாகக் மேற்கொள்ளப்படுகிறது. பெரும்பாலானோர் அவர்களுடைய சமூகத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட கலைப் பொருட்கள் அவர்களிடம் இருந்து எடுக்கப்படுவதை கவலையான விடயமாகக் கருதுகின்றனர். ஆனால் இதனைச் சேகரிப்பவர்கள் இதனை ஆராய்ந்து பாதுகாப்பதற்கான ஒரு செயல்த்திட்டமாகவே பெரும்பாலும் கருதுகின்றனர். ஆனால் கலைப்பொருட்களை எடுத்துச் செல்வது என்பது எதிர்காலத்தில் இந்த வம்சாவழியினைச் சேர்ந்த மக்களின் பொருட்களை இல்லாமல் போய்விடலாம் என்னும் அச்சத்தையே அவர்களிடம் ஏற்படுத்துகிறது. கலை உற்பத்தியாளர்கள், கலையை உற்பத்தி செய்யும் குறித்த வம்சாவழியினர், எதிர்காலத்தில் ஒன்று சேர்ந்து இக்கலைப்பொருட்கள் பற்றி கவனத்தை சிலவேளை களில் செலுத்தாமல் போகலாம். மானிடவியல் மற்றும் கலை வரலாறானது அறியப்பட்ட (அதாவது சேகரிக்கப்பட்ட) படைப்புக்களிலே தங்கியுள்ளது.

சேகரிப்பின் வரலாறானது மேற்கத்திய கலைச்சுவை, கருத்தியல், ஊக்குவிப்பு என்பவற்றினைப் பிரதிபலித்தே மேற்கொள்ளப்படுகின்றது. உரிமைத்துவம் மற்றும் காட்சிப்படுத்தல் பற்றிய கேள்வியினை இச் சேகரிப்பானது எழுப்புகின்றது. நேர்மையான முறையில் இப்பொருட்கள் சேகரிக்கப்பட்டதா? அதாவது அப்பொருட்களை வைத்துப் பாதுகாத்த மக்களின் அனுமதியுடன் எடுத்துச் செல்லப்பட்டனவா? சேகரிப்பாளரின் தேவைகள் பூர்த்தியானவுடன் இவை உரிய சமூகத்திற்கு திருப ்பி அனுப்பப்படனவா? இப்பொருட்கள் அச்சமூகத்தின் மரியாதை முக்கியத்து வத்தை பிரதிபலிக்கும் வகையில் காட்சிப்படுத்தப்படுகின்றனவா? காட்சிப்படுத்தப்படும்போது அவர்களின் அடையாளங்கள், நோக்கங்கள் பிரதிபலிக்கப்படுகின்றனவா? என்பன இங்கு எழும் முக்கிய வினாக் களாகும். இவ்வினாக்களுக்கான சாதகமான விடையை இக்கலைப் பொருட் சேகரிப்பும் காட்சிப்படுத்தலும் அளிக்குமானால் அது அர்த்த முடையதாக அமையும். பெரும்பாலான சந்தர்ப்பத்தில் இவை பூர்த்தி செய்யப்படுவதில்லை என்பது

உண்மை. மேற்கத்திய காலனித்துவக் கருத்தியலுக்குள் நின்று இச்செயற்பாடுகளில்

கலைப்பொருட்களின் சேகரிப்பானது பூர்வீக குடிகளின் அடை யாளத்தின் ஒரு வடிவமாக விளங்கும் கலைப்பொருட்களை அவர்களிடம் இருந்து அந்நியப்படுத்தும் செயற்பாடாகவும் கொள்ளப்படத்தக்கது. காலனித்துவம் அறிமுகப்படுத்திய பண்பாட்டுக் கலப்பு போன்ற கருத்தி யல்களுக்குள் நின்று மேற்கத்திய கலையாக்க முறைகளின் பாதிப்புக் களை உள்வாங்கி பழங்குடியினர் கலை படைக்கும் போது புதிதாக உருவாக்கப்படும் கலைகள் அவர்களின் பூர்வீக கலையடையாளங்களைப் பிரதிபலிக்கத் தவறிவிடுகின்றன. இந்நிலையில் இளந்தலைமுறையினர் அவர்களின் கடந்தகால அடயாளங்களாக அவர்களின் மூதாதையர்களினால் உருவாக்கப்பட்ட கலைப்பொருட்களினூடாகவே அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. இந்நிலையில் இவற்றைச் சேகரித்தல், காட்சிப்படுத்தல் என்னும் நோக்கில் எடுத்துச் செல்லல் அவர்களிடம் இறுதியாக மிஞ்சியுள்ள அடையாளங்களையும் தொலைத்துவிடும்.∴. இல்லாமல் செய்துவிடும் செயற்பாட்டின் ஒரு பகுதியாக அமைந்துவிடுகின்றது. எடுத்துக்காட்டாக, தென்கிழக்கு அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பழங்குடி களின் கலைப்பொருட்கள் காலனித்துவவாதிகளால் புரிந்துகொள்ளப் பட்டதொரு காலகட்டம் காணப்பட்டது. இக்கலைப்பொருட்களை 19ஆம் நூற்றாண்டில் ஆர். உறவினர்கள், ஏனைய கலைப்பொருட்கள் சேகரிப்பவர்கள், கலைப் பொருள் விற்பனை நிலையங்கள் என்பவற்றில் இருந்து சேகரித்துக் கொண்டார். இச்செயற்பாடு அவுஸ்ரேலியப் பழங்குடியினரின் பண்பாட்டை அவர்களிடம் இருந்து வேறுபடுத்தும் செயற்பாட்டின் ஒரு பகுதியாக அமைந்திருந்தது

மேற்கத்திய பண்பாட்டில் கலை பற்றிய நோக்கிற்கும் மேற்கத்தியம் அல்லாத பண்பாடுகளில் கலை பற்றிய நோக்கிற்கும் இடையே அடிப்படையான வேறுபாடு உள்ளது. மேற்கத்தியம் அல்லாத பண்பாட்டில் கலைக்குரிய கருத்துநிலையை நோக்கினால், அங்கு "கலை என்பது நாளாந்த வாழ்வியல் பற்றிய நோக்கு, உணவு தயாரித்தல் மற்றும் உபசரிப்புப் பழக்கங்கள், சமுக ஒழுங்கமைப்பு, சமயச் சடங்குகள் என அகன்ற விளக்கத்தைக் கொண்டுள்ளது. இவர்களின் பண்பாடு உள்ளடக்கும் கைப்பணி, சமயச் சடங்கு, பொருட் பண்பாடு, பொழுது போக்கு போன்றவற்றிலிருந்து கலையை வேறுபடுத்த முடியாதவிதத்தில் விளங்குகின்றது". இது மேற்கத்திய பண்பாட்டில் கலை என்னும் பதம் சுட்டும் அர்த்தத்தைவிடவும் அகன்ற தாகக் காணப்படுகின்றது.

புனிதப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், பாத்திரம் போன்றன மேற்கத்திய பண்பாடு அல்லாத பண்பாடுகளில் ஆழமான அர்த்தத்தைக்

கொண்டவையாகக் காணப்படுகின்றன. "ஒரு பண்பாடானது இன்னொரு பண்பாட்டின் மீது திணிக்கப்படும்போது ஏற்படும் வேறுபாடு மற்றும் கோட்பாட்டுரீதியான விளக்கம் என்பன அறிவுசார் காலனித்துவம் உருவாவதற்கு வாய்ப்பாக அமைகின்றது" என்பதற்கிணங்க மேற்கு நாட்டவரின் கலை பற்றிய விளக்கமானது கைப்பணி, கலை என்னும் வேறுபாட்டினை கூர்மையாக்கியது. ஏனெனில் பாத்திரமானது கைப்பணியாக அல்லது கைத்தொழில் உற்பத்தியாக வோதான் மேற்கத்திய பண்பாட்டில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. கலையாக வகைப்படுத்தப்படவில்லை. மேற்கத்திய நாடுகளில் கலை மற்றும் கைப்பணிக்கு இடையே படிமுறை ரீதியான தொடர்பு காணப் படுகின்றது. இருப்பினும் மேற்கத்தியம் அல்லாத சூழலில் ஒரு பாத்திர மானது பேணிப்பாதுகாக்கவேண்டிய பொக்கிசமாக அல்லது ஒரு வீட்டுப் பொருளாகவோ காணப்படும். அதன் பயன்பாட்டு தன்மை அதன் கலைத்துவ முக்கியத்துவத்தைக் குறைப்பதில்லை. பழங்குடியினர் அவர்கள் உற்பத்திசெய்யும் பொருட்களுக்கு வழங்கும் மரியாதை முக்கியத்துவம் என்பவற்றைக் குறைப்பதாக ஐரோப்பியரின் இக்கலை பற்றிய கருத்துருவாக்கம் அமைகின்றது.

கலையின் வகிபாகத்தால் தேசிய அடையாளத்தை உருவாக்கு வதற்கான ஒரு தருணம் கருத்தில் கொள்ளப்பட்டது. மக்கள் அவர்களின் பாரம்பரிய மரபுகள், பண்பாடுகளை மீளக்கட்டமைத்தல் என்பது அடிப் படையாக அமைந்திருந்தது. இவ்வடிப்படையில் 19ஆம் நூற்றாண்டில் ஓவியர்கள் பழங்குடியினரின் கருத்தியலுடன் தொடர்புடையதாக உலகைப் புரிந்துகொள்ளும் இயல்புடைய அப்பாவிகள், வீணாக்கப்படாத இயற்கையின் தருணம் என்பவற்றில் கவனம் செலுத்தினர். குறியீட்டி யலின் இணைவுடன் இயற்கை சார்ந்த விபரங்களில் கவனம் செலுத்தி உருவ ஓவியங்களை புதிதளிப்புச் செய்தனர். கட்டற்ற புனைவுத் தன்மை வாய்ந்த தரைத்தோற்ற ஓவியங்களின் ஒளிக் கையாள்கை வனாந்தரப்பகுதிக்கு அல்லது காடுகளுக்கு தார்மீகத் தன்மையுடையதொரு பரிமாணத்தை வழங்கியதை அவர்கள் ஓவியங்களின் ஊடாகக் கண்டு பிடித்தனர். இதற்கு மேலதிகமாக மிகைப்படுத்தப்பட்ட பெரியளவிலான பரப்பினைக் கொண்ட இயற்கைக் காட்சிகள் பெரியளவான வரைதளங் களில் ஓவியமாக வரையப்பட்டன. இவை வெளிப்பாட்டுத் தன்மையை நாலாபக்கமும் பரந்து விரிந்த புதிய நிலத்தோற்றத்தின் விரிவாக்கத்தை கொண்டுவந்தது. பியர்ஸ்ட்டட் (Bierstadt) அவர்களின் ஓவியமான ரொக்கீஸ் என்பதில் பரந்து விரிந்த பரப்பு, துய்மையான, வெளிப்படையான குளிர்மையான, பொன்மயமான ஆன்மீக ஒளி என்பவற்றை வெளிப்படுத்தியது. இந்த வெளிப் படையான தன்மை சுதந்திரமானதொரு உருவாக்கமாக விளங்கியது. இயல்திறன் வாய்ந்த

சுதந்திரமான இயக்கத்தை தங்குதடையற்ற இயல்பார்ந்த நிலப்பரப்பு வழங்கியது.

சுதந்திரம் மற்றும் தடங்கலற்ற செயற்பாடு என்பது தேசியம் பற்றிய கருத்தியலில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்தது. மேற்குலகில் காலனிய ஆதிக்கத்தின் கருப்பைக்குட்தான் தேசியம் தோன்றியது என்பதும் குறிப்பிடத்தக்கது (திருநாவுக்கரசு, மு., 2018:61). இருப்பினும் மனிதர்கள் நிலப்பரப்பில் கொண்டுள்ள தாக்கத்தை ஒத்ததாகவே இந்த ஓவியர்களின் அனுமானமும் காணப்பட்டது. காடுகளுடன் சிறிய பண்ணைகளை ஓவியங்களில் கொண்டுவருவதன் ஊடாக மக்களின் நிலங்களில் இருந்து அந்நியப்படுத்தப்படுவதை ஓவியங்களின் ஊடாக வெளிப் படுத்தினர். காலனித்துவத்தின் வெளிப்பாடுகளான வனாந்தரக் காடுகள் அங்கு குடியமர்த்தப்பட்ட மக்கள் போன்றோர் ஓவியச் செயற்பாடுகளின் மூலங்களாக வெளிப்படுத்தப்பட்டனர். பல்வேறு வகையில் பழங்குடியினர் இயற்கைச் சூழலின் ஒரு அங்கமாகப் பார்க்கப்பட்டனர். அப்பிரதேசத்தின் புதிய குடியமர்வாளர்கள் (Settlers) இயற்கைச் சூழல், சூழல் தொடர்பான புரிந்துணர்வு போன்றவற்றின் அடிப்படையில் பழங்குடியினரை குறித்த நிலத்தின் நீட்சியாக அல்லது அந்நிலத்துடன் இணைந்தவர்களாக நோக்கினர். இந்த நிலமானது கைப்பற்றப்பட்டு விவசாய நிலமாக மற்றும் வேறு தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டதால் பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையானது படிப்படியாக மறைந்துபோனது. இக்கருப்பொருள் அவ்வோவியங்களில் பிரதிபலித்தது.

பழங்குடியினரால் உருவாக்கப்பட்ட கலையிலிருந்து நிலத்தோற்றத்தின் இயற்கைத் தன்மையை ஒரு குறிப்பிட்ட கருத்தியலின் மூலம் எம்மால் வேறுபடுத்திப் பார்க்க முடியும். அவர்களின் இயற்கையுடன் இணைந்த வாழ்வியல் சூறையாடப்பட்டதை வெளிப்படுத்தினர். பழங்குடியினரின் கட்புலக் கலையானது இயற்கையுடன் மிகவும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. இயற்கையையும் பழங்குடியினரையும் ஒன்றிலிருந் தொன்று வேறுபடுத்திப் பார்க்கமுடியாது. இயற்கையுடன் ஒன்றிணைந்த தாகக் காணப்பட்ட அவர்களின் வாழ்வியல் அணுகுமுறையின் ஒன்றாகவே கலை அமைகின்றது. இதற்கு அப்பால் அவர்கள் கலையை வேறு எந்தவிதமான வரையறைக்குள்ளும் வைத்துப் பார்க்கவில்லை. எம்மிடம் இருந்து வேறுபட்ட அழகான மற்றும் விரிவான ஒன்றாக அவர்களின் கலை கருதப்படவேண்டும். அவர்கள் உருவாக்கிய ஒவ்வொரு பொருட்களிலும் இயற்கை, இயற்கையுடன் தொடர்டைய பெறுமானம் என்பன உட்பொதிந்து காணப்படுகின்றது. உதாரணமாக புனித குழாய் விழாவில் (Calumet ceremany) காணப்படுகின்ற பிரதான மூலங்களான தண்டு, குழாயின் கிண்ணம் என்பன ஆண், பெண், வானம், உலகம் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றன. இவை அனைத்தும்

ஒன்றிணைந்து உலகியல் சார்ந்த பகுதிகளின் குறியீட்டுரீதியான ஒன்றிணைப்பினைப் பிரதிபலிக்கின்றன. இயற்கை தொடர்பான ஒரு வாழ்வியல் தத்துவம் அக்கலைப்பொருளில் தாங்கியிருந்தது. கட்லினாயிட் (Catlinite) எனப்படும் பாறைத் துண்டைப் பிரயோகித்து ஓவியக்குழாய் கிண்ணத்தைச் செதுக்குவதற்கு பயன்படுத்தினர். இதனை அவர்களின் முன்னோர்கள் மற்றும் எருமைகளின் உறைய வைக்கப்பட்ட இரத்தத் திலிருந்து பிறப்பாக்கம் செய்யப்பட்டதாக கருதினர். பழங்குடி மக்களின் கலையில் இயற்கையின் ஆத்மீக சக்தியினை வெளிப்படுத்துகின்ற குறியீட்டுரீதியான பெறுமானத்தினைக் காணமுடிகின்றது. இது கலைத்துவ மூலங்களுடன் உட்பொதிந்து காணப்படுகின்றது. ஐரோப்பியர் கலைக்கென வகுத்துள்ள நியமங்களுக்குள் நின்று படைக்கப்படாத இவர்களின் கலைப்பொருட்கள் அம்மக்களின் வாழ்வியல் ஒழுங்கமைப்பில் உட்பொதிந்து காணப்படும் சமயம், அறிவியல், பண்பாடு, மருத்துவம் என்னும் அம்சங்களின் இணைவாகவே வெளிப்படும். பழங்குடியினரால் உருவாக்கப்படும் கலைகளின் அர்த்தத்தை அம்மக்களின் சமூக, அழகியல், தத்துவார்த்தப் பின்புலத்தில் வைத்தே நோக கவேண்டும்.

நவீன கைத்தொழில் பேட்டைகள், பல்தேசியக் கம்பனிகளின் உருவாக்கம் என்பன பழங்குடியினரின் இயற்கையுடன் ஒன்றிய வாழ்வியலையும் அவர்களின் வாழ்வியலுடன் இணைந்த கலைச் செயற்பாட்டையும் சிதைத்த காரணிகளில் ஒன்றாக விளங்குகின்றது. பழங்குடியினர் இயற்கைச் சூழலில் இருந்து எவ்வாறு தனிமைப்படுத்தப் படுகின்றனர் என்பதையும் அத்தனிமைப்படுத்தலானது அவர்களின் இயற்கையுடன் ஒன்றிய வாழ்வையும் அவ்வாழ்வியலின் வெளிப்பாடான கலைச் செயற்பாட்டையும் எவ்வாறு பாதித்துள்ளது என்பதையும் புரிந்து கொள்ளப் போதுமான உதாரணமாகும். இவ்வாறு உலகெங்கிலும் வாழும் பழங்குடியினர் ஏதே ஒரு விதத்தில் காலனித்துவத்தின் நெருக்கடி நிலைமைகளால் பாதிக்கப்படுகின்றனர். இயல்பு வாழ்க்கையின் சிதைவு அவர்களின் கலைச் செயற்பாடுகளையும் அவர்களில் இருந்து அந்நியப்படுத்தி விடுகின்றது. காட்டுமிராண்டிகள் என பழங்குடியினரைச் சுட்டும் காலனித்துவ கருத்தியல், காட்டுமிராண்டிகளை நாகரிகம் அடைந்தவர்களாக மாற்றவேண்டும் எனக்கூறி அவர்கள் மீது திணித்த அழுத்தங்கள் அவர்களின் வாழ்க்கை முறையைப் பாதித்தது. இந்நாகரிகப்படுத்தலானது அவர்களின் கலைகளை அவர்களிடம் இருந்து அந்நியப்படுத்தியது.

**பின்காலனித்துவமும் கலையும**

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் காலனித்துவ ஆட்சியாளர்கள் அதிகாரங்களை விட்டு வெளியேறிய பிறகும் காலனித்துவ நாடுகளின் மீதான அரசியல் கட்டுப்பாடு பிரித்தானியா, பிரான்ஸ் ஆகியவற்றிடம் இருந்தது.

அவர்கள் ஸ்தாபித்த பொருளாதார உறவுமுறையாலேயே அவர்களின் செல்வாக்கு இன்றுவரையும் காணப்படுகின்றது. காலனித்துவ வாதிகளின் தேசிய செல்வாக்கு இல்லாமல் போனதால் இந்நாடுகளில் பலத்துடன் இருந்த பழங்குடிகள் மற்றும் பூர்வீகமாக நிலைகொண்டுள்ள மக்கள் குழுவினர் அவர்களின் பாதுகாப்பிற்காக ஒன்றிணையவேண்டிய தேவையிருந்தது.

பல்வேறு விதமான நிகழ்வுகளின் ஊடாக தேசியவாதம் பற்றிய கருத்துருவாக்கமானது உறுதிவாய்ந்ததொரு மரபுரிமைச் செல்வமாகவே காலனித்துவ காலப்பகுதியில் கருத்திற்கொள்ளப்பட்டது. பல புதிய அரசுகள் அவர்களின் நாட்டை கட்டியெழுப்ப முயலும்போது அவர்களின் பாரம்பரிய கலை மரபுகளை மீட்டெடுத்து தனித்துவத்தை உறுதிப்படுத்தினர். இது எதிர்மறையான விளைவுகளை அவர்களுக்கு வழங்கியது. காலனித்துவத்தை இல்லாமல் செய்த அதே அமைப்பான தேசியவாதம் இப்போது பழய காலனித்துவ முறைமைகளை அவர்களுக்குள்ளேயே மேலும் ஆழமாக்குவதற்கு காரணமானது. காலனித்துவத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஒன்றாக அமைந்திருந்த காலனித்துவத்திற்கு முந்திய சமூக நிலவரங்களுக்கு திரும்பிச் செல்லும் ஆசையானது ஐரோப்பிய தேசிய மாதிரிகளை அடிப்படையாகக் கொண்ட பின்காலனித்துவ தேசிய அரசுகளை கட்டமைப்பதாக அமைந்திருந்தது. அத்துடன் தேசியம் பற்றிய கருத்தியலின் விளைவாக சக்திவாய்ந்த குழுக்கள் சிறிய குழுக்களை அடக்கியதுடன் அவைகளுக்கிடையே பாரபட்சத்தையும் காட்டியது. இவ்வாறான செயற்பாடுகள் காலனித்துவத்தில் இருந்து விடுதலைபெற்ற நாடுகளில் முனைப்புப் பெற்றன.

எடுத்துக்காட்டாக இலங்கை காலனித்துவத்தில் இருந்து விடுதலை பெற்ற பின்னர் நாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சியில் தேசிய அரசு பண்பாட்டு, சமூக அம்சங்களை மீள்கட்டமைத்தல் என்னும் நோக்கு பிரதானம் பெற்றிருந்தது. இப்பின்புலத்திலேயே பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திரா அவர்கள் தேசிய நாடகம் பற்றிய கருத்தாக்கத்தின் விளைவாக மனமே, சிங்கபாகு என்னும் நாடகங்களை 1960களில் தயாரித்திருந்தார். தேசிய நாடகம் பற்றிய அவரின் கருத்துரு வாக்கம் ஐரோப்பிய நாடக மரபு, கீழைத்தேச நாடகமரபு, உள்ளூர் மரபு என்பவற்றின் இணைவில் வெளிவந்ததால் இலங்கைக்கே உரித்தான தேசியத் தனித்துவத்தைக் கட்டமைக்க முடியாமல் போகின்றது. இதனை ரொகானா ஆர்.வசலா (சுழாயயெ சு. றுயளயடய) அவர்களின் பின்வரும் கூற்று உறுதிப்படுத்தும் “அவர் பழங்குடியின் அரங்க மூலத்துடன் நாடக வடிவத்தை விருத்தி செய்ய விரும்பினார். ஐரோப்பிய இயல்புவாத வடிவம் இலங்கை பார்வையாளர்களுக்கு பொருத்தமற்றது எனக் கருதினார். மனமே, சிங்கபாகு என்னும் இரண்டு நாடகங்களும் அவரின் நீண்டநாள் தேசிய நாடக வடிவத் தேடலின் விளைவாக உருப்பெற்றவை. இதன் உண்மையான வடிவத்தை பன்முகத்

தன்மைகொண்ட சுதேச மரபு அது போன்ற கீழைத்தேச, மேலைத்தேச அரங்க கலை பாணிகள் என்பவற்றின் ஆதிக்கத்திற்குட்பட்டு பொருத்தமான மூலங்களை இணைத்து பெற்றுக்கொண்டு வளப்படுத்தினார்"

இதே தவறு பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களினாலும் விடப்படுகின்றது. நவீன சமூக வாழ்வியல் சூழலுக்கேற்ப சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய கலை வடிவம் பற்றிச் சிந்தித்த சரச்சந்திராவால் சுதேசிய அடயாளங்களை பாதுகாக்க முடியாமல் போனது கவலைக்குரிய விடயமே. தேசிய நாடகம் பற்றிய கருத்தியலுக்குள் தேசியத் தனித்துவம் தவறவிடப்படுகின்றது. அடுத்து சரச்சந்திரா அவர்கள் தேசிய நாடகத்தைக் கட்டமைக்கும்போது சிங்கள சமூகத்தினரை மாத்திரம் கருத்தில் கொண்டாரேயன்றி இலங்கையில் வாழும் ஏனைய தேசிய இனங்களை அவரால் கருத்திற்கொள்ள முடியாமல் போனது. இதன் நீட்சியாகசு. வித்தியானந்தன் தமிழ் மக்களுக்கான தேசிய அரங்கை பிற்காலத்தில் கட்டமைக்க முயன்றார். இச்செயற்பாடுகள் எல்லாம் நாட்டில் உள்ள பழங்குடியினர், விளிம்புநிலை மக்கள் ஆகியோரை தேசிய அரங்கு பற்றிய கருத்தியலுக்குள் உள்வாங் காமலேயே மேற்கொள்ளப்பட்டன.

இப்பின்புலத்தில் 'உள்ளார்ந்த காலனித்துவம்' 4 என்னும் கருத்துரு வாக்கம் செயல் வடிவம் பெறுகின்றது. உள்ளார்ந்த காலனித்துவம் என்னும் பதம் பழங்குடி மக்களின் வாழ்வியலை எவ்வாறு பாதிக்கின்றது என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இவ்விடத்தில் நான்காம் உலக நாடுகள் என்னும் சொல்லாடல் அவசியமானதொன்றாக விளங்குகின்றது. தேசியவாதம் என்னும் கருத்துருவாக்கம் மூன்றாம் உலக நாடுகளுக்கு வற்புறுத்தப்படும் விடயமாகவே அமைந்திருந்தது. முதலாம் உலக நாடுகளான மேற்கு நாடுகள் "மூன்றாம் உலக நாடுகள்" என்னும் பதத்தை வறிய நாடுகள் என்றே அர்த்தப்படுத்துகின்றன. இந்நாடுகளில் தேவையிலும் குறைவான சமூக நிலவரங்களும் வசதிகளும் இருக்கும் என நம்பப்படுகிறது. இது அரசியல் ரீதியாக இந்நாடுகளைக் குறிக்கும் அந்தஸ்தாகவே அமைந்திருந்ததுடன் இவை முன்னர் காலனித்துவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தவை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

காலனித்துவத்திற்கு எதிரான உந்தல் சுதந்திரத்தை அவற்றுக்கு உறுதிப்படுத்துவதாக அமைந்திருந்தது. "நான்காம் உலக நாடுகள்" என்னும் பிரயோகம் காலனித்துவத்தில் இருந்து விடுதலைபெற ்ற தேசிய அரசுகளால் பலமற்றதாக விளங்கிய விளிம்புநிலை மக்கள், பழங்குடியினரைச் சுட்டுவதற்குப் பிரயோகிக்கப்பட்டது. கறுப்பர்கள், நாட்டின் பிரதிநிதிகளாகத் தங்களை இணைத்துக்கொள்ள முயற்சிக்கும் ஏனைய இனத்தினர், மற்றும் சுதேச குடிகள், பழங்குடிகள், அதற்குச் சமமான ஏனைய மக்கள்

குழுவினருக்கு இப்பதம் கையாளப்படுகிறது. இவர்களிடமுள்ள உள்;ர் அறிவு, மொழி, பண்பாடு, மற்றும் பெறுமான முறைகள் என்பவை சர்வதேச சந்தையின் பிரதான பெறுமானமாக மாற்றியமைக்கப ்பட முடியாதவையாக விளங்குவதால் இவர்கள் நான்காம் உலகமாக பாகுபடுத்தப்படுகின்றனர். இதனால் அதிகாரம், சுய உறுதிப்பாடு என்பவற்றில் மிகவும் கூடுதலான பாரபட்சமான நிலையினை பழங்குடி மக்களுக்கு புதிதாக உருவாகிய தேசிய அரசுகள் வழங்கின. தேசிய அரசு உருவாக்கத்தில் மூன்றாம் உலகம் என்னும் வகைப்பாட்டிற்குட்பட்ட மக்கள் பங்குவகிப்பர். “நான்காம் உலக நாடுகள்” என்னும் பிரிப்பு இச்சமூகத்தினரை மூன்றாம் உலகத்தினர் வேறுபடுத்தி பார்த்த நிலையிலிருந்தே உயிர்ப்புப் பெறுகின்றது. இதனால் அதிகளவான பழங்குடி சமூகத்தினருக்கு இறைமை என்பது தெளிவற்றதொரு நோக்க மாக அமைந்திருந்தது.

தேசிய அரசியல் செயற்பாட்டில் நான்காம் உலகத்தினரின் மொழி, சமயம், அறிவு, மருத்துவம், கலை, பண்பாட்டு மரபுகள் எவையும் இணைத்துக்கொள்ளப்படாதவையாக விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக இலஙகையில் தங்களை பழங்குடியினராக அடையாளப்படுத்தும் வேடர்கள் இலங்கையின் தேசிய செயற்பாட்டில் இணைந்துள்ள ஏதாவதொரு தேசிய இனத்துடன் அவர்களை இணைத்தே தம் அரசியல் பிரதிநிதித்துவத்தை தக்கவைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்படுகின்றனர்.

பழங்குடியினரின் கலைச் செயற்பாடு பற்றி நெல்சன் கிறபன் (Nelson Graburn) அவர்கள் சுட்டிக்காட்டும்போது பாரம்பரியக் கலைஞர் கள் கலை படைக்கும்போது படிப்படியாக அதன் மூலச் செயற்பாட்டில் இருந்து வேறுபட்டுச் செல்கின்றனர் என்கின்றார். அவ்வாறு உருவாக்கப்படும் கலைப்பொருட்கள் பழைய மூலவடிவங்கள் போன்று பலமானதாகவோ அளவில் பெரியதாகவோ அல்லாது அவை வியாபார நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்றன என்றார். சடங்குசார்ந்த நோக்கத்தை பிரதானப் படுத்தியதாகவோ, பழைய விடயங்களைக் காட்டவேண்டும் என்னும் நோக்கமோ இங்கு பிரதானம் பெறுவதில்லை. இப்பொருட்களின் கவர்ச்சிகரமான தோற்றம் வியாபாரரீதியான பெறுமானத்தைக் கொண்டுள்ளதே இவை உருவாக்கப்படுவதற்கான காரணமாக அமைகின்றது. ஒரு எடுத்துக்காட்டைக் குறிப்பிடுவதாயின் களிமண் பாறையில் உருவாக்கப்பட்ட மிகச் சிறியதான குலமரபுச் சின்னமாகக் கருதப்படும் பேழையொன்றினைக் குறிப்பிடலாம். இதை உருவாக்கு வதற்குப் பயன்படுத்தப்படும் களிமண் பாறை விலையுயர்ந்ததாகவும் கறுப்பு வண்ணத்திலானதாகவும் விளங்குகின்றது. இது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வியாபாரிகள், சுரங்கத் தொழிலாளர், உல்லாசப் பயணிகள்

போன்றோருக்காக உருவாக்கப்பட்டது. இப்போது உருவாக்கப்படுபவை ஆரம்பகாலத்தில் உருவாக்கப்பட்டதன் சிறிய மாதிரிகளாகவே விளங்குகின்றன. மூலவடிவத்தில் இவை ஒரு கலை எனச் சுட்டிக்காட்டப்படவில்லை. புதுமையானதாகவும் புதிதுபுனைவாகவும் விளங்கும் இவை வியாபார நோக்கை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்றன. இப்போது இவை கலைத்துவ அந்தஸ்தைப் பெறுகின்றன.

அவுஸ்ரேலிய மோர்னின்க்டன் பிரதேசத்தைச் சேர்ந்த நன்கு அறியப்பட்ட பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த கலைஞரான டிக் ரௌசி (Dic Roughsey) அவர்கள் இருவிதமான ஓவியப் பாணிகளை வேறுபட்ட மூலங்களைக் கொண்டு படைக்கும் திறனுடையவராகக் காணப்பட்டார். அவற்றில் ஒன்றாக மரப்பட்டை ஓவியம் (Bark Painting) விளங்குகின்றது. இவரின் மரப்பட்டை ஓவியங்கள் உல்லாசப் பயணிகளுக்கு விற்பனை செய்வதனை கருத்தில் கொண்டே உருவாக்கப்படுகின்றன. பாரம்பரிய மரப்பட்டை ஓவியங்கள் அறிவூட்டல், சடங்கு நோக்கங்களுக்காகவே உருவாக்கப்பட்டதுடன் நீண்டகால பயன்பாடு அற்றதாகவும் விளங்கியது. இது பழங்குடியினரின் கலைக்குரிய அடிப்படையான பண்பாக அமைந்திருந்தது. இந்த நியமங்களை உல்லாசப் பயணிகளுக்காக உருவாக்கப்படும் வார்க் ஓவியம் இழந்துவிடுகின்றது. சடங்குகளின் போது சடங்குத் தேவைக்காக மரப்பட்டையில் ஓவியம் படைக்கும் பழக்கம் இலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பில் அமைந்துள்ள முறுத்தானையில் வாழும் வேடக்குடிகளிடமும் உள்ளது. அவர்களால் படைக்கப்படும் ‘கடுவ’ எனப்படும் பொருளைக் குறிப்பிடலாம். இது இன்றுவரை சடங்குத் தேவையை மாத்திரம் கருத்திற்கொண்டே படைக்கப்படுகின்றது. இவர் களின் பாரம்பரிய வாழ்வியல் கட்டமைப்புக்கள் மாறாமல் இருப்பது அப்பொருளின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் காரணியாகின்றது.

அடுத்து மாற்றமடைந்துகொண்டிருக்கும் இடைக்காலத்திற்கு உரியதொன்றை உதாரணமாகச் சுட்டிக்காட்டலாம். திமிங்கிலத்தின் எலும்பில் இருந்து செதுக்கி உருவாக்கப்பட்ட விற்பனைப் பொருட்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். வூட்லன்ட் இந்தியர்களின் குயில்ஸ் பெட்டி என்னும் ஒன்றை புதுமையாகப் படைக்கின்றனர். இவை பழங் குடியினர் அல்லாதவர்களின் சேகரித்துப் பாதுகாக்கும் பொருட்களாக விற்பனை செய்யப்படுகின்றன. உண்மையில் சொல்லப்போனால் அக்காலத்தில் பாவனையில் இருந்த பொருட்கள் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிகளிலேயே இல்லாமல் போய்விட்டன. 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மீண்டும் பாரம்பரிய கலைகள் உயிர்ப்பிக்கப்படுகின்றன அல்லது மீள் உருவாக்கம்

செய்யப்படுகின்றன. இதற்கு வடமேற்கு பிரதேசங்களில் உருவாக்கப்படும் முகமூடிகள் போன்றவற்றை உதாரண மாகக் குறிப்பிடலாம். இவை இடைப்பட்ட காலத்திற்குரிய நினைவுப் பொருட்களாகவும் புதுமையான படைப்புக்களாகவுமே விளங்குகின்றன. இவ்வாறு பாரம்பரிய கலையின் எழுச்சியின் நவீன மறுமலர்ச்சிக் காலப்பகுதியில் ஏற்கனவே உள்ள விளிப்புணர்வை வைத்துக்கொண்டு வியாபார நோக்கத்தைப் பிரதானப்படுத்தி கலைப்பொருட்கள் என்னும் நிலையிலிருந்து விடுபட்டு வியாபார உற்பத்திகளாக உருவாக்கப் படுகின்றன. இந்தப் பொருட்கள் தொடர்பான பயபக்தியுடன் கூடிய விழிப்புணர்வு, அறிவு என்பவை இப்பொருட்களை உருவாக்கிய பிற் காலச் சந்ததியினரிடமும் காணப்படுகின்றது. இந்நிலைமை இவற்றைச் சேகரிப்பவர்களிடமும் உள்ளது. ஏனெனில் பின்காலனித்துவ சூழலில் பாரம்பரிய நம்பிக்கையை ஏற்படுத்தி இவற்றைச் சேகரிப்பவர்களைக் கவர்வதற்கான ஒரு விற்பனைத் தந்திரோபாயமாக இதனைக் குறிப் பிடலாம்.

பழங்குடி மக்களின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு அவர்களின் இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள முடியாமல் போனதே அடிப்படைக் காரணமாகும். காலனித்துவ ஆட்சியாளர் பழங்குடியினரின் ஆளுகைக் குட்பட்ட பரந்து விரிந்த காடுகள், மற்றும் அதனுடன் இணைந்த இயற்கை அமைவிடங்கள் என்பவற்றில் மக்களைக் குடியமரச் செய்தும் ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்தியும் இயற்கையின் அழிவிற்குக் காரணமாகின்றனர். காலனித்துவ ஆட்சியின் போதே அவர்களின் வாழ்விடங்கள் வரையறை செய்யப்பட்டு குறிப்பிட்ட நிலத்திற்குள் அவர்களின் வாழ்வு வரையறுக்கப்படுகின ்றது. இந்நிலை புதிதாக உருவாக்கப்படும் தேசிய அரசாங்கங்களினாலும் தொடரப்படுகின்றது. அத்துடன் பின்காலனித்துவச் சூழலில் காடுகள், இயற்கை அமைவிடங்கள் மருவிப்போகும் நிலையுருவாக அவற்றைப் பாதுகாப்பது தொடர்பான அக்கறை ஏற்படுகின்றது. இது இயற்கையின் அங்கமான பழங்குடியினரை இயற்கையில் இருந்து பலமாக வேறுபடுத்துகின்றது. எடுத்துக்காட்டாக இலங்கையில் நடைமுறையில் உள்ள இயற்கையைப் பாதுகாப்பது தொடர்பான சட்டம் வனாந்தரக் காடுகளில் நுழைவது, மிருகங்களை வேட்டையாடுவது, இயற்கைப் பொருட்களைப் பெறுவது தண்டனைக்குரிய குற்றமாகக் குறிப்பிடுகின்றது. “எந்த ஒரு நபரும் எந்தவொரு காட்டுப் பகுதியிலும் காட்டு மிருகங்களை வேட்டையாடவோ, துப்பாக்கியால் சுடவோ, கொல்லவோ அல்லது எடுத்துச்செல்லவோ அல்லது எந்தவொரு பறவை அல்லது ஊர்வனவற்றின் முட்டையை எடுத்துக் கொல்லலோ அல்லது அழிக்கவோ அல்லது எந்தவொரு பறவையினதும் கூட்டை அழிக்கவோ எடுத்துச் செல்லவோ முடியாது” என இது விபரிக்கப்படுகின்றது.

பின்காலனித்துவச் செயற்றொடரில் கலை, அழகியல் வெளிப்பாடானது ஒரு பிரதான பகுதியாக நோக்கப்பட்டது. புதிய அரசுகள் தங்களின் நாட்டைக் கட்டியெழுப்ப முனையும்போது கலை, அழகியல் அம்சங்களையும் இணைத்துக்கொண்டு வளர்த்தெடுக்க முனைந்தன. அவர்களின் பாரம்பரிய கலைகளை மீட்டெடுத்து தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்த முயன்றன. இருந்தும் இது எதிர்மறையானதொரு செயற்பாடாவே பின்காலனித்துவச் சூழலில் அமைந்திருந்தது.

**முடிவுரை**

காலனித்துவம் ஐரோப்பியர்களின் ஆக்கிரமிப்பு மனோபாவத்துடன் தொடர்புடைய பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் செயற் பாடாக அமைந்திருந்தது. நாடுகளைக் கட்டுப்படுத்தி காலனித்துவவாதி களின் பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டு மரபுகளை திணிக்கும் செயற்பாடாக அமைந்திருந்தது. இச்செயற்பாடுகளால் காலனித்துவத்திற் குட்பட்ட நாடுகள் காலனித்துவத்துக்குட்படுத்திய நாடுகளில் தங்கியிருப்பதற்கான நிலைமையை ஏற்படுத்தியது. காலனித்துவத்திற்கு எதிரான காலனித்துவ நாடுகளின் உந்தல் தேசியவாதமாக வெளிப்பட்ட துடன் அது காலனித்துவத்தில் இருந்து விடுபடவும் காரணமாக அமைந்தது. காலனித்துவத்தில் இருந்து விடுதலை பெற்ற பின்னர் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய மூன்றாம் உலக நாடுகள் விளிம்புநிலையில் இருந்த பழங்குடி மக்கள், ஏனைய சமூகத்தினரிடையே இன்னொருவிதமான ஒடுக்குமுறையைப் பிரயோகித்தன. இது நான்காம் உலக நாடுகள் என்னும் ஒரு பாகுபாட்டை ஏற்பத்தியது. இந்நிலையில் காலனித்துவ ஆட்சியிலும் காலனித்துவத்தில் இருந்து விடுதலை பெற்ற பின்னரும் பழங்குடியினரின் வாழ்வு ஒரு கேள்விக்குறியாகவே அமைந்திருந்தது. அவர்களின் வாழ்வியல் அடையாளங்களின் இழப்பு அவர்களின் கலைச் செயற்பாடுகளிலும் தொடர முடியாத விதத்தில் அவர்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தது. ஒரு நிலையில் அவர்களின் கலையடையாளங்களே அவர்களின் வாழ்வாதாரத் தேவையைப் பூர்த்திசெய்யும் விற்பனைப் பண்டங்களாக உருமாற்றம் பெறுகின்றன.

**இந்தியாவில் ஐரோப்பிய குடியேற்றங்கள்**

இடைக்காலத்தின் கடைசிப் பகுதியில் இந்தியாவுக்கு புதியபாதை காண வேண்டும் என்ற ஆர்வம் ஐரோப்பியர்களுக்கு ஏற்பட்டது கி.பி 1453- ல் துருக்கியர்கள் கான்ஸ்டாண்டி நோபிளைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

இதனால் மத்தியதரைக் கடல் வழியாகக் கீழ்த்திசை நோக்கி செல்லும் பழைய பாதை அடைபட்டது. எனவே, ஐரோப்பியர் வேறு வழிகளைத் தேட வேண்டியது இன்றியமையாததாயிற்று. ஐரோப்பியர்களில் முதன்முதலில் போர்ச்சுகீசியர் இந்தியாவிற்கு வரும் கடல் வழியை கண்டறிந்தனர். இவர்களைத் தொடர்ந்து டச்சுக்காரர்கள் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர்கள் மற்றும் டேனியர்கள் என ஐரோப்பியர்களின் வருகை பெருகியது. ஆரம்பகால நோக்கம் வணிகம் செய்யவும், தங்கள் சமயத்தைப் பரப்பும் நோக்கத்தோடு வந்தனர். ஆனால் அவர்களுக்குள் நல்லதொரு வாய்ப்பு அளித்தது இங்குள்ள நிலைமை. நம்மிடையே காணப்பட்ட ஒற்றுமையின்மை, கருத்து மாறுபட்ட அரசுகள், கல்வியறிவற்ற பாமரர்கள் ஆகிய இந்நிலை அவர்களுக்கு இந்தியர்களை அடக்கி ஆளும் எண்ணத்தை வளர்த்தது.

**போர்ச்சுக்கீசியர்**

**வாஸ்கோடகாமா**

நவீன காலத்தில் முதன் முதலில் கடல் வழியாக இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டவர்கள் போர்ச்சுக்கீசியர்கள். 1487 ஆம் ஆண்டில் பார்த்தலோமியோ டயஸ் (Bartholomew Diaz) என்ற போர்ச்சுக்கீசிய மாலுமி நன்னம்பிக்கை முனையைக் கடந்து உலக சாதனை படைத்தார். அதன்பின் வாஸ்கோடகாமா (Vasco da Gama) 1498 மே 27 ஆம் தேதி கள்ளிக்கோட்டைத் துறைமுகத்தை அடைந்தார். அவரைக் கள்ளிக்கோட்டை சாமரின் (Zamarin) இருகரம் நீட்டி வரவேற்றார், உபசரித்தார். வந்த வர்த்தக விருந்தினருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். அதுமட்டுமல்ல. சாமரினுக்குச் சொந்தமான மேற்குக் கடற்கரைப் பகுதியில் போர்ச்சுக்கீசியர் குடியேறிப் பண்டகசாலையைக் கட்டிக் கொள்ளவும் அனுமதி அளித்தார்! வாஸ்கோடகாமா கப்பல்கள் நிறைய வாசனைத் திரவியங்களை நிரப்பிக் கொண்டு தாய்நாடு திரும்பினார். அதன்பின் அவர் இருமுறை (1502, 1524) கள்ளிக்கோட்டைக்கு வந்து வர்த்தகத் தொடர்பு கொண்டார

**அல்மேடா**

1505 ஆம் ஆண்டு அல்மேடா (Almeida) கிழக்காசியாவின் முதல் போர்ச்சுக்கீசிய வைசிராயாக நியமிக்கப்பட்டார். அவர் போர்ச்சுக்கீசியர் வாணிபம் செய்து வந்த கடல்வழியை அரேபியர், எகிப்தியர், துருக்கியர் ஆகியோரது தாக்குதல்களிலிருந்து பாதுகாத்தார். அவருக்குப்பின் வந்த அல்புகர்க் (Albuquerque) (1509 - 1515) இந்தியாவில் போர்ச்சுக்கீசியரது ஆட்சி அமைவதற்கான அடிப்படையை அமைத்துக் கொடுத்தார். 1510 நவம்பர் மாதம் அவர் பீஜப்பூர் சுல்தானுக்குச் சொந்தமான வளமும் வனப்புமிக்க கோவா துறைமுகத்தைக் கைப்பற்றிக் கோட்டைகளைக் கட்டினார். கோவா போர்ச்சுக்கீசியரின் குடியிருப்புக் கோட்டையாயிற்று.

**குடியிருப்புகள்**

அல்புகர்க்குப் பின் வந்த போர்ச்சுக்கீசியர் இந்தியாவில் கடலுக்கருகாமையில் பல முக்கிய குடியிருப்புகளைப் படிப்படியாக ஏற்படுத்தினர். இதன் விளைவாக 16 ஆம் நூற்றாண்டில் மேற்குக் கடற்கரைப் பகுதியில் கோவா, டையூ, டாமன், சால்செட், பஸ்ஸின், சவுல், பம்பாய், வங்காளக் கடற்கரையில் ஹுக்ளி, சென்னைக்கருகே சாந்தோம் ஆகிய பகுதிகளில் போர்ச ்சுக்கீசியர் குடியேறினர்.

**வெளியேற்றம்**

ஒரு கால கட்டத்தில் வாணிபத்திலும், ஆட்சியிலும், ஆதிக்கத்திலும் இந்தியாவில் கொடிகட்டிப் பறந்த போர்ச்சுக்கீசியர் 18 ஆம் நூற்றாண்டில் செல்வமிழந்து, செல்வாக்கிழந்து, பிற நாடுகளின் வர்த்தகப் போட்டியை எதிர்கொள்ள முடியாமல் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று! அவர்களுடைய இடத்தை டச ்சுக்காரர்கள் பிடித்துக் கொண ்டனர்.

**டச்சுக்காரர்கள் டச்சுக் கம்பெனி**

ஐரோப்பாவின் சிறிய நாடான ஹாலந்து (ர்ழடடயனெ) 15 கடற் பயணங்களை மேற்கொண்டு (1595-1601) இறுதியில் 1602 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் ஆதரவோடு டச்சு ஐக்கிய கிழக்கிந்திய கம்பெனி (Dutch United East India Company) யைத் துவங்கியது. கடற்படைப் பலமிக்க டச்சுக்காரர்கள் அம்பாய்னா (Amboina) என்ற ராணுவ முக்கியத்துவமிக்க இடத்தைப் போர்ச்சுக்கீசியரிடமிருந்து கைப்பற்றிய (1605) பின்னர் பிற இடங்களையும் பிடித்துக் கொண்டு, அங்கெல்லாம் குடியிருப்புகளையும், பண்டகசாலைகளையும் ஏற்படுத்தி, வர்த்தகத்தை விரிவுபடுத்தினர். 17ஆம் நூற்றாண்டு முழுவதும் டச்சுக்காரர்கள் இந்திய வாணிபத்தின் முடிசூடா மன்னர்களாகத் திகழ்ந்தனர்.

**குடியேற்றங்கள**

டச்சுக்காரர்கள் இந்தியாவில் கூர்ஜரம், கிழக்குக் கடற்கரை, வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளிலும் கிழக்குகங்கைச் சமவெளியிலும் குடியேற்றங்களையும், பண்டகசாலைகளையும் தோற்றுவித்தனர். குறிப்பாக, மசூலிப்பட்டினம் (1605), புலிகாட் என்ற பழவேற்காடு (1610) சூரத் (1616), தரங்கம்பாடி (1620), காரைக்கால் (1645), சின்சுரா (1653), காசிம்பசார், பாட்னா, பாலசூர், நாகப்பட்டிணம் (1659), கொச்சி (1663) ஆகியவை டச்சுக்காரர்களின் புகழ்மிக்க குடியேற்றங்களாகும்.

**வெளியேற்றம**

வர்த்தகம் செய்வதை விரும்பினர். அவர்கள் கிழக்காசியாவில் வாணிபப் பேரரசை ஏற்படுத்தினர். இந்தியாவைத் தெற்கு ஆசியாவுடன் தொடர்பு கொள்வதற்கேற்றப் பாலமாகப் பயன்படுத்தினர். யாவற்றுக்கும் மேலாக இந்தியாவில் டச்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயருக்குமிடையேயான வர்த்தகப் போட்டி சமாளிக்க முடியாத சவாலாக இருந்தது. இப்போட்டியை

எதிர்கொள்ள முடியாத டச்சுக்காரர்களும் இந்தியாவைவிட்டு வெளியேறினர். இவர்கள் இடத்தைப் பிரஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் கைப்பற்றிக் கொண்டனர்.

**பிரெஞ்சுக்காரர்கள்**

**பிரெஞ்சுக் கம்பெனி**

பிற ஐரோப்பிய நாடுகளைப் போன்றே பிரான்சும் கீழை நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொள்ள வேண்டியதன் இன்றியமையாமையை நன்கு அறிந்திருந்தது. 1664 ஆம் ஆண்டு பிரான்சின் மன்னர் பதினான்காம் லூயி (Louis XIV)யின் ஆசியோடும், அவரது நிதி அமைச்சர் கோல்பர்ட் (Colbert) டின் ஆதரவோடும் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி தோற்றுவிக்கப்பட்டது.

**குடியேற்றங்கள்**

பிரெஞ்சுக்காரர்கள் கோல்கொண்டா சுல்தானின் அனுமதியைப் பெற்று மசூலிப்பட ்டினத்தில் குடியேறி ஒரு பண்டகசாலையைக் கட்டினர் (1669). பின்னர் இவர்கள் சென்னைக்கு அருகாமையில் சாந்தோமைக் கைப்பற்றினர் (1672). பாண்டிச்சேரியிலும் சந்திரநாகூரிலும் குடியேறிப் பண்டகசாலைகளைக் கட்டினர். வாலிகண்டபுர முஸ்லீம் ஆளுநரிடமிருந்து ஒரு கிராமத்தைப் பெற்று (1673), ஒரு முக்கிய பிரெஞ்சுக் குடியேற்றமாக்கினர். வங்காளத்தில் ஹெயிஸ்டகான் என்ற நவாபிடமிருந்து ஒரு இடத்தைப் பெற்று அங்கு ஒரு குடியிறுப்பை அமைத்தனர் (1674). பின்னர் அங்கு அவர்கள் தோற்றுவித்த பண ்டகசாலைதான் வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திரநாகூர் குடியேற்றமாகும் (1690-92).

**ஆதிக்கச் சரிவு**

ஐரோப்பாவில் டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோருக்கிடையேயான முக்கோண வாணிபப் போட்டி இந்தியாவிலிருந்த பிரெஞ்சுக் குடியேற்றங்களைப் பெரிதும் பாதித்தது. எனினும், பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் வர்த்தகப் பெருக்கத்தில் அக்கறைகாட்டி, அவர்களது குடியேற்றப் பகுதிகளில் அமைந்திருந்த பண்டகசாலைகளைச் சுற்றிக் கோட்டைகளைக் கட்டி, ஆங்கிலேயர் ஆதிக்கத்திலிருந்துபாதுகாத்துக் கொண்டனர். அலெக்சாண்டர் டூமாஸ் (Alexander Dumas) டுப்ளே (Dupleix) ஆகியோர் பாண்டிச்சேரி ஆளுநர்களாக இருந்தபோது பிரெஞ்சுக்காரர்களின் கை மேலோங்கி இருந்தது.

பிரெஞ்சுக்காரர்கள் வர்த்தகத்தைவிட அரசியலில் அதிக ஆர்வம் காட்டியதால் ஆங்கிலேயர்களுடன் நேரடியாக மோதவேண்டியதாயிற்று. இம்மோதலின் வெளிப்பாடே கர்நாடகப் போர்கள் ஆகும். இப்போர்கள் பிரெஞ்சுக்காரர்களின் வர்த்தக முதுகெலும்பை முறித்துவிட்டன. இந்தியாவில் பிரெஞ்சுப் பேரரசை ஏற்படுத்த வேண்டும் என்ற அவர்களது ஆசை நிராசையாயிற்று. இந்தியத் துணைக் கண்டத்தில் பிரெஞ்சுப் பேரரசைத்

தோற்றுவிக்க வேண்டும் என்று முதன் முதலில் எண்ணிச் செயல்பட்டவர்கள் பிரெஞ்சுக்காரர்கள்தான். கீழை நாடுகளுடன் வாணிகம் செய்யும் நோக்கம் பிரெஞ்சு மக்களிடையே காணப்பட்ட போதிலும், கிழக்கில் வாணிப இலாபத்திற்காக மற்ற ஐரோப்பியக் கம்பெனிகளுடன் போட்டியிட்ட கடைசி ஐரோப்பிய வல்லரசாகப் பிரான்சு தேசம் விளங்கியது.

**ஆங்கிலேயர்**
**கிழக்கிந்தியக் கம்பெனி**

1600 டிசம்பர் 31ஆம் தேதி இங்கிலாந்து அரசி முதலாம் எலிசபெத் ஒரு பட்டயத் (Charter) தின் மூலம் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு (Company of Merchants of London Trading into the East Indies) 15 ஆண்டுகளுக்கு வாணிபம் செய்ய அனுமதி வழங்கினார். இங்கிலாந்து அரசாங்கத்தின் அனுமதி பெற்ற இத் தனியார்துறை நிறுவனம் துவக்கத்தில் சுமத்திரா, ஜாவா, மெலுக்கஸ் ஆகிய நாடுகளுடன் வாசனைப் பொருள் வாணிபம் செய்தது. இக்கம்பெனி ஆரம்பிக்கப்பட்டு 7 ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்தியாவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டது (1608).

**குடியேற்றங்கள**

ஆங்கில தளபதி ஹாக்கின்ஸ் (Hawkins) முகலாயப் பேரரசர் ஜகாங்கீரை சந்தித்து சூரத்தில் குடியேற அனுமதி பெற்றார் (1609). ஆனால் இந்த முயற்சி போர்ச்சுக்கீசியர் மற்றும் சூரத்து வணிகர்களால் எதிர்க்கப்பட்டதால் 1613இல் தான் ஆங்கிலேயரால் சூரத்தில் குடியேறி ஒரு பண்டகசாலையை அமைக்க முடிந்தது! அதன்பின் இங்கிலாந்தின் தூதுவராக இந்தியாவுக்கு வந்த சர் தாமஸ் ரோ (Sir Thomas Roe) முகலாயப் பேரரசரிடமிருந்து சில பகுதிகளில் பண்டகசாலைகளை அமைத்துக் கொள்வதற்கான சலுகைகளைப் பெற்றார் (1618). இச் சலுகைகளைப் பயன்படுத்திய ஆங்கிலேயர் சூரத், ஆக்ரா, அகமதாபாத், புரோச் ஆகிய பகுதிகளில் குடியேறி பண்டகசாலைகளை உருவாக்கிக் கொண்டனர். பின்னர் இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ் போர்ச்சுக்கீசிய இளவரசி காதரி (Catharine of Braganza) னைத் திருமணம் செய்து கொண்டதால் சீதனமாகப் பெற்ற பம்பாயை (Bombay) கம்பெனிக்கு வாடகைக்குக் கொடுத்துவிட்டார். பம்பாய் படிப்படியாக சூரத் பெற்றிருந்த சிறப்பிடத்தைப் பிடித்து விட்டது. மேற்குக் கடற்கரையில் பம்பாய் ஆங்கிலேயரசு முதன்மைக் குடியேற்றமாகக் காட்சியளித்துத.

**சென்னைப் பட்டினம**

ஆங்கிலேயர் தென்கிழக்குக் கடற்கரையில் கோல்கொண்டாவின் முக்கிய துறைமுக நகரான மசூலிப்பட்டிணத்தில் குடியேறி ஒரு பண்டகசாலையைக் கட்டினர் (1611). அதன்பின் தமிழ்நாட்டில் புலிக்காட்டுக்கு

வடக்கே ஆர்மகான் (Armagaon) என்ற இடத்தில் மற்றொரு பண்டகசாலையைத் தோற்றுவித்தனர். 1639ஆம் ஆண ்டு பிரான்சிஸ் டே (Francis Day) என்ற ஆங்கிலேயர் விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியான சந்திரகிரி அரசிடமிருந்து சென்னை (Madras)யைக் குத்தகைக்கு எடுத்தார் (1639). பின்னர் அந்த இடத்தில் தான் வரலாற்றுச் சிறப்புமிக்க புனித ஜார்ஜ் கோட்டை (Fort St. George) கட்டப்பட்டது (1641). விரைவிலேயே ஆங்கிலேயரின் தலைமையிடம் மசூலிப்பட்டிணத்திலிருந்து சென்னைப்பட்டினத்துக்கு மாற்றப்பட்டது

**பண்டகசாலைகள்**

ஆங ்கிலேயர்கள் வடகிழக்குக் கடற்கரையில் தங்களது குடியேற்றங்களை விரிவுபடுத்தினர். மகாநதி கழிமுகத்தில் ஹரிஹர்பூர், பாலசூர் (1633), ஹுக்ளி, பாட்னா, காசிம்பசார், (1651) ஆகிய பகுதிகளில் பண்டகசாலைகள் கட்டப்பட்டன. 1658இல் வங்காளம், பீகார், ஒரிசா, வடகிழக்குக்கரைக் குடியேற்றங்கள் அனைத்தும் புனித ஜார்ஜ் கோட்டை அதிகாரத்தின ்கீழ்க் கொண்டு வரப்பட்டன. இதற்கிடையே இங்கிலாந்தின் ஆலிவர் கிராம்வெல் (Oliver Cromwell) கொடுத்த பட்டயம் கம்பெனியின் வணிக வாய்ப்புகளை அதிகரிக்க உதவின. அதேபோன்று இங்கிலாந்து மன்னர்கள் இரண்டாம் சார்லஸ், இரண்டாம் ஜேம்ஸ் ஆகியோர் கம்பெனியின் பழைய உரிமங்களை உறுதிப்படுத்தினர்.

**வர்த்தக அரசியல்**

பிரிட்டி' பேரரசின் ஆதரவுப் பின்னணியில் புது பலம் பெற்ற கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் நிலவிய குழப்பத்தை சாதகமாக்கிக்கொண்டு, இந்திய அரசர்களின் ஒற்றுமையின்மையும், பதவிப் போட்டிகளையும் பயன்படுத்திக்கொண்டு, வணிகத்தை அரசியலாக்கி அரசியலை வணிகமாக்கி வர்த்தக அரசியலால் ஆதாயமடைந்தனர். அரசியல் அதிகாரமே வளமான வாணிபத்தின் அடித்தளம் என்பதை அறிந்து கொண்ட கம்பெனி பிரெஞ்சுக்காரர்களின் போட்டியை எதிர்கொண்டு பிரெஞ்சுக்காரரை வர்த்தகப் போட்டியிலிருந்து விலக்கியதும், வங்காளத்தைக் கைப்பற்றியதும் கம்பெனி இந்தியாவில் விரிவடைவதற்கு வசதியாக இருந்தன. 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் வர்த்தகம் செய்ய வந்த ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் அசைக்க முடியாத அரசாக நிலைப்பெற்றது.

**ஆங்கில - பிரெஞ்சு ஆதிக்கப் போட்டி**

இந்தியாவில் தங்களது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து போட்டியிடத் தொடங்கினர். இந்தியாவில் முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைந்ததைத தொடர்ந்து நிலவிய அரசியல் குழப்பத்தை பயன்படுத்திக் கொண்ட அவர்கள் இந்திய உள்நாட்டு அரசியலில்

தலையிட்டனர். கர்நாடகப் பகுதியிலும் வங்காளத்திலும் ஆங்கிலேய - பிரஞ்சு ஆதிக்கப் போட்டி நன்கு வெளிப்பட்டது.

**தாவூத்கான**

ஔரங்கசீப் முகலாயப் பேரரசாக விளங்கியபோது தாவூத்கான் ஆற்காட்டைத் தலைநகராக் கொண்டு கர்நாடகத்தை ஆண்டு வந்தார். தக்காண அரசின் மேலாதிக்கத்திற்குட்பட்டு கர்நாடகம் இருந்தது. இவருக்குப் பின் ஆட்சி செய்த சாத்த் உல்லாகானும், அவருக்குப் பின் வந்த தோசுத் அலியும் தென்னகத்தின் மீது படையெத்து வந்த மராத்தியரால் தோற்கடிக்கப்பட்டனர். தக்காண அரசர் ஆச்ப்ஷா, தோசுத் அலி போரில் மாண்டதால் சாதாரண ஊழியரான அன்வர் உத்தீன் ஆற்காட்டு நவாபானார். ஔரங்கசீப் நியமித்த அன்வர் உத்தீனை தோசுத் அலியின் குடும்மத்தினர் வெறுத்து, அவருக்கு எதிராகச் சதி புரிந்தனர். கருநாடகத்தில் நிலவிய இந்த அரசியல் குழப்பத்தைத் தங்களுக்கு ஆதரவாகப் பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் பயன்படுத்த எண்ணினர். ஆங்கிலேயரால் புனித ஜார்ஜ் என்ற சென்னை வடபகுதியையும், புனித டேவிட் என்ற கடல்பகுதியையும் தங்கள் வசம் கொண்டிருந்தனர். புதுச்சேரி பிரெஞ்சுக்காரர்களின் வாணிபத்தலமாகக் கொண்டிருந்தனர்.

கி.பி. 1740 ல் ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிலிய வாரிசுரிமைப் போரில் பிரெஞ்சுகாரர்களும் ஆங்கிலேயரும் எதிரெதிராக நின்றனர். ஐரோப்பியப் போர் உலகம் முழுவதும் எதிரொலித்தது. வாரிசுரிமைப் போர் இந்தியாவில் தொடங்கியபோது மார்சு என்பவர் சென்னை ஆளுநராகவும், டியூப்ளே புதுச்சேரி ஆளுநராகவும் இருந்தனர்.

**கர்நாடகப் போர்கள்**

**முதல் கர்நாடகப் போர், 1744-1748**

**போர்க் காரணம்**

18ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஐரோப்பிய அரசியல் இந்திய அரசியலைத் தீர்மானித்தது ஐரோப்பாவுக்குச் சளி பிடித்தால் இந்தியாவில் இருந்த ஐரோப்பிய ஆட்சியாளர்கள் தும்மும் நிலை நிலவியது! 1740 ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் ஆஸ்திரியாவுக்கும் (Austria) பிர்‘யா (russia) வுக்குமிடையே வாரிசுரிமைப் போர் (Austrian Succession War) நடைபெற்றது. இப்போரில் இங்கிலாந்து ஆஸ்திரியாவையும், பிரான்சு பிரஷ்யாவையும் ஆதரித்தன. எனவே, இப்போரின்போது இந்தியாவில் வாணிபப் போட்டியில் தீவிரமாக

**போரின் போக்கு**

வாலாஜா குலத்தைச் சேர்ந்த அன்வாருதீன் ஆர்க்காடு நவாபாக இருந்தார். இந்தியாவில் பிரெஞ்சுப் பேரரசை ஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் இருந்த பாண்டிச்சேரி ஆளுநர் டுப்ளே (Dupleix)

அன்வாருதினுக்கு சென்னையைக் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்து, அவரது ஆதரவுடன் ஆங்கிலேயரை சென்னையிலிருந்து அகற்றத் திட்டமிட்டார்! இத்திட்டத்தின்படி டூப்ளே சென்னைக் கோட்டையை கைப்பற்றினார் (1746). சென்னையில் ஆங்கிலேயருடைய வாணிபத்தை அடியோடு ஒழித்துவிட்டு இந்த வியாபாரத்தைப் பாண்டிச்சேரியில் நிலைபெறச் செய்ய வேண்டும் என்பதே டூப்ளேயின் நோக்கமாகும்.

சென்னையைக் கைப்பற்றிய டூப்ளே அதை வாக்களித்தபடி அன்வாருதீனுக்குக் கொடுக்க மறுத்து விட்டார் அதனால் ஆத்திரமடைந்த அன்வாருதீன் அவரது மகன் மகபூஸ்கான் தலைமையில் ஒரு படையை ஆர்க்காட்டிலிருந்து சென்னைக்கு அனுப்பினார். இதை அறிந்த டூப்ளே அனுப்பிய பிரெஞ்சுப் படை தெற்கு நோக்கிச் சென்று நவாபின் படையை அடையாற்றில் எதிர்கொண்டது. இந்த அடையாற்றுப் போரில் நவாபின் படை தோற்கடிக்கப்பட்டது. இப்போர் புனித சாந்தோம் சண்டை (Battle of St. Thome) என்றும் அழைக்கப்படுகிறது.

சென்னையை கைவசப்படுத்திக்கொண்ட டூப்ளே ஆங்கிலேயர் வசமிருந்த புனித டேவிட் கோட்டை (குழசவ ளுவ. னுயஎனை) யையும் கைப்பற்றத் திட்டமிட்டார் இதை அறிந்த ஆங்கில தளபதி பாஸ்கவான் (Admiral Boscawen) பாண ்டிச்சேரியை முற்றுகையிட்டார். இந்த நெருக்கடியான நேரத்தில் டூப்ளே அவரது மனைவியின் துணையுடன் பாண்டிச்சேரியைக் காப்பாற்றினார். எனவே ஆங்கில தளபதி புனித டேவிட் கோட்டைக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. மீண்டும் பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்குமிடையே போர் தொடங்குமுன் ஐரோப்பாவில் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் அயிலா சாப்பல் (Aax-la-Chapell) உடன்படிக்கையால் முடிவுற்றது. இந்த உடன்பாட்டின்படி பிரெஞ்சுகாரர் சென்னைக் கோட்டையை ஆங்கிலேயருக்குத் திருப்பித்தர வேண்டியதாயிற்று. எனவே, முதல் கர்நாடகப் போரின் துவக்கத்தையும் முடிவையும் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் தீர்மானித்தது

**இரண்டாவது கர்நாடகப் போர் 1749 – 1754**

முதல் கர்நாடகப் போரை ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் தீர்மானித்தது. இரண்டாம் கர்நாடகப் போரை இந்தியாவிலிருந்த பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் முடிவு செய்தனர்! முதல் போரில் பிரெஞ்சு ஆங்கில அரசுகள் நேரடியாகப் பங்கேற்றன. ஆனால் இரண்டாவது போரின்போது இவ்விரு அரசுகளும் ஐரோப்பாவில் சமாதானமாக இருந்த நிலையில் தென்னிந்தியாவில் இருந்த இந்நாடுகளின் கம்பெனிகள் போரிட்டுக் கொண்டன. அதற்குக் காரணம் தென்னிந்திய அரசுகளுக்கிடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போட்டிகளேயாகும.

**போர்க் காரணம்**

ஐதராபாத்திலும், ஆர்க்காட்டிலும் ஒரே சமயத்தில் ஏற்பட்ட வாரிசுரிமைப் போட்டிகளே பிரெஞ்சுக் கம்பெனியும், பிரிட்டிஷ் கம்பெனியும் உள்நாட்டு விவகாரத்தில் நேரடியாகத் தலையிடுவதற்கான வாய்ப்பைக் கொடுத்தன. ஐதராபாத் நிஜாமுக்குப் பல மனைவியர், பல பிள்ளைகள் இருந்தனர் நிசாம் - உல் - முல்க் 1748 இல் இறந்தார். இவரது இரண்டாவது மகன் நாசிர் ஜங். நிஜாமின் மகள் வழிப் பேரன் ் முசாபர் ஜங். மகன் நாசிர் ஜங்குக்கும் பேரன் முசாபர் ஜங்குக்குமிடையே வாரிசுரிமைப் போட்டி ஏற்பட்டது. நாசிர் ஜங் ஆங்கிலேயரின் ஆதரவைக் கோர, முசாபர் ஜங் பிரெஞ்சுக்காரரின் உதவியை நாடினார் தங்களைத் தேடி வந்த வாய்ப்பை இரு போட ்டியாளர்களும் நன்கு பயன்படுத்திக்கொண்டனர்.

ஆர்க்காடு வாரிசுரிமைப் போட்டி சற்று வித்தியாசமானது. மராத்தியரால் கைது செய்யப்பட்டு சாதாரா சிறையிலிருந்த சந்தாசாகிப் விடுதலை செய்யப்பட்டார் (1748). சிறையிலிருந்து திரும்பிய இவர் ஆர்க்காடு நவாப் அன்வாருதீனுக்கு பதில் நவாபாக வேண்டுமென்று உரிமை கோரினார் இதன் காரணாக அன்வாருதீனுக்கும் சந்தாசாகிப்புக்குமிடையே வாரிசுரிமைப் போட்டி ஏற்பட்டது. இப்போட்டியின் போது அன்வாருதீன் ஆங்கிலேயரின் ஆதரவை நாட சந்தாசாகிப் பிரெஞ்சுக்காரரின் உதவியைக் கோரினார் தங்களைத் தேடி வந்த வாய்ப்பை இரு எதிரிகளும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். எனவே, ஐதராபாத் மற்றும் ஆர்க்காடு வாரிசுரிமைப் போட்டிகளே இரண்டாம் கர்நாடகப் போருக்கான காரணமாகும்.

**போரின் போக்கு**

ஆர்க்காடு நவாபாக வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்ட சந்தா சாகிப், ஐதராபாத் நிஜாமாக வேண்டும் என்று விரும்பிய முசாபர் ஜங்குடன் சேர்ந்து கொண்டு அன்வாருதீனுக்கு எதிராகச் சதி செய்தனர். இவர்கள் இருவரும் பிரெஞ்சுக்காரரின் உதவியுடன் வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஆம்பூரில் நவாப் அன்வாருதீனைத் தோற்கடித்தார் (1749). நவாப் போர்க்களத்திலேயே உயிரிழந்தார். ஆம்பூர் போரில் வெற்றிவாகை சூடிய சந்தாசாகிப் ஆர்க்காடு நவாபாகவும், முசாபர்ஜங் ஐதராபாத் நிஜாமாகவும் பிரகடனப்படுத்திக் கொண்டனர். இவர்கள் இருவரும் பாண்டிச்சேரி ஆளுநர் டூப்ளேயை சந்தித்து, பெருமைப் படுத்தி, நிலப் பகுதிகளையும் தாராளமாகத் தந்தனர் தென் தமிழ்நாட்டில் பிரெஞ்சுக்காரரின் கை மேலோங்கியது.

போர்க்களத்தில் இறந்துபோன அன்வாருதீனின் மகன் முகமது அலி திருச்சிக்குத் தப்பிச் சென்றுவிட்டார். அன்வாருதீனின் ஆதரவாளரான ஆங்கிலேயர் முகமது அலி பக்கம் உறுதியாக நின்றனர். திருச்சிக்குத் தப்பிச் சென்ற முகமது அலியைக் கைது செய்வதற்காக பிரெஞ்சு தளபதி லா (துயஉ ஙரநள டுயற) ஆர்க்காடு நவாப் சந்தா சாகிபின் படையுடன்

சென்று திருச்சியை முற்றுகையிட்டார். சந்தா சாகீப் பிரெஞ்சுக் கூட்டணியை புனித டேவிட் கோட்டை ஆளுநர் தாமஸ் சாண்டர்சும் (Thomas Saunders) தளபதி மேஜர் லாரன்சும் (Major Lawrance) எதிர்கொண்டனர். மேஜர் லாரன்சின் கீழ் பணிபுரிந்தார் ராபர்ட் கிளைவ் (Robert Clive).

திருச்சி முற்றுகையை முறியடிக்க ராபர்ட் கிளைவ் தளபதி சாண்டர்சிடம் ஒரு யோசனையைத் தெரிவித்தார். அதாவது, ஆர்க்காட்டை முற்றுகையிட்டால் திருச ்சி முற்றுகை தளர்த்தப்படும் என்பதே அந்த ஆலோசனை. அதாவது, ஆர்க்காடு தாக்கப்பட்டால் அதைக் காப்பாற்றுவதற்காக நவாப் திருச்சியிலிருந்த அவரது படையில் பெரும்பகுதியை அவரது தலைநகர் ஆர்க்காட்டுக்கு அனுப்புவார் அல்லவா? எனவே, கிளைவின் கருத்தால் பெரிதும் கவரப்பட்ட மேஜர் சாண்டர்ஸ் ஆர்க்காட்டை முற்றுகையிடும் பொறுப்பைக் கிளைவிடமே ஒப்படைத்தார். வந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட ராபர்ட் கிளைவ் ஆர்க்காட்டை முற்றுகையிட்டார். அவர் எதிர்பார்த்தபடியே சந்தாசாகிப் திருச்சியிலிருந்த அவரது படையை ஆர்க்காட்டுக்கு அனுப்பினார். திருச்சி முற்றுகை தளர்த்தப்பட்டது. கிளைவ் ஆர்க்காட்டைக் கைப்பற்றினார் (1751). திருச்சியை முற்றுகையிட்ட பிரெஞ்சு தளபதி லா ஸ்ரீரங்கத்தில் அடைக்கலம் அடைந்தார் கிளைவின் உத்தரவின் பேரில் ஸ்ரீரங்கம் முற்றுகையிடப்பட்டது. பிரெஞ்சுப் படை ஆங்கிலேயரிடம் சரணடைந்தது (1752 ஜூன் 9). லாவும் அவரது வீரர்களும் கைது செய்யப்பட்டனர். சரணடைந்த சந்தாசாகிப் தஞ்சைத் தளபதியால் கொல்லப்பட்டார். ஆங்கிலேயரின் வெற்றி டூப்ளேயின் கனவைக் கலைத்துவிட்டது.

**போரின் விளைவு**

ஆர்க்காடு நவாப் சந்தாசகிப் - பிரெஞ்சு ஆளுநர் டூப்ளே ஆகியோருக்குச் சாதகமாக துவங்கிய இரண்டாம் கர்நாடகப் போர் ஆங்கிலேயருக்கு அனுகூலமாக முடிந்தது. ஆர்க்காட்டைக் கைப்பற்றியது அப்போரின் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு பெரிய சாதனையாகும். போரிடுவதில் ஆங்கிலேயர் திறமைமிக்கவர்கள் என்பது உறுதியாயிற்று. அவர்களது மதிப்பு உயர்ந்தது. கிளைவின் தீரச்செயல் பெரிதும் பாராட்டப்பட்டது. இவற்றின் விளைவாக ஆங்கிலேயர் சுதேச மன்னர்களின் ஆதரவைப் பெறுவது எளிதாயிற்று. ஆர்க்காட்டு நவாப் முகமது அலி ஆங்கிலேயருக்கு நன்றிக்கடன்பட்டு அவர்களது நிரந்தர ஆதரவாளரானார். பிரெஞ்சுத் தோல்வியின் மீது ஆங்கிலேயர் வெற்றிக் கொடியை உயர்த்திப் பிடித்தனர். மதிப்பிழந்த டூப்ளேயின் பதவி பறிக்கப்பட்டு, திரும்பப் பெறப்பட்டு, அவருக்கு பதில் கோதேகு (Godeheu) பாண்டிச்சேரி ஆளுநராக நியமிக்கப்பட்டார். புதிய ஆளுநர் டூப்ளேயின் ஆதிக்கக் கொள்கையை நிராகரித்தார். அவர் ஆங்கிலேயருடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்தார். அதன்படி

முகமது அலி ஆர்க்காடு நவாபாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் தங்கள் வசமிருந்த இடங்களைத் தக்க வைத்துக் கொண்டனர். இருதரப்பினருமே சுதேச ஆட்சியாளர்களின் விவகாரங்களில் தலையிடுவதில்லை என ் று ஒப்புக் கொண்டனர் சுருங்கக்கூறின், இரண்டாம் கர்நாடகப் போர் தமிழ்நாட்டில் ஆங்கில ஆதிக்க எழுச்சியின் அடையாளமாக அமைந்தது. பிரெஞ்சுக்காரர் மற்றும் ஆங்கிலேயரின் சந்தர்ப்பவாதமே அவர்கள் இப்போரில் பங்கேற்பதை முடிவு செய்தது. ஆங்கிலேயரின் கடலாதிக்கத்தின் செல்வாக்கே கர்நாடகத்தில் ஆங்கில- பிரெஞ்சுப் போராட்டத்தின் முதல் கட்டத்தை முடிவு செய்தது. எனினும், இரண்டாம் கர்நாடகப் போர் தென்னிந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததாகக் கூற இயலாது.

**மூன்றாவது கர்நாடகப் போர், 1757 - 1763**

**போர்க் காரணம்**

முதல் கர்நாடகப் போர் ஐரோப்பாவில் நடை மற்ற ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரின் எதிரொலியாகும். இரண ் டாவது காநாடகப் போர் ஆர்க்காடு நவாப் மற்றும் ஐதராபாத் நிஜாம் ஆகியோருக்கிடையே நடைபெற்ற வாரிசுரிமைப் போராட்டங்களின் விளைவாகும். மூன்றாவது கர்நாடகப் போர் மீண்டும் ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப் போரின் (Seven Years War) (1756-1763) பிரதிபலிப்பாகும். ஆனால் இந்த ஐரோப்பியப் போரில் இங்கிலாந்து பிர்'யாவையும், பிரான்சு ஆஸ்திரியாவையும் ஆதரித்தன! சந்தர்ப்பவாதத்தின் மறுபெயர்தான் அரசியல் கூட ் டணி

பாண்டிச்சேரியில் ஆறு மாத காலமே பதவியிலிருந்த கோதேகருக்குப் பதில் லேரிட் (Deleyrit) ஆளுநர் பொறுப்பேற்றார். தாமஸ் ஆர்தர் (Thomas Arthur) என ் ற லாலி (Count-de-Lally) பிரெஞ்சு அரசாங்கத்தின் அரசுப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அவரது முக்கிய நோக்கங்கள் இரண்டு. 1) பாண்டிச்சேரி நிர்வாகத்தைச் சீரமைப்பது 2) ஆங்கிலேயரை இந்தியாவை விட்டு வெளியேற்றுவது ! இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களை அவர் பெற்றிருந்தார். எனவே இவர்கள் ஐரோப்பாவில் துவங்கிய ஏழாண்டுப் போரை வாய்ப்பாகக் கொண்டு மூன்றாவது கர்நாடகப் போரைத் துவக்கினர்

**போரின் போக்கு**

பிரெஞ்சு அரசாங்கப் பிரதிநிதி லாலியிடம் வீரமும், நேர்மையும், விரைந்து செயல்படும் ஆற்றலும் இருந்த அளவுக்கு விவேகமில்லை! பிறரையும் கலந்து முடிவெடுக்கக் கூடிய பொறுமையுமில்லை. யதேச்சாதிகாரியான லாலி ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே அதிரடி நடவடிக்கையாக ஆங்கிலேயர் வசமிருந்த புனித டேவிட் கோட்டையைக் கைப்பற்றினார் (1758). அதன்பின் தஞ்சாவூருக்கு விரைந்து சென்று கடன்

பாக்கியை வசூலிக்கும் முயற்சியை மேற்கொண்டார். நாகூரைக் கைப்பற்றிச் சூரையாடினார். திருவள்ளூர் சென்ற லாலி அங்கு கைப்பற்ற எதுவுமின்மையால் கோயில் பூசாரிகள் ஆறுபேரைத் தூக்கிலிட்டார்

பாண்டிச்சேரி திரும்பிய லாலி சென்னை முற்றுகையில் தீவிரமாக இருந்தார். பிரெஞ்சு தளபதி புஸ்ஸியை (Bussy) ஐதராபாத்திலிருந்து சென்னைக்கு வருமாறு பணித்தார். பாண்டிச்சேரிக்கும் சென்னைக்கும் இடையே இருந்த பல இடங்களைக் கைப்பற்றிய பின்னர் லாலி 1758 டிசம்பர் 14 ஆம் தேதி சென்னையை முற்றுகையிட்டார். அடுத்த ஆண்டுத் துவக்கத்தில் பீரங்கித் தாக்குதலைத் துவக்கினார் (1759). ஆனால் ஆளுநர் ஜார்ஜ் பிகாட் (George Bigot) சென்னையை தீரத்துடன் பாதுகாத்தார். அவருக்கு உதவியாக திருச்சியிலிருந்து ஒரு படைப் பிரிவும், செங்கல்பட்டிலிருந்து மற்றொரு படைப் பிரிவும் சென்னைக்கு வந்து சேர்ந்தன. இவர்கள் புனித தாமஸ் குன்று (St. Thomas Mount) க்கு அருகாமையில் இருந்த பகுதியைக் கைப்பற்றினர். பிரெஞ்சுக்காரர்களுக்குப் பெருந்தொல்லைகள் கொடுத்தனர். இறுதியில் ஆங்கிலக் கடற்படை வந்ததும் லாலி வேறுவழியின்றி சென்னை முற்றுகையைக் கைவிட்டார் முற்றுகையை விலக்கிக் கொண்டார். இம்முற்றுபெறா முற்றுகை லாலியின் புகழுக்கும் பெருமைக்கும் கிடைத்த இரண ் டாவது அடியாகும்.

மூன்றாவது கர்நாடகப் போர் தென்னிந்தியாவுக்கு வெளியேயும் விரிவடைந்தது. ஆங்கிலப்படை வங்காளத்தில் பிரெஞ்சுக் குடியிறுப்பான சந்திரநாகூரைக் கைப்பற்றியது (1757). வங்காளத்திலிருந்து தளபதி போர்டேயின் (ஊழடழநெட குழசனந) தலைமையில் வந்த ஆங்கிலப் படை பிரெஞ்சுப் படையை ராஜமுந்திரியில் தோற்கடித்தது (1758). அடுத்த ஆண்டே அவர் மசூலிப்பட ் டிணத்தைக் கைப்பற்றி குண்டுரைத் தவிர பிற வடசர்க்கார் பகுதிகளை (Northern Circars) - கஞ்சம், விசாகப்பட்டினம், கோதாவரி, கிருஂணா - ஒரு உடன்படிக்கை மூலம் பெற்றுக் கொண்டார்

இதற்கிடையே ஆங்கிலப் படை காஞ்சீபுரத்தில் பிரெஞ்சுப் படையைத் தோற்கடித்தது ஆனால் ஆங்கிலேயர் இவ்வெற்றியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டனர். பிரெஞ்சு தளபதி தே ஆக் (னு"யுஉாந) தோல்வி அடைந்து, காயமுற்று, சோழ மண்டலக் கடற்கரையை விட்டு வெளியேறினார். அதே சமயம் அயர் கூட் (Eyre Coote) ஒரு வலிமை மிக்க ஆங்கிலப் படையுடன் வந்து சேர்ந்தார் (1760, ஜனவரி 22). ஆங்கிலப் படையும் பிரெஞ்சுப் படையும் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வந்தவாசியில் சந்தித்துப் போரிட்டன. வந்தவாசிப் போரில் லாலி தோற்கடிக்கப்பட்டார். புஸ்ஸி கைது செய்யப்பட்டார்.

அயர்கூட் கர்நாடகத்திலிருந்த பிரெஞ்சுப் பகுதிகளைக் கையகப்படுத்தினார். செஞ்சியையும், பாண்டிச்சேரியையும் தவிர கர்நாடகத்தில் இருந்த அனைத்துப் பகுதிகளையும் பிரெஞ்சுக்காரர் இழந்தனர். இறுதியில் ஆங்கிலேயர் பாண்டிச்சேரியை முற்றுகையிட்டனர் (1760 மே). லாலி மைசூர் ஐதர் அலியுடன் செய்து கொண்ட உடன்படிக்கையும் அவருக்குக் கை கொடுக்கவில்லை. பாண்டிச்சேரி நிபந்தனையின்றி சரணடைந்தது (1761 ஜனவரி 16). வெற்றி பெற்ற ஆங்கிலேயர் பாண்டிக் கோட்டைகளை அழித்ததோடன்றி நகரத்தையும் நிர்மூலமாக்கினர். வளமோடு இருந்த பாண்டிச்சேரி வறுமையின் பிடியில் சிக்கியது. பாண்டிச்சேரியைத் தொடர்ந்து செஞ்சியும், மாகியும் ஆங்கிலேயர் வசம் வந்தன. இந்த நிலையில் ஐரோப்பாவில் பிரிட்டனும் பிரான்சும் செய்து கொண்ட பாரிஸ் உடன்படிக்கை (Treaty of Paris) 1763) மூன்றாவது கர்நாடகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.

**போரின் விளைவு**

பாரிஸ் உடன்படிக்கையின் விளைவாக:

1. டூப்ளேயின் ஆக்கிரமிப்புக்கு முன்பு இருந்த நிலப் பகுதிகள் பிரெஞ்சுக்காரர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டன.
2. பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் நடவடிக்கைகளை வாணிபத்தோடு மட்டும் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது.
3. ஆங்கிலேயர் வடசர்க்கார் பகுதிகளைத் தக்க வைத்துக் கொண்டனர்.
4. தென்னிந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கம் முடிவுக்கு வந்தது.
5. முகமது அலியின் ஆர்க்காட்டு நவாப் பதவி உறுதிசெய்யப்பட்டது.
6. மதிப்பிழந்து தாய்நாடு திரும்பிய லாலி பாஸ்டில் சிறையில் அடைக்கப்பட்டு சிரைச்சேதம் செய்யப்பட்டார் (1766).

**ஆங்கிலேயர் பெற்ற படிப்பினைகள்**

மூன்று கர்நாடகப் போர்கள் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையேயான வர்த்தகப் போட்டியை முடிவுக்குக் கொண்டு வந்தன. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் தடையின்றித் துவங்கி விரிவடைந்தது. கர்நாடகப் போர்களால் ஆங்கிலேயர் சில படிப்பினைகளைப் பெற்றனர்:

1. இந்திய அரசுகளின் ராணுவ பலவீனத்தைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டனர்.
2. இந்தியரிடையே தேசிய உணர்வு இன்மையால் அவர்களிடையே பாரம்பரியமாக இருந்து வந்த சாதி, சமய, இன, நிற வேறுபாடுகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

3. இந்தியர்களுக்கு யார் ஊதியம் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு விசுவாசமாக இருப்பார்கள் என்ற யதார்த்த உண்மையை அறிந்து கொண்டனர்.
4. போர்களால் மட்டுமே இந்திய அரசுகளைப் பணிய வைக்க முடியும் என்பதைப் புரிந்து கொண்ட ஆங்கிலேயர் போரைப் பேரரசுப் பெருக்கக் கருவியாகப் பயன்படுத்தினர்.
5. கொடுத்த வாக்கை மீறக்கூடாது என்ற குணமுடைய இந்தியரை உடன்படிக்கைகள் மூலம் பணிய வைத்தனர்.
6. கடற்கரை வசதியிருந்தும் கடற்படையைப் புறக்கணித்த இந்தியரைத் தங்களது கடலாதிக்கத்தால் எளிதில் புறம் காண முடியும் என்ற பேருண்மையைப் புரிந்து கொண்டனர்.

**வங்காளத்தில் ஆங்கிலேய ஆதிக்கம் நிறுவப்படுதல்**

18 ஆம் நூற்றாண ்டின் இடைப் பகுதியில் இந்திய அரசியல் குவிமையம் தக்காணத்திலிருந்து வங்காளத்துக்கு மாறியது. வங்காளத்திலும் பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் வர்த்தக விரோதிகளாகவே இருந்தனர். வங்காளத்தில் பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயரைவிட வலுவான நிலையில் இருந்தனர். டூப்ளே (Joseph Francois Dupleix) சந்திரநாகூரின் (Chandranagore) ஆட்சியாளராக இருந்த போது பிரெஞ்சுக் காலனி ஆதிக்கத்துக்கான விதைகளை விதைத்தார். ஆங்கிலேயரின் தாக்குதலை எதிர்கொள்ள அங்கு கோட்டையைக் கட்டினார். வங்காள நவாபுடன் நட்புறவு கொண்டார். டூப்ளே சென்னை ஆளுநராகச் செல்லும் வரை (1741) வங்காளத்தில் பிரெஞ்சுக்காரரின் கை மேலோங்கி இருந்தது.

**ஆங்கில-பிரெஞ்சு வர்த்தகப் போட்டி**

ஆங்கிலேயர் பொருளாதார வளமிக்க வங்காளத்தைத் தங்கள் வசம் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். ஆங்கிலக் கம்பெனியின் வாணிபத்தின் 60 வங்காளப் பொருட்களாகும். முகலாயப் பேரரசர் அவுரங்கசீப் ஆங்கிலேயர் வங்காளத்தில் வரியற்ற வியாபாரம் செய்வதற்கான உரிமையை வழங்கினார் 1690 ஆம் ஆண்டு கல்கத்தாவைத் தோற்றுவித்து, நான்காண்டுகளில் கோட்டைக் காப்பரண் அமைத்துப் பின்னர் மூன்று கிராமங்களில் ஜமீன்தாரி உரிமைகளையும் பெற்றனர். (1696) ஆங்கிலேயர். பின்னர் முகலாய மன்னர் பரூக்ஸ'ர் (Farruksiyar) பிறப்பித்த கட்டளையின்படி வங்காளத்தில் ஆங்கிலேயர் தொடர்ந்து வரியற்ற வாணிபம் செய்யவும், கல்கத்தாவைச் சுற்றியுள்ள 38 கிராமங்களை வாடகைக்கு எடுத்துக் கொள்வதற்கும், நாணயச் சாலையை அமைத்துக் கொள்வதற்குமான சலுகைகளைப் பெற்றனர். இவையாவும் வங்காளத்தில் பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயரும் மோதிக்கொள்வதற்கான வழி வகுத்தன.

**பிளாசிப் போர், 1757**

**அலிவர்திகான்**

வங்காளம் பெயரளவுக்கு முகலாயப் பேரரசரின் மேலாண்மையின் கீழ் இருந்தாலும், நடைமுறையில் இம்மாகாணம் சுபேதாரின்கீழ் சுதந்திரமாக இருந்தது. (1740 இல் வாரிசுரிமைப் போராட்டத்தில் வெற்றி பெற்று வங்காள நவாபான அலிவர்திகான்) (Alivardi Khan) முதியவராயினும் திறமையானவர். வங்காளத்தை மராட்டியப் படையெடுப்பாளர்களிடமிருந்து காப்பாற்றியவர். அவர் தனிப்பட்ட வாழ்க்கையில் நேர்மையாக இருந்த போதிலும் பொது வாழ்க்கையில் பல குற்றங்களைச் செய்தவர். உரிய காலத்தில் பதவியை அவரது வாரிசுக்கு விட்டுக் கொடுக்காதவர்! கிழத்துவம் அலிவர்திகானின் முடிவெடுக்கும் திறமையைக் குறைத்து விட்டது.

**சிராஜ்யுத்தௌலா**

1756 ஆம் ஆண்டு அலிவர்திகரன் இயற்கை எய்தியதைத் தொடர்ந்து அவரது 23 வயது பேரன் சிராஜ்யுத்தௌலா (Sirajuddaula) வங்காள நவாபானார். அரசரின் அந்தப்புறத்தில் வளர்ந்த இவர் அரசியல் அனுபவமற்ற, நிர்வாகத் திறமையற்ற, பிறர் சொல் கேளாத தான்தோன்றி விவேகமற்ற வேகமுடையவர். சந்தேகப் பேர்வழி. இவருக்குத் தன் பலவீனமும் தெரியாது மாற்றான் பலமும் புரியாது! எனவே, நவாப் சிராஜ்யுதௌலாவுக்கும், முகலாயப் பேரரசரின் அனுமதியோடு கல்கத்தாவில் வாணிப விரிவாக்கத்தின் விளைவாக வளர்ந்து கொண்டிருந்த ஆங்கிலக் கம்பெனிக்குமிடையே மோதல் ஏற்பட்டதில் வியப்பில்லை. இம் மோதலின் விளைவே பிளாசிப் போர்.

**போர்க்கான காரணங்கள்**

பிளாசிப் போருக்கான காரணங்கள் பல. அவற்றுள் முக்கியமானவை வருமாறு:

**கம்பெனி மீது கோபம்**

வங்காள நவாப் சிராஜ்யுத்தௌலா தனது அதிகாரத்தைக் கொண்டு ஆங்கிலக் கம்பெனியை அடக்க முற்பட்டார் அண்மையில் ஆர்க்காட்டில் பிரெஞ்சுக்காரரைப் புறங்கண்ட ஆங்கிலக் கம்பெனி நவாபின் அதிகாரத்துக்கு அடங்க மறுத்தது. இதனால் ஆத்திரமடைந்த நவாப் தவறுக்கு மேல் தவற்றைச் செய்யலானார். எடுத்துக்காட்டாக, இவரது முடிசூட்டு விழாவின்போது ஆங்கிலேயர் விலையுயர்ந்த பொருட்களைப் பரிசாகக் கொடுக்கவில்லை என்பதைத் தனக்கு ஏற்பட்ட அவமரியாதையாகக் கருதினார்! அதேபோன்று ஆங்கிலேயர் தங்களது தொழிற்கூடத்தை நவாபின் அதிகாரிகள் பார்வையிடுவதற்கு அனுமதி மறுத்ததால் இவரது ஏமாற்றம் ஆத்திரமாக மாறியது!! அதுமட்டுமல்ல. ஆங்கிலேயரிடம் சரணடைந்த திவான் கிருˆண பல்லாவை நவாபிடம் ஒப்படைக்க மறுத்துவிட்ட கம்பெனியின் செயலைத் தனக்கிட்ட சவாலாகக் கருதினார் சிராஜ்.

**பொருளாதார பாதிப்பு**

வங்காளத்தில் ஆங்கிலேயர் முகலாயப் பேரரசரின் அனுமதியோடு செய்து வந்த வரியற்ற வியாபாரத்தால் வங்காள வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இச்சமனற்ற வாணிபப் போட்டியால் நவாபின் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது. ஆங்கிலேயர் இவ்வரிச் சலுகையைத் தவறாகப் பயன்படுத்தியதால் நிலைமை மோசமாயிற்று. இவ்வரிச்சலுகை மோசடியால் ஆதாயம் பெற்ற வங்காள வியாபாரிகள் கம்பெனியின் அதரவாளர்களாயினர்! இவர்கள் தஸ்தக்கு (Dastaks) களைப் பயன்படுத்திக் கொள்ளை லாபம் கண்டனர். இப்பொருளாதாரப் பிரச்சனையைக் கம்பெனியுடன் பேசித்தீர்க்காமல் கம்பெனிக்கு ஆதரவாக இருந்த வங்காள வியாபாரிகள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார் சிராஜ். சிராஜின் கட்டுப்பாட்டுக் கட்டளைகளால் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு ஆங்கிலேயர் அடைக்கலம் கொடுத்துப் பாதுகாப்பு அளித்தனர். இந்நடவடிக்கைகள் வங்காள நவாபுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே இருந்த இடைவெளியை அதிகரித்துவிட்டன.

**கல்கத்தா கோட்டை**

சிராஜ்யுத்தௌலாவுக்கும் கம்பெனிக்கும் இடையேயான அரசியல் விரிசல் பெரும் பிளவாகமாறியதற்கு ஆங்கிலேயர் தங்களது கல்கத்தா கோட்டையை பலப்படுத்தியதேயாகும். ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்குமிடையே நிலவிய வர்த்தகப் போட்டியின் விளைவாகப் பிரெஞ்சுத் தாக்குதலிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காக ஆங்கிலேயர் வில்லியம் கோட்டையைச் சுற்றி அகழி தோண்டினர். இந்நடவடிக்கை தனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட செயல் என்று சந்தேகித்த சிராஜ் அகழியை மூட ஆணையிட்டார். ஆனால் ஆங்கிலேயர் இந்த ஆணையை நிராகரித்து விட்டனர் இதனால் மேலும் ஆத்திரமடைந்த நவாப் ஆங்கிலேயரைத் தண்டிக்கத் தீர்மானித்தார்! இதன் விளைவே பிளாசிப் போர் ஆகும்.

**போரின் போக்கு கல்கத்தா கைப்பற்றப்படல், 1756**

சிராஜ்யுத்தௌலா ஆங்கிலேயரைத் தண்டிப்பதற்காக பெரும் படையுடன் கல்கத்தா நோக்கிச் சென்றார். அவர் நேராகக் காசிம் பசாரை (Cassim Bazaar) அடைந்து அதைக் கைப்பற்றினார் (ஜுன் 4). காசிம் பசார் கைப்பற்றப்பட்டபின் கல்கத்தாவின் வடபகுதி கடுமையாகத் தாக்கப்பட்டது (ஜுன் 16). நவாபின் படைத்தாக்குதலை எதிர்கொள்ள முடியாத வில்லியம் கோட்டை ஆளுநர் டிரேக் (Drake) அவருடன் இருந்த அதிகாரிகள், ஆலோசனை அவை உறுப்பினர்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோர் ஹுக்ளி நதி வழியாகத் தப்பிச் சென்று புல்டா (Fulta) என்ற தீவை அடைந்தனர். எஞ்சியிருந்த சிலர் ஹால்வெல் (Holwell) என்ற மருத்துவரின் தலைமையில் கல்கத்தா கோட்டையைக் காக்க முற்பட்டு, முடியாமல் கடைசியில் சரணடைந்தனர்! கல்கத்தா கோட்டை கைப்பற்றப்பட்டது (ஜுன்

20). கோட்டைக்குள்ளிருந்த ஆங்கிலேயர் குடியிறுப்புகள், கிடங்குகள், ஆலைகள் அனைத்தும் அழிக்கப்பட்டன. ஹால்வெலும் அவருடன் இருந்தோரும் கைது செய்யப்பட்டனர்.

**இருட்டறைப் படுகொலை**

கைது செய்யப்பட்ட 146 பேரும் 22 க்கு 14 சதுர அடி பரப்புள்ள ஒரு குறுகிய அறையில் அடைத்து வைக்கப்பட்டனர். மறுநாள் காலை அறைக் கதவைத் திறந்து பார்த்தபோது ஹால்வெல் உட்பட 22 பேர் மட்டுமே உயிர் பிழைத்திருந்தனர். அவர்களில் ஒருவர் திருமதி காரே (Mrs. Carey). எஞ்சியிருந்த 124 பேரும் மூச்சுமுட்டி உயிரிழந்தனர்! இந்நிகழ்ச்சியே இருட்டறைப் படுகொலை (Black Hole Massacre) என்று சித்தரிக்கப்படுகிறது.

இருட்டறைப் படுகொலை வரலாற்று நிகழ்வா? இவ்வினாவுக்கான விடை சர்ச்சைக்குரியது. ஏனெனில் இருட்டறை நிகழ்ச ்சி பற்றி அறிவதற்கான ஒரே சான்று அறையில் அடைக்கப்பட்டு உயிர்மீண்ட ஹால்வெல் 1757 பிப்ரவரி மாதம் தாய்நாடு திரும்பியபோது கொடுத்த விரிவான தகவலாகும். இச்சான்றை ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய சமகாலச் சான்று வேறு எதுவுமில்லை! இச்சம்பவம் பற்றி ராபர்ட் கிளைவ் தனது கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று டச்சு ஆவணங்கள் சிலவற்றில் இந்நிகழ்வு பற்றிய குறிப்புகள் உள்ளன. எனினும் இவை பொதுவான தகவல்களாகவே உள்ளன.

இருட்டறைத் துயர நிகழ்ச்சி நடைபெற்றது என ்பதில் ஐயமில்லை. ஆனால் அதை ஹால்வெலின் கட்டுக்கதை (Hoax of Holwell) என்று ஒதுக்கிவிட முடியாது. இருட்டறை நிகழ்ச்சி நடைபெற்றிருக்க முடியாது என்பதற்குக் கூறப்படும் காரணங்களாவன:

1) ஒரு சிறிய அறையில் 146 கைதிகளை அடைத்து வைத்திருக்க முடியாது.
2) வங்காள நவாப்மீது பழி போடுவதற்காக ஹால்வெல் கூறிய பொய்.
3) இந்நிகழ்ச்சியைப் பற்றிய சமகாலச் சான்றுகள் எதுவுமில்லை.
4) இருட்டறைக்கும் வில்லியம் கோட்டைக்குமிடையேயான வேறுபாடு தெளிவாக்கப்படவில்லை.
5) இருட்டறையில் இறந்ததாகக் கூறப்படும் 124 பேரில் 56 பெயர்கள் மட்டுமே தெரிய வந்துள்ளது.
6) எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள் என்பது உறுதி செய்யப்படவில்லை.

கல்கத்தா வில்லியம் கோட்டைக்குள் நிகழ்ந்த துயர நிகழ்ச்சி மிகைப்படுத்திக் கூறப்பட்டாலும் இதை வெறும் கற்பனை என்று ஒதுக்கிவிட இயலாது. ஹால்வெல்லின் சமகால சாட்சியத்தைப் பொய் என்று புறம்தள்ளி விடவும் முடியாது. கிளைவின் குறிப்புகளும், டச்சுக்காரரின் தகவலும்

இந்நிகழ்ச்சி நடைபெற்றதை உறுதிப்படுத்துகின்றன. வங்காள நவாப் சிராஜ்யுத்தௌலா ஆங்கிலேயரைத் தண்டிக்க விரும்பினாலும் இந்நிகழ்ச்சிக்கு நேரடியாகக் காரணமாக இருந்தாரா என்பது தெரியவில்லை. இந்நிகழ்ச்சியைப் பொறுத்தவரை அவர் குற்றமற்றவராகவே காணப்படுகிறார். சுருங்கக் கூறின் கல்கத்தா இருட்டறைத் துயரம் கற்பனை கலந்து கூறப்பட்ட வரலாற்று நிகழ்வாகும்.

**கல்கத்தா மீட்கப்படல், 1757**

புல்டா (Fulta) விலிருந்த ஆங ˙கில அகதிகள் மூலம் வங்காள நவாப் கல்கத்தாவைக் கைப்பற்றியது பற்றியும், அதனால் ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட அழிவு பற்றியும் அறிந்து சென்னை ஆளுநரும், அதிகாரிகளும் விரைந்து செயல்பட்டனர். கடல் வழியாகவும், தரைமார்க்கமாகவும் கூடுதல் படைகள் அனுப்பப்பட்டன. தளபதி வாட்சன் தலைமையில் ஒரு கடற்படை சென்றது. ராபர்ட் கிளைவின் தலைமையில் ஒரு பலமிக்க தரைப்படையும் அனுப்பி வைக்கப்பட்டது. 1756 ஆம் ஆண ˙டு இறுதியில் வாட்சனும், கிளைவும் புல்டாவை அடைந்தனர். புல்டாவை அடைந்த வாட்சனும், கிளைவும் ஹூக்ளி சென்று புல்டாவிலிருந்த ஆங்கில அகதிகளை மீட்டனர். பட்ஜ்-பட்ஜ் (BudgeBudge) என்ற இடத்தைப் பிடித்தனர். அதன்பின் அவர்கள் 1757 ஜனவரி 22ம் தேதி கல்கத்தாவை மீட்டனர்.

**அலிநகர் உடன்படிக்கை**

ஆங ˙கிலேயரின் இருமுனைத் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத வங்காள நவாப் சிராஜ்யுதௌலா அலிநகர் என்ற இடத்தில் அவர்களுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். இந்த அலிநகர் உடன்படிக்கையின்படி

1) நவாப் ஆங்கிலக் கம்பெனிக்கு இழப்பீடு தரவேண்டும்.
2) முகலாயப் பேரரசர் வழங்கிய அனைத்துச் சலுகைகளையும் ஆங்கிலேயர் அனுபவித்துக் கொள்ளலாம்.
3) ஆங்கிலேயரின் அனுமதி பெற்ற பொருள்களை வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளுக்குத் தடையின்றி எடுத்துச் செல்லலாம்.
4) கல்கத்தா தாக்கப்பட்டபோது நவாப் கைப்பற்றிய பொருட்களைத் திருப்பித் தரவேண்டும்.
5) ஆங்கிலேயரின் விருப்பப்படி கல்கத்தா வில்லியம் கோட்டையை விரிவுபடுத்திப் பலப்படுத்திக் கொள்ளலாம்.
6) ஆங்கிலேயர் நாணயம் அச்சடித்துக் கொள்ளலாம், சுருங்கக்கூறின், ஆங்கிலேயர் அலிநகர் உடன்படிக்கையால் தாங்கள் விரும்பியவற்றைப ˙ பெற்றுக் கொண்டனர்.

**சந்திரநாகூர் கைப்பற்றப்படல், 1757**

வங்காள நவாப் சிராஜ்யுத்தௌலா ஆங்கிலேயருடன் வேண்டா விருப்பாக செய்து கொண்ட அலிநகர் உடன்படிக்கை அவரது உடலில் குத்திய முள்ளாக உறுத்திக் கொண்டிருந்தது. அதுமட்டுமல்ல. அவருக்கு உள்ளும் புறமும் எதிர்ப்புகளும், சதித்திட்டங்களும் உருவாகிக் கொண்டிருந்தன. எந்த நேரத்திலும் மேற்கிலிருந்து அகமதுஷா அப்தாலி படையெடுக்கக்கூடிய ஆபத்து இருந்தது. எனவே ஆங்கிலேயரை நம்பாத நவாப் சந்திரநாகூரில் இருந்த பிரெஞ்சுக்காரரை நம்பினார். வடசர்க்காரிலிருந்த பிரெஞ்சு புஸ்ஸியை ஆங்கிலேயருக்கு எதிராகத் தனக்கு உதவும்படி கேட்டுக் கொண்டார். பிரெஞ்சு அதிகாரிக்கு அடைக்கலம் கொடுத்தார். நவாப் பிரெஞ்சுக்காரர்களுடன் சேர்ந்ததால் தங்களுடைய நிலை கேள்விக்குறியாகிவிடும் என்பதை அறிந்த ஆங்கிலேயர் சந்திர நாகூரைக் கைப்பற்றத் திட்டமிட்டனர். அவ்வாறே 1757 மார்ச் 23ஆம் தேதி சந்திரநாகூரைத் தாக்கிக் கைப்பற்றினர். இதனால் ஆங்கிலேயருக்கும் நவாப்புக்குமிடையேயான மோதல் தவிர்க்க முடியாததாயிற்று.

**கிளைவின் சூழ்ச்சி**

வங்காள நவாப் சிராஜ்யுத்தௌலாவின் தான˙தோன்றித் தனத்தாலும், சமயப் பொறையின்மையாலும், அடக்குமுறையாலும் அவரது அதிகாரிகள் உட்பட பலரையும் பகைத்துக் கொண்டார். பகையாளிகள் நவாபுக்கெதிராக சூழ்ச்சி செய்தனர். சூழ்ச்சிக்காரர்களை ஒருங்கிணைத்தார் பிரபல பஞ்சாப் பணக்காரர் அமீசந்த் (Omichand). இச்சதிக்குத் தலைமை தாங்கினார். நவாபின் தளபதியாக இருந்தார் மீர் ஜாபர். சிராஜ்யுத்தௌலாவுக்கு பதில் மீர் ஜாபரை வங்காள நவாப்பாக்கிவிட வேண்டுமென்று சதிகாரர்கள் தீர்மானித்தனர். இந்த சதியைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டார் ராபர்ட் கிளைவ். கிளைவைப் போலவே இந்த சதியைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள எண்ணிய அமீசந்த் 30 இலட்ச ரூபாய் லஞ்சமாகத் தராவிடில் இந்த சதியை அம்பலப்படுத்தப் போவதாக அச்சுறுத்தினார். இந்த அச்சுறுத்தலுக்கு அஞ்சாத கிளைவ் சதியை சதியால் முறியடித்தார்! இச்சூழ்ச்சியின் முடிவு பிளாசிப் போரின் தொடர்ச்சியாகும்.

**போரின் போக்கு**

1757 ஜூன் 23ஆம் நாள் சிராஜ்யுத்தௌலாவின் பெரிய படை தளபதி மீர் ஜாபரின் தலைமையில் சில பிரெஞ்சுக்காரர்களுடன் பாகீரதி நதிக்கரையில் வங்காளத்தில் நாடியா மாவட்டத்தில் மூர்ஷிதாபாத்துக்கு அருகேயுள்ள பிளாசி என்ற கிராமத்தை அடைந்தது. கட்டுப்பாடற்ற நவாபின் படையும் நன்கு பயிற்சிபெற்ற நவீன கட்டுப்பாட்டுடன் கூடிய ஆங்கில ராணுவமும் மோதின. நவாபின் படை குன்று முட்டிய குருவி போலாயிற்று! பெருத்த நட்டத்தோடு தோல்வியடைந்தது. நவாபின் படை சதிகாரர் மீர்

ஜாபரின் படைப் பிரிவு போரில் தீவிரமாகப் பங்கேற்கவில்லை! மற்றொரு தளபதி பீர்மஹின் கொல்லப் பட்டார். தளபதி மோகன்லாலும் பின் வாங்கினார். மழையில் நனைந்ததால் நவாப் படையின் பீரங்கிகள் இயங்கவில்லை! நவாப் சிராஜ்யுத்தௌலா தலைநகர் முர்ஜிதாபாத்துக்குத் தப்பிச் சென்றார் (ஜுன் 24)

பிளாசிப் போரிலிருந்து தப்பிச்சென்ற சிராஜ்யுத்தௌலா தனது ஆசை மனைவி லெப்டுன்னிசாவுடனும் ஆபரண சொத்துக்களுடனும் வழியில் பிடிபட்டார். அவரைப் பிடித்த மீர் ஜாபரின் சகோதரர் நவாபையும் அவருடன் இருந்தோரையும் முர்சிதாபாத்துக்கே திருப்பி அனுப்பி விட்டார். முர்சிதாபாத்தில் நவாப் மீர்ஜாபரின் மகள் மீரானின் தூண்டுதலால் கொலை செய்யப்பட்டார்! தாத்தா அலிவர்திகானின் ஆதரவோடு அரியணை ஏறிய சிராஜ்யுத்தௌலா ஆதரவற்ற அனாதையாகக் கொலையுண்டு மாண்டார். அத்துடன் பிளாசிப்போர் முடிவுற்றது. பிளாசிப் போரின் வெற்றிக்குக் கிளைவ் பெரிதும் காரணமாக இருந்தார். பிளாசிப் போரில் ஆங ்கிலேயர் வெற்றி பெற்றமைக்குப் பல காரணங்கள் இருந்தன.

1) ராபர்ட் கிளைவின் தலைமை, திறமை, நிதானம்.
2) ஆங்கில தளபதி அயர் கூட் (Eyre Coote) டின் தாக்குதல்கள்.
3) ஆங்கிலப் படையின் கட்டுப்பாடும், துப்பாக்கிப் படையின் பலமும்.
4) கடற் தளபதி வாட்சனின் உதவி.
5) நவாபின் அனுபவமின்மையும், அவரது கட்டுப்பாடற்ற இராணுவமும்.
6) மீர் ஜாபர், மானிக்சந்த், ராஜா துர்லாபிராம் ஆகியோரின் துரோகம்.

**போரின் விளைவுகள**

பிளாசிப் போர் சிறிதாயினும் அதன் வரலாற்றுச் சிறப்பு பெரிது. “பிளாசிப் போர் ஒரு சிறிய போர் ஆயினும், அதன் விளைவு உலகத்தில் உண ்டான மாபெரும் போர்களின் விளைவுகளைக் காட்டிலும் அதிகமாய் இருந்தது”. இதற்குக் காரணம் பிளாசிப் போரின் மூலமாக முதலில் வங்காளத்தையும், அதன்பின் படிப்படியாக இந்தியா முழுவதையும் கைப்பற்றுவதற்கு இது வழி வகுத்தது.

பிளாசிப் போரின் முக்கிய விளைவுகளாவன

1) பழிபாவத்துக்கு அஞ்சாத வஞ்சகர் மீர் ஜாபர் வங்காள நாவாபானார்.
2) ஆங்கிலக் கம்பெனி கல்கத்தாவுக்கு அருகே இருந்த 24 பர்கானாக்களின் (Parganas) ஜமீன்தாரி உரிமையைப் பெற்றது.
3) அதோடு இக் கம்பெனி பெங்கால், பிகார், ஒரிசாவில் தடையற்ற வாணிபம் செய்வதற்கான உரிமையைப் பெற்றது.

4) கம்பெனி மட்டுமின்றி கம்பெனி அதிகாரிகளும் அலுவலர்களும் தனியே நடத்தி வந்த வியாபாரத்துக்கு வரிவிலக்கும், பிற சலுகைகளையும் பெற்றனர்.
5) போரால் பாதிக்கப்பட்டோருக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட்டது. கம்பெனி அதிகாரிகளுக்கு பெரிய தொகை அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.
6) கம்பெனி கல்கத்தாவில் அதன் நாணயச்சாலை அமைத்துக் கொள்ள அனுமதி பெற்றது.

**மதிப்பீடு**

பிளாசிப் போரின் மூர்த்தி சிறிதாயினும் அதன் கீர்த்தி பெரிது. இப்போர் போரேயல்ல, வெறும் சில்லரைச் சண்டை (Skirmish) தான் என்று கூறுவோரும் உண்டு. ஆங்கிலேயர் வங்காள நவாபின் வாரிசுரிமைச் சிக்கலைப் பயன்படுத்திக் கொண்டார்களேயன்றி உருவாக்கவில்லை. பிற வணிகர்களைப் போன்றே ஆங்கிலேயரும் மார்க்கத்தைவிட முடிவையே பெரிதாகக் கருதினர். இவர்கள் இந்தியரின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு தங்களது பலத்தைப் பெருக்கிக் கொண்டனர். பிளாசிப் போரில் கம்பெனியின் படை முதன் முதலாக நவாபின் படையை வெற்றிகண்டது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும். இப்போர் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்துக்கு முடிவுகட்ட வழி வகுத்தது.

மீர் ஜாபர் கம்பெனியின் கைப்பாவையானதால் ஆங்கிலேயர் வங்காளத்தின் நடைமுறை (de facto) ஆட்சியாளராயினர். சென்னை பம்பாயைவிட கல்கத்தா முக்கியத்துவம் பெற்றது. ஆங்கிலேயரின் தலைமையகமாயிற்று. கம்பெனியின் வணிக விரிவாக்கமும், அரசியல் செல்வாக்கும் உயர்ந்தது. ஆங்கிலேயர் வங்காளத்திலிருந்து மேன்மேலும் முன்னேறி வடமேற்கில் சுலைமான், ஹாலா மலைகள் வரை விரிவடைய வழி வகுத்தது.

பிளாசிப் போர் இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசு தோன்றியதன் துவக்கமாகக் கருதப்படுகிறது. பிளாசிப் போரிலிருந்துதான் ஆங்கிலேயரின் அரசியல் எழுச்சி துவங்குகிறது. இப்போருக்குப் பிறகுதான் வங்காளத்தில் சார்பாண்மை அரசுக்கு (Rule of Proxy) பதில் திவானி ஆட்சி (Rule of Diwani) ஏற்பட்டது. பிளாசிப் போருக்குப் பின் ராபர்ட் கிளைவின் பெருமையும், புகழும் பன்மடங்கு பெருகியது. எனினும் அவர்தான் இந்தியாவில் பணம் காய்க்கும் மரத்தைக் (Pagoda Tree) குலுக்கிப் பணம் பெறும் பழக்கத்தை அரசியல் கலையாக்கினார்பின்னர் வந்த இந்தியக் கிளைவ்களுக்கு இவர் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார

**போருக்குப் பின் 1758-1763**

**ஆளுநர் கிளைவ், 1758-1760**

பிளாசிப் போரில் வெற்றிவாகை சூடிய ராபர்ட் கிளைவ் கல்கத்தா வில்லியம் கோட்டையின் ஆளுநராக நியமிக்கப்பட்டார் (1758 ஜூன்). கிளைவ் ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு முன்பே நவாப் மீர்ஜாபருக்கும் அவரது அதிகாரிகளுக்குமிடையேயான விவகாரங்களில் தலையிட்டு சுமுகமாகத் தீர்த்து வைத்தார். அதேபோன்று பிளாசிப் போரின் போது கிளைவுக்கு ஒத்துழைப்பு நல்கிய இந்துக்களுடன் நல்லுறவு கொண்டு அவர்களது ஆதரவையும் பெற்றிருந்தார். பொதுவாக வங்காள மக்களிடையே கிளைவுக்கு மிகுந்த மரியாதையும், மதிப்பும், செல்வாக்கும் இருந்தது. கிளைவ் ஆளுநரானவுடன் அவரது அதிகாரத்தையும், நவாபிடமிருந்து நெருக்கமான தொடர்பையும் மக்களிடையே இருந்த செல்வாக்கையும் தனது சுயநலப் பெருக்கத்துக்கும், கம்பெனியின் வளர்ச்சிக்கும் பயன்படுத்திக் கொண்டார்.

மீர்ஜாபர் பீகார், ஒரிசாவை உள்ளடக்கிய வங்காளத்தின் நவாபானபின் கருவூலம் காலியாக இருப்பதைக் கண்டார். பதவி ஆசையால் அளித்த வாக்குறுதிகளை அவரால் நிறைவேற்ற முடியவில்லை எனவே அவர் கம்பெனிக்கும், கிளைவுக்கும், பிற அதிகாரிகளுக்கும் கொடுப்பதாகக் கூறிய தொகைகளைத் தவணை முறையில் கொடுப்பதாக உறுதியளித்தார். நவாபின் இயலாமையை கிளைவும் பிற அதிகாரிகளும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். பல்வேறு பிரச்னைகளால் சூழப்பட்ட நவாப் மீர்ஜாபர் ஆளுநர் கிளைவின் சூழ்நிலைக் கைதியானார். ஆட ்சி அவரிடம் இருந்தபோதிலும் அதிகாரம் கிளைவிடம் இருந்தது.

**அலிகோரின் முற்றுகை, 1759**

முகலாயப் பேரரசர் ஆலம் கீரின் மூத்த மகன் அலிகோர். அவர் தன் தந்தையிடம் தகராறு செய்துகொண்டு ரோகில்கந்தில் (Rohilkhand) வாழ்ந்து வந்தார். அவர் நவாப் மீர்ஜாபரின் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு வங்காளத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டார். இத்திட்டத்தை அதே நோக்கத்திலிருந்த அயோத்தி நவாப் ஹுஜா உத்தௌலாவும் ஊக்குவித்தார! எனவே அலிகோர் அயோத்தி நவாபின் ஆதரவோடும் பிற சிற்றரசர்களின் உதவியோடும் வந்து பாட்னாவை முற்றுகையிட்டார் (1759). இம்முற்றுகையே மிர்ஜாபரின் மகன் மீரான் எதிர்கொண்டார். மீர்ஜாபர் ஆங்கிலேயரின் உதவியை நாடினார். நவாபுக்கு ஆதரவாக ஆளுநர் கிளைவ் ஒரு பெரும் படையுடன் புறப்பட்டு வந்தார். கிளைவின் படை வருவதை அறிந்த அலிகோரின் கூட்டுப்படை பின் வாங்கிச் சென்று விட்டது. அலிகோரின் பீகார் முற்றுகை முறியடிக்கப்பட்டது. காலத்தால் செய்த உதவிக்காக நவாப் மீர்ஜாபர் கல்கத்தாவைச் சுற்றியுள்ள 24 பர்கானாக்களில் வரி வசூல் செய்து

கொள்ளும் உரிமையைக் கம்பெனிக்குக் கொடுத்தார். கம்பெனி திவான் உரிமையைப் பெற்றது.

**பிடேராப் போர், 1759**

ஆங்கிலேயரின் கிடுக்கிப்பிடியிலிருந்து விடுபட விரும்பிய நவாப் மீர்ஜாபர் ஆங்கிலேயரின் வர்த்தக விரோதிகளான டச்சுக்காரர்களின் உதவியை நாடினார். சின்சுரா (Chinsura) வில் குடியேறியிருந்த டச்சுக்காரர்களைத் தொடர்பு கொண்டார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலேயரை வங்காளத்திலிருந்து விரட்ட விரும்பினர் டச்சுக்காரர்கள்! எனவே அவர்கள் ஏழு கப்பல்களில் கங்கைக்கரைக்கு வந்தனர். இதை எதிர்பார்த்த ஆளுநர் கிளைவ் தக்க முன˙னேற்பாடுகளைச் செய்திருந்தார்.

ஆங்கிலப் படை டச்சுப்படையை சந்திரநாகூருக்கும் சின்சுராவுக்குமிடையே பிடேரா (Biderra) என்ற இடத்தில் சந்தித்தன. தளபதிகள் வில்சனும் (Captain Wilson) போர்டும் (Colosal Forde) டச்சுப் படையைத் தோற்கடித்து அவர்களது கப்பல்களையும் கைப்பற்றினர். கிளைவின் சமயோசித முயற்சியால் டச்சுக்காரர்களின் திட்டம் முறியடிக்கப்பட்டது. தோல்விகண்ட டச்சுக்காரர்கள் ஆங்கிலேயருக்கு இழப்பீடு கொடுத்து, அவர்கள் வழியில் குறுக்கிடுவதில்லை என்று உறுதி கூறினர். இதன்மூலம் வங்காளத்தில் ஆங்கிலேயருக்கு இருந்த டச்சு ஆபத்து முற்றிலுமாக அகன்றது.

பிடேராப் போர் இந்தியாவின் முக்கிய போர்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதன் மூலம் வங்காள நவாப் ஆங்கிலேயருக்கு அடங்கியிருக்க வேண்டும் என்பது உறுதி செய்யப்பட்டது. டச்சுக்காரர்களின் வர்த்தக விரோதம் முற்றிலுமாக முடிவுக்கு வந்தது. கிளைவின் பெயரும்கழும் புகழும் பன்மடங்கு உயர்ந்தது. கிளைவ் மூன்றாண்டுகளுக்குள் வங்காளத்தில் செயற்கரிய ராணுவ மற்றும் அரசியல் சாதனைகள் புரிந்து இந்தியாவில் ஆங்கிலேயரது ஆதிக்கம் நிலைபெறுவதற்கும் விரிவடைவதற்குமான முன்னேற்பாட்டைச் செய்து முடித்தார். பிடேரா வெற்றிக்குப்பின் கிளைவ் தாய்நாடு திரும்பினார் (1760),

**கிளைவுக்குப் பின், 1760-64**

ஆளுநர் கிளைவ் ஆட்சிப் பொறுப்பை ஹல்வெல் (Halwell)லிடம் ஒப்படைத்துவிட்டு இங்கிலாந்து திரும்பினார் (1760 ஜுலை). கிளைவுக்குப் பின் வான்சிட்டர்ட் (Vansittart) ஆளுநராக நியமிக்கப்பட்டார். அடுத்த நான்கு ஆண்டுகளில் (1760-64) வங்காளம் குழப்பக்காடாகக் காட்சியளித்தது. வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாத மீர்ஜாபர் திவாலாகும் நிலைக்குத் தள்ளப்பட்டார். ராணுவத்தினருக்கு ஊதியம் வழங்கப்படாமையால் அவர்கள் கிளர்ச்சிசெய்தனர். சேரவேண்டிய தொகையைக் கொடுக்குமாறு கம்பெனி

நவாபுக்கு நெருக்கடியைக் கொடுத்தது. அதுமட ்டுமல்ல. கம்பெனி அதிகாரிகளும், அலுவலர்களும் சொந்த வியாபாரம் செய்து கொள்ளை லாபம் பெற்றனர். மேலும், வடமேற்கிலிருந்து முகலாயப் பேரரசர் ஷா ஆலம் வங்காளத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டார். தென்மேற்கிலிருந்து மராத்தியர் ஊடுறுவல் செய்தனர். துன்பங்கள் வந்தால் கூட்டமாகத்தானே வரும்? துன்ப வலைக்குள் சிக்கிய மீர்ஜாபர் ஆங்கிலேயரிடம் பாதுகாப்பு கேட்டு தஞ்சமடைந்தார

மீர்ஜாபரின் மகன் மீரான் அகால மரணமடைந்ததால் வங்காளத்தில் வாரிசுரிமைப் போட்டி ஏற்பட்டது. இப்போட்டிக்குக் காரணம் மீரான் மகனுக்கு எதிராக மீர்ஜாபரின் மருமகன் மீர்காசிம் (Mir Kasim) வாரிசுரிமை கோரியதுதான் மீர்ஜாபரின் இயலாமையையும் வாரிசுரிமைப் போட்டியையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டது கம்பெனி. மீர்ஜாபர் டச்சுக்காரர்களுடன் தொடர்பு கொண்டதன் மூலம் அவர் கம்பெனிக்கு விசுவாசமாகயில்லை என்பதைப் புரிந்து கொண்ட ஆளுநர் வான்சிட்டர்ட் மீர்ஜாபரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அவரது மருமகன் மீர்காசிமை நவாப்பாக்கினார் (1760, அக். 20) மீர்ஜாபர் மிர்காசிமிடமிருந்து ஓய்வூதியம் பெற்றுக் கொண்டு ஆங்கிலேயரின் பாதுகாப்பின் கீழ் கல்கத்தாவில் தங்கியிருந்தார். பாதுகாப்பு கேட்டு வந்த மீர்ஜாபருக்கு ஆங்கிலேயர் தக்க பாதுகாப்பு அளித்தனர்

**நவாப் மீர் காசிம், 1760-63**

மீர்காசிம் பர்சிய மரபுவழி வந்தவர். வங்காள ஜாகிர்தாரின் மகன். நவாப் மிர்ஜாபரின் மகளை மணந்து கொண்டதால் அரசியல் செல்வாக்கு பெற்றார். மீர்காசிம் கற்றறிவாளர். கணிதத்திலும், ஜோதிடத்திலும் நன்கு தேர்ச்சி பெற்றவர். குறுக்கு வழியில் சென்று பொருள் சேர்க்கும் கலையைக் கற்றவர் மீர்காசிம் வங்காளத்திலிருந்த ரங்பூரின் பௌஜ்தாராக இருந்தார். இவர் ஆங்கிலேயருடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்து நவாப் பதவியைப் பெற்றார்.

வங்காள நவாப் என்ற முட்கிரீடம் அணிந்த மீர்காசிம் முனைப்புடன் செயல்பட்டார். அவர் வாக்களித்தபடி ஆங்கிலேயருக்கு பர்த்துவான், மிதுனபூர், சிட்டகாங் ஆகிய பகுதிகளைக் கொடுத்தார். கம்பெனி அதிகாரிகளுக்கு இரண்டு இலட்சம் பவுனைப் பரிசாக அளித்தார். படை வீரர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பள பாக்கியைத் தீர்த்தார். சிக்கன நடவடிக்கையாக பலதுறைகளிலும் பணிக்குறைப்பு செய்தார். தனது சொந்த செலவுகளையும் மட்டுப்படுத்திக் கொண்டார். ஜமீர்தார்களின் கொட்டத்தை அடக்கினார். சுருங்ககூறின், மீர்காசிம் தனது அதிகாரத்தை மீட்டு நிலைநாட்டிக் கொண்டார்.

மீர்காசிம் ஒரு வித்தியாசமான வங்காள நவாப். நவாப் ஆட்சிக்கு உட்பட்டதே ஆங்கிலக் கம்பெனி என்று கருதினார் மீர்காசிம். இவர்

கம்பெனிக்குக் கட்டுப்படுவதை விரும்பவில்லை. சுதந்திரமாகச் செயல்படுவதையே விரும்பினார். இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை எதிர்கொள்ள அவர் தன்னைத் தயார் படுத்திக் கொண்டார். வங்காளத்தின் தலைநகரை மூர்ஷிதாபாத்திலிருந்து கல்கத்தாவிலிருந்து வெகுதூரத்திலிருந்த மாங்கீருக்கு (Monghyr) மாற்றினார். அங்கு பலமிக்கக் கோட்டையைக் கட்டத் திட்டமிட்டார். மாங்கீரில் துப்பாகிகளையும், பீரங்கிகளையும், பிற ராணுவ தளவாடப் பொருட்களையும் சேமிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். படைவீரர்களுக்கு ஆங்கிலேயரைப் போன்றே நவீன போர்ப் பயிற்சி அளித்தார். சுருங்கக்கூறின் வங்காள உடலில் ஆழப் பதிந்திருந்த ஆங்கிலக் கத்தியை அகற்றத் திட்டமிட்டார் மீர்காசிம்.

மீர்காசிம் அடுத்தகட்ட நடவடிக்கையாக வங்காளத்தில் நிதிநிலையை மறுசீரமைக்க முற்பட்டார். ஆங்கிலேயர் அனுபவித்துவந்த தடையற்ற வணிக உரிமைகளுக்கும், கம்பெனி அதிகாரிகளின் வர்த்தக முறைகேடுகளுக்கும் முடிவுகட்டத் தீர்மானித்தார். எனவே, ஆங்கிலக் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருந்த வணிகச சலுகைகளை சொந்த வியாபாரத்துக்காகத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடை செய்து உத்தரவு பிறப்பித்தார். அதுமட்டுமல்ல. ஆங்கிலேயர் ஆதரவு பெற்றிருந்த பாட்னாவின் துணையாளராக இருந்த ராம் நாராயணனை பணியிலிருந்து நீக்கிவிட்டார். நல்ல நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்ட மீர்காசிமின் நடவடிக்கைகள் குளவிக்கூட்டில் கைவிட்ட கதையாயிற்று!

**பாட்னா போர், 1763**

மீர்காசிமின் நடவடிக்கைகளால் ஆத்திரமடைந்த ஆங்கிலேயர் நவாபைத் தண்டிக்கத் தீர்மானித்தனர். பாட்னாவில் இருந்த எல்லிஸ் (Ellis) நகரை எளிதில் கைப்பற்றினார் (மே 25). இதன் எதிர் நடவடிக்கையாக பாட்னாவிலிருந்து எல்லிசுக்குப் போர்த்தளவாடங்களைக் கொண்டு சென்ற சில படகுகளை மாங்கீர் அருகே நவாப் கைப்பற்றினார். இப்போரில் நவாபின் படை தோற்கடிக்கப்பட்டது (ஆகஸ்டு). இதனால் ஆத்திரமடைந்த மீர்காசிம் பாட்னா சென்று அங்கிருந்த ஆங்கிலேயரைக் கைது செய்து, ஆங்கிலேயருக்கு ஆதரவாக இருந்ததாக சந்தேகப்பட்ட இந்தியக் கைதிகளையும் கொன்று விட்டார். அதன்பின் ஆங்கிலேயரின் எதிர்ப்பை எதிர்கொள்ள முடியாத நவாப் மீர்காசிம் அயோத்தியில் அடைக்கலம் பெற்றார் (டிசம்பர்)

**மீண்டும் மீர்ஜாபர்**

பீகார் போர் நடந்து கொண்டிருக்கையில் ஆங்கிலேயரின் பாதுகாப்பில் கல்கத்தாவிலிருந்த மீர்ஜாபர் மீண்டும் வங்காள நவாப்பாக்கப்பட்டார் (ஜுலை 7)! அதற்கு விலையாக அவர் கம்பெனிக்கு

1) தடையற்ற வர்த்தகம் செய்யவும்
2) இழப்பீடு கொடுக்கவும்

3) ஆங்கில நிலையரை (Resident) நிரந்தரமாக ஏற்றுக்கொள்ளவும் இணங்கினார்.

அதன்படி நந்தகுமார் (Nandakumar) நிலையராக நியமிக்கப்பட்டார். ஊழலை வாழ்க்கையாகக் கொண்ட கம்பெனி அதிகாரிகளும் அலுவலர்களும் மீர்ஜாபர் இறந்தபின் நவாபான அவரது மகன் நிஜாமதுல்லா (Nijam-ud-daulah)விடமிருந்து ஏராளமான பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர். பணம் காய்க்கும் மரம் (Pagoda Tree) பலமாக உலுக்கப்பட்டது நவாப் நிஜாமதுல்லா அரசியல் பூஜ்யமானார்.

**நோக்கங்கள்**

# அழகு - II

இந்தியாவில் தேசியவாதத்தின் தோற்றம்: பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான அதிருப்தியின் வெளிப்பாடு -பாலயகாரர் கிளர்ச்சி - தென்னிந்தியக் கலகம் 1806 - வேலூர் கிளர்ச்சி 1857 -கிளர்ச்சி பிரபலமான முந்தைய தேசியவாதத்திற்கு - இயக்கங்கள் எதிர்ப்பு ங்குடியினர்பழ எழுச்சிகள் விவசாயிகள் :இயக்கங்கள் காரணங்கள்- கிளர்ச்சிகள் சிவில் மற்றும், இயல்பு மற்றும் தாக்கம் சீர்திருத்த மத- - - ் கருத்தியல் இயக்கத்திற்கான தேசிய :இயக்கங்கள் இந்திய தேசிய காங்கிரஸின் தோற்றத்திற்கு முன்னோடி வழிவகுக்கும் தேசிய இயக்கத்தின் - .காரணிகள்

**சுயமதிபிட்டு கேள்விகள்**

- இந்தியாவில் தேசியவாதத்தின் தோற்றம் விவரி
- 1806 தென்னிந்தியக் கலகம் –காண்க
- இந்திய தேசிய காங்கிரஸின் தோற்றம், வளர்ச்சி பற்றி காண்க ,

**தேசிய இயக்கத்தின் எழுச்சி**

தேசியம் என்பது தேசத்தைப்பற்றிய தன்னுணர்ச்சி விழிப்பாகும். அது மனிதனோடு உடன்பிறந்த பண்பல்ல. அவனது இயல்பான மனநிலையும் அல்ல. தேசியம் என்பது மனிதன் விரும்பி வளர்த்துக் கொள்ளும் உணர்ச்சியாகும்.

அரசியல்,பொருளாதார,இன,மொழி,கலாச்சார, சமுதாய சமய சூழ்நிலைகள் ஒரு நாட்டு மக்களை தேசிய உணர்வு கொள்ளச் செய்கிறது. இந்தியாவில் தேசியம் என்பது ஆங்கிலேயருக்கு எதிராக அவர்களின் எதேச்சதிகார ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்த ஒரு மாபெரும் நிகழ்வாக கருதப்படுகிறது. ஆனால் இது ஒரே நாளில் நிகழ்வு அல்ல. மாறாக சிறிது சிறிதாக மக்கள் மனங்களில் காலனி ஆதிக்கத்தின் அடக்குமுறையை பற்றி விதைத்து பின் அது ஆங்கிலேயரை நாட்டை விட்டு விரட்டும் சுதந்திரப்போராக உருவெடுத்தது.

**1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதி இந்தியா சுதந்திரம்பெற்றது. சுதந்திரம் அடைய இந்தியா இடைவிடாது போராட வேண்டியிருந்தது. ஏராளமான மாவீரர்களின் தியாகத்தால் இந்தியா முழு சுதந்திரத்தை அடைய முடிந்தது. இருப்பினும் இ கிளர்ச்சியாளர்களின் சீற்றம் தேசியவாதத்தின் அறிமுகத்துடன் தொடங்கியது. இந்திய தேசிய இயக்கம் ஆங்கிலேயர்களை உலுக்கிய முதல் இயக்கம் மற்றும் தேசிய இயக்கமே இந்தியாவிற்கும் அதன் மக்களுக்கும் சுதந்திரத்திற்கான பாதையை வகுத்தது.**

இந்தியாவின் வரலாற்றையும் இந்திய தேசிய இயக்கத்தையும் கட்டமைப்பதில் தேசியவாதம் முக்கிய பங்கு வகித்தது .

**தேசியவாதம் எப்படி உருவானது?**

நாட்டில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன இ இந்த முன்னேற்றங்கள் சில விஷயங்களைப் பற்றி மக்கள் ஆர்வமாக உள்ளன. இந்தியா என்ற நாடு எதுஇ எந்த மாதிரியான மக்களுக்காக இந்தியா என்பது போன்ற கேள்விகளை கேட்க ஆரம்பித்தனர். இறுதியில் இ கேள்விகளுக்கு பதில் கிடைத்தது. இந்திய மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு தனிமனிதனின் வர்க்கம் இ நிறம்இ பாலினம் மற்றும் மொழி முக்கியமில்லாத இந்தியாவை உருவாக்குகிறார்கள். கூடுதலாகஇ இந்தியாவின் எல்லைக்குள் இருக்கும் அனைத்து வளங்களும் இந்திய மக்களுக்கும் சொந்தமானது. இந்திய மக்கள் இதுபோன்ற பதில்களைப் பெற்றதால்இ இந்திய குடிமக்களின் வாழ்க்கை மற்றும் வளங்களின் மீது பிரிட்டிஷ் கட்டுப்பாட்டை அமல்படுத்துவதை அவர்கள் அறிந்து கொள்ளத் தொடங்கினர். பிரித்தானிய அரசாங்கம் இந்திய நாட்டின் நல்வாழ்வில் எவ்வாறு சமரசம் செய்து பிரிட்டனின் வளர்ச்சியில் மட்டுமே கவனம் செலுத்துகிறது என்பதை மக்கள் புரிந்து கொள்ளத் தொடங்கினர். 1850 க்குப் பிறகு உருவாக்கப்பட்ட அரசியல் சங்கங்கள் 1870 கள் மற்றும் 1880 களில் உருவாக்கப்பட்டவை. இந்த அரசியல் சங்கங்களில் தொழில் ரீதியாக வழக்கறிஞர்களாக இருந்த நன்கு படித்த நபர்கள் இருந்தனர். இந்திய சங்கம் இ பாம்பே பிரசிடென்சி அசோசியேஷன் இ மெட்ராஸ் மகாஜன சபா இ பூனா சர்வஜனிக் சபா மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் ஆகியவை மிக முக்கியமான அரசியல் சங்கங்களாகும். பூனா சர்வஜனிக் சபா என்று அழைக்கப்பட்டதுஇ ஏனெனில் "சர்வஜனிக்" என்ற வார்த்தையானது "அனைத்து மக்களுக்கும் அல்லது மக்களுக்கும்" (சர்வா=அனைவருக்கும் இ ஜானிக்=மக்களுக்கு ஆ்ஃப்) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த சங்கங்கள் அனைத்தும் நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் செயல்பட்டன. இந்த சங்கங்கள் நிர்ணயித்த இலக்குகள் முழு தேசத்தின் மக்களால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளாகும். அனைத்து குடிமக்களிடையேயும் இலக்குகள் ஒரே மாதிரியாக இருந்தன இ அவை சாதி அல்லது மதத்திற்கு ஏற்ப மாறவில்லை. இது இந்தியாவை இறையாண்மை கொண்ட நாடாக மாற்றுவதாகும். இறையாண்மை என்பது இந்திய மக்களுக்கு ஒப்பீட்டளவில்

நவீன கருத்தாக இருந்தது. இறையாண்மை பற்றிய கருத்து தேசியவாதத்தில் பெரும் பங்கு வகித்தது. எளிமையான வார்த்தைகளில் இ இந்திய மக்கள் தங்கள் விவகாரங்களைக் கவனித்துக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்று நம்பினர். அதன்பிறகு "ஆயுத சட்டம்" என்ற பெயரில் மற்றொரு சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி இ இந்தியர்கள் எந்த வகையான ஆயுதங்களையும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இந்தியப் பத்திரிக்கையின் குரலை அடக்குவதற்காகவே வெர்னாகுலர் பத்திரிக்கை சட்டம் கொண்டுவரப்பட்டது. பின்னர் இல்பர்ட் பில் என்ற பெயரில் ஒரு மசோதா நிறைவேற்றப்பட வேண்டும். இந்த மசோதாவின்படி இ ஆங்கிலேயர்களுக்கும் இந்தியர்களுக்கும் நீதிமன்றத்தில் சம உரிமை கிடைக்கும். ஆனால் இ ஆங்கிலேயர்கள் மசோதாவை நிறைவேற்ற அனுமதிக்கவில்லை. இது இந்திய இனம் குறித்த ஆங்கிலேயர்களின் மனநிலையை காட்டுகிறது. ஆங்கிலேயர்கள் நிறத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டினார்கள். எனவே இ இத்தகைய செயல்கள் கடந்து வந்ததாலும்இ இனப் பாகுபாடுகள் அதிகமாக இருந்ததாலும் இ இந்தியர்கள் தங்கள் இதயத்தில் தேசிய உணர்வை உருவாக்கத் தொடங்கினர்.

**இந்திய தேசிய இயக்கம்**

இந்திய தேசிய இயக்கம் என்பது ஒரு வெகுஜன இயக்கமாகும் இ அங்கு இந்திய மக்கள் தங்கள் இதயங்களுக்குள் தேசிய உணர்வைக் கொண்டிருக்கத் தொடங்கினர். தேசிய உணர்வு இந்தியர்கள் பேசுவதற்கு உதவியது. அதனால் இ ஆங்கிலேயர்களுக்கு எதிராக இந்தியர்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். இந்திய தேசிய இயக்கம் 1850 இல் தொடங்கியது இ விரைவில் கிளர்ச்சிகள் பெரியதாகவும் பெரியதாகவும் மாறியது இ இது இந்தியா சுதந்திரம் பெற மேலும் உதவியது.

தேசிய உணர்வு இந்தியா சுதந்திரம் பெற உதவியது. இந்திய தேசிய இயக்கத்தின் அறிமுகம் பிரிட்டிஷாருக்கு எதிராக இந்தியர்கள் கிளர்ச்சி செய்ய உதவியது இ இது தேசியவாத உணர்வை நாடு முழுவதும் மேலும் பரப்பியது. பிரிட்டிஷாரின் கட்டுப்பாட்டில் இருநூறு ஆண்டுகள் கழித்த பின்னரே இந்தியா சுதந்திரம் அடைய முடியும். தேசிய உணர்வு இருந்ததால்தான் அது சாத்தியமானது. தேசிய உணர்வு இந்திய

**தேசிய இயக்கத்திற்கு வழிவகுத்தது . எனவேஇ இந்திய நாட்டின் சுதந்திரத்தில் இந்திய தேசிய இயக்கம் முக்கிய பங்கு வகிக்கிறது.**

**பாளையக்காரர**

பாளையத்தின் சொந்தக்காரத் தலைவர் பாளையக்காரர் என்று அழைக்கப் பட்டார். இவர்கள் பாளையங்கள் மீது பரம்பரை உரிமை பெற்றிருந்தனர் கோட்டைகளைக் கட்டிக் கொண்டு பாதுகாப்புடன் இருந்தனர். எடுத்துக்காட்டாக மதுரையை ஆட்சி செய்த விசுவநாத நாயக்கர் மதுரையை மறுசீரமைத்த போது மீனாட்சி அம்மன் கோயில் உள்ளிட்ட நகரைச் சுற்றி அகழிகளுடன் கூடிய இரட்டைச் சுவர்களுடன் கோட்டையைக் கட்டினார். கோட்டையைச் சுற்றி பாளையக்காரர்களின் அலுவலகங்களுக்காக 72 இரட்டை அடுக்குக் கட்டடங்களையும் கட்டினார். 1841 இல் பிரிட்டிஷ் கலெக்டர் பிளாக் பெர்ன் (Black Burn) மதுரை நகரை விரிவுபடுத்துவதற்காக இக்கோட்டை அரண்களை அகற்றிவிட்டார். பளையக்காரர்கள் நாயக்கரின் பிரதிநிதிகளாக செயல்பட்டனர். அவர்கள் தங்களது நடவடிக்கைகளுக்கு நாயக்களுக்குப் பொறுப்பானவர்கள். பாளையக்காரர்களின் பிரதான பணி வரி வசூலித்தல் ஆகும். வசூலித்த வரித்தொகையில் மூன்றில் ஒரு பங்கை நாயக்கருக்கு திறையாகச் செலுத்திவிட்டு எஞ்சிய பங்கைக் கொண்டு பாதுகாவல் படையைப் பராமரித்து சொந்த செலவுக்கும் வைத்துக் கொள்ள வேண்டும். பாளையத்தை நிர்வகித்தல், மக்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டல், நீதி வழங்கல், நாயக்கருக்குத் தேவைப்படும்போது படை வீரர்களை அனுப்புதல் போன்றவை பாளையக்காரரின் பிற பொறுப்புகளாகும்.

**பாளையக்காரர் ஆட்சி முறை**

ஒவ்வொரு பாளையமும் கிராமங்களின் தொகுப்பாகும். பாளையத்தின் அதிபரான பாளையக்காரர் தனக்கு உதவி செய்ய அமைச்சர்களையும், அதிகாரிகளையும் நியமித்துக் கொண்டார். அமைச்சர்கள் சேனாதிபதிகளாகவும் இருந்தனர். தளவாய் சேனாதிபதிகளுக்குத் தலைவர். பாளையக்காரர் தளவாய் மூலமாக நாயக்கருடன் தொடர்பு கொண்டார். நடைமுறையில் ஒவ்வொரு பாளையக்காரரும் தர்பாரில் அமர்ந்து காட்சியளித்து ஒரு மன்னரைப் போன்று தன்னிச்சையாக படாடோபமாக நடந்து கொண்டார். பாளையக்காரர் ஆட்சி முறை ஒரு வகையான இராணுவ முடியாட்சி என்று கூறலாம்.

**நிலமானிய முறை**

பாளையக்காரர் ஆட்சி நிலமானிய முறை (குநரனயடளைஅ)யை மையமாகக் கொண்டு சுழன்றது. விளை நிலம் தான் வருவாயின் ஊற்று வாழ்க்கையின் ஆதாரம் அரசாங்கத்தின் உயிர் மூச்சு. எனவே,

பாளையக்காரர் வளமிக்க நிலத்தைத் தன் சொந்த உபயோகத்துக்கு வைத்துக் கொண்டு எஞ்சியவற்றைப் பிற பிரமுகர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். பிரமுகர் குத்தகைதாரர்கள் இருவேறு கடமைகளைச் செய்ய வேண்டும்: 1) அரசாங்கத்துக்கு நிலவரி செலுத்த வேண்டும் 2) நெருக்கடி நேரத்தில் நாயக்கருக்கு இராணுவ உதவி செய்ய வேண்டும். எனவே, ஒவ்வொரு விவசாயியும் ஒரு போர் வீரராகவும் இருக்க வேண்டும். பாளையக்காரர் நிலத்துக்குச் சொந்தக்காரர் ஆயினும் உழவர்களே விளைச்சலுக்குக் காரணமாக இருந்தனர். பயிர் சாகுபடி இவர்களின் உழைப்பைப் பொறுத்தே இருந்தது. உழவர்கள்தான் நிலத்தை உழுது, விதைத்து, பயிரை வளர்த்துப் பாதுகாத்து, சாகுபடி செய்து, விளைச்சலை ஒப்படைப்பவர்கள். எனினும் இவர்கள் வசிப்பதற்குத் தேவையான குறைந்தபட்ச விளைபொருளை ஊதியமாகக் கொடுத்து விட்டு மீதியைப் பாளையக்காரர் பெற்றுக் கொள்வார். குடும்பத் தேவைகளுக்கு உழவர்கள் பாளையக்காரரிடமிருந்து பணமாகவோ அல்லது பொருளாகவோ கடன் பெற்று, வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் கொத்தடிமைகளாக வாழ்க்கையின் விளிம்பிலேயே இருந்தனர். சுருங்கக்கூறின், உழவர்கள் கடனில் பிறந்து, கடனில் வசித்து, கடனைத் தன் வாரிசுகளுக்கு விட்டுச் சென்றனர்.

**நிறை குறை**

விளைநிலம் விளைச்சலைப் பொறுத்து கரிசல், செம்மண், பொட்டல், களிமண் பூமி என்று வகைப்படுத்தப்பட்டது. பொதுவாக விளைச்சலில் பாதி பாளையக்காரரின் பங்காக இருந்தது. இப்பங்கு பொதுச் செலவு என்று அழைக்கப்பட்டது. அதாவது பொதுக் காரியங்களுக்காகப் பெறப்பட்ட பங்காகக் கருதப்பட்டது. சரியான விளைச்சல் மதிப்பீட்டு முறையும், முறையான மாமூல்“ அளவும் இல்லாமையால் பாளையக்காரர் தன் தேவைக்கேற்ப தன் பங்கை யதேச்சையாகத் தீர்மானித்துக் கொண்டார். இதனால் விவசாயிகளும், உழவர்களும் பல்வேறு முறைகேடுகளுக்குப் பலியாயினர். இச்சுரண்டலிலிருந்து தப்பிக்க அவர்கள் விளைச்சலைப் பற்றிய தவறான தகவல்களைத் தந்தனர் பொய்க் கணக்கைக் கொடுத்தனர். இதனால் வரி ஏய்ப்பு வழக்கமாகிவிட்டது. இது ஏமாற்றுவோருக்கும் ஏமாற்றப்படுவோருக்குமான போட்டியாக இருந்தது.

**ஊர்க்காவல் முறை**

ஊர்க்காவல் முறை தமிழ் நாட்டின் பாரம்பரிய உள்ளூர் பாதுகாப்பு முறையாகும். காவல்காரர்கள் ஊர்ப் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தனர். எனினும், தமிழ்நாடு விஜய நகரப் பேரரசின் நேரடி ஆட்சியின் கீழ் இருந்தவரை ஊர்க்காவல் முறை பின்பற்றப்பட வில்லை. பின்னர் நாயக்கர்கள் சுதந்திரமாகச் செயல்படத் துவங்கிய போது இப்பாரம்பரியப் பாதுகாவல் முறை புதுப்பிக்கப்பட்டு பின்பற்றப்பட்டது. காவல்களுக்கான ஊதியம் பணமாகவோ பொருளாகவோ கொடுக்கப்பட்டது. ஊர்க்காவல் முறை தலக்காவல் என்ற பெயரில் செயல்பட்டது. இக்காவல் முறையின் காரணமாக கிராம மக்கள ் அச்சமின்றி இருந்தனர் பயிர்கள் பாதுகாக்கப்பட்டன் கிராமங்கள் திருடர்களின் தாக்குதலினின்றும் விடுவிக்கப்பட்டன.

**தற்காப்புப் படை**

பாளையக்காரர்கள் தங்களது பாதுகாப்புக்காகவும், பகட்டு வாழ்க்கைக்கும், சமூக அந்தஸ்துக்காகவும் சொந்த தற்காப்புப் படையை வைத்திருந்தனர். பாளையக்காரர் எங்கு சென்றாலும் இப்படையின் ஒரு பிரிவினர் அவருடன் செல்வர். தற்காப்புப் படையில் மூன்று பிரிவினர் இருந்தனர்: 1) அமரும் பணியாளர்கள். இவர்கள் பாளையக்காரர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருபவர்கள். இவர்களுக்கு நிலம் மானியமாக வழங்கப்பட்டது. 2) கட்டுப்படி பணியாளர்கள். இவர்கள் பாளையக்காரர்களுக்குப் போர்த் தளவாடங்களைத் தயாரித்துக் கொடுப்பவர்கள். இவர்களுக்கும் நிலம் மானியமாகக் கொடுக்கப்பட்டது. 3) கைக் கூலிகள். இவர்கள் அவசரத்துக்குப் பயன்படக்கூடியவர்கள் ஆயுதம் ஏந்தி போரிடக் கூடியவர்கள். இவர்கள் கூலிக்கு மாரடிப்பவர்கள்". இவர்களுக்கு வேலைபாதுகாப்பு இன்மையால், வேலையின்றி இருக்கும் போது கொலை, கொள்ளை, திருட்டு போன்ற நடவடிக்கைகளில்

**போர் முறை**

பாளையக்காரர்கள் பெயரளவுக்கு நாயக்கருக்குக் கட்டுப்பட்டவர்களேயன்றி நடைமுறையில் இவர்கள் சுதந்திரமாகச் செயல்பட்டனர். இவர்களது சொல்லே சட்டமாக இருந்தது. பாளையக்காரர்கள் அரண்களோடு கூடிய கோட்டைகளைக் கட்டிக் கொண்டு எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்

கொண்டனர். பெரும் தாக்குதல்களையும் கோட்டைக்குள் இருந்து கொண்டே எதிர்கொண்டனர். கோட்டைகளைத் தாண்டிச் சென்று இவர்களை வெல்வது கடினம். பாளையக்காரர்கள் பல்வேறு போர்க் கருவிகளைப் பயன்படுத்தினர். நாட்டுத் துப்பாக்கிகளும், வேல் கம்பு, கைத்துப்பாக்கி, போர் வாள், குத்து வாள், கேடயம், கூர்ங்கோல், வில்-அம்பு, கவண், உந்துவாணம், தாக்கித் திரும்பும் வாள்தடி போன்ற ஆயுதங்களையும் கையாண்டனர்.

பாளையக்காரர்கள் பொதுவாக எதிரிகளை நேரடியாகவோ அல்லது மறைந்திருந்து தாக்கும் போர் உத்திகளைப் பின்பற்றினர். அடர்ந்த காடுகளைப் பதுங்கிக் கொண்டு எதிரிகள் மீது எதிர்பாரா நேரத்தில் பாய்ந்து தாக்கிப் பேரழிவை ஏற்படுத்துவர். எதிரியின் குதிரைப் படையை இவர்களது கூர்ங்கோல் வீரர்கள ் சுற்றி வளைத்துத் திடீர்த் தாக்குதல் நடத்திச் செயலிழக்கச் செய்வர். இவர்களுக்குத் துணையாகப் பீரங்கிப் படையினரும், துப்பாக்கி ஏந்திகளும் போரில் கலந்து கொள ்வர். படைப் பிரிவினர் அனைவரும் கூட்டுத் தாக்குதல் நடத்தி எதிரிகளின் படைகளைத் திக்குமுக்காடச் செய்வர்.

**தனிக்காட்டு இராஜாகக்ள்**

கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேல் (1650-1760) பாளையக்காரர்கள் தமிழ் நாட்டில் தனிக்காட்டு இராஜாக்களாகச் செயல்பட்டு வந்தனர். பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றி இவர்களது தனித்தன்மையையும், சுதந்திரத்தையும், செல்வத்தையும், செல்வாக்கையும் பெருக்கிக் கொண்டனர். இவர்கள் பயத்தாலும், நயத்தாலும், வீரதீர பராக்கிரமச் செயல்களாலும் பாளைய மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தனர். நாயக்கர் ஆட்சி பலவீனமாக இருக்கும் போது பாளையக்காரர்கள் அரசாங்க கிராமங்களை ஆக்கிரமித்துக் கொண்டனர். உள்ளாட்சி நிர்வாகிகளைப் பயமுறுத்திப் பணியவைத்து அவர்களிடமிருந்து மாமூல்களைப் பெற்றுக் கொண்டனர். அரசாங்கத்துக்கு இராணுவ உதவி செய்து அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றனர். அரசாங்க ஆதரவுடன் பாளையங்களை விரிவுபடுத்தினர் படையைப் பெருக்கிக் கொண்டனர். கிராமங்களை இராணுவ முகாம்களாகஉருமாற்றம் செய்தனர். அரசாங்கம் நெருக்கடியில் இருக்கும் போது எதிர்க்கவும் செய்தனர்.

**குறிப்பிடத்தக்க பாளையக்காரர்கள**

தமிழ் நாட்டில் நூற்றுக்கணக்கான பாளையக்காரர்கள் இருந்தனர். மதுரை நாட்டில் மட்டும் 72 பாளையங்கள் இருந்தன. விஜய நகர ஆட்சியின் போது மட்டும் 200க்கும் மேற்பட்ட பாளையக்காரர்கள் இருந்தனர். மதுரை நாயக்கர்கள் காலத்தில் (1549-1736) மதுரை, திருச்சி, தஞ்சை, செஞ்சி ஆகிய பகுதிகளில் பாளையக்காரர்கள் இருந்தனர். பின்னர் இவர்கள் தமிழ் நாட்டின் நான்கு திக்குகளிலும் தங்களது ஆட்சியை அமைத்துக் கொண்டனர். கொங்கு நாட்டில் மட்டும் 10 பலமிக்க கவுண்டர் பாளையக்காரர்கள் இருந்தனர். தென்னிந்தியாவிலேயே கொங்கு நாட்டில் தான் அதிக எண்ணிக்கையில் பாளையங்கள் இருந்தன. நெல்கட்டும்செவல் (மதுரை) பாஞ்சாலங்குறிச்சி, எட்டயபுரம் (மதுரை-திருநெல்வேலி) சிங்கம்பட்டி (திருநெல்வேலி) கன்னிவாடி, விருப்பாட்டி (மதுரை-திண்டுக்கல்) காளகதி (சந்திரகிரி) மதுராந்தகம் (சந்திரகிரி-வேலூர்) பாளையக்காரர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

**ஆர்க்காட்டு நவாபுகளின் கீழ் பாளையக்காரர்கள**

1736-ஆம் ஆண்டு மதுரை நாயக்கர் ஆட்சி வீழ்ச்சி அடைந்த பின்னர் பாளையங்கள் குழப்பக் காடுகளாயின. 1690-களில் மதுரை நாயக்கர் நாடு ஆர்க்காடு நவாபுகளின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. நாயக்கர்களுக்குப் பதில் நவாபுகள் பாளையக்காரர்களின் மேலதிகாரிகளாயினர். பாளையக்காரர்கள் நவாபுகளுக்குக் கப்பம் கட்டும் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டனர். இந்த ஆட்சி மாற்றத்தைப் பாளையக்காரர்கள் விரும்பவில்லை வேறு வழியின்றி ஏற்றுக் கொண்டனர். 1750-களில் ஆர்க்காட்டு நவாபுகள் ஆங்கிலேயரின் ஆதிக்கக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தபோது அவர்கள் பாளையக்காரர்களின் புது மேலாண்மைக்கு ஒரு மேல்நிலக்கழாராயினர். ஆங்கிலேயர் வரி வசூலைத் தீவிரப்படுத்திய போது அவர்களுக்கும் பாளையக்காரர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன் இந்த மோதல்கள் கிளர்ச்சிகளாக மாறின.

**போராளி பூலித்தேவன**

1715 செப்டம்பர் முதல் தேதி திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோயிலுக்கு அருகாமையில் உள்ள ஆவுடையார்புரம் என்ற கிராமத்தில் சித்திரபுத்திர தேவருக்கும், சிவஞான நாச்சியாருக்கும் மகனாகப் பிறந்தார் பூலித்தேவன். இவருக்கு இளமையிலேயே தமிழார்வமும், கவிதைப்பாடும் திறனும், சுயமரியாதையும், சுதந்திர

உணர்வும் இயல்பாகவே அமைந்திருந்தன. வீரமிக்க பூலித்தேவன் புலியைக் கொன்றதால் இவருக்குப் புலித்தேவன் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். இவருக்கு இயற்பெயரைவிட காரணப் பெயரான புலித்தேவன் என்ற பெயரே மக்கள் மனதில் நிலைத்துவிட்டது அதுவே மரபுவழிப் பட்டப்பெயராகவும் பயன்படுத்தப்பட்டது.

**நெல்கட்டான் செவல்**

பூலித்தேவன் பிறந்த ஆவுடையார்புரத்து மக்கள் மதுரை நாயக்க மன்னர்களுக்கு நெல்லைக் கப்பமாகக் கட்டி வந்தமையால் அந்த ஊர் நெல்கட்டும் செவல் என்று அழைக்கப்பட்டது. பூலித்தேவன் நெல்கட்டும் செவல் பாளையக்காரர் பொறுப்பேற்ற பிறகும் தம் மக்கள் கப்பக்காணிக்கை செலுத்துவதை விரும்பவில்லை. எனவே, ஆர்க்காட்டு நவாபு முகமது அலி ஆங்கிலேயரின் துணைகொண்டு நிலவரி வசூலைத் தீவிரப்படுத்திய போது பூலித்தேவன் வரி செலுத்த மறுத்தார். இவர் நெல்லைக் கப்பமாகக் கட்ட மறுத்தமையால் நெல்கட்டும் செவல் நெல்கட்டான் செவல் ஆயிற்று. இப்பெயர் மாற்றம் பூலித்தேவனின் போராட்ட உணர்வின் சின்னமாகத் திகழ்ந்தது.

**முதல் மோதல**

ஆற்காட்டு நவாபு முகமது அலி மதுரையை கர்நாடகத்துடன் இணைத்துக் கொண்ட பிறகு (1736) ஆங்கிலக் கம்பெனியின் ஆதரவோடு ஆதிக்கம் செலுத்த முற்பட்டபோது தென்கோடி தமிழ் நாட்டுப் பாளையக்காரர்கள் அம்முயற்சியை எதிர்த்தனர். அந்த எதிர்ப்பை ஒருமுகப்படுத்தி வடிவம் கொடுத்தார், துணிந்து நவாப்-ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்தார் பூலித்தேவன். அவர் ஒத்த மனப்பான்மையுடைய பிற பாளையக்காரர்களின் துணை கொண்டு சவாலை எதிர்க்கொள்ளத் தீர்மானித்தார். மேற்குப்புறப் பாளையக்காரர்களைக் கொண்ட மேற்குக் கூட்டமைப்பை (Western Confederacy) உருவாக்கினார். ஆர்க்காட்டு நவாபின் மகன் மாப கான் தலைமையிலான படையை பூலித்தேவனின் கூட்டணி தோற்கடித்தது. பூலித்தேவனின் முதல் மோதல் வெற்றி பெற்றது. இதன் மூலம் ஆங்கிலேயரின் ஆதரவோடு தோற்றுவிக்கப்பட்ட நவாபின் ஆதிக்க முயற்சியை முறியடிக்க முடியும் என்பதை நிரூபித்தார் பூலித்தேவன்.

**முற்றுகை முறியடிபப்பு**

மாப கான் பூலித்தேவனின் கூட்டணிப் படையிடம் தோல்வியடைந்த பின் ஆர்க்காடு நவாபு ஆங்கிலேயரின் உதவியை

நாடினார். நவாபின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்ட ஆங்கிலக் கம்பெனி திருச்சிக்கும் கன்னியாகுமரிக்கும் இடைப்பட்ட பாளையங்களைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் நோக்குடன் ஹெரான் (ர்நசழுெ) தலைமையில் ஒரு படையை அனுப்பியது. அப்படை பல பாளையங்களைப் பணிய வைத்துவிட்டுத் திரும்பும் வழியில் ஹெரான் நவாபின் மேலாதிக்கத்துக்குப் பணிய மறுத்த பூலித்தேவனுக்குப் பாடம் கற்பிக்க முடிவு செய்தார். நெல்கட்டான் செவல் முற்றுகையிடப்பட்டது. இந்த முற்றுகையைப் பற்றி முன்கூட்டியே ஒற்றர் மூலம் அறிந்திருந்த பூலித்தேவன் தக்க முன்னேற்பாட்டுடன் ஹெரானின் தாக்குதலை எதிர்க்கொண்டார். ஆங்கிலப் படைக்குத் தேவையான பொருட்கள் கிடைக்காமல் செய்தார். நெல்கட்டான்செவல் முற்றுகை முறியடிக்கப்பட்டது. ஹெரான் புறமுதுகிட்டுப் பின்வாங்கினார். ஆங்கிலப் படை பூலித்தேவனிடம் தோற்றது. பூலித்தேவனின் அர்ப்பணிப்புப் படை, தீர்க்கமான தலைமை, இராஜதந்திரம் இவ்வெற்றிக்குக் கைகொடுத்தன.

களக்காடு முற்றுகை

பூலித்தேவனிடம் தோல்விகண்ட மாப கான் மீண்டும் தன் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் நோக்கத்தோடு மீண்டும் பாளையப் படையுடன் மோதும் முயற்சியில் மியான் (Mian) நபிகான் (Nabi Khan) போன்றோரைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டார். மேலும், திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மாவிடம் பேச்சுவார்த்தை நடத்தி 4000 போர் வீரர்களை வரவழைத்தார் பூலித்தேவன். வழக்கம்போல மறவர் படை அவருக்குத் துணை நின்றது. பூலித்தேவனின் கூட்டணிப் படை மாப கானின் குதிரைப் படையை இடைநிறுத்தி நிலைகுலையச் செய்தது. மாப கான் வசமிருந்த களக்காடு கோட்டையை முற்றுகையிட்டார். அந்நிலையில் திருவிதாங்கூரில் வெடித்த கிளர்ச்சியை அடக்குவதற்காக தன் வீரர்களை விலக்கிக் கொண்டார் மார்த்தாண்டவர்மா. எனினும் மாப கான் களக்காடு கோட்டையைத் திரும்பப் பெற முடியாமல் தடுத்துவிட்டார் பூலித்தேவன். களக்காடு முற்றுகை பூலித்தேவரின் பெருமையை மேலும் உயர்த்தியது.

**மீண்டும் முற்றுகை**

மாப கான் களக்காட்டை பூலித்தேவரிடமிருந்து மீட்கத் தீர்மானித்தார். அவரது வேண்டுகோளுக்கிணங்க ஆர்க்காடு நவாபும்

ஆங்கிலேயரின் ராணுவ உதவியைப் பெற்றுத் தந்தார். இம்முறை தேவையான உணவுப் பொருள்களையும், கூடுதல் படையுடனும் மாப கான் களக்காடு நோக்கி வந்தார். இதை முன்கூட்டியே அறிந்த பூலித்தேவன் மாப கான் படைமீது திடீர்த் தாக்குதலை நடத்தினார் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இத்திடீர்த் தாக்குதல் நவாபுக்கும் ஆங்கிலேயருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. மாப கான் களக்காட்டை முற்றுகையிட்டுக் கைப்பற்றும் முயற்சியைக் கைவிட்டு திருநெல்வேலி முகாமுக்குத் திரும்பினார்.

**செவலுக்குச் சவால்**

பூலித்தேவனின் கோட்டையான நெல்கட்டான்செவலைக் கைப்பற்றிவிட்டால் பூலித்தேவனைப் பணிய வைத்துவிடலாம் என்றுஎண்ணிய மாப கான் மீண்டும் அதை முற்றுகையிட்டார். பூலித்தேவன் கூடுதல் படையினருடன் நெல்கட்டான்செவல் கோட்டையைப் பலப்படுத்தியிருந்தமையால் மாப கானின் முயற்சி இம்முறையும் வெற்றி பெறவில்லை. அந்த ஆத்திரத்தில் நவாபின் நிலங்களை சூறையாடிய கள்ளர் படையினரை மூர்க்கமாகத் தாக்கிச் சிதறடித்தார் மாப கான். இதனால் பூலித்தேவனின் படைபலம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

**திருவில்லிபுத்தூர் முற்றுகை**

பாளையக்காரர்கள் மதுரை அரச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்றும், ஆர்க்காட்டு நவாபுகள் மதுரையை ஆக்கிரமித்தவர்கள் என்றும் கருதிய பூலித்தேவன் மதுரையை மீட்க முடிவு செய்தார். மேலும் பல மேற்குப் பக்கம் பாளையக்காரர்களைத் தன் கூட்டமைப்பில் சேர்த்துக் கொண்டார். கிழக்கத்திய பாளையக்காரர்கள் நவாபின் அடக்கு முறைக்கு அஞ்சி பூலித்தேவனுடன் சேரத் தயங்கினாலும், பாளையக்காரர்கள் கர்நாடக நவாபு-ஆங்கிலேயக் கூட்டாதிக்கத்துக்கு எதிராக ஒத்துழைக்க ஒப்புதல் அளித்தனர். அதேபோன்று, மதுரைப் பாளையக்காரர்களும் பூலித்தேவனுக்கு நேசக்கரம் நீட்டினர். தொடர் வெற்றிகளால் பெரிதும் ஊக்குவிக்கப்பட்ட பூலித்தேவன் விரிவுபடுத்தப்பட்ட பாளையக்காரர் கூட்டமைப்புக்குத் தலைமைப் பொறுப்பேற்றார்.

பூலித்தேவன் திருவில்லிபுத்தூர் வழியாகச் சென்று மதுரையை நவாபிடமிருந்து கைப்பற்றத் திட்டமிட்டார். அத்திட்டத்தின்படி அவர் கூட்டமைப்புப் படையினருடன் திருீவில்லிபுத்தூரை அடைந்து

அக்கோயில் நகரக் கோட்டையை அப்துல் இரகீமின் பிடியினின்றும் கைப்பற்றினார். எந்த இடத்திலும் எதிரிப் படையுடன் மோதாமல் மறைந்திருந்து தாக்கி அவர்களை ஆச்சர்யத்தில் வீழ்த்தினார் பூலித்தேவன். நவாபின் வீரர்கள் நிலைகுலைந்தனர் பலர் கோட்டைக்குள் சரணடைந்தனர் மேலும் பலர் தப்பிச் சென்றனர். இவ்வீரமிகு வெற்றி பூலித்தேவனின் புகழைப் பன்மடங்கு பெருக்கிற்று. மதில்மேல் பூனைகளாக இருந்த பாளையக்காரர்களும் பூலித்தேவன் பக்கம் சேர முன்வந்தனர். சுருங்கக்கூறின், திருவில்லிபுத்தூர் வெற்றி பூலித்தேவனின் தலைமைக்குக் கிடைத்த மணி மகுடமாகும்.

**ஆங்கிலேயரின் எதிரத்திட்டம்**

பூலித்தேவனின் மின்னல்வேக முன்னேற்றத்தைக் கண்ட ஆர்க்காட்டு நவாபும், ஆங்கிலேயரும் கலக்கமுற்றனர். இலட்சிய வெறியோடு, திட்டமிட்டு முன்னேறும் பூலித்தேவனைத் தடுத்து நிறுத்த முடிவு செய்தனர். அதற்கேற்ப இராணுவ உத ் திகளை வகுத்தனர். இம்முறை இராணுவத் தாக்குதல் பொறுப்பை ஆங்கிலேயர் ஏற்றுக் கொண்டனர். மாப கானின் திறமையின்மையை உறுதி செய்து கொண்ட ஆங்கிலேயர் பல்திறன்மிக்க கான்சாகிபை தளபதியாக நியமித்து பாளையக்காரர்களுக்கு எதிராக அனுப்பினர். கான்சாகிபு திருநெல்வேலி சென்று முகாமிட்டு பாளையக்காரர் எதிர்ப்பை எதிர்க்கொள்ளததிட்டமிட்டார். இதன் மூலம் ஆங்கிலேயர் பாளையக்காரர்கள் சம்மந்தமாக நேரடியாகத் தலையிட்டனர். அதாவது கான்சாகிபைக் கருவியாகக் கொண்டு, தென் தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, வரி வசூலை நேரடியாக மேற்கொள்ளத் திட்டமிட்டனர் ஆங்கிலேயர்.

**திருநெல்வேலி தாககுதல்**

மதுரையைக் கைப்பற்றுவது உறுதியாகிவிட்ட நிலையில் கூட்டமைப்புப் படைத் தலைவர்கள் சிலர் நவாபின் இராணுவ முகாமான திருநெல்வேலியைக் கைப்பற்றிவிட்டால் மதுரையை மீட்பது எளிது என்ற மாற்றுத் திட்டத்தை முன்வைத்தனர். தெற்கே திருநெல்வேலியையும், மேற்கே மதுரையையும் கைப்பற்றிய பின்னர் நவாபையும் ஆங்கிலேயரையும் ஒருசேர விரட்டுவது எளிதாகிவிடும் என்று அவர்கள் வாதிட்டனர். கூட்டமைப்புத் தலைவர்களின் கருத்துக்கு மதிப்பளித்த பூலித்தேவன் திருநெல்வேலியைக் கைப்பற்றும் நோக்குடன் கூட்டுப்படையை வழிநடத்திச் சென்றார். பூலித்தேவனின் திடீர்ப ்

போர்த்திட்ட மாற்றத்தை அறிந்த கான்சாகிபு கிழக்குப் பகுதிப் பாளையக்காரர்களுள் சிலரை தன்பக்கம் சேர்த்துக் கொண்டு திருநெல்வேலியில் தன் நிலையைப் பலப்படுத்திக் கொண்டார். இந்நிலையில் பூலித்தேவனின் படை திருநெல்வேலியைத் தாக்கியது. 1756 மார்ச் 21 ஆம் தேதி துவங்கிய திருநெல்வேலி போரில் பூலித்தேவனின் கூட்டுப் படைக்கு பின்னடைவு ஏற்பட்டது. கூட்டுப் படையினர் பிரிந்து பின்வாங்கத் துவங்கினர். பேரழிவை சந்திக்க விரும்பாத பூலித்தேவன் தன் படை வீரர்களுடன் நெல்கட்டான் செவலுக்குத் திரும்பினார்.

**திருநெல்வேலியைக் கைப்பற்றுதல**

திருநெல்வேலித் தாக்குதல் தோல்வியிலிருந்து நெல்கட்டான செவலுக்குத் திரும்பிய பூலித்தேவன் புதிய போர்க் கொள்கையை வகுத்தார். அதன்படி நவாப்-ஆங்கிலேயருடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு அவர்களுக்குச் சொந்தமான பகுதிகளைத் தாக்கிச் சீரழிப்பது. இந்த இருமுனைக் கொள்கையின்படி மதுரையில் புதிதாக நியமிக்கப்பட்டிருந்த தீர்த்தாரப்ப முதலியுடன் கப்பம் கட்டத் தயாராக இருப்பதாகப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டே நவாபின் நிலங்களைச் சூறையாட கள்ளர்களை அனுமதித்தார் பூலித்தேவன். பின்வாங்கிப் போன பாளையக்காரர்களை ஊக்கப்படுத்தி மீண்டும் கூட்டமைப்பைப் புதுப்பித்தார். கிழக்குப் பகுதிப் பாளையக்காரர்கள் சிலர் அனுப்பிய படைவீரர்களையும் சேர்த்துக் கொண்டு, காட்டு வழியாகச் சென்று திருநெல்வேலி மீது திடீர்த் தாக்குதல் நடத்தினார் பூலித்தேவன். அதிர்ச்சிக்குள்ளான எதிரிப் படையினர் செயலிழந்தனர். திருநெல்வேலி கைப்பற்றப்பட்டது.

**பாளையங்கோட்டை முற்றுகை**

திருநெல்வேலியைக் கைப்பற்றி வலுவான நிலையில் இருந்த பூலித்தேவனின் கவனத்தைத் திசை திருப்பும் பொருட்டு ஆங்கிலப் படைத் தளபதி கான்சாகிபு பாளையங்கோட்டைக்கு விரைந்து சென்று கோட்டையைக் கைப்பற்றினார். இதை அறிந்த பூலித்தேவன் பாளையம்கோட்டைக்கு விரைந்து சென்று கோட்டையைச் சுற்றி வளைத்துக் கொண்டார். கோட்டைக்குள்ளிருந்த எதிரிப் படையினருக்கு உணவுப் பொருட்கள் செல்வதைத் தடுத்து நிறுத்தினார். பின்னர் அவரது படைவீரர்கள் கோட்டையின் மீது ஏற முற்பட்டபோது ஆங்கிலப்

படையின் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காயினர். வேறுவழியின்றி பூலித்தேவன் பாளையங்கோட்டையிலிருந்து பின்வாங்க நேரிட்டது.

**மீண்டும் திருநெல்வேலி முற்றுகை**

பாளையங்கோட்டையிலிருந்து தப்பி காட்டுக்குள் சென்ற பூலித்தேவன் மதுரையை மீட்கும் இலட்சியத்தோடு செயல்பட்டார். திருநெல்வேலியில் எஞ்சியிருந்த மைசூர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இராணுவ உதவியை நாடினார். மாப கானையும் அவரது ஊழல் அதிகாரிகளையும் பொருளாசை காட்டித் தன்பக்கம் இழுத்துக் கொண்டார். மீண்டும் பாளையக்காரர் கூட்டமைப்பைப் புதுப்பித்தார். திருநெல்வேலியைக் கைப்பற்றிய பின்னர் மதுரையை மீட்க வேண்டும் என்ற திட்டப்படி திருநெல்வேலி மீது படையெடுத்தார் பூலித்தேவன். இதற்கிடையே கான்சாகிபு களக்காடு, பாப்பான்குளம், ஆழ்வார்க்குறிச்சி, பிரமதேசம், தரன்குறிச்சி ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி பூலித்தேவனின் கூட்டமைப்புப் படை பலத்தைப் பலவீனப் படுத்தினார். எனவே, பூலித்தேவன் திருநெல்வேலியைக் கைப்பற்றும் முயற்சியைக் கைவிட்டுத் திரும்பினார்.

**இறுதிப் போராட்டம்**

ூலித்தேவனைப் புறங்காண்பது எளிதல்ல என்பதைப் புரிந்து கொண்ட கான்சாகிபு அவரை சூழ்ச்சித் திறனால் வீழ்த்த முடிவு செய்தார். பல பாளையக்காரர்களை கூட்டமைப்பிலிருந்து பிரித்தார். சபலமனமுடைய மாப கானை விலைக்கு வாங்கினார். திருவிதாங்கூர் மன்னரின் இராணுவ உதவியைப் பெற்றார். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் பூலித்தேவனை தனிமைப்படுத்தினார் கான்சாகிபு. அதன் பின்னர் கான்சாகிபு பூலித்தேவனின் பலமிக்க வாசுதேவநல்லூர் கோட்டையை முற்றுகையிட்டு ஒருமாத கால போராட்டத்துக்குப் பின் கைப்பற்றினார்.

சாத்தூர் கோட்டைக்குள் முகாமிட்டிருந்த பூலித்தேவனைத் தன் சூழ்ச்சித் திறனால் கோட்டையை விட்டு வெளியேறச் செய்தார கான்சாகிபு. கோட்டையை விட்டு வெளியேறிய பூலித்தேவன் எதிரியின் இராணுவ முகாம்களைத் தாக்கி பேரழிவை ஏற்படுத்தினார். ஊத்துமலைக் கோட்டையைக் கைப்பற்றினார். இவற்றால் ஊக்குவிக்கப்பட்ட பூலித்தேவன் பாளையம்கோட்டையையும், திருநெல்வேலியையும் கைப்பற்றும் முயற்சியில் முயற்சியை முறியடித்தார் கான்சாகிபு. 1761 இல் நெல்கட்டான் செவல கோட்டையைக் கைப்பற்றினார். காட்டுக்குள் தப்பிச் சென்ற

பூலித்தேவனின் மறைவு இன்று வரை அவிழ்க்கப்படாத வரலாற்று முடிச்சாகவே உள்ளது. இதுபற்றி வரலாற்று ஆதாரமற்ற பல கதைகள் கற்பிக்கப்பட்டுள்ளன.

**வீரபாண்டிய கட்டபொம்மன**

1760 ஜனவரி 3 ஆம் தேதி வீரபாண்டியபுரம் பாளையக்காரர் ஜகவீரபாண்டியக் கட்டபொம்முவுக்கும் சண்முகக்கனியம்மாளுக்கும் தலைமகனாகப் பிறந்தார். கட்டபொம்மு என்பது மூலப்பெயர். வீரபாண்டிய கட்டபொம்முவின் இளைய சகோதரர்கள் இருவர் : 1) ஊமைத்துரை என்று அழைக்கப்பட்ட குமாரசாமி 2) துரைசிங்கம் என்ற செவத்தையா. வீரஜக்கதேவி கட்டபொம்மு குடும்பக் குலக்கடவுள்.

**மூதாதையர**

வீரபாண்டிய கட்டபொம்மனின் மூதாதையர் விஜய நகரப் பேரரசு ஆட்சியின் போது தமிழ் நாட்டுக்கு வந்து குடியேறியவர்கள். அவர்களுள் வீரதீரமிக்கவர் பொம்மு. இவர் தெலுங்கில் கெட்டிபொம்மு என்று அழைக்கப்பட்டார். இப்பெயரே காலப்போக்கில் தமிழில் கட்டபொம்மன் என்றாயிற்று. கெட்டிபொம்முவுக்கு வாரிசின்மையால் ஜெகவீரபாண்டியன் வீரபாண்டியபுரத்துக்கு (தற்போதைய ஒட்டப்பிடாரம்) பாளையக்காரர் ஆனார். இவரே முதல் அல்லது ஆதிகட்டபொம்மன் என்ற பெருமை பெற்றார்.

**பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர்**

அழகிய பாண்டியபுரத்து அருகாமையிலிருந்த சாலிகுளத்தில் ஒரு கட்டபொம்மன் வேட்டையாடிக் கொண்டிருந்த போது ஒரு முயல் ஏழு வேட்டை நாய்களை எதிர்த்து விரட்டியதைக் கண்டதாகவும், அந்த நிலம் வீரமிக்கது என்று எண்ணி, அங்கு ஒரு கோட்டையைக் கட்டி அதற்கு பாஞ்சாலங்குறிச்சி என்று பெயரிட்டதாகவும் மரபுவழிக் கதை கூறுகிறது. 1790 பிப்ரவரி 2 ஆம் தேதி வீரபாண்டிய கட்டபொம்மன் தனது 30வது வயதில் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்துக்கு ஆட்சிப் பொறுப்பேற்றார். இவர் 47வது பாளையக்காரர் என்றும், கட்டபொம்ம குலத்தில் 5வது ஆட்சியாளர் என்றும் கூறப்படுகிறது.

**கம்பெனியின் கட்டாயம**

வீரபாண்டிய கட்டபொம்மன் மதுரை நாயக்கரின் பாளையக்காரராக இருந்தார். பின்னர் மதுரை ஆர்க்காட்டு நவாபின் ஆட்சியின் கீழ் வந்தது. 1792 இல் நவாபு ஆங்கிலேயருடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி பாளையக்காரர்களிடமிருந்து கப்பம்

வசூலிக்கும் உரிமை கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆங்கிலக் கம்பெனி படை பலத்தாலும், பணபலத்தாலும் பாளையக்காரர்களிடமிருந்து கப்பத்தையும், கப்ப நிலுவையையும் வற்புறுத்திக் கட்டாயமாக வசூலிக்க முற்பட்டபோது பல பாளையக்காராகள் கம்பெனியின் கட்டாயத்துக்குக் கட்டுப்பட்டனர். ஆனால், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள் போன்றோர் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்தனர். இந்த எதிர்ப்பு கிளர்ச்சியாக மாறியது.

**கர்நாடக ஒப்பந்தம்**

1792 இல் ஆர்க்காடு நவாப் முகமது அலியும் ஆங்கிலக் கம்பெனியும் செய்து கொண்ட ஒப்பந்தம் பாளையக்காரர் கிளர்ச்சிக்கான மூலகாரணம் என்று கருதப்படுகிறது. இப்புதிய ஒப்பந்தத்தின்படி, பாளையக்காரர்களின் விவகாரங்களில் நேரடியாகத் தலையிட்டு வரி வசூல் செய்யும் உரிமை கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது. மேலும், வழக்கமான கப்பத்தொகையோடு கம்பெனிக்குச் சன்மானங்களும் வழங்க வேண்டுமென பாளையக்காரர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். யாவற்றுக்கும் மேலாக, ஆங்கில அதிகாரிகளின் வீடுகளுக்குத் தேவையான பொருட்களை வழங்க வேண்டுமென்று பாளையக்காரர்கள் வற்புறுத்தப்பட்டனர். சுருங்கக்கூறின், கர்நாடக ஒப்பந்தம் பல வழிகளிலும் தவறாகப் பயன்படுத்தப்பட்டது. ஒழுங்காகத் திரை செலுத்திவந்த வீரபாண்டிய கட்டபொம்மன் இந்த அத்துமீறல்களுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினார். இதுவே அவரது கிளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருந்தது. இக்கண்ணோட்டத்தோடு பார்க்கும் போது 1792 கர்நாடக ஒப்பந்தம் தற்காலத் தமிழ் நாட்டு வரலாற்றில் முக்கிய திருப்பு முனையை ஏற்படுத்தியது எனலாம்.

**கட்டபொம்மனும் ஜாக்சனும**

வீரபாண்டிய கட்டபொம்மன் மேலதிகாரிகளின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டவர். சட்டங்களையும் சம்பிரதாயங்களையும் மதிக்கத் தெரிந்தவர். நவாபுக்கோ, கம்பெனிக்கோ கட்டவேண்டிய கப்பத்தைத் தவறாது காலத்தே கட்டி வந்தவர். அதனால் வீரபாண்டிய கட்டபொம்மன் மீது கம்பெனி மேலதிகாரிகளிடம் நல்ல மதிப்பும் மரியாதையும் இருந்தது. வானம் பொய்த்ததால் விளைச்சல் வெகுவாகக் குறைந்தது. பாஞ்சாலங்குறிச்சி

பஞ்சத்தின் பிடியில் சிக்குண்டது. எனவே, வீரபாண்டியனால் வழக்கம் போல பாளைய மக்களிடமிருந்து வரி வசூல் செய்து உரிய நேரத்தில் கப்பம் செலுத்த முடியாமலே போயிற்று. இராமநாத மாவட்ட கலெக்டர் காலின் ஜாக்சன் (ஊழடடலை துயஉமளழெ) உண்மை நிலைமையை அறியாமல், வீரபாண்டியனை சரியாகப் புரிந்து கொள்ளாமல், கம்பெனியையும் கலந்து ஆலோசிக்காமல் அவசரப்பட்டு கட்டபொம்மனைத் தண்டிக்கும் பொருட்டு ஒரு படையை அனுப்ப ஏற்பாடு செய்தார். இதை அறிந்த கம்பெனி நிர்வாகம் ஜாக்சனின் நடவடிக்கைக்கு சம்மதிக்கவில்லை. மாறாக, வீரபாண்டிய கட்டபொம்மனை இராமநாதபுரத்துக்கு அழைத்து பிரச்சனையைப் பேசித் தீர்த்துக் கொள்ளுமாறு கலெக்டர் ஜாக்சன் அறிவுறுத்தப்பட்டார்.

கம்பெனியின் கட்டளைப்படி கலெக்டர் ஜாக்சன் 1798 ஆகஸ்டு 18 ஆம் தேதியிட்ட கடிதத்தில் இரண்டு வாரங்களில் இராமநாதபுரத்தில் தன்னை வந்து சந்திக்குமாறு வீரபாண்டியனுக்குத் தெரிவித்தார். கடிதத்தை அனுப்பிவிட்டு கலெக்டர் திருநெல்வேலி சுற்றுப் பயணம் சென்றுவிட்டார். இதை அறிந்த வீரபாண்டியன் கலெக்டர் ஜாக்சனை நேரில் சந்திப்பதற்காகக் குற்றாலத்தில் காத்திருந்தார் (ஆகஸ்டு 27). ஆனால் குற்றாலம் வந்த ஜாக்சன் வீரபாண்டியனை சந்திக்க மறுத்து விட்டார். அவரை இராமநாதபுரத்தில் சந்திக்க வேண்டும் என்று வீரபாண்டியனிடம் கூறப்பட்டது. எனினும் எப்படியும் கலெக்டரை சந்தித்து பிரச்சனைக்குத் தீர்வுகாண விரும்பிய கட்டபொம்மன் ஜாக்சனைத் தொடர்ந்து சொக்கம்பட்டி, சிவகிரி, சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், பேரையூர், கமுதி ஆகிய இடங்களுக்குப் பின் தொடர்ந்து சென்றார். எனினும் ஜாக்சன் வீரபாண்டியனை சந்திக்க மறுத்து ஆகஸ்டு 31 ஆம் தேதி தன்னை இராமநாதபுரத்தில் சந்திக்க அனுமதி வழங்கினார்.

குறிப்பிட்ட நாளன்று வீரபாண்டிய கட்டபொம்மன் கலெக்டர் ஜாக்சனை இராமநாதபுரம் சேதுபதியின் அரண்மனை “இராமலிங்க விலாசத்தில் சந்தித்தார். கட்டபொம்மனுடன் அவரது அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளையும் உடனிருந்தார். கப்பக் கணக்கை சரிபார்த்த போது கட்டபொம்மன் ஒழுங்காகக் கப்பம் கட்டி வந்திருப்பதுஉறுதியாயிற்று. ஆனால் பஞ்சத்தால் தான் உரிய காலத்தே கப்பம் கட்ட முடியவில்லை என்று கட்டபொம்மன் கூறிய காரணத்தை கலெக்டர் ஜாக்சன் ஏற்க மறுத்தார். மேலும், வீரபாண்டிய

கட்டபொம்மனையும் அவரது அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளையையும் நிற்க வைத்தே பேசியதை அவமரியாதையாகக் கருதினார் கட்டபொம்மன். மேலும் வீரபாண்டியன் அரண்மனையை விட்டுச் செல்லக் கூடாது என்ற கலெக்டரின் எச்சரிக்கையை ஏற்க மறுத்தார் கட்டபொம்மன். கலெக்டரின் சிப்பாய்கள் வீரபாண்டிய கட்டபொம்மனைக் கைது செய்ய முற்பட்ட போது அவர ்களைப் புறம்தள்ளிவிட்டு வீரபாண்டியனும் அவரது அமைச்சரும் வெளியேறினர். அரண்மனைக்கு வெளியே மறைவிடத்திலிருந்து இதைக் கண்ட ஊமைத்துரையும் அவரது வீரர்களும் கட்டபொம்மனின் உதவிக்கு வந்தனர். அங்கு நடந்த கைகலப்பால் ஆங்கிலேயர் கிளார்க் (Clarke) குத்திக் கொல்லப்பட்டார். இந்த அமளியில் வீரபாண்டியன் தப்பிச் சென்றுவிட்டார். அவரது அமைச்சர் கைது செய்யப்பட்டார். ஊமைத்துரையும் அவரது வீரர்களும் மாயமாய் மறைந்து விட்டனர்.

பாஞ்சாலம்குறிச்சி திரும்பிய வீரபாண்டிய கட்டபொம்மன் இராமநாதபுரம் சந்திப்பின்போது நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி கம்பெனிக்கு விரிவாகக் கடிதம் அனுப்பி வைத்தார். அக்கடிதத்தில் கைது செய்யப்பட்ட அவரது அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளையை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டார். கட்டபொம்மனின் கடிதத்தைப் பரிசீலித்த ஆளுநர் எட்வர்டு கிளைவ் (நுனறயசன ஊடைஎந) பின்வரும் உத்தரவுகளைப் பிறப்பித்தார்: 1) கட்டபொம்மன் சரணடைய வேண்டும் 2) இராமநாதபுரம் நிகழ்ச்சி பற்றி நீதி விசாரணை செய்யப்படும் 3) இராமநாதபுரம் கலெக்டர் கோலின் ஜாக்சன் பணியிடை நீக்கம் செய்யப்படுவார் அமைச்சர் சிவசுப்பிரமணியபிள்ளை விடுவிக்கப்படுவார். இராமநாதபுரம் நிகழ்ச்சி பற்றி விசாரிக்க வில்லியம் பிரௌன் (William Brown), வில்லியம் ஓர்ம் (William Orm), ஜான் காஸ்மேயர் (John Casmayor) ஆகியோரைக் கொண்ட விசாரனைக் கமிஷன் நியமிக்கப்பட்டது. இக்கமிஷன் சமர்ப்பித்த அறிக்கையில் பின்வரும் முடிவுகள் தெளிவாயிருந்தன: 1) பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மன் கீழ்பணிய மறுத்தார். ஆனால் கலகம் செய்தார் என்பதற்கான எவ்வித ஆதாரங்களும் இல்லை 2) கலெக்டர் காலின் ஜாக்சனின் நடத்தை கண்டிக்கத்தக்கது 3) கலெக்டரின் கட்டளையை கட்டபொம்மன் நிறைவேற்றியதில் காலதாமதம் எதுவுமில்லை 4) பேட்டி கொடுக்காமல் 23 நாட்கள் அலையவிட்டதால் வீரபாண்டியன்

அவமதிக்கப்பட்டார் 5) இராமநாதபுரம் அரண்மனையில் கடுமையாக நடத்தப்பட்டதால் தான் கட்டபொம்மன் பாதுகாப்பு கருதி வெளியேற நேரிட்டது 6) கலவரத்தில் குத்தப்பட்டு உயிரிழந்த கிளார்க்கின் குடும்பத்துக்கு உரிய இழப்பீட்டை வீரபாண்டிய கட்டபொம்மன் ஏற்க வேண்டும். சுருங்கக் கூறின், விசாரணைக் குழு கட்டபொம்மனை நிரபராதஎன்று தீர்ப்பளித்தது. இராமநாதபுர மாவட்ட ஆட்சியர் ஜாக்சனுக்குப் பதில் எ.ஆர்.லஷ்ஷிங்டன் (S.R.Lushington) நியமிக்கப்பட்டார்.

**கம்பெனி விரோத நடவடிகக்கைகள**

வீரபாண்டிய கட்டபொம்மன் சம்மந்தமாக ஆங்கிலக் கம்பெனி நியாயமாக நடந்து கொண்டாலும், இராமநாதபுரம் ஆட்சியர் ஜாக்சனால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை அவரால் மறக்க முடியவில்லை. கம்பெனியை நம்பினாலும் கம்பெனி அதிகாரியை நம்ப முடியாது என்ற முடிவுக்கு வந்தார் கட்டபொம்மன். ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்று தீர்மானித்த அவர் சிவகங்கை மருதுபாண்டியன் ஆங்கிலேயருக்கு எதிராக உருவாக்கிய கூட்டமைப்பில் ஆர்வத்துடன் பங்கேற்றார். 1799 ஜூன் முதல் தேதி கட்டபொம்மன் தனது வீரர்களுடன் மருதுபாண்டியனை சந்திக்க சிவகங்கை புறப்பட்டார். இருவரும் சந்தித்துப் பேசிய பின் (ஜூன் 5) மருது பாண்டியன் அனுப்பிய வீரர்களுடன் வீரபாண்டியன் பாஞ்சாலங்குறிச்சி திரும்பினார். கட்டபொம்மனின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வந்த இராமநாதபுரம் ஆட்சியர் கம்பெனிக்கு அவரது அறிக்கையை அனுப்பினார். கட்டபொம்மனின் கம்பெனி விரோத நடவடிக்கைகள் ஆங்கிலேயரை விழிப்படையச் செய்தன.

**சிவகிரி படையெடுப்பு**

பிரிட்டிஷ் படைகள் மைசூர் போரில் வீரபாண்டியன் அவர்களது துணையுடன், தளவாய் குமாரசாமி நாயக்கர் தலைமையில் ஒரு படையை சிவகிரிக்கு அனுப்பி வைத்தார் கட்டபொம்மன். கட்டபொம்மனின் சிவகிரி படையெடுப்பு ஆங்கிலேயருக்கு விடப்பட்ட சவாலாகக் கருதப்பட்டது.

**பாஞ்சாலங்குறிசசிப் போர்**

வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு சாதகமாக இருந்த சூழ்நிலை நான்காம் மைசூர் போரின் முடிவில் பாதகமாய்ப் போயிற்று. இப்போரில் வெற்றிவாகை சூடிய கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி பிரபு (Governor

General Lord Wellesley) கட்டபொம்மனின் எதிர்ப்பை முறியடிக்கத் தக்க தருணத்தை எதிர்பார்த ்திருந்தார். “கட்டபொம்மனின் கிளர்ச்சி நடத்தைக்கு இராணுவத் தீர்வு காணத் தீர்மானித்தார். அதன்படி, கட்டபொம்மன் கம்பெனியின் விரோதிகளுடன் கூட்டு சேராமல் பார்த்துக கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டார் (1799, மார்ச் 16). திருச்சி, தஞ்சை, மதுரையிலிருந்த படைகள் திருநெல்வேலிக்கு விரையுமாறுஉத்தரவிட்டார் (மே). இவர்களுடன் திருவிதாங்கூர் மன்னரின் படையினரும் சேர்ந்து கொண்டனர். பாளையக்கார முறையை ஒழிப்பதன் மூலம் பாளையக்காரர்களின் கிளர்ச்சியை முறியடித்து விடலாம் என்பது வெல்லெஸ்லியின் திட்டம். நான்காம் மைசூர் போர் ஆங்கிலேயருக்கு சார்பாக முடிந்ததற்கும், கட்டபொம்மன் சிவகிரி மீது படையெடுத்ததும் வெல்லெஸ்லி பிரபு எதிர்பார்த்த சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. பழுத்துக் காய்ச்சிய இரும்பை அடிப்பதைப் போன்று கட்டபொம்மனைக் களையெடுக்க மேஜர் பானர்மனை (Major Bannerman) கூடுதல் அதிகாரங்களோடும், பலமிக்கப் படையோடும் அனுப்பினார

மேஜர் பானர்மன் தலைமையில் சென்ற ஆங்கிலப் படை இராமநாதபுரம் வழியாக திருநெல்வேலி சென்றது. அங்கிருந்து கொண்டு தன்னை 1799 செப்டம்பர் 4 ஆம் தேதி பாளையங்கோட்டையில் வந்து சந்திக்குமாறு கட்டபொம்மனுக்கு இறுதி எச்சரிக்கை அனுப்பினார் (செப்டம்பர் 1). குறிப்பிட்ட தேதியில் பானர்மனை சந்திப்பது சாத்தியமில்லை என்று கட்டபொம்மன் பதில் அனுப்பியதால் ஆங்கிலத் தளபதி இராணுவ நடவடிக்கை மேற்கொண்டார். அவரது படை கட்டபொம்மன் தன் வீரர்களுடன் இருந்த பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைச் சூழ்ந்து கொண்டது. கட்டபொம்மனைக் காப்பாற்ற அண்டைக் கிராமங்களிலிருந்து வந்தோர் விரட்டியடிக்கப்பட்டனர். வலுவான நிலையில் இருந்த பானர்மன் இராமலிங்க முதலியாரை கோட்டைக்குள் அனுப்பி கட்டபொம்மனைச் சந்தித்துப் பேசி சரணடையச் சொல்லச் செய்தார். ஆனால் கட்டபொம்மன் பானர்மனின் கோரிக்கையை நிராகரித்தார்.

கோட்டையின் பலவீனத்தைப் பற்றி இராமலிங்க முதலியார் கொடுத்த தகவலின் பேரில் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் தெற்கு நுழைவாயிலில் பீரங்கிகள் கொண்டு தகர்க்கப்பட்டது. எட்டயபுரம்

மற்றும் திருவிதாங்கூர் படைகள் மேற்கு வாயிலைத் தாக்கின. உள்ளே நுழைந்த ஆங்கிலப் படையை எதிர்க்கொண்ட ஊமைத்துரையின் வீரர்கள் பேரழிவை ஏற்படுத்தினர். தளபதி காலின் கொல்லப்பட்டார். பானர்மன் எதிர்பார்த்தபடி கட்டபொம்மனை எளிதில் தோற்கடிக்க முடியவில்லை. எனவே கூடுதல் படையைப் பாளையங்கோட்டையிலிருந்து வரவழைத்துப் பன்முனைத் தாக்குதல் நடத்தப்பட்டது. கிளர்ச்சிக்காரர்கள் கோட்டையை விட்டு வெளியேறி காடல்குடி நோக்கி விரைந்தனர். காடல்குடியில் அவர்களுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது. சிவசுப்பிரமணிய பிள்ளை கைது செய்யப்பட்டார். கட்டபொம்மன் தப்பிச் சென்று விட்டார். காடல்குடியிலிருந்து தப்பிச் சென்ற வீரபாண்டிய கட்டபொம்மனை புதுக்கோட்டை மன்னர் விஜயரகுநாத தொண்டைமான் களப்பூர் காட்டிலிருந்து பிடித்துத் தளபதி பானர்மனிடம் ஒப்படைத்தார். கட்டபொம்மனின் படைவீரர்கள் சிவகங்கை வழியாக திண்டுக்கல் தப்பிச் சென்று மருதுபாண்டியரும் கோபால நாயக்கரும் தங்கியிருந்த ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு முகாமில் சேர்ந்தனர்.

கைது செய்யப்பட்டோர் அனைவரும் ஆங்கிலேயர் ஆதரவுப் பாளையக்காரர் களைக் கொண்ட மன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர். இம்மன்றத்தில் எட்டயபுரம், சிவகிரி பாளையக்காரர்கள் இடம் பெற்றிருந்தனர். விசாரணைக்குப்பின் கிளர்ச்சித் தலைவர்கள் அனைவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதன்பின் 1799 செப்டம்பர் 13 ஆம் தேதி நாகலாபுரம் சுந்தரபாண்டியன் கோபாலபுரத்திலும், சிவசுப்பிரமணிய பிள்ளை நாகலாபுரத்திலும் தூக்கிலிடப்பட்டனர். மூன்று நாட்களுக்குப் பின்னர் (செப்.16) கட்டபொம்மன் தனியாக பாளையக்காரர் மன்றத்தினரால் விசாரிக்கப்பட டார். கட்டபொம்மன் தன்மீது சுமத்தப்பட்ட குற்றங்களை மனக்கலக்கமின்றி ஒத்துக் கொண்டார். 1799 செப்டம்பர் 17 ஆம் தேதி வீரபாண்டிய கட்டபொம்மன் கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டார். இறுதி மூச்சு உள்ளவரை கட்டபொம்மன் தளரா மனஉறுதியுடனும், இறுமாப்புச் செருக்குடனும் கணப்பட்டார் என்று மேஜர் பானர்மன் குறிப்பிட்டுள்ளார். வீரபாண்டியன் தன் வாழ்நாளின் இறுதி நாட்களை ஒரு மாவீரனுக்குரிய இறுமாப்புடன் எதிர்கொண்டார்" என்று புகழாரம் சூட்டியுள்ளார் பேராசிரியர் கே.ராஜய்யன்.

**ஊமைத்துரை**

வீரபாண்டியன், ஊமைத்துரை, குமாரசாமி ஆகிய மூவரும் உடன்பிறந்த சகோதரர்கள். இம்மூவரும் பாளையப்பற்றுமிக்க வீரர்கள். இவர்கள் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குத் தோன்றாத் துணையாக இருந்தார்கள். குறிப்பாக, ஊமைத்துரை ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிரான பாளையக்காரப் போரில் பிரதான பங்கேற்றார். 1798 இல் இராமநாதபுரம் சேதுபதியின் அரண்மனையில் கட்டபொம்மனின் உயிருக்கு ஊறுநேரவிருந்த நேரத்தில் ஆங்கில பாதுகாவலர் வீரர்களுடன் போரிட்டு கட்டபொம்மன் தப்பிச் செல்லக் காரணமாக இருந்தார். பின்னர் 1799 இல் மேஜர் பானர்மன் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை மீது பீரங்கித் தாக்குதல் நடத்தி உள்ளே நுழைந்த போது அவர்களை தீரத்துடன் எதிர்க்கொண்டு போராடி அவர்களது தாக்குதலை தடுத்து நிறுத்தினார். கோட்டையைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் ஊமைத்துரையைக் கைது செய்து பாளையம்கோட்டை சிறையில் அடைத்தனர். 1801 பிப்ரவரி மாதம் சிறையிலிருந்து தப்பிய ஊமைத்துரை கட்டபொம்மன் விட்டுச் சென்ற ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தார்.

**தூத்துக்குடி தாககுதல**

பாளையங்கோட்டையிலிருந்து தப்பிய ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைப் புதுப்பித்துக் கட்டினார். பிற பாளையக்காரர்களை ஒன்று திரட்டி, ஒருங்கிணைத்து, மற்றொரு கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டார். எட்டையபுரம், ஊத்துமலை பாளையக்காரர்களைத் தவிர பிற திருநெல்வேலி பாளையக்காரர்கள் ஊமைத்துரையோடு சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராகப் போராட ஆதரவளித்தனர். சிவகங்கை மருதுபாண்டியன் அனுப்பிய படை வீரர்களையும் சேர்த்துக் கொண்டு ஊமைத்துரை 1801 மார்ச் 3 ஆம் தேதி தூத்துக்குடியைத் தாக்கிக் கைப்பற்றினார். இது ஊமைத்துரையின் தலைமையில் செயல்பட்ட கூட்டுப்படைக்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

**முற்றுகை முறியடிபப்**

ஆங்கிலேயர் பாஞ்சாலங்குறிச்சியைக் கைப்பற்றும் முயற்சியைக் கைவிட வில்லை. அவர்கள் திருவிதாங்கூர் மன்னர் அனுப்பிய படையின் துணை கொண்டு தளபதி காலின் மெக்காலே தலைமையில் 1801 மார்ச் 13 ஆம் தேதி பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை

முற்றுகையிட்டனர். ஊமைத்துரையும், அவரது சகோதரர் தளவாய் குமாரசாமியும் அவர்களது வீரர்களும் ஆங்கிலேயரின் தாக்குதலை உறுதியுடன் எதிர்க் கொண்டனர். இந்த வாழ்வா-சாவா போராட்டத்தில் ஆங்கிலேயர் பலர் உயிரிழந்தனர். ஆங்கிலேயர் படை பின்வாங்கியது. ஆங்கிலேயர் முற்றுகை முறியடிக்கப்பட்டது. இந்த இரண்டாவது வெற்றியால் ஊமைத்துரையின் வீரக்கரம் மேலோங்கி நின்றது.

**மீண்டும் முற்றுகை**

பாஞ்சாலங்குறிச்சி கோட்டை முற்றுகைத் தோல்வி தளபதி காலின் மெக்காலேக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. எனினும், அவர் மீண்டும் முற்றுகையிட்டு அக்கோட்டையைக் கைப்பற்றத் திட்டமிட்டார். மெக்காலே சென்னை, ஆர்க்காடு, திண்டுக்கல், திருச்சி, மலபார் பகுதிகளிலிருந்து படைகளைத் திரட்டினார். தஞ்சை மன்னர் சரபோஜியும், புதுக்கோட்டை தொண்டைமானும் ஆங்கிலேயருக்கு ஆதரவாக இருந்தனர். 1801 மே 24 ஆம˙ தேதி லெப்டினன்ட் கர்னல் அக்னியூ (டுவ.ஊழடழநெட யுபநெற) தலைமையில் ஆங்கிலேயரின் கூட்டுப்படை பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை முற்றுகையிட்டது. 53 நாட்கள் தொடர்ந்து கோட்டை மீது பீரங்கித் தாக்குதல் நடத்தப் பட்டது. இரு தரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டது. இறுதியில் கோட்டை கைப்பற்றப்பட்டது. ஊமைத்துரை பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார்.

**காளையாரகோவில் கிளர்சசி**

பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து தப்பிச் சென்ற ஊமைத்துரை காளையார்கோவில் காட்டுக்குள் மருது சகோதரர்களை சந்தித்து அவர்களுடன் சேர்ந்து கொண்டு ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடினார். மருது சகோதரர்கள் துவக்கிய ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு தென்னிந்திய கிளர்ச்சியில் பேரார்வத்துடன் பங்கேற்றார் ஊமைத்துரை. காளையார்கோவில் கிளர்ச்சிக் கேந்திரமாயிற்று. தளபதி மெக்னீன் (Lieutenant Maclean) தலைமையில் காரைக்குடி வந்த ஆங்கிலப் படையை ஊமைத்துரையின் தலைமையின் கீழ் வந்த படை சுற்றிச் சூழ்ந்து கொண்டு தாக்கியது. இத்தாக்குதலை எதிர்க்கொள்ள முடியாத மெக்னீன் படை பின்வாங்க நேரிட்டது. பின்வாங்கிய ஆங்கிலப் படை திருச்சி, திருவிதாங்கூர், புதுக்கோட்டை, இலங்கை ஆகிய இடங்களிலிருந்து வந்த உதவிப் படையுடன் கர்னல் அக்னியூ (Lt.Colonel Agnew)வின் தலைமையில் 1801 செப்டம்பர் மாதம்

காளையார் கோயிலைத் தாக்கினார். சிவகங்கையின் பல பகுதிகள் கைப்பற்றப்பட்டன. இன்ஸ் (Innes), பிளாக்பர்ன் (Blackburne), மெக்காலே (Macaulay) தலைமையில் காளையார் கோயில் மீது மும்முனைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலைத் தீரத்துடன் எதிர்க்கொண்ட ஊமைத்துரை காளையார்கோயில் ஆங்கிலப் படையால் கைப்பற்றப்பட்ட பிறகு திண்டுக்கல்லுக்குத் தப்பிச்சென்றார் (அக்டோபர்1).

**திண்டுக்கல் தாகக்தல**

திண்டுக்கல்லுக்குத் தப்பிச் சென்ற ஊமைத்துரை மூன்று நாட்களுக்குள் சில ஆயுதம் தாங்கிய வீரர்களைத் திரட்டினார். பின்னர் விருப்பாட்சியைக் கைப்பற்றி அதன் அடர்ந்த காடுகளுக்குச் சென்று ஊமைத்துரை போராட்டத்தைத் தொடர்ந்தார். பின்னர், திண்டுக்கல்லில் ஜோன்ஸ் (Jones) தலைமையிலான படையைத் தோற்கடித்தார். ஊமைத்துரையின் படை வீரர்கள் எதிரிகளை விருப்பாட்சியிலும், சேத்ரம்பட்டியிலும் இடை மறித்துத் தாக்கினர். தோல்வியடைந்த ஊமைத்துரையும் அவரது படை வீரர்களும் திண்டுக்கல் பள்ளத்தாக்கில் பதுங்கினர். ஆங்கிலப் படை அவர்களைத் துரத்திச் சென்று தாக்கியது. மூன்று நாட்கள் உணவின்றி வாடிய கிளர்ச்சிக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட கிளர்ச்சித் தலைவர்கள் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டனர். 1801 நவம்பர் 16 ஆம் தேதி ஊமைத்துரையும் அவரது இளைய சகோதரர் செவத்தையாவும் சிரச்சேதம் செய்யப்பட்டதாக ஜேம்ஸ் வெல்ஷ் (James Welsh) தனது இராணுவ நினைவுக் குறிப்புகளில் (Military Reminicences) குறிப்பிட்டுள்ளார்.

**வேலு நாச்சியார**

வேலு நாச்சியார் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்த முதல் பெண் அரசி என்ற பெருமைக்குரியவர். இவர ் சிவகங்கைச் சீமையை ஆட்சி செய்த முத்து வடுகநாதரின் மனைவி ஆவார். தாண்டவராயபிள்ளை அமைச்சராயிருந்த போது வேலு நாச்சியார் அவரது கணவர் முத்து வடுகநாதருக்கு நல்ல மனைவியாகவும், நண்பராகவும், ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் இருந்தார். முத்து வடுகநாதர் டச்சுக்காரர்களுக்கு வர்த்தக வசதிகள் செய்து கொடுத்தமையால் ஆங்கிலேயர் இருமுறை சிவகங்கை மீது படையெடுத்து,

காளையார்கோயிலைக் கைப்பற்றியபோது வடுகநாதர் வீரத ் துடன் போரிட்டு மடிந்தார் (1772 ஜுன் 21). கணவருடன் போர்க்களத்திலிருந்து போரில் பங்கேற்ற வேலுநாச்சியாரின் செயல் பிரமிக்கத்தக்கது பாராட்டுக்குரியது. கணவர் முத்து வடுகநாதரின் வீர மரணத்துக்குப் பின் விதவை வேலு நாச்சியார் அவரது மகள் வேலாச்சி நாச்சியார், அமைச்சர் தாண்டவராய பிள்ளை ஆகியோருடன் விருப்பாட்சிக்குத் தப்பிச் சென்றனர். அங்கு அவர்கள் எட்டு ஆண்டு காலம் ஐதர் அலியின் பாதுகாப்புப் பராமரிப்பில் இருந்தனர். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு வேலு நாச்சியார் ஒரு படையைத் திரட்டி, ஐதர் அலி மற்றும் கோபால நாயக்கருடன் சேர்ந்து ஆங்கிலேயரைத் தாக்கத் திட்டமிட்டார். அதன்படி, 1780 இல் இக்கூட்டுப்படை சிவகங்கையில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டது. இப்போரின் போது மருது சகோரர்கள் தளபதிகளாகச் செயல்பட்டனர். இப்போருக்குப் பின் சிவகங்கை வேலுநாச்சியார ் வசம் வந்தது அவர் சிவகங்கை அரசியானார்.

**அரசி வேலு நாச்சியார்**

சிவகங்கையின் ஆட்சிப் பொறுப்பேற்ற வேலுநாச்சியார் பத்தாண்டு காலம் நல்லாட்சி செய்தார். ஐதர் அலியும், கோபால நாயக்கரும் அவருக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்தனர். சின்ன மருது அரசியின் அமைச்சராகவும், பெரிய மருது தலைமைத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டனர். இவ்விருவரும் அரசியின் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்து அவரது பத்தாண்டுகால ஆட்சியில் பங்கேற்றனர். அரசி வேலு நாச்சியார் ஆட்சிப் பொறுப்பை மருது சகோதரர்களிடம் ஒப்படைத்து விட்டு சில ஆண்டுகளுக்குப் பின் இறந்தார் (1790).

**மாவீரன் தீரன் சின்ன மலை**

தீரன் சின்னமலை பாளையம்கோட்டை பட்டக்காரர் அரச பரம்பரையைச் சேர்ந்தவர். இவர் 1756 ஏப்ரல் 17 ஆம் தேதி மேலபாளையத்தில் இரத்னசாமிக்கும் பெரியாத்தாளுக்கும் பிறந்தார். இவரது இயற்பெயர் தீர்த்தகிரி கவுண்டர். பின்னர் மாவீரன் தீரன் சின்னமலை என்று அழைக்கப்பட்டார். மைசூரின் அதிபரான ஐதர் அலி கொங்கு நாட்டை அபகரிக்கத் தீர்மானித்தார். அவரது திவான் முகமது அலி கொங்கு நாட்டில் தீர்த்தகிரி குடும்பத்துக்குச் சொந்தமான பகுதிகளைக் கையகப்படுத்தி, மக்களைக் கொடுமைப்படுத்திக் கட்டாய வரிவசூல் செய்தார். தீர்த்தகிரியும் அவரது இரு சகோதரர்களும்

முகமது அலியை சிவன் மலை மற்றும் சென்னிமலையில் இடைமறித்து சந்தித்து வரிப் பணத்தை மீட்டு கொங்கு நாட்டு உரிமையை நிலைநாட்டினர். தீர்த்தகிரியின் தீரச் செயல் மக்களிடையே விரைந்து பரவியது.

**தீர்த்தகிரி சின்னமலை**

அவமதிக்கப்பட்ட மைசூர் திவான் முகமது அலி சங்ககிரியிலிருந்து ஒரு படையை அனுப்பினார். தீர்த்தகிரி அப்படை காங்கேயத்தை அடைவதற்கு முன் நொய்யல் ஆற்றங்கரையில் இடைமறித்துத் தோற்கடித்தார். இதுவே தீர்த்தகிரி பெற்ற முதல் வெற்றியாகும். மைசூர் சுல்தான் ஐதர் அலி பழிவாங்கும் நோக்குடன் தாக்கக்கூடும் என்று எண்ணிய தீர்த்தகிரி சின்னமலை கொங்கு நாட்டு கிராமங்களிலிருந்து இளைஞர்களைத் தெரிவு செய்து, அவர்களுக்குப் போர்ப் பயிற்சி கொடுத்து, ஒரு படையை உருவாக்கினார். இதன் மூலம் தீரன் சின்னமலை கொங்கு நாட்டு மக்களின் உள்ளங்களை கொள்ளை கொண்டார்.

**தீரனும் திப்புவும்**

ஐதர் அலி இறந்தபின் (1782 ஜுலை 12) அவரது வாரிசான திப்பு சுல்தான் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்க்க மாவீரன் தீரன் சின்னமலையின் ஆதரவையும், உதவியையும் வேண்டினார். சின்னமலை திப்பு சுல்தானுடன் சேர்ந்து பொது எதிரியான ஆங்கிலேயரை எதிர்க்க ஒப்புதல் அளித்தார். கூட்டுப் படைக்கு பிரெஞ்சுப் போர் வல்லுநர்கள் பயிற்சி அளித்தனர். நான்காம் மைசூர் போரின் போது (1799) தீரன் சின்னமலையின் வீரர்கள் திப்பு சுல்தானின் தலைமையின் கீழ் மாலவல்லிப் போர் முனையில் ஆங்கிலப் படையை எதிர்த்துப் போரிட்டனர். இப்போரில் திப்புசுல்தான் கொல்லப்பட்டார் (1799 ஏப்ரல் 5).

**ஓடநிலா வெற்றி**

திப்பு சுல்தான் இறந்த பின்னர் தீரன் சின்னமலையும் அவரது வீரர்களும் கொங்கு நாடு திரும்பினர். ஆங்கிலேயரை எதிர்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டார் சின்னமலை. ஓடநிலா என்ற வலிமைமிக்க அரண்மனையை எழுப்பினார். அங்கு ஒரு படைக்கலச் சாலை (Ordinance Factory)யைக் கட்டினார் பீரங்கிகளும், துப்பாக்கிகளும் தயாரிக்கப்பட்டன. தீரன் சின்னமலையின் கொங்கு நாட்டுப் பற்றும், ஆங்கில ஆதிக்க எதிர்ப்பும் பக்கத்துப்

பாளையக்காரர்களையும் பற்றிக் கொண்டது. ஆங்கிலேயருக்கு எதிராகக் கூட்டமைப்பு அமைத்துப் போராட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர்.

**பெரும் பின்னடைவு**

கொங்கு நாட்டைத் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற நோக்குடன் ஆங்கியேலர் ஒருவரை தூது அனுப்பி கொங்கு நாட்டின் மீது ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டை ஏற்றுக் கொண்டு கப்பம் செலுத்துமாறு அறிவுறுத்தினர். ஆனால் தீரன் சின்னமலை ஆங்கிலேயரின் சவாலை எதிர்த்து கொங்கு நாட்டின் இறையான்மையை நிலைநாட்டத் துணிந்தார். தீரன் சின்னமலையின் துணிவையும் அறைகூவலையும் கண்டு அதிர்ந்து போன ஆங்கிலேயர் தளபதி மாகிஸ்கான் (Col.Makiskan) தலைமையில் சின்னமலையைக் கைது செய்ய அனுப்பினர். தீரன் சின்னமலை எதிரிப் படையை நொய்யல் ஆற்றங்கரையில் தோற்கடித்தார். தளபதி மாகிஸ்கான் கொல்லப்பட்டார்.

**வீர மரணம**

ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஆங்கிலக் கம்பெனி தளபதி ஹாரிஸ் (Captain Harris) தலைமையில் ஒரு குதிரைப் படையை அனுப்பியது. ஓடநிலாவை அடைந்த குதிரைப் படையை தீடீர்த் தாக்குதல் நடத்தி நிலைகுலையச் செய்தார் தீரன் சின்னமலை. இத்தாக்குதலை சமாளிக்க முடியாத தளபதி ஹாரிஸ் பின்வாங்க நேரிட்டது (1802). அதன்பின் ஆங்கிலேயர் ஒரு பலமிக்க பீரங்கிப் படையை அனுப்பியது. அதை அறிந்த சின்னமலையும் அவரது குடும்பத்தினரும் கருமலைக்குச் சென்றுவிட்டனர். ஆங்கிலேயரின் பீரங்கிப் படை ஓட நிலா அரண்மனையைத் தரைமட்டமாக்கிற்று. நல்லப்பன் என்ற சமையல்காரனால் காட்டிக் கொடுக்கப்பட்ட சின்னமலையும் அவரது சகோதரர்களும் கைது செய்யப்பட்டு சங்ககிரி சிறையில் அடைக்கப்பட்டனர். கொங்கு நாட்டின் மீது ஆங்கிலேயரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டால் சின்னமலையை மன்னிக்கத் தயாராக இருப்பதாகக் கூறியது கம்பெனி. ஆனால் தீரன் சின்னமலை எந்த நிபந்தனையையும் ஏற்க மறுத்துவிட்டார். எனவே, 1805 ஜூலை

31 ஆம் தேதி மாவீரன் சின்னமலையும் அவரது சகோதரர்களும தூக்கிலிடப்பட்டனர்.

**சுவர்னகிரி வரீன் சுந்தரலிங்கம**

சுந்தரலிங்கம் பாஞ்சாலங்குறிச்சிக்குப் பக்கத்தில் உள்ள சுவர்னகிரியில் 1771 ஆம் ஆண்டு கட்டக் கருப்பணத் தேவேந்திரருக்கும் முத்தம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். இவரது மனைவி சண்முகவடிவு. சுந்தரலிங்கம் வீரபாண்டிய கட்டபொம்மனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தளபதிகளில் ஒருவராக உடனிருந்தார். நதிநீர்ப் பங்கீடு சம்பந்தமாக பாஞ்சாலங்குறிச்சிக்கும் எட்டயபுரத்துக்குமிடையே ஏற்பட்ட தகறாரில் சுந்தரலிங்கம் தலையிட்டுத் தீர்த்து வைத்ததிலிருந்து இவரது அரசியல் வரலாறு துவங்கியது எனலாம். அதன்பின் அவர் கட்டபொம்மனின் படைப் பிரிவில் சேர்க்கப்பட்டு, படிப்படியாக தளபதி அளவுக்கு உயர்ந்தார். வீரபாண்டிய கட்டபொம்மன் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் ஜாக்சனை சந்திக்கச் சென்ற போது சுந்தரலிங்கமும் ஊமைத்துரையும் அவருடன் சென்றனர். கோட்டை வாயிலில் நடந்த கைகலப்பில் சுந்தரலிங்கம் ஆங்கிலத் தளபதி கிளார்க்கைக் வெட்டிக் கொன்றதாகக் கூறப்படுகிறது. கட்டபொம்மன் தப்பிச் செல்ல சுந்தரலிங்கமும் ஊமைத்துரையும் பேருதவி செய்தனர். 1799 செப்டம்பர் 5 ஆம் தேதி பாஞ்சாலங்குறிச்சி கோட்டை ஆங்கிலேயரால் முற்றுகையிடப்பட்டபோது சுந்தரலிங்கம் துணைத் தளபதிகளுடன் எதிரிப் படையினரை எதிர்கொண்டு பலத்த சேதத்தை விளைவித்தார். கட்டபொம்மனும், ஊமைத்துரையும் கோட்டையை விட்டு வெளியேற சுந்தரலிங்கம் உதவி செய்தார். அவர்களைத் தொடர்ந்து சுந்தரலிங்கமும் தலைமறைவானார்.

**ஊமைத்துரைக்கு உறுதுணை**

கட்டபொம்மனுக்குப் பிறகு ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திய ஊமைத்துரைக்குத் தோன்றாத் துணையாக இருந்தார் சுந்தரலிங்கம். கோல்வார்பட்டிச் சண்டையின் போது (1799 செப்டம்பர் 9) தலைமறைவான சுந்தரலிங்கம் சுவர்னகிரி, பசுவந்தானை, பட்டணமருதூர் முதலான இடங்களுக்குச் சென்று இளைஞர்களைத் திரட்டி, போர்ப் பயிற்சி கொடுத்தார் சிறு படையை உருவாக்கினார். அப்படையைக் கொண்டு பாளையங்கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த ஊமைத்துரையை விடுவித்தார் (1801 ஜனவரி 2). பாளையங்கோட்டையிலிருந்து பாஞ்சாலங்குறிச்சி திரும்பிய

சுந்தரலிங்கமும் ஊமைத்துரையும் சிதைந்து போன கோட்டையை விரைந்து கட்டினர். இருவரும் இணைந்து ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கூட்டமைப்பைப் புதுப்பிக்கும் முயற்சியில் மருது சகோதரர்களைக் கைது செய்து தூக்கிலிட்டனர். அதேபோன்று, சுந்தரலிங்கமும், ஊமைத்துரையும் விருப்பாட்சியில் கைது செய்யப்பட்டு பாஞ்சாலங்குறிச்சி பீரங்கிமேட்டில் ஒரே நாளில் ஒரே இடத்தில் தூக்கிலிடப்பட்டனர் (1801 நவம்பர் 16). சுந்தரலிங்கமும் ஊமைத்துரையும் ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிராக ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளைப் போன்று இணை பிரியாதிருந்து இறுதிவரை போராடிய சயாமிய இரட்டையர்கள் (Siamese Twins).

**மாமன்னர் மருதுபாண்டியன்**

மருதுபாண்டியன் 1748 டிசம்பர் 15 ஆம் தேதி மூக்கைய பழனியப்பனுக்கும் பொன்னாத்தாளுக்கும் சிவகங்கையில் அருப்புக்கோட்டைக்கு அருகே உள்ள நரிக்குடி என்ற கிராமத்தில் பிறந்தார். அவரது இளவல் சின்னமருது 1753 இல் பிறந்தார். உடையார் சேர்வை இராமநாதபுரம் மன்னரின் இராணுவத்தின் தளபதியாக இருந்த போது அவரது குடும்பத்தை நரிக்குடியிலிருந்து விருதுநகருக்கு மாற்றினார்.

**மருது சகோதரர்கள்**

மருது சகோதரர்கள் என்று அழைக்கப்பட்ட பெரிய மருதுவும், சின்ன மருதுவும் சூரன் கோட்டையின் போர்க் கலையில் பயிற்சி பெற்றனர். இருவரும் வலாரி (Boomerang) எறிவதில் அசகாய சூரர்கள் அதை ஆற்றல்மிக்கப் போர்க் கருவியாகப் பயன்படுத்தினர். இராமநாதபுரம் மன்னர் முத்து விஜய ரகுநாத சேதுபதி இவர்களுக்குப் பாண்டியர்கள்“ என்று பெயர் சூட்டிப் பெருமைப்படுத்தினார். சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதர் மருது சகோதரர்களின் வீரதீரச் செயல்களைப் பற்றிக் கேள்விப்பட்டு இச்சகோதரர்களைக் கேட்டுப் பெற்று தனது இராணுவத்தில் தளபதிகளாகச் சேர்த்துக் கொண்டார். பெரிய மருதுவும், சின்ன மருதுவும் இணை பிரியா இரட்டையர்களாக இருந்து ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடினர். 1772 இல் ஆங்கிலத் தளபதி பான் ஜோர் (Lt.Col.Bon Jour) காளையார் கோயிலைத் தாக்கிய போது சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதர் உயிரிழந்தார். அந்த நெருக்கடியான நேரத்தில் மருது சகோதரர்கள்

இராணி வேலுநாச்சியாரைப் பாதுகாப்புடன் மைசூர் சுல்தான் ஐதர் அலியின் கட்டுப்பாட்டில் இருந்த திண்டுக்கல்லுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர்கள் மைசூர் சுல்தானின் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் இருந்தனர்.

**கள்ளர்குடி வெற்றி**

வேலுநாச்சியார் ஆர்க்காடு நவாபின் ஆதரவோடு சிவகங்கை அரசியானார். அதற்குக் கைமாறாக எட்டு ஆண்டு காலமாகக் கட்டப்படாமல் இருந்த கப்பத்தைக் கட்ட வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். அரசி அந்த நிபந்தனையை நிராகரித்தார். மருது பாண்டியர்கள் நவாபுக்குச் சொந்தமான பகுதிகளைச் சூறையாடினர். எனவே, ஆற்காடு நவாபு ஆங்கிலேயரின் இராணுவ உதவியோடு கள்ளர்குடியைத் தாக்கினார். மருது பாண்டியர்கள் அத்தாக்குதலை முறியடித்தனர். கள்ளர்குடி வெற்றி அவர்களது இராணுவத் தலைமையைப் பறைசாற்றியது.

**கட்டபொம்மனும் மருது பாண்டியர்களும்**

மருது பாண்டியர்கள் பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மனோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவருடைய ஆலோசனையைப் பெற்று வந்தனர். கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பின்னர் (1799 அக்டோபர் 9) மருது சகோதரர்கள் ஊமைத்துரை சகோதரர்களுக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரித்தனர். அடைக்கலமடைந்த அவர்களை ஒப்படைக்க மறுத்ததால் ஆங்கிலேயர் சிவகங்கையைத் தாக்கினர் (1801). மருது பாண்டியர்கள் அத்தாக்குதலை முறியடித்து ஆங்கிலேயருக்குச் சொந்தமான மூன்று மாவட்டங்களைக் கைப்பற்றினர்.

**காளையாரகோயில் போர்**

மருது பாண்டியர்கள் ஆங்கிலேயர் ஆதிக்கத்தைத் தீவிரமாக எதிர்த்து வந்தனர். இந்த எதிர்ப்புக்கு இராமநாதபுரம், தஞ்சை, மதுரைப் பகுதித் தலைவர்கள் ஆதரவளித்தனர். நான்காம் மைசூர் போரின் போது (1799) மருது பாண்டியன் ஆதரவாளர்கள் ஆங்கிலேயரின் காவல் நிலையங்களைத் தாக்கி ஆயுதங்களைக் கைப்பற்றினர். ஆங்கிலேயரை எதிர்க்கத் துணிந்த அனைவரையும் ஊக்குவித்து ஓரணியில் கொண்டு வந்தனர். 1801 ஜூன் மாதம் வரலாற்று முக்கியத்துவமிக்க சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டார். மருது பாண்டியனின் ஆங்கிலேயர் ஆதிக்களதிர்ப்பை முடிவுக்குக் கொண்டு

வரத் தீர்மானித்த கம்பெனி வலிமைமிக்க படையை அனுப்பி சிறுவயலைத் தாக்கி (ஜூலை 30), காளையார்கோயிலைக் கைப்பற்றினர் (அக்டோபர்). ஆங்கிலேயரின் பிடியிலிருந்து தப்பிய மருது பாண்டியர்கள் சிங்கம்புணரி காடுகளுக்குத் தப்பிச் சென்றனர். அவர்களைத் துரத்திச் சென்ற எதிரிப் படையினர் சோழபுரத்தில் கைது செய்தனர் (அக்டோபர் 19). 1801 அக்டோபர் 24 ஆம் தேதி மருது பாண்டியர்கள் திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர். மருது பாண்டியர்கள் பிறவிப் போராளிகள். அவர்களது ஆங்கிலேய ஆதிக்க எதிர்ப்பு இயல்பானது, தீர்க்கமானது. இவர்கள் ஆங்கிலேயருக்கு எதிரான பாளையக்காரர் கிளர்ச்சியை மக்கள் விடுதலை இயக்கமாக மாற்றினர். மருது பாண்டியனின் சுதந்திரப் பிரகடனம் சாதி, மத, நிற, இன, பிராந்திய வேறுபாடின்றி மக்கள் சார்பாக ஆங்கியேலர் ஆதிக்கத்துக்கு எதிராக விடப்பட்ட அறைகூவலாகும். மருது பாண்டியர்களின் விடுதலை உணர்வும், வீரமும், நாட்டுப் பற்றும் பாளைய எல்லை கடந்தவை தன்னலமற்றவை அப்பழுக்கற்றவை. 1813 இல் ஜே.கோர்லே என்ற ஆங்கில ஆராய்ச்சியாளர் மருது பாண்டியர் பற்றி எழுதிய நூலில் (Maradu An Indian Story of the Beginning of the Nineteenth Century) மருது பாண்டியர்களின் போர்ப் பிரகடனம் கி.பி.85 ஆம் ஆண்டில் ரோமானிய ஆதிக்கத்தை எதிர்த்து நிகழ்த்திய பிரிட்டானிய தளபதி கால்காகஸ் (Calgacus) பேருரைக்கு இணையானது என்று குறிப்பிட்டுள்ளார். சுருங்கக்கூறின், மருது பாண்டியர்கள் முன்னின்று நடத்திய போராட்டம் அதன்பின் வந்த போராட்டங்களுக்கு முன்னோடியாக அமைந்தது எனில் மிகையாகாது. மக்கள் நாயகனாகத் திகழ்ந்த மருது பாண்டியன் ஆங்கிலேயப் புயலுக்கு முன் ஏற்றி வைத்த அகல் விளக்கு போன்றது என்று குறிப்பிட்டுள்ளார் தமிழ் நாட்டு வரலாற்று ஆசிரியர் அ.இராமசாமி. 1800-1801 ஆம் ஆண்டில் மாமன்னர் மருது பாண்டியர்கள் தலைமையிலும், வழிகாட்டுதலிலும் உருவான போராட்டங்கள் ஆங்கிலேயருக்கு எதிரான ஆயுதம் ஏந்திய மக்கள் புரட்சி என்று கருதுகிறார் பொன்.முத்துராமலிங்கம். மருது பாண்டியர்களின் தலைமையில் நடைபெற்ற தென்னிந்திய கிளர்ச்சி இந்திய விடுதலைப் போராட்டப் பயணத்தின் தனித்தன்மை வாய்ந்த மாமுயற்சியின் துவக்கமாகும் என்று குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் கே.ராஜய்யன்.

**தென்னிந்தியக் கிளரச்சி, 1800-1801**

ஆர்க்காடு நவாபு முகமது அலி ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் ஆதரவோடு மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் தனது அதிகார ஆதிக்கத்தை விரிவுபடுத்த முற்பட்ட போது பாளையக்காரர்கள் கிளர்ச்சி செய்தனர். நெல்கட்டும்செவலை நெல்கட்டான் செவலாக்கிய பூலித்தேவன் (1715-1767) மேற்குப் பாளையக்காரர்களை ஊக்குவித்து, ஒருங்கிணைத்து, போராட்டக் கூட்டமைப்புக் குடையின் கீழ்க் கொண்டு வந்து நவாப்-ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து உயிர்த்தியாகம் செய்தார். 18 ஆம் நூற்றாண்டுத் துவக்கத்தில் பாளைய சுதந்திரத்துக்காகப் போராடிய முதல் தமிழ்ப் போராளி பூலித்தேவன் ஆவார். பூலித்தேவனுக்குப் பின் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மன் (1760-1799) கிழக்குப் பாளையக்காரர்களை உற்சாகப்படுத்தி, ஒன்று சேர்த்து, ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கூட்டணி அமைத்துப் போராடியதால் தூக்கிலிடப் பட்டார். பூலித்தேவனும், கட்டபொம்மனும் நவாப்-ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்த முதல் போராட்டக்காரர்கள் ஆவர். இவர்களது கிளர்ச்சிகளை இந்திய விடுதலைப் போராட்டத்தின் முதல் கட்ட கன்னி முயற்சி எனலாம்.

**அடுத்தகட்ட முயற்சி**

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பின்னர் (1799) அவரது வலக்கரப் போராளியான ஊமைத்துரை ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தை முன்கொண்டு சென்றார். திருநெல்வேலியில் மூட்டப்பட்ட பாளைய சுதந்திரப் போராட்ட நெருப்பு காட்டுத்தீ போன்றுமதுரைக்கும், சிவகங்கைக்கும் பரவியது. சிவகங்கை மருது சகோதரர்களான வெள்ளை மருதுவும், சின்ன மருதுவும் ஊமைத்துரையைத் தங்களுடன் இணைத்துக் கொண்டு ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சியை தென்னிந்திய அளவுக்கு விரிவுபடுத்தினர். தமிழ் நாட்டைக் களமாகக் கொண்டு அவர்கள் ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சியை அகல் விரிவாக்கினர். காளையார்கோயிலை மையமாகக் கொண்டு இப்போராளிகள் மருது பாண்டியர்களின் தலைமையில் இராமநாதபுரம், திண்டுக்கல், மலபார்-கோயமுத்தூர் பிராந்தியக் கூட்டமைப்புகளை (Regional Leagues) உருவாக்கி, அவைகளை ஒன்று சேர்த்து தென்னிந்திய கூட்டிணைப்பாக (Peninsular Confederacy) விரிவுபடுத்தி, தெளிவான குறிக்கோளுடன், திட்டமிட்டு ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிரான பரவலான வன்முறைக் கிளர்ச்சியைத் துவக்கினர். 1799-லிருந்து 1801 வரை நீடித்த இக்கிளர்ச்சியைப் பற்றி ஆழ்ந்து ஆராய்ச்சி செய்த பேராசிரியர் கே.இராஜய்யன் இப்போராட்டம் இந்திய ஆட்சியாளர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு அடிபணிவதற்கு எதிரானது என்றும், பிரிட்டிஷ் மேலாதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட

தீர்மானமான பரவலான வன்முறைக் கிளர்ச்சி என்றும் குறிப்பிட்டுள்ளார். தென்னிந்திய கிளர்ச்சியே முதல் இந்திய விடுதலைப் போராட்டம் என்று ஆவண ஆதாரங்களுடன் நிலைநாட்டியுள்ளார்.

**கிளர்ச்சிக்கான காரணங்கள்**

**அரசியல் காரணங்கள்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே துவக்கப்பட்டதே தென்னிந்தியக் கிளர்ச்சியாகும். முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் தென்னிந்தியா குழப்பத்துக்கும், கொந்தளிப்புக்கும் உள்ளாயிற்று. எனினும், அரசர்களும், பாளையக்காரர்களும் கிராமக் குடியாட்சி முறையும் அரசியல் கட்டுக்கோப்பும் குலையாது சமநிலையைப் பாதுகாத்தனர். அந்த அமைப்பு முறை ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு இலக்கான போது எதிர்ப்பு ஏற்பட்டது. ஆற்காட்டு நவாப் சந்தா சாகேப், தஞ்சாவூர் பிரதாப் சிங், மதுரை கான்சாகிப் ஆகியோர் கம்பெனி ஆதிக்கத்துக்கு அடிபணிந்தனர். மைசூர் மன்னர்களான ஹைதர் அலியும், திப்பு சுல்தானும் அவ்வாதிக்கத்தை எதிர்த்து மடிந்தனர். கம்பெனியோடு உடன்படிக்கை செய்து கொண்ட மன்னர்கள் ஆங்கிலேய நிர்வாகத்தின் கருவிகளாக இருந்து கொண்டு மக்களைச் சுரண்டினர், கொடுமைப்படுத்தினர். அரசர்கள் கம்பெனிக்கு அடங்கி மக்களை அடக்கியமையால் மக்களிடையே மனக்கசப்பு வளரலாயிற்று.

அரசர்களை அடக்கியது போன்று கம்பெனியால் பாளையக்காரர்களை அடிபணிய வைக்க முடியவில்லை. கர்நாடகத்திலும், மலபாரிலும், தமிழகத்திலும் கம்பெனி பல்வேறு உத்திகளைக் கையாண்டு பலவீனப்படுத்திற்று. எனினும், உறுதியான பாளையக்காரர்கள் ஒன்று சேர்ந்து கம்பெனி ஆட்சியை எதிர்க்கத் துணிந்தனர். கிராமங்களின் கேடயமாக இருந்த அவர்கள் தங்களது பாரம்பரிய உரிமைகளும் சலுகைகளும் பறிபோவதைக் கொஞ்சமும் விரும்பவில்லை. வழிவழியாக இருந்து வந்த கிராமப் பணிகளைக் கம்பெனி நிர்வாகம் மேற்கொண்டதால் கிராமக் குடியாட்சி முறை நிலை குலைந்தது. கிராம மக்கள் பாளையங்களிலும் பணியாற்ற முடியவில்லை. கிராம நிர்வாகத்திலும் பங்கேற்க இயலவில்லை. பரம்பரைப் பழக்கவழக்கங்களைப் புனிதமாகக் கருதிய கிராம மக்கள் கம்பெனி கொண்டு வந்த மாற்றங்களால் ஏமாற்றமடைந்தனர். அரசியல், உரிமைப் பறிப்பையும், சுயாட்சி இழப்பையும் மக்கள் தலைவர்கள் எதிர்த்தனர். பிரான்சிலிருந்து மைசூருக்கு வந்த புரட்சியாளர்கள் தென்னிந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று ஆங்கிலேயருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தார்கள். இவற்றின் கூட்டு விளைவாகத் தென்னிந்தியாவில் கிளர்ச்சி ஏற்படுவதற்கான அரசியல் சூழ்நிலை உருவாயிற்று.

**பொருளாதாரக் காரணங்கள்**

அரசியல் அடக்குமுறையைப் போன்றே பொருளாதாரச் சுரண்டலும் தென்னிந்தியக் கிளர்ச்சிக்குக் காரணமாயிற்று. மக்கள் நலனைப் பேணுவதைவிடக் கம்பெனி தனது வருவாயைப் பெருக்குவதிலேயே குறியாக இருந்தது. வரிகளை வரம்பின்றி உயர்த்தியது. உதாரணமாக, திண்டுக்கல்லில் திப்புசுல்தான் வசூலித்ததற்கு மேலாக இருபத்தி ஐந்து விழுக்காட்டுக்கு அதிகமாக வரி வசூலிக்கப்பட்டது. கன்னடப் பகுதி, சூன்டா, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் தொண்ணூறு விழுக்காட்டுக்கு அதிகமாக வரி வசூல் செய்யப்பட்டது. தன்னிச்சைப்படி உயர்த்தப்பட்ட வரிகளால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அதுமட்டுமல்ல, அவர்கள் அனுபவித்த வந்த பல சலுகைகள் பறிக்கப்பட்டன. விவசாய நிலங்களுக்கு விதிக்கப்பட்ட தீர்வை மிகவும் அதிகமாக இருந்தது. பல நேரங்களில் விளைச்சலைவிடத் தீர்வையே அதிகமாக இருந்தது. இவற்றை எதிர்த்தோர் நிலங்களிலிந்து வெளியேற்றப்பட்டனர். பலர் வரியைக் கட்ட முடியாது தங்களது நிலங்களை விற்றுவிட்டுக் கிராமங்களை விட்டே வெளியேறினர். வரிகள் கடுமையாகவும், கொடுமையாகவும் வசூலிக்கப்பட்டன. இடைத்தரகர்களும் வருவாய்த்துறை ஊழியர்களும் மக்களைக் கசக்கிப் பிழிந்து வரி வசூலித்தனர். நிலத் தீர்வையை நிர்ணயிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் விசாரணைகளும் மக்களிடையே அச்சத்தை அதிகரிக்கவே செய்தன. அரசர்கள் கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய தொகையையும் மக்களிடமிருந்தே வசூலித்தனர். அவ்வசூலுக்காக நியமிக்கப்பட்டவர்கள் கொடுத்த நிர்பந்தங்களும் மக்களைத் துன்புறுத்தின. அரசர்கள் ஆங்கிலேயரிடமிருந்து அதிக வட்டிக்குக் கடன்கள் வாங்கினர். தங்களுக்குச் சேர வேண்டிய நில வரியை வசூலித்து கடனுக்குப் பதில் செலுத்தும் பொறுப்பைக் காரியக்காரர்களிடம் (Assignees) ஒப்படைத்தனர். அவர்கள் கம்பெனி ஊழியர்களுக்கு மேலாகததங்களைக் கருதிக் கொண்டு மக்களிடமிருந்து நிலுவைகளை

அடிக்கடி கம்பெனி மேற்கொண்ட போர்களாலும், இராணுவ நடவடிக்கையாலும் வர்த்தகமும் தொழிலும் பெரிதும் பாதிக்கப்பட்டன. கம்பெனியின் கப்பல்களின் போட்டிக்கு முன் நாட்டுப் படகுகளால் கம்பெனி ஊழியர்களின் சொந்த வியாபாரம், இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் ஆகியவை தென்னிந்தியாவின் கிராமக் குடிசைக் கைத்தொழில்களை நசித்து விட்டன. அதனால் பல்லாயிரக்கணக்கான கைவினைஞர்கள் வேலை இழந்தனர். 1798-ல் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தைப் பயன்படுத்திக் கொண்டு கம்பெனிக் காரியக்காரர்களும் நிர்வாகிகளும் உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்துக் கொண்டு, அவைகளின் விலையை பன்மடங்கு உயர்த்தி விற்றுக் கொள்ளை இலாபம்

பெற்றனர். இவற்றால் மனம் நொந்து போன மக்கள் தங்களுடைய வெறுப்பை வெளிப்படுத்துவதற்கான தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தனர்.

**மருது பாண்டியன் கூறிய காரணம்**

சிவகங்கை மருது பாண்டியன் தென்னிந்தியாவின் தாழ்ச்சிக்குரிய காரணத்தை அறிவுப்பூர்வமாக ஆய்ந்தறிந்து கூறினார். அவரின் ஆய்வின்படி அரசர்களின் அரசியல் சாதுர்யமற்ற கொள்கை, குழு கோஷ்டி மனப்பான்மை, ஆங்கிலேயரின் வஞ்சகத்தன்மை, மக்களின் ஒரு பகுதியினரின் அந்நிய அதிகாரத்துக்கு அடிபணியும் வழக்கமான போக்கு ஆகியவையே தென்னிந்தியரின் அரசியல் பலவீனத்துக்கான காரணங்களாகும். அரசர்கள் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொண்டு தன்மானக் குறைவான தாழ்ந்த நிலையை அடைந்ததை அவர் வன்மையாகக் கண்டித்தார். தென்னிந்தியர்களிடையே உள்ள ஒற்றுமையின்மையை ஆங்கிலேயர்களுக்கிடையே இருந்த ஒற்றுமையோடு ஒப்பிட்டுக் காட்டினார். ஹைதராபாத்தில் நாஸிர் ஜங்கும், முஸபர் ஜங்கும், கர்நாடகத்தில் சந்தா சாகிப்பும், முகமது அலியும், தஞ்சாவூரில் பிரதாப் சிங்கும், சரபோஜியும், பரஸ்பர பொறாமையால் மோதிக் கொண்டதைக் கோடிட்டுக் காட்டினார் மருதுபாண்டியர். ஆங்கிலேயரின் ஆணைகளைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றி அவர்களின் ஆட்சியை உரமிட்டு வளர்த்த மக்களின் ஒரு பிரிவினரின் போக்கு கண்டு அவர் கவலையுற்றார். தற்கொலைக்கொப்பான அந்நிலை நீடித்தால் இந்தியா முழுவதும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் வந்து விடும் என்று அவர் எச்சரித்தார். தமிழ் நாட்டுக்கு ஒரு வால்டேர், ஒரு ரூஸோ, ஒரு மண்டேஸ்கு இல்லாத குறையைத் தீர்த்து வைத்தவர் மருது பாண்டியர் என்றால் மிகையாகாது.

**பிராந்தியக் கூட்டமைப்புகள்**

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியின் விளைவாக தென்னிந்தியாவில் அரசியல் அடக்குமுறை, பொருளாதாரச் சுரண்டல், நிர்வாகக் கெடுபிடி போன்றவை அதிகரிக்கலாயிற்று. மக்கள் சொல்லொணா இன்னல்களுக்கு ஆட்பட்டனர். எதிர்ப்புணர்ச்சியே கிளர்ச்சிக்கு ஆணிவேர். ஆனால் வடிவமற்ற எதிர்ப்புணர்ச்சி வீண் முயற்சியாகும். எனவே, மக்களின் எதிர்ப்புணர்ச்சிக்குப் பாதிக்கப்பட்ட பாளையக்காரர்களும் மக்கள் தலைவர்களும் உரிய வடிவம் கொடுத்தனர். அவ்வடிவம் முதலில் பிராந்தியக் கூட்டமைப்புகளாக உருவெடுத்தது. 1795-லிருந்து 1799 வரை இராமநாதபுரம், திருநெல்வேலி, திண்டுக்கல், மலபார்-கோயமுத்தூர் ஆகிய நான்கு பிராந்திய கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

**இராமநாதபுரம் கூட்டமைப்பு**

இக்கூட்டமைப்பின் கர்த்தா சிவகங்கை வெள்ளை மருதுபாண்டியன் ஆவார். இவரது இளவல் சின்னமருது. மருது சகோதரர்கள் சிவகங்கை

மன்னரான முத்து வடுகநாதத் தேவரிடம் சாதாரண ஊழியர்களாகத் தங்களது பணியைத் துவக்கினர். தங்களது பயன் கருதாப் பணியாலும், நேர்மைத் திறத்தாலும், எஜமான் பக்தி விசுவாசத்தாலும், கடுமையான உழைப்பாலும் உயர்ந்தனர். அமைச்சர்களாயினர். அரசரின் மறைவுக்குப் பிறகு அரச குடும்பத்தைக் காத்த பெருமை இவர்களுக்குண்டு. சிவகங்கைக்கு அடுக்கடுக்காக வந்த சோதனைகளைச் சமாளித்தனர். ஆங்கிலேய ஆட்சியை அகற்றப் பிற பாளையக்காரர்களோடு கூட்டு சேர வேண்டிய இன்றியமையாமையை உணர்ந்தவர் மருதுபாண்டியன். மக்கள் ஒன்று சேர்ந்து அந்நிய ஆட்சிக்கெதிராகப் போரிட வேண்டுமென்றார் அவர். பக்கத்துப் பாளையங்களுக்கு உளவாளிகளை அனுப்பித் தன்முயற்சிக்கு ஆதரவு தேடினார் மருதுபாண்டியன். இராமநாதபுரத்தின் பிரமுகர்களான மேலப்பன், சிங்கம் செட்டி, முத்து கருப்பதேவர் ஆகியோர் மருதுபாண்டியனின் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தனர். தஞ்சாவூர் ஞானமுத்துவும் சிவகிரி மாப்பிள்ளை வன்னியனும் மதுரைக் கள்ளர்களும் மருது பாண்டியன் அமைத்த இராமநாதபுரம் கூட்டமைப்புக்கு ஆதரவளித்தனர். மருது பாண்டியனது தலைமையில் இக்கூட்டமைப்பு செயல்பட்டது.

**திருநெல்வேலி கூட்டமைப்பு**

மருது பாண்டியனால் ஊக்குவிக்கப்பட்டு நாகலாபுரம், மன்னர்கோட்டை, போவாலி, கோலார்பட்டி, சென்னால்குடி பாளையக்காரர்கள் சேர்ந்து உருவாக்கியது தான் திருநெல்வேலிக் கூட்டமைப்பு. இக்கூட்டமைப்பில் சேர்ந்து அதற்கு புதுப் பொலிவையும் வலிவையும் கொடுத்தார் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரான வீரபாண்டிய கட்டபொம்மன். மருது பாண்டியனால் கவரப்பட்டு, அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, அவரையே முன்மாதிரியாகக் கொண்டு செயல்பட்டார் கட்டபொம்மன். அவர் சாப்டூர், ஏழாயிரம்பண்ணை, காடல்குடி, குளத்தூர் பாளையக்காரர்களையும் கூட்டு சேர்த்துக் கொண்டு திருநெல்வேலிக் கூட்டமைப்பைப் பலப்படுத்தினார். செவத்தையா, வீரபாண்டிய நாயக்கர், வீரபத்திரபிள்ளை ஆகியோரை அனுப்பி மதுரைக் கள்ளர்களின் ஆதரவையும் பெற்றார் அந்த பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர். திருநெல்வேலி கூட்டமைப்புக்கு அவரே தலைமையேற்றார். ஆனால் தென்னிந்தியக் கிளர்ச்சியில் பங்கேற்கும் பேறு அவருக்குக் கிட்டவில்லை. கிளர்ச்சி துவங்குவதற்கு ஓராண்டுக்கு முன்னரே கட்டபொம்மன் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டார்.

**திண்டுக்கல் கூட்டமைப்பு**

திண்டுக்கல் கூட்டமைப்பை உருவாக்கியவர் கோபால நாயக்கர் ஆவார். விருப்பாட்சிப் பாளையக்காரரான கோபால நாயக்கர் சிறந்த இராஜதந்திரி. போர்க்களங்கள் பல கண்டவர். திறமையான அமைப்பாளர்.

அந்நிய அடக்குமுறை ஆதிக்கத்திடமிருந்து விடுபட எண்ணியோருக்கு அவரது தலைமை கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தது. திண்டுக்கல், மணப்பாறை, கள்ளர்நாடு, கோயமுத்தூர், சேலம் ஆகிய இடங்களுக்குத் தனது தூதுவர்களை அனுப்பி ஆதரவு தேடினார் கோபால நாயக்கர். மணப்பாறை இலட்சுமி நாயக்கர், டில்லி (னுநடாம) யாதுல் நாயக்கர் ஆகியோரோடு நெருங்கிய அரசியல் தொடர்பு கொண்டிருந்தார் அவர். யாதுல் நாயக்கர் மூலம் மங்களம் பாளையக்காரரின் ஆதரவைப் பெற்றார் கோபால நாயக்கர். பிற பாளையக்காரர்களும் கோபால நாயக்கரின் முயற்சிக்கு ஊக்கமளித்தனர். இராமநாதபுரம், திருநெல்வேலி, திண்டுக்கல் கூட்டமைப்புகள் கூடும் கேந்திரமாகக் கள்ளர்நாடு திகழ்ந்தது.

**மலபார்- கோயமுத்தூர் கூட்டமைப்பு**

இந்த அமைப்பு ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர் கேரளவர்மா ஆவார். மக்கள் செல்வாக்கு மிகப் பெற்றவர் இவர். பிற கூட்டமைப்புகள் உருவாகிக் கொண்டிருக்கையில் கம்பெனிப் படையோடு கடுமையாகப் போராடிக் கொண்டிருந்தவர் கேரள வர்மா. விவசாயிகளின் பக்கபலம் அவருக்கு எப்போதும் இருந்தது. கேரள வர்மா பிற பாளையக்காரர்களுக்கு அனுப்பிய ஓலைச் சுவடி கடிதங்கள் நல்ல பலனளித்தன் அவர்களின் ஆதரவு கிடைத்தது. வைநாடு, கோட்டயாட்டு, குரும்பரநாடு, பரப்பநாடு ஆகியவற்றின் தலைவர்களும், இருவி நாட்டு நம்பூதிரிகளும், சமோரின் குடும்பத்தினரும், மலபார் மாப்பிள்ளைகளும் கேரள வர்மாவை ஆதரித்தனர். ஆங்கிலேயர்களின் நோக்கும் போக்கும் பிடிக்காத கோயமுத்தூர் கவுண்டர்களும் மலபார் கிளர்ச்சிக்காரர்களோடு சேர்ந்து கொண்டனர். மலபார், திண்டுக்கல் கூட்டமைப்புகள் கூடும் மையமாக விளங்கியது கோயமுத்தூர்.

**தென்னிந்திய கூட்டமைப்பு**

பிராந்தியக் கூட்டமைப்புகள் காலத்தின் கட்டாயத்தால் தன்னிச்சையாகத் தோன்றியவையாகும். இவ்வமைப்புகளின் இணைப்புப் பாலமாக விளங்கியவர் மருதுபாண்டியன். நான்கு கூட்டமைப்புகளுக்கும் பொதுவான குறிக்கோள் இருந்தது. இவை தென்னிந்தியாவின் பரந்த நிலப்பகுதியில் செயல்பட்டன. அதைத் தங்களது செல்வாக்கின் கீழ் வைத்திருந்தன. திண்டுக்கல் மலபார் கூட்டமைப்புகள் மைசூர் திப்பு சுல்தானுடன் உடன்பாடு கொண்டிருந்தன. ஆனால் 1799-ல் திப்புசுல்தான் வீழ்ச்சிக்குப் பின்னர் பிராந்திய கூட்டமைப்புகள் பலமிழந்தன. கேரளவர்மா கிளர்ச்சிப் பாதையினின்றும் விலகிக் கொண்டதால் மலபார் கோயமுத்தூர் கூட்டமைப்பு வலுவிழந்தது. கட்டபொம்மன் கொல்லப்பட்டதால் திருநெல்வேலி கூட்டமைப்பு முன்னரேயே பலமிழந்திருந்தது. அத்தகைய நெருக்கடியான நேரத்தில் மருது பாண்டியன் முனைப்புடன் முன்வந்து சீர்குலைந்து போய்க் கொண்டிருந்த கூட்டமைப்பு முறையைக் காப்பாற்றினார். காப்பாற்றியது

மட்டுமல்ல, அதை இன்னும் விரிவுபடுத்தித் தென்னிந்திய கூட்டிணைப்பாக மாற்றினார். கன்னட-மராத்தியப் பகுதித் தலைவரான தூண்டாஜி வாக்கோடு (னுழழனெயதை றுயரப) கூட்டுச் சேர்ந்து அக்கூட்டிணைப்பை உருவாக்கினார் மருதுபாண்டியன். வேலூர் கோட்டையில் சிறைபட்டிருந்த திப்பு சுல்தானின் மூத்த மகன் பட்டே ஹைதர் மைசூர் கிளர்ச்சிக்காரர்களுடன் இரகசியத் தொடர்பு கொண்டு அவர்களைத் தென்னிந்தியக் கூட்டிணைப்பில் சேருமாறு ஊக்கப்படுத்தினார். மலபார், கன்னட, பெல் நாட்டு மக்களும் இப்புதிய முயற்சிக்கு ஆதரவளித்தனர். கேரளவர்மா மீண்டும் மலபார் கிளர்ச்சிக்காரர்களின் தலைவரானார். மருது பாண்டியனும், தூண்டாஜி வாக்கும் தென்னிந்திய கூட்டிணைப்பின் முன்னணித் தலைவர்களாகத் திகழ்ந்தனர். கோபால நாயக்கர், கான்-இ- ஜஹான், கேரள வர்மா, கிருஷ்ணப்ப நாயக்கர் ஆகியோர் இரண்டாம் வரிசைத் தலைவர்களாக இருந்தனர். மக்களின் பக்கபலத்தோடு தென்னிந்தியக் கூட்டிணைப்பு ஆங்கிலேய ஆதிக்கத்துக்கெதிராகத் திட்டமிட்டு செயல்படத் துவங்கியது.

**கிளர்ச்சியின் போக்கு**

ஆங்கிலேயரது ஆட்சியை அகற்றி, நாட்டை அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதே தென்னிந்தியக் கூட்டிணைப்பின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளை நிறைவேற்றுவதற்கான திட்டத்தைத் தீட்டும் பொருட்டு கூட்டிணைப்புத் தலைவர்கள் விருப்பாட்சியில் கூடி சதியாலோசனை செய்தனர் (1800 ஏப்ரல்). விரிவான ஆலோசனைக்குப் பின்னர் அவர்கள் மூன்று முக்கிய முடிவுகளை மேற்கொண்டனர்: 1) ஒரே சமயத்தில் பல பகுதிகளில் கிளர்ச்சியைத் துவக்குவது 2) கிளர்ச்சிக்காரர்கள் ஒற்றுமையாக இருந்து போராடுவது 3) ஆங்கிலேயப் படையோடு நேரடியாக மோதாமல், மறைந்திருந்து தாக்கும் கொரில்லா முறையைப் பின்பற்றல். மருது பாண்டியன் மதுரைப் பகுதியிலும், கோபால நாயக்கர் திண்டுக்கல், திருச்சி பகுதியிலும், கான்-இ-ஜஹான் கோயமுத்தூர்-சேலம் பகுதியிலும், கேரளவர்மா மலபார் பகுதியிலும், கிருஷ்ணப்ப நாயக்கர் மேற்கு மைசூர் பகுதியிலும், தூண்டாஜி வாக் கன்னட நாட்டின் வடக்குப் பகுதியிலும் கிளர்ச்சிக்குப் பொறுப்பேற்பது என்று முடிவாயிற்று. கோபால நாயக்கர் தலைமையில் கூடிய இக்கூட்டத்தில் 1800 ஜூன் மாதம் 3 ஆம் தேதி கோயம்புத்தூரைத் தாக்கிக் கைப்பற்றுவதென்றும், இங்கு லெப்டினென்ட் கர்னல் கே.மக்காஸ்லிஸ்டர் தலைமையில் உள்ள குதிரைப் படையை அழித்துவிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. தெளிவான திட்டம் தீட்டப்பட்டு விட்டது. கிளர்ச்சிக்கான தேதியும், குறிப்பிடப்பட்டு விட்டது.

**கிளர்சசித் துவகக்ம்**

விருப்பாட்சி சதித் திட்டத்தைப் பற்றி ஏதும் அறியாத கம்பெனிப் படை கிருஷ்ணப்ப நாயக்கரின் கேந்திர மையமான பெல்லம் (Bellum) என்ற

இடத்தைக் கைப்பற்ற முயன்றது (1800 மார்ச் 30). பொறுமை இழந்த தூண்டாஜி வாக் தனது படையினரை பெல்லத்துக்கு அனுப்பினார். அதோடு நிற்கவில்லை. அவரே கிளர்ச்சியைத் துவக்கிவிட்டார்.

**தீரர்களின் வரீ மரணம்**

திட்டமிட்டதற்கு முன்னதாகவே கிளர்ச்சியில் இறங்கிய தூண்டாஜி வாக்கும், திம்ம நாயக்கரும் மைசூர் பகுதிகளில் பல வெற்றிகளைப் பெற்றனர். ஆனால் இராமன் நாயரால் காட்டிக் கொடுக்கப்பட்ட திம்ம நாயக்கர் பிடிபட்டுக் கொல்லப்பட்டார். கொனகல் என்ற இடத்தில் கர்னல் வெல்லெஸ்லியிடம் தோல்வியுற்று வீர மரணமடைந்தார் தூண்டாஜி வாக் (செப்டம்பர் 10). மலபாரில் கேரளவர்மா, கிராமவாசிகள், மாப்பிள்ளைகள் ஆகியோரது துணை கொண்டு ஆங்கிலேயரை ஆட்டிப் படைத்தார். எனினும், அவரது நெருங்கிய நண்பர்களான ஏமன் நாயர், சட்டு நாயர் ஆகியோரால் காட்டிக் கொடுக்கப் பட்டதால் கேரளவர்மாவின் முயற்சி தோல்வியுற்றது. பல கிளர்ச்சிக்காரர ˙கள் பலியாயினர். தப்பிச் சென்ற கேரள வர்மா கிளர்ச்சிக்காரராகவே இருந்து 1805 நவம்பர் 30 ஆம் நாள் கொல்லப்பட்டார்.

பாஞ்சாலங்குறிசசிப் போர்கள்

200 கிளர்ச்சிக்காரர்கள் திருச்செந்தூர் செல்லும் பக்தர்கள் போன்று வேடமிட்டுச் சென்று பாளையங்கோட்டையில் சிறைப்பட்டிருந்த செவத்தையா, ஊமைத்துரை உள்ளிட்ட பலரை விடுவித்தனர். அவர்கள் மலைநாடு மலை வழியாகப் பாஞ்சாலங்குறிச்சியை அடைந்தனர். பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை புதிதாகக் கட்டப்பட்டது. மருது பாண்டியன் அனுப்பிய 30,000 கிளர்ச்சிக்காரர்கள் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். மறவர்களும், பரவர்களும், நாடார்களும், தோட்டியான்களும் அவர்களுக்குக் கைகொடுத்தனர். ஊமைத்துரையின் தலைமையிலகிளர்ச்சிக்காரர்கள் செயல்பட்டனர். பாஞ்சாலங்குறிச்சிக்கும் ஸ்ரீவைகுண்டம் ஆழ்வார் திருநகரிக்கும் இடைப்பட்ட பகுதிகளை அவர்கள் ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றினர். வலிமைமிக்க கோமேரிக் கோட்டை கிளர்ச்சிக்காரர்கள் கைவசமாயிற்று. மேலப்பன் பல இடங்களை மீட்டார். சிவகங்கையிலிருந்து வந்த கிளர்ச்சிக்காரர்கள் நெட்டூரில் கம்பெனிப் படையைச் சிதறடித்தனர். எனினும் காலின் மெக்காலேயும் கர்னர் அக்னுவும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை முற்றுகையிட்டனர். இரண்டாவது பாஞ்சாலங்குறிச்சிப் போரில் அக்கோட்டை வீழ்ந்தது. 1050 கிளர்ச்சிக்காரர்கள் உயிரிழந்தனர். பலர் பிடிபட்டுக் கொல்லப்பட்டனர் (1801 மே 24). எஞ்சிய கிளர்ச்சிக்காரர்கள் சிவகங்கைக்கும், இராமநாதபுரத்துக்கும் தப்பிச் சென்றனர். காயமுற்ற ஊமைத்துரை, கிராமத்துக் கிழவி ஒருத்தியால் காப்பாற்றப்பட்டு, மருது பாண்டியனின் ஆதரவுடனும் அரவணைப்புடனும் சிறுவயலில் தங்கினார்.

**காளையார் கோவில் கிளர்ச்சி**

பாஞ்சாலங்குறிச்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர் சிவகங்கை காளையார்கோவில் காடு கிளர்ச்சி மையமாயிற்று. திருப்பத்தூர், நட்டம், திரும்வேலூர், மேலூர், வெரப்பூர் ஆகிய இடங்களில் கம்பெனிப் படை கடுந்தாக்குதலுக்கு இலக்காயிற்று. பொம்ம நாயக்கர் வெரப்பூரிலிருந்து கம்பெனிப் படையினரை விரட்டினார். ஊமைத்துரை பழைய நாட்டை விடுவித்தார். கள்ளர்கள் மதுரையின் மேற்குப் பகுதியை விடுவித்தனர். காளையார் கோவில் கிளர்ச்சிக்காரர்கள் வசமாயிற்று.

**தஞ்சையில் கிளரச்சி**

கிளர்ச்சி இராமநாதபுரத்திலிருந்து தஞ்சாவூருக்குப் பரவியது. செவத்த தம்பியின் தலைமையில் தஞ்சை மக்கள் கிளர்ந்தெழுந்தனர். புதுக்கோட்டை சுபா விடுவிக்கப்பட்டது. அறந்தாங்கியிலும், அரியக்குடியிலும் பாசறைகள் அமைக்கப்பட்டன. மாங்குடி கைப்பற்றப்பட்டது. கிளர்ச்சிக்காரர்கள் நாகூர் கடற்கரை வழியாகச் சென்று சீர்காழி, உடையார்பாளையம், அரியலூர் ஆகிய இடங்களில் நிலை கொண்டனர். அப்பகுதிகளிலிருந்து வருவாய்த்துறை ஊழியர்கள் விரட்டப்பட்டனர். கும்பகோணம் ஆட்சித் தலைவர் ஹாரி உயிருக்குப் பயந்து தப்பிச் சென்றார். கூட்டிணைப்புப் படையினர் கொள்ளிடத்தைக் கடந்து அதன் வடகரையைக் கைப்பற்றினர்.

**திருச்சிப் பிரகடனம்**

தென்னிந்தியக் கூட்டிணைப்புப் படையினர் வெற்றி வாகை சூடிக் கொண்டிருந்த சமயத்தில் தான் மருது பாண்டியன் தனது வரலாற்று முக்கியத்துவம் மிக்க திருச்சிப் பிரகடனத்தை (Trichy Proclamtion) வெளியிட்டார். அப்பிரகடனம் திருச்சிக் கோட்டை நுழைவாய்ச் சுவற்றிலும், ஸ்ரீரங்கம் பெரிய கோவில் சுவற்றிலும் ஒட்டப்பட்டிருந்தது. சாதி, சமய, இன வேறுபாடின்றி இந்தியாவிலுள்ள அனைத்து மக்களுக்கும், அறைகூவல் விடுத்தது அந்தப் பிரகடனம். அது மக்களுக்குத் தன்னம்பிக்கையை அளித்தது அவர்களின் ஆதரவைக் கோரியது தேசிய உணர்வைப் பிரதிபலித்தது அகில இந்தியக் கண்ணோட்டத்தில் அமைந்திருந்தது. அதில் எண்ணங்களும், விபரங்களும் இழையோடியிருந்தன. மன்னனின் மைந்தர்களிடையே காழ்ப்புணர்ச்சியும், பரஸ்பரப் பொறாமையும், விரோத மனப்பான்மையும் நீடித்தால் இந்தியா முழுவதும் ஆங்கிலேயரது ஆட்சிக்கு எளிதில் இரையாகிவிடும் என்று அந்தப் பிரகடனம் எச்சரித்தது. கம்பெனியுடன் கூட்டு சேர்ந்தமைக்காக முகமது அலியையும், கர்நாடக நவாபையும் அது கண்டித்தது பொது மக்களின் அலட்சிய மனப்பான்மையைக் கண்டித்தது ஆங்கிலேயரின் வஞ்சகத்தையும் ஆணவத்தையும் சாடியது. திருச்சிப் பிரகடனம் அன்றைய யதார்த்த நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டிற்று. மருது பாண்டியரின் அரசியல் தீர்க்கதரிசனத்தின் சின்னமே திருச்சிப் பிரகடனமாகும்.

**கிளர்ச்சியின் வீழ்ச்ச**

கிளர்ச்சியை முறியடிக்க லெப்டினென்ட் கர்னர் அக்னியூ ஒரு மும்முனைத் தாக்குதல் திட்டத்தை வகுத்தார். இதன்படி, தென்கிழக்கே திருநெல்வேலியிலிருந்தும், வடமேற்கே திண்டுக்கல்லிலிருந்தும், வடகிழக்கே தஞ்சாவூரிலிருந்தும் கிளர்ச்சிக் கேந்திரங்களைத் தாக்கத் திட்டமிடப்பட்டது. 1801 மே 28 அன்று அக்னியூ நாகலாபுரம் சென்று பின்னர் பரமக்குடியைக் கைப்பற்றினார் (ஜூன் 11). அதன்பின் திருப்பத்தூர் அவர் வசமாயிற்று (ஜூலை 24). இதற்கிடையே தஞ்சாவூரில் அறந்தாங்கி, அடியார்குடி ஆகிய இடங்களில் நடந்த போர்களில் கிளர்ச்சிக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டனர். அக்னுவோடு கர்னல் இனஸீம் சேர்ந்து கொண்டார். அவர்களது கூட்டுப்படை ஒக்கூர் வழியாகச் சென்று மருது பாண்டியனின் கிளர்ச்சி மையமான சிறுவயலை அடைந்தனர் (ஜூலை 27). கிளர்ச்சிக்காரர்கள் காளையார் கோவில் காட்டுக்குள் சென்றுவிட்டதால் சிறுவயல் எளிதில் வீழ்ந்தது. தொண்டி குடாக்கடலில் கிளர்ச்சிக்காரர்களின் கடற்படை அழிக்கப்பட்டது. புதுக்கோட்டை, எட்டையாபுரத்திலிருந்து வந்த படைகளோடு கம்பெனிப் படையும் சேர்ந்து காளையார்கோயிலை வளைத்துக் கொண்டனர் (செப்டம்பர் 30). கோவில் கடுந்தாக்குதலுக்கு இலக்காயிற்று. கிளர்ச்சிக்காரர்களில் பலர் உயிரிழந்தனர். மருது பாண்டியனும் பிறரும் பல திக்குகளிலும் சிதறிச் சென்றனர். காளையார்கோவில் வீழ்ச்சியால் கிளர்ச்சியின் முதுகெலும்பு முறிந்தது எனலாம். சிதறிச் சென்ற கிளாச்சிக்காரர்கள் தளவாய் பிள்ளையின் தலைமையில் ஒன்று சேர்ந்தனர். களநாடு மறவர்கள் இராமத்தேவரின் தலைமையில் அவர்களோடு சேர்ந்து கொண்டனர். ஆனால் அவர்கள் அனைவரும் ஆட்சித் தலைவர் லூஷிங்டனால் தோற்கடிக்கப்பட்டனர். ஊமைத்துரை கர்னல் இன்ஸால் தோற்கடிக்கப்பட்டார் (அக்டோபர் 14). விருப்பாட்சி வீழ்ந்தது (அக்டோபர் 16). மேஜர் டெலிடன் பிரான்மலையைக் கைப்பற்றினார் (அக்.17). மலைகுலைந்தாலும் நிலைகுலையாத ஊமைத்துரை கிளர்ச்சிக்காரர்களுக்குத் தலைமை தாங்கி திண்டுக்கல் பள்ளத்தாக்கைஅடைந்தார். வத்தலக்குண்டில் நடந்த உக்கிரமான போரில் ஊமைத்துரையும், அவரோடு அறுபத்தைந்து கிளர்ச்சிக்காரர்களும் விழுப்புண் பட்டு வீரமரணடைந்தனர். தப்பிய கிளர்ச்சித் தலைவர்களும் பிறரும் கம்பெனியால் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டனர்.

**வழ்சசிக்கான காரணங்கள்**

தென்னிந்தியக் கிளர்ச்சியின் வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் இருந்தன. அவை: 1. கிளர்ச்சித் திட்டம் செவ்வனே தீட்டப்பட்டாலும், அது திட்டமிட்டபடி செயல்படுத்தப் படவில்லை. தூண்டாஜிவாக் இரண்டு மாதங்களுக்கு முன்னரே கிளர்ச்சியைத் துவக்கிவிட்டார். 2. கிளர்ச்சி பல இடங்களில் ஒரே நேரத்தில் துவக்கப்படவில்லை. பல பகுதிகள் கிளர்ச்சியில் தீவிரமாக

**வரலாற்றுச் சிறப்பு**

தென்னிந்தியக் கிளர்ச்சி ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே மேற்கொள்ளப்பட்ட போராட்டமாகும். அது அந்நிய ஆட்சியை அகற்றுவதென்ற திடமான, தீர்க்கமான, தீவிரமான உறுதிமிக்க எதிர்ப்பு முயற்சி. பின்வரும ˙ போராட்டங்களுக்கு முன்மாதிரியாக அமைந்த நிகழ்ச்சி அது. அக்கிளர்ச்சியில் பிராந்தியத் தலைவர்களோடு பொதுமக்களும் பங்கு கொண்டனர். இராமநாதபுரம் மறவர்கள், மலபார் குறிச்சியர்கள், இந்துக்கள், முஸ்லீம்கள், தமிழர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள், கன்னடியர்கள், மராத்தியர்கள் ஆகியோர் இப்போராட்டத்தில் பங்கேற்றனர். கிளர்ச்சிக்காரர்கள் பெரிதும் காடுகளில் இருந்து கொண்டு, கொரில்லா" போரிட்டனர். பிராந்தியக் கூட்டமைப்புகளும் தென்னிந்திய கூட்டிணைப்பும் இக்கிளர்ச்சியின் சிறப்புக் கூறுகளாகும். தென்னிந்தியக ˙ கிளர்ச்சியில் சிவகங்கை மருது சகோதரர்கள், பாஞ்சாலங்குறிச்சிஊமைத்துரை, திண்டுக்கல் கோபால நாயக்கர், கொங்கு நாட்டுக் கான்- இ-ஜஹான், மலபார் கேரள வர்மா, கர்நாடக தூண்டாஜிவாக், மைசூர் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆகியோர் முழு மூச்சுடன்

**வேலூர்க் கிளர்ச்சி, 1806**

வேலூர் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரம். இவ்வூர் சங்க காலத்தில் ஒளிர்ந்திருந்தது. வேலூர் வேல்களின் ஊர் (வேல்ஊர்). சங்க கால மக்கள் வழிபட்ட முருகனின் ஆயுதம் வேல். எனவே, முருகனின் ஊர் வேலூர் என்று கூறுவோரும் உண்டு. பண்டைக் காலத்திலிருந்து வேலூர் போர்க்களமாகப் பயன்பட்டுள்ளது. இவ்வூரில் எப்போதும் வேல்கள் குவிக்கப்பட்டிருந்தமையால் வேலூர் என்று அழைக்கப்பட்டதாகவும் கூறுவர். வேல் என்று அழைக்கப்பட்ட அரிய கூழாங்கற்கள் இங்கு நிறையக் காணப்பட்டதால் வேலூர் என்று அறியப்பட்டதாகவும் கருதுவர். சுருங்கக்கூறின், போர் மரபும் திராவிடக் கலாச்சாரமும் கைகோர்த்துச் செல்லும் நகரம் வேலூர் ஆகும்.

**வேலூரக் கோட்டை**

வேலூர்க்கோட்டை 1606 லிருந்து 1672 வரை விஜய நகரப் பேரரசின் தலைநகரமாகத் திகழ்ந்தது. சின்ன பொம்பி நாயக் வேலூர்க் கோட்டையைக் கட்டியதாகக் கருதப்படுகிறது. கட்டுமானக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறப்படும் இக்கோட்டையில் பல மதில் காப்பான்களும் (சுயஅியசவள), கோட்டையைச் சுற்றி அகலமாக அகழிகளும் (Mofes) இருந்தன. அகழிகளில் முதலைகள் விடப்பட்டிருந்தன. மிகுந்த பலமும் பாதுகாப்புமிக்க வேலூர்க்கோட்டையிலிருந்துதான் விஜய நகரப் பேரரசர்கள் ஒருகால கட்டத்தில் ஆட்சி புரிந்தனர். பின்னர் வேலூர்க் கோட்டை முறையே பீஜப்பூர் சுல்தான்கள், மராத்தியர், கர்நாடக நவாபுகள், ஆங்கிலேயர் ஆகியோருக்குச் சொந்தமாயிற்று. மைசூர் போர்களின் போது வேலூர்

மாவட்டத்தில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்குமிடையே ஆம்பூர் (1751), வந்தவாசி (1760)ப் போர்கள் நடைபெற்றன. அப்போது திப்பு சுல்தான் தன் குடும்பத்தினருடன் வேலூர்க் கோட்டைக்கு வந்து தங்குவதுண்டு. அவர் தங்கிய இடம் 'திப்பு மகால்" என்று அழைக்கப்பகிறது. வேலூர்க் கோட்டை 1768 இல் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. 1806 வேலூர்க் கிளர்ச்சியின் போது இக்கோட்டையை 69-வது படை வகுப்பணி (Regiment)யின் ஒரு பிரிவும், 19-வது படை வகுப்பணியின் மற்றொரு பிரிவும் பாதுகாத்தனர். மொத்தம் 1500 சிப்பாய்களும், 370 ஆங்கிலப் படை வீரர்களும் இப்பாதுகாப்புப் பணியில்

**சென்னை இராணுவம்**

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் இராணுவப் பிரிவு கம்பெனியின் வர்த்தக நலன்களையும், விரிவாக்கத்தையும் காப்பாற்றுவதற்காக உருவாக்கப்பட்டது. இராணுவத்தின் பிரதான பிரிவில் ஆங்கிலப் படை வீரர்களும், துணைப் பிரிவில் தமிழ் நாட்டு சிப்பாய்களும் இருந்தனர். சிப்பாய்கள் பயிற்சி பெறாத பாதுகாப்பாளர்கள் இவர்களுள் சிலர் மட்டுமே ஆயுதம் ஏந்தியவர்கள். 1746 இல் பிரெஞ்சுப் படை சென்னையைத் தாக்கிக் கைப்பற்றிய பின்னர் ஆங்கிலேயர் இராணுவப் பிரிவைப் பயன்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தினர். தமிழ் நாட்டில் பாரம்பரியப் போர்க்கலையில் திறமையுடையோர் பலர் சிப்பாய்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுக்குத் தக்க பயிற்சி அளிக்கப்பட்டது. மதுரை முத்து நாயக்கர் போன்ற நிலச்சுவான்தார்கள் சிப்பாய்களுக்கு அதிகாரிகளாக இருந்தனர். இவர்களைக் கொண்டே வந்தவாசிப் போர் (1760) நிகழ்த்தப்பட்டது. இராபர்ட் கிளைவ் வங்காளம் சென்ற போது இவர்களுள் பலரை உடன் கொண்டு சென்றார். அவர் பிளாசிப் போரில் (1757) வெற்றி பெற தமிழ்நாட்டு சிப்பாய்கள் பெரிதும் காரணமாக இருந்தார்கள்.

வேலூர்க் கிளர்ச்சியின் போது கோட்டைக் காவல் படை பெரும்பாலும் தென்னிந்திய கிளர்ச்சிக்குப் பின் திருநெல்வேலியில் திரட்டப்பட்ட வீரர்களைக் கொண்டிருந்தது. இவர்கள் பெரும்பாலோர் தென்னிந்திய கிளர்ச்சி ஒடுக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்கள் போராட்டஉணர்வு கொண்டோர். இப்படை வீரர்கள் வேலூர் கோட்டையில் இருந்த போது அங்கிருந்த திப்பு சுல்தானின் முன்னள் ஆதரவுப் படை வீரர்களுடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிரான சதியில் குடியேறிய தென்னிந்திய கிளர்ச்சிக்காரர்களும் மைசூரிலிருந்து வந்த சிப்பாய்களும் மற்றும் முன்னாள் போராட்டக்காரர்களும் சேர்ந்து வேலூர்க் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த திப்புவின் மகன் பட்டே ஐதருடன் சேர்ந்து ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிராக சதி செய்தனர். இவர்கள் ஆங்கிலேயர் கொண்டு வந்த புதிய இராணுவ கட்டுப்பாட்டு முறைகளைத் தங்களுக்குச் சாதகமாகப்

பயன்படுத்திக் கொண்டு ஆங்கில ஆட்சியை அகற்றுவதற்கான திட்டத்தைத் தீட்டினர்.

**இராணுவக் கட்டுப்பாடுகள்**

சிப்பாய்கள் மிடுக்குடனும், துடிப்புடனும், ஒரே சீராகக காணப்படுவதற்காகவும் சென்னை தளபதித் தலைவர் (Commander-inChief) சர் ஜான் கிரடோக் (Sir John Cradock) சென்னை ஆளுநராக இருந்த வில்லியம் பெண்டிங் பிரபு (Lord William Bentinck)வின் சம்மதத்தோடு சில நவ ீன மாற்றங்களைச் செய்தார் இவை இராணுவக் கட்டுப்பாடுகளாக (Military Regulations)க் கருதப்பட்டன. அவையாவன: 1) சிப்பாய்கள் ஐரோப்பியப் படை வீரர்களைப் போன்று தலைப்பாகையை அணிய வேண்டும் 2) பணியில் இருக்கும் போது அவர்கள் சாதி, மதச் சின்னங்களாக நெற்றியில் திருநீறு அல்லது நாமம் போட்டுக் கொள்வதோ, காதணிகளை அணிவதோ கூடாது 3) முகத்தை நன்கு மழித்துக் கொள்ள வேண்டும் 4) மீசையை ஒரே சீராக நறுக்கி முறுக்கி விடவேண்டும் 5) ஒரே மாதிரியான காலுறையைப் பயன்படுத்த வேண்டும் 6) ஒரே வடிவிலான சின்னத்தைக (வுரசளெஉசநற) கொண்ட கழுத்துப் பட்டையை அணிய வேண்டும்.

கிளர்ச்சிக்கான காரணங்கள்

வேலூர்க் கிளர்ச்சிக்கான காரணங்களைப் பற்றி வரலாற்றாளர்களிடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. ஒன்றுக்கொன்று மாறுபட்ட, முரண்பட்ட காரணங்கள் கூறப்படுகின்றன. எனவே, வேலூர்க் கிளர்ச்சி வெடித்ததற்கான பின்வரும் விளக்கங்களைக் கூறலாம்: 1) தென்னிந்திய கிளர்ச்சி தோற்கடிக்கப்பட்டபின் பல கிளர்ச்சிக்காரர்கள் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர். எஞ்சித் தப்பிய பலர் கம்பெனி இராணுவத்தில் சேர்ந்தனர் பலர் வேலூரிலும், வேலூரைச் சுற்றியும் குடியேறினர். அவர்கள் அவ்வப்போது சந்தித்து இரகசியமாகக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டு, மீண்டும் ஒரு கிளர்ச்சி செய்து ஆங்கிலேயர் ஆட்சியை அகற்ற முடிவு செய்தனர். கே.ராஜய்யன் இந்தக் காரணத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார். 2) மைசூர் முடியாட்சியை மீட்க வேண்டும் என்று திப்பு சுல்தானின் வாரிசுகள் முடிவு செய்து சதித் திட்டம் தீட்டினர். திப்பு இறந்த பின் அவரது 12 மகன்களும், 6 மகள்களும் வேலூர் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குப் பல சிறப்புச் சலுகைகள் அளிக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு திப்புவின் மூத்த மகன் பட்டே ஐதர் பிறரது துணையுடன் கிளர்ச்சி செய்யத் திட்டமிட்டார். அவரது ஆதரவுடன் கிட்டத்தட்ட 3000 கன்னடக் கிளர்ச்சிக்காரர்கள் வேலூரைச் சுற்றிக் குடியேறினர். முஸ்லீம் முடியாட்சியை மீட்பதே வேலூர்க் கிளர்ச்சியின் முக்கிய நோக்கமாக இருந்தது என்பதை வலியுறுத்தினார் கம்பெனி

படைத்தளபதி ஜே.எப்.சிரடோக் (J.F.Cradock). 3) சமகால மக்கள், அவர்களது பழக்கவழக்கங்களைப் பற்றி நன்கு அறிந்த சர் தாமஸ் மன்றோ (Sir Thomas Munro) "குல்லாய் பற்றிய மனக்குறை" தான் வேலூர்க் கிளர்ச்சிக்கான ஒரே காரணம் என்று கூறினார். துணைத் தளபதி அக்னியூ (Adjutant General Agnew) வடிவமைத்து அறிமுகப்படுத்தியதால் இக்குல்லாய் "அக்னியூ குல்லாய்" என்று அழைக்கப்பட்டது. சிப்பாய்கள் இக்குல்லாயை அணிவதை அவமரியாதையாகக் கருதினார். அக்குல்லாயை அணிந்த சிப்பாய்கள் மக்களின் கேலிக்கும், கிண்டலுக்கும் உள்ளாயினர். இதனால் சிப்பாய்களிடையே மாறா மனக்கசப்பு ஏற்பட்டது. இம்மனக்கசப்பின் வெளிப்பாடே வேலூர்க் கிளர்ச்சி. 4) ஆங்கிலேயரது அக்கிரமிப்புக் கொள்கையால் தன்னுடைய சுதந்திரத்தை இழந்த ஐதராபாத் நிஜாம் மீண்டும் தனது ஆட்சி நிலை நாட்ட நாட்டம் கொண்டிருந்தார். ஐதராபாத், சிக்தாகோல் மக்களும் நிஜாமுக்கு ஆதரவாகப் போராடத் தயாராக இருந்தனர். வேலூரிலிருந்த கிளர்ச்சிக்காரர்கள் ஐதராபாத் கிளர்ச்சிக்காரர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். வேலூர்க் கிளர்ச்சி துவக்கப்பட்டவுடன் ஐதராபாத் நிஜாம் அச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கிளர்ச்சி செய்து ஆட்சியை மீட்க முன்வந்தார். 5) கம்பெனிப் படையில் சிப்பாய்களுக்கு இராணுவக் கட்டுப்பாடுகள், விதிமுறைகள், புதிய பழக்கவழக்கங்கள் ஆகிய அனைத்தும் புதுமையாயிருந்தன. அவற்றுக்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. அதுமட்டுமல்ல. அவர்கள் ஆங்கிலப் படைவீரர்களுக்கு சமமாக நடத்தப்படவில்லை. இருசாராருக்கு மிடையே ஊதிய மற்றும் சலுகை வேறுபாடுகள் அதிகமாக இருந்தன. சிப்பாய்கள் குடும்பத்தினருடன் வசிக்க ஆங்கில அதிகாரிகளின் அனுமதி பெற வேண்டியிருந்தது. மேலும் சிப்பாய்கள் ஆங்கில அதிகாரிகளுக்கு குற்றேவல் செய்ய கட்டாயப்படுத்தப் பட்டனர். கருப்பு கமாண்டர்கள்" என்ற உயர் பதவிகள் சிப்பாய்களுக்கு மறுக்கப்பட்டன. இவற்றால் ஏமாற்றமும், ஆத்திரமும் அடைந்த சிப்பாய்கள் கிளர்ச்சி செய்யத் துடித்துக் கொண்டிருந்தனர். 6) யாவற்றுக்கும் மேலாக, 1805-1806 ஆண்டு ஆங்கிலக் கம்பெனி அறிமுகப்படுத்திய இராணுவக் கட்டுப்பாடுகள்' கிளர்ச்சிக்காரர்களுக்குத் தேவையான வாய்ப்பைக் கொடுத்தன. இச்சீர்திருத்தங்கள் பழைமைப் பழக்கவழக்கங்களில் ஊறிப் போன சிப்பாய்களுக்கு ஆத்திரமூட்டக்கூடியகால் விலங்குகளாகக் காட்சியளித்தன. குறிப்பாக சாதிச் சின்னங்களை அகற்ற வேண்டும் என்பதால் இந்து சிப்பாய்களும், தாடி வைத்துக் கொள்ளக் கூடாது என்பதால் முஸ்லீம்களும், பிற கட்டுப்பாடுகளால் அனைத்து சிப்பாய்களும் அதிருப்தி அடைந்திருந்தனர். அவர்களுக்குக் கிளர்ச்சிக் களம் தயாராக இருந்தது.

**கிளர்ச்சியின் போக்கு**

வேலூர் கிளர்ச்சி வெடிப்பதற்கு சில மாதங்களுக்கு முன் மைசூரிலிருந்து வந்த பக்கிரிகள் (Pakris) நகரின் தெருக்களிலும், கடை வீதிகளிலும் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்தனர். இவர்கள் மராத்தியப் படைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்கள். இப்பக்கிரிகள் ஆங்கிலேயருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தனர். எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பினர். பக்கிரிகள் பிரச்சாரத்தின் மூலமாக மக்களைத் தூண்டிவிட்டனர். இவர்கள் உள் உளவாளிகளாகச் செயல்பட்டனர்.

**பொம்மலாட்டப் பிரச்சாரம**

திப்பு சுல்தானோடு நெருங்கிப் பழகிய அப்துல்லாகான், பீர்சாடா போன்றோரின் தலைமையில் வேலூரில் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நடத்தினர். இந்நிகழ்ச்சிகளில் பொம்மலாட்டக்காரர்கள் ஆங்கிலேயரை வசைப் பாடல்கள் மூலம் தாக்கினர். விரைவிலேயே அவர்களுடைய ஆட்சி அழியப் போகிறது என்று ஆருடம் கூறினர். முஸ்லீம்களைக் கிறிஸ்த்துவ மதத்துக்கு மாற்றப் போவதாகப் பிரச்சாரம் செய்தனர். பொம்மலாட்டக்காரர்களின் பிரச்சாரத்தால் முஸ்லீம்கள் ஆத்திரமடைந்தனர்.

**பொதுமக்களின் பரிகாசம**

1806 ஜூன் 9 ஆம் தேதியிலிருந்து 14-வது படைப்பிரிவின் 40 சிப்பாய்கள் எவ்வித எதிர்ப்புமின்றி "அக்னியூ குல்லாய்"களை அணிந்து கொண்டு படை அணிவகுப்பில் கலந்து கொண்டனர். இதைப் பார்த்த பொது மக்களில் பலர் அவர்களைக் கேலி செய்தனர் அசிங்கமான வார்த்தைகளால் திட்டினர் எள்ளி நகைத்து ஏளனம் செய்தனர். பொது மக்களின் இந்த ஏளனத்தைக் கேட்டு கூனிக்குறுகிப் போன பல சிப்பாய்கள் தலைப் பாகையைக் கழற்றி எறிந்தனர். இதைக் கண்ட அதிகாரிகள் கேலி செய்த கும்பலைக் கலைத்தனர்.

**சவுக்கடி தண்டனை**

மாயா குப்தா (Maya Gupta) இலண்டனில் உள்ள இந்திய அலுவலக நூலகத்தில் (Indian Office Library) வேலூர் கிளர்ச்சி பற்றிய ஆவணங்களை ஆய்வு செய்து சில அரிய தகவல்களைத் திரட்டினார். அவரது கூற்றுப்படி 1806 மே 6 ஆம் தேதி நான்காவது ரெஜிமெண்டின் இரண்டாவது படைப்பிரிவைச் சேர ்ந்த 29 சிப்பாய்கள் புதிய குல்லாய்களை அணிய மறுத்துவிட்டனர். அதற்கு பதில் அவர்கள் நெற்றியைச் சுற்றி கைக்குட்டையைக் கட்டிக் கொண்டு அதிகாரிகள் உத்தரவுக்குக் கீழ்ப்பணிய மறுத்து விட்டனர். கீழ்ப் பணியாதது மட்டுமல்லாது அவர்கள் ஆங்கில அதிகாரிகள் "நாய்கள்" என்று திட்டினர். கீழ்ப்பணிய மறுத்த சிப்பாய்கள் படைதுறை முறை மன்றத்தைக் கொண்டு (Court-martial) விசாரணை

செய்யப்பட்டனர். விசாரணையின் போது மன்னிப்பு கேட்டோர் தண்டனையிலிருந்து தப்பினர். கடைசி வரை மன்னிப்பு கேட்க மறுத்துவிட்ட ஒரு இந்துவும் ஒரு முஸ்லீமும் தலா 900 சவுக்கடி தண்டனை பெற்றனர். இச்செய்தி அறிந்த சிப்பாய்கள் மேலும் ஆத்திரமடைந்தனர். இந்நிகழ்ச்சி நடைபெற்ற அடுத்த மாதமே (ஜுன்) வேலூருக்கு அருகே வாலாஜாவில் தலைப்பாகை எதிர்ப்புப் போராட்டம் எழுந்தது.

**தெளிவான திட்டம்**

வேலூர் சிறையில் இருந்த திப்பு சுல்தானின் மைந்தர்களின் வழிகாட்டுதலின் பேரில் கிளர்ச்சிக்காரர்களும், சிப்பாய்களும் கிளர்ச்சி பற்றித் திட்டமிட்டனர். இத்திட்ட மிடப்பட்ட சதியின் போது ஆட்சி எதிர்ப்பாளர்களை ஒன்று சேர்ப்பது என்றும் மைசூர், ஆர்க்காடு, ஐதராபாத் போன்ற பகுதிகளில் மன்னராட்சியை மீட்பது என்றும் பலதரப்பு மக்களிடமிருந்தும் ஆதரவு கோருவது என்றும் 1806 ஜுலை 13 ஆம் தேதி அதிகாலை வேலூர் கோட்டையைக் கைப்பற்றுவது என்றும் அதைத் தொடர்ந்து மைசூரிலும், ஐதராபாத்திலும் கிளர்ச்சியை விரிவுபடுத்துவது என்றும் திட்டமிட்டனர்.

திட்டத்துக்கு ஆதரவு

கிளர்ச்சித் திட்டத்துக்கு பள்ளிகொண்டா மக்களும், வாலாஜாபாத்திலும், சித்தூரில் இருந்த சிப்பாய்களும் ஆதரவளித்தனர். பொது எதிரியான ஆங்கிலேயரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வது பற்றி வேலூரில் இருந்த கிளர்ச்சிக்காரர்கள் ஆர்க்காட்டு மக்களோடு ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். கிளர்ச்சி துவங்கப்பட்டவுடன் மைசூரிலிருந்து போராளிகள் வேலூருக்கு வந்து சேர்வதென ு முடிவு செய்யப்பட்டது. கர்நாடகம், ஆந்திரா, தமிழ்நாடு போராட்டக்காரர்களையும், சிப்பாய்களையும் ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இரகசிய கூட்டங்கள் நடைபெற்றன. ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பதற்கான சூளுரைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. கம்பெனியின் ஆதரவாளரான ஆர்க்காடு நவாபுக்கு கிளர்ச்சித் திட்டம் தெரிந்திருந்தும் அவர் ஆங்கில அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவில்லை. அதேபோன்று சிப்பாய்களின் ஆத்திரத்தை நேரில் கண்டறிந்த தளபதி தலைவர் ஜான் கிரடோக் புதிய இராணுவ உத்தரவுகளை உடனடியாக விலக்கிக் கொள்ளுமாறு சென்னை ஆளுநர் பெண்டிங்கைக் கேட்டுக் கொண்டார். ஆனால் ஆளுநர் அப்பரிந்துரைக்கு செவிசாய்க்க வில்லை. கம்பெனியின் அலட்சியப் போக்கு கிளர்ச்சிக்காரர்களுக்கான ஆதரவு மேலும் அதிகரிக்க உதவியது.

**திட்டமிடாத் தாககுதல்**

1806 ஜுலை மாதம் 13 ஆம் தேதி வேலூர்க் கோட்டைக்குள் இருந்த துணைப்படை சிப்பாய்கள் கிளர்ச்சி செய்து, வேலூரைக் கைப்பற்றி, கருவூலத்தைச் சூறையாடி, ஆங்கிலப் படையை வீழ்த்தி, திப்புவின் மகன்

பட்டே ஐதரை மைசூர் மன்னராக அறிவித்து, ஐதராபாத் நிஜாமின் ஆட்சியை மீட்பதென்றும் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் இத்திட்டத்துக்கு மாறாக ஜூலை 9 ஆம் தேதியன்று கணிசமான குதிரைப் படை வீரர்கள் தங்களது பணியாளர்களுடன் வேலூர் வீதிகளில் காணப்பட்டனர். பொறுமை இழந்த ஒரு "குடிகார ஜமீன்தார்" ஜூலை 10 ஆம் தேதியே கிளர்ச்சியைத் துவக்கிவிட்டார். இத்திட்டமிடாத் தாக்குதல் வேலூர்க் கிளர்ச்சியின் போக்கையே மாற்றிவிட்டது.

**கோட்டை கைப்பற்றப்படல்**

இத்திட்டமிடாத் திடீர்க் கிளர்ச்சியின் போது வேலூர்க கோட்டைக்குள்ளிருந்த கிளர்ச்சிக்கார துணைப் படை சிப்பாய்கள் கோட்டையைக் கைப்பற்றி, அங்கிருந்த ஆங்கில அதிகாரிகளையும், ஆங்கிலப் படை வீரர்களையும் சராமரியாகச் சுட்டுக் கொன்றனர். அதன்பின் ஆங்கிலேயர் குடியிருப்புப் பகுதியை நோக்கிச் சுட்டனர். இத்துப்பாக்கிச் சூட்டில் தளபதி கர்னல் பென்கோர்ட் (Col.Fercourt) கொல்லப்பட்டார். அவரன்றி இராணுவ அதிகாரிகளான மைக்காரசும், மேஜர் ஆம் ட்ராங்கும் சுட்டுக் கொல்லப் பட்டனர். இவர்களன்றி ராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஆங்கில நோயாளிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். சம்பளம் பட்டுவாடா செய்யும் அலுவலகம் சூறையாடப்பட்டது. கோட்டையின் பிரதான நுழைவாயிலில் இருந்த பல ஆங்கிலப் படை வீரர்களைக் கொன்று குவித்தனர். வெடிமருந்துக் கிடங்கு காவலரும் சுட்டுக் கொல்லப்பட்டார். அங்கிருந்த போர்த்தளவாடங்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட கோட்டையில் பறந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் தேசியக் கொடி இறக்கப்பட்டு அதற்குப் பதில் சிகப்புப் பின்னணியில் பச்சைக் கோடுகள் போடப்பட்டு, மத்தியில் சூரியன் வடிவம் பொறிக்கப்பட்ட திப்பு சுல்தானது கொடி ஏற்றப்பட்டது. திப்புவின் மகன் பட்டே ஐதர் மைசூர் மன்னர் என்று அறிவிக்கப்பட்டார்.

**கிளர்சசி ஒடுக்கப்படல்**

கிளர்ச்சி பற்றிய தகவல் அறிந்த கர்னல் கில்லெஸ்பி (Col.Gillespie) வலிமைமிக்க மீட்புப் படையுடன் ஆர்க்காட்டிலிருந்து வேலூருக்கு விரைந்து வந்தார். அவருடன் சென்னையிலிருந்து வந்த குதிரைப் படையும் சேர்ந்து கொண்டது. கில்லெஸ்பியின் தலைமையிலான மீட்புப் படை எதிர்த் தாக்குதல் நடத்தி கோட்டைக்குள் நுழைந்தார். அங்கு 69 படைப் பிரிவைச் சேர்ந்த படையினரும், சில இராணுவ துணை மருத்துவர்களும் கோட்டையைப் பாதுகாக்கும் முயற்சியில் போராடிக் கொண்டிருந்தனர். அவர்களைக் காப்பாற்றியபின் மீட்புப் படை கோட்டைக்குள் இருந்த கிளர்ச்சி சிப்பாய்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அரண்மனைக்குள் அடைக்கலம் தேடிச் சென்ற சிப்பாய்கள் இழுத்து வரப்பட்டு, சுவற்றோடு சுவராக

நிறுத்தப்பட்டு சுட்டுக் கொல்லப் பட்டனர். இத்தாக்குதலில் நூற்றுக்கு மேற்பட்ட ஆங்கிலேயர் உயிரிழந்தனர் 350-லிருந்து 800 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் அதே எண்ணிக்கையில் சிப்பாய்கள் படுகாயம் அடைந்தனர். 500-க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஆங்கிலேயர் அடக்குமுறையால் வஞ்சம் தீர்த்துக் கொண்டனர். வன்முறைக் கிளர்ச்சி வன்முறையால் வீழ்த்தப்பட்டது.

**தோல்விக்கான காரணங்கள்**

வேலூர்க் கிளர்ச்சியின் தோல்விக்கான காரணங்கள் பல. அவற்றுள் முக்கியமானவை வருமாறு:

1) கிளர்ச்சிக்கான பொதுக்குறிக்கோள் எதுவுமில்லை. இழந்த முடியாட்சியை மீட்பதைத் தவிர வேறு இலட்சியம் இல்லை.
2) கிளர்ச்சி தொலை நோக்குடன் தீர்க்கமாகக் கணிக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு, வழிநடத்தப்படவில்லை
3) கிளர்ச்சிக்காரர்களுக்குத் தலைமை தாங்க மருது பாண்டியன் போன்ற மாவீரன் இராஜதந்திரி கிடைக்கவில்லை. சிறைபட்டிருந்த பட்டே ஐதரால் தக்க தலைமையைக் கொடுக்க முடியவில்லை.
4) கிளர்ச்சி குறிப்பிட்ட தேதிக்கு முன்னதாகவே துவக்கப் பட்டுவிட்டது. வேலூர்க் கோட்டை கைப்பற்றப்பட்ட பின்னர் கிளர்ச்சி திசை மாறிச் சென்று விட்டது. சிப்பாய்களின் கவனம் பொருட்களைச் சூறையாடுவதில் சென்றுவிட்டது. இக்கொள்ளையில் ஊர் மக்கள் சிலரும் பங்கேற்றனர்.
5) கிளர்ச்சிக்கு மக்கள் செல்வாக்கில்லை. அக்னு குல்லாய் அணிந்த சிப்பாய்களைக் கேலி செய்த கூட்டத்தைத் தவிர மக்கள் இக்கிளர்ச்சியில் பங்கேற்கவில்லை. அதேபோன்று, பல சிப்பாய்களும் இக்கலகத்தில் கலந்து கொள்ளவில்லை.
6) யாவற்றுக்கும் மேலாக கில்லெஸ்பியின் கொடூரத் தாக்குதலை கிளர்ச்சிக்கார சிப்பாய்களால் சமாளிக்க முடியவில்லை. சிப்பாய்கள் துப்பாக்கிகளைத் தாறுமாறாகப் பயன்படுத்தியதால் அவர்களிடமிருந்த வெடிமருந்தும், படைத்தளவாடமும் தீர்ந்து போயின. கில்லெஸ்பிக்கு வலுவிழந்த போராளிகளை வெற்றி கொள்வது எளிதாயிற்று. தோல்வியுற்ற சிப்பாய்கள் சரணடைந்தனர்.

**கிளர்சசியின் தன்மை**

வேலூர்க் கிளர்ச்சியின் தன்மை பற்றிப் பல்வேறு கருத்துக்கள கூறப்பட்டுள்ளன:

1) சென்னை ஆளுநராக இருந்த வில்லியம் பெண்டிங் விசாரணை நடத்தியபின் தலைக் குல்லாய் அணிவதற்கு எதிராக இந்து

சமயத்திலோ அல்லது இஸ்லாமிய சமயத்திலோ எவ்வித ஆதாரமும் இல்லை என்ற முடிவுக்கு வந்தார்.

2) ஹார்கோர்ட் (G.Harcourt) கில்லெஸ்பி (R.Gillespie), கென்னடி (ஐ.முநநெநெனல) ஆகியோரைக் கொண்ட மூவர் ஆய்வுக்குழு வேலூரில் சிறை வைக்கப்பட்டிருந்த திப்பு சுல்தானின் மைந்தர்களும், அவர்களது ஆதரவாளர்களும் தான் கிளர்ச்சியைத் தூண்டி விட்டார்கள் என்று கூறியது.

3) மேஜர் ஜெனரல் பேட்டர் (Major General Pater) தலைமையிலான சிறப்பு விசாரணைக் குழு புதிதாகப் புகுத்தப்பட்ட இராணுவச் சீர்திருத்தங்களும் திப்புகுடும்பத்தாரின் செல்வாக்குமே ஆங்கிலேயருக்கு எதிரான சதியைத் தோற்றுவித்தது என்ற முடிவுக்கு வந்தது.

4) முகலாய ஆட்சியை மீட்பதே வேலூர்க் கிளர்ச்சிக்கான உந்து சக்தியாக இருந்ததாகக் கூறினார் கே.எப்.கிரடோக். மதமாற்ற பயத்தால் தான் சிப்பாய்கள் கிளர்ச்சி செய்ததாகக் கருத்து தெரிவித்தார் சர்.தாமஸ் மன்றோ. இந்துமுஸ்லீம்களின் மத உணர்ச்சி புண்பட்டதால் தான் சிப்பாய்கள் கிளர்ச்சியில்

**விளைவுகள்**

வேலூர்க் கிளர்ச்சியின் விளைவாகப் பல உடனடி மாற்றங்கள் செய்யப்பட்டன:

1) சென்னை ஆளுநர் வில்லியம் பெண்டிங் பிரபுவும், சென்னை தளபதி சர் ஜான் கீட்டோக்கும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர் (1807).
2) புதிதாகப் புகுத்தப்பட்ட "இராணுவக் கட்டுப்பாடுகள்" விலக்கிக் கொள்ளப்பட்டன.
3) வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த திப்பு சுல்தானின் குடும்பத்தினர் வங்காளத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.
4) புதிதாக சென்னை ஆளுநர் பொறுப்பேற்ற சர் ஜார்ஜ ் பார்லோ (ளுசை புநழசபந டீயசடழற) மக்களின் சாதி-சமய உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயல்பட்டார் சமயப் பரப்பாளர்களின் நடவடிக்கைகளை நெறிப்படுத்தினார்.
5) கம்பெனி அதிகாரிகள் மத சம்மந்தமான நடவடிக்கைகளில் அக்கறை காட்டுவது கணிசமாகக் குறைந்தது.
6) கிளர்ச்சி தோற்றாலும் இதன் பாதிப்பு தென்னகத்தின் பல பகுதிகளில் பிரதிபலித்தது. ஐதராபாத், பெங்களூர், வாலாஜாபாத், காரைக்கால் போன்ற இடங்களில் கலகங்கள் தோன்றி உடனடியாக அடக்கப்பட்டன. கம்பெனி இராணுவத்தில் சிப்பாய்களின் எண்ணிக்கையைக் குறைத்து ஆங்கிலப் போர் வீரர்களின்

எண்ணிக்கையை அதிகரித்து இராணுவ அமைப்பை மறுசீரமைத்தனர். இதன் மூலம் கம்பெனியின் கட்டுப்பாடு அதிகரிக்கப்பட்டு வலுவாக்கப்பட்டது. கிளர்ச்சியின் போது கோட்டையைக் காப்பாற்றப் போராடிய 69-வது ரெஜிமெண்டாருக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது.

**மதிப்பீடு**

வேலூர்க் கிளர்ச்சி ஒரு நாள் நிகழ்ச்சி. வேலூர்க் கோட்டைக்குள் 1806 ஜூலை 10 ஆம் தேதி நள்ளிரவுக்குப் பின் துவக்கப்பட்ட இக்கிளர்ச்சி மறுநாள் நண்பகலுக்குள் முறியடிக்கப்பட்டது. முதல் முறையாக ஆவணப்படுத்தப்பட்ட ஆங்கிலேயருக்கு எதிரான நிகழ்ச்சி வேலூர்க் கிளர்ச்சிதான் என்பது குறிப்பிடத்தக்கது. வேலூர்க் கிளர்ச்சி கம்பெனி ஆட்சிக்கு எதிரான சிப்பாய்க் கலகமே என்கிறார் பேராசிரியர் ஜோசப்திவியன். இந்தக் கிளர்ச்சி 1857 கிளர்ச்சிக்கான ஒத்திகை என்று எழுதியுள்ளார் வி.டி.சவார்க்கர். தென்னிந்தியக் கிளர்ச்சியால் ஊக்குவிக்கப்பட்ட கிளர்ச்சிக்காரர்கள் மேற்கொண்ட இறுதி விடுதலைப் போராட்ட முயற்சியே வேலூர்க் கிளர்ச்சி என்பது கே.ராஜய்யனின் வாதம். வேலூர் நிகழ்ச்சி தேசியம் சார்ந்த (proto-nationalism) எழுச்சி என்று கருதுகிறார் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பேராசிரியர் கே.ஏ.மணிக்குமார். வடஇந்திய வரலாற்றாளர்கள் வேலூர்க் கிளர்ச்சியை வெறும் சிப்பாய்க் கலகம் என்று கருதி ஒதுக்கிவிட்டதாக வருத்தம் தெரிவித்துள்ளார் ஏ.ஆர்.வெங்கடாசலபதி.

மக்கள் பங்கேற்காத வேலூர்க் கிளர்ச்சியை முதல் விடுதலைப் போராட்டம் எனக் கருதுவது பொருந்தாக் கூற்றாகும். பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை, மருது பாண்டியர்கள் துவக்கிய ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சிகளின் இயல்பான வளர்ச்சியே வேலூர்க் கிளர்ச்சியாகும். இக்கிளர்ச்சி பல வகையிலும் 1857 கிளர்ச்சிக்கான முன்னோடியாகும். வேலூர்க் கிளர்ச்சியை சாதாரண சிப்பாய்க் கலகம், விளைவுகளற்ற வீழ்ச்சி, கோப்பையில் எழுந்த கொந்தளிப்பு எனக் கூறுவது அதன் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுவதாகும்.

**முதல் விடுதலைப் போராட்டமா?**

தமிழ் நாட்டு வேலூர்க் கிளர்ச்சியை (1806) வடநாட்டுக் கிளர்ச்சி (1857)யோடு ஒப்பிட்டுப் பார்ப்பது வழக்கமாகிவிட்டது. அதற்குக் காரணம் இரு கிளர்ச்சிகளையும் சிப்பாய்கள் முன்னின்று நடத்தியதேயாகும். காரல் மார்க்ஸ் (Karl Marx) நியூயார்க் டிரிபூன் (நேற லுழசம வுசடைரநெ, 1857) பத்திரிகையில் முதன் முறையாக 1857 கிளர்ச்சியை முதல் இந்திய விடுதலைப் போராட்டம் என்று குறிப்பிட்டார். பின்னர் 1909 இல் வி.டி.சவார்க்கர், இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு என்ற நூலை

மராத்தி மொழியில் எழுதினார். அவருக்குப் பின் கே. இராஜய்யன் தென்னிந்திய கிளர்ச்சியை முதல் விடுதலைப் போராட்டம் என்று வாதிட்டார். வேலூர்க் கிளர்ச்சியை முதல் விடுதலைப் போராட்டம் என்று கருதுவோரும் உண்டு. பஞ்சாபியர் முதல் சீக்கியப் போரை (1845-1846) முதல் விடுதலைப் போர் என்று வாதிட்டனர். 1857 கிளர்ச்சியை முதல் விடுதலைப் போர் என்று குறிப்பிடுவதை எதிர்த்து சில தென்னிந்திய வரலாற்றாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். 2007 இல் இந்திய அரசு 1857 கிளர்ச்சியின் 150வது நினைவு விழாவைக் கொண்டாடியது. 2006-ல் மத்திய அரசு வேலூர் கிளர்ச்சியின் நினைவு அஞ்சல் முத்திரையை வெளியிட்ட போது தமிழ் நாட்டு அரசாங்கம் வேலூர் கிளர்ச்சிதான் முதல் விடுதலைப் போராட்டம் என்பது அங்கீகரிக்கப்பட்டதாக அறிவித்தது. தேசிய உணர்வின்றி, மக்களின் பிரதான பங்கின்றி மேற்கொள்ளப்பட்ட 1806 வேலூர்க் கிளர்ச்சியையும், 1857 கிளர்ச்சியையும் முதல் இந்திய விடுதலைப் போராட்டம் என்று வர்ணிப்பது வரலாற்றுத் திரிபு ஆகும்.

**கொல் கிளர்ச்சி)Kol Uprising)**

இடம்: **சோத்தன் சோட்டாநாக்பூர்** ) Chotanagpur), **இப்போது ஜார்க்கண்ட் மற்றும் ஒடிசாவின் பகுதிகள்**

**முக்கியத் தலைவர்கள்:** புது பிகா, சோவான் பிகா, ஜோவீரா பிகா

**1. கொல் பழங்குடியினர் யார்?**

- கொல் பழங்குடியினர் இந்தியாவின் சோட்டாநாக்பூர் மலைப் பகுதியில் வாழ்ந்த பழங்குடி சமூகமாகும் விவசாயம் பெரும்பாலும் அவர்கள் . சேகரிக்கும் வளங்களைச் இயற்கை இருந்து காடுகளில் மற்றும் ஈடுபட்டிருந்தனர தொழில்களில்ஃ.
- அவர்கள் தங்கள் செல்வாக்குள்ள சமூகத்தையும், கலாச்சார மரபுகளைப் பாதுகாத்து வாழ்ந்து வந்தனர் செல்வமாக பெரும் அவர்களுக்குப் நிலம் . .இருந்தது

**2. கிளர்ச்சியின் காரணங்கள்:**

- **நில சுரண்டல்:** பிரிட்டிஷ் ஆட்சி தென்னிந்தியாவின் பல பகுதிகளில் உள்ள நிலங்களை வசமாக்கியது. கொல் பழங்குடியினரின் நிலங்களும் பிடுங்கப்பட்டன.
- **புதிதாக வந்த சுதேசி மக்கள்:** பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் பல மத்தியமவகுப்பினர், பணக்கார சாதிகள் மற்றும் பணமதிப்புடையவர்கள்

கொல் பழங்குடியினர்கள் நிலங்களில் குடியேறினர் இவர்களுக்கு . நிலங்க பிறத்தவர்களால் இடையூறாகள் வாங்கப்பட்டு சுரண்டப்பட்டன.

- **அதிக வரி சுமைகள்:** பிரிட்டிஷ் அரசாங்கம் இப்பகுதிகளில் உழைப்பது மிகவும் கடினமான நிலப்பரப்பில் அதிக வரி விதித்தது மக்கள் கொல் இது . .ஏற்படுத்தியது நெருக்கடியை பெரும் மீது
- **பழங்குடியினர் வாழ்வியல் மீது தாக்கம்:** பிரிட்டிஷ் ஆட்சி பழங்குடியினங்களின் பாரம்பரிய சமூக அமைப்புகள் மற்றும் சட்டங்களை மாற்ற முயற்சி செய்தது, இதனால் பழங்குடியினர் வாழ்க்கையின் அடிப்படை அம்சங்கள் பாதிக்கப்பட்டன.

3. **கிளர்ச்சியின் தொடக்கம்:**

- கொல் கிளர்ச்சியின் முதன்மையான காரணம் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் அவர்களின் நிலங்களைப் பறிபோகக் கூடாது என்பதற்கான போராட்டமாகும்.
- 1831 ஆம் ஆண்டில் கொல் பழங்குடியினர் கூட்டம் ஒன்று கூடித் தங்களின் நிலங்களை மீட்டுப் பெற போராடத் தொடங்கினர் இதற்காக . .துவங்கினர் கிளர்ச்சியைத் அவர்கள்
- கொல் மக்கள் பல ராணுவ தாக்குதல்களை மேற்கொண்டு, நிலத்தை மீட்டெடுக்க முயற்சித்தனர்.

4. **கிளர்ச்சியின் முக்கிய நிகழ்வுகள்:**

- கொல் கிளர்ச்சியின் போது, கொல் பழங்குடியினர் பிரிட்டிஷ் அதிகாரிகளின் நிலங்களை தாக்கி, குதிரைகளையும் ஊர்வனையும் அழித்தனர்.
- அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சி முறைமையை புறக்கணித்து, தங்கள் பாரம்பரிய முறைகளின் கீழ் நிலைநாட்டிக் கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.
- இதனால் பிரிட்டிஷ் படைகள் கொல்லர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, பல பழங்குடியினர்களைக் கொன்றனர்.

5. **கிளர்ச்சியின் விளைவுகள்:**

- **கிளர்ச்சி அடக்கப்பட்டதாலும்** பிரிட்டிஷ் படைகளால் கொல்லர்கள் விரைவில் அடக்கப்பட்டு, பல தலைவர்கள் கொல்லப்பட்டனர்.

- **பழங்குடியினர் நிலம் பறிபோனது:** கொல் கிளர்ச்சியின் தோல்வியால் பழங்குடியினர் நிலங்களை மீட்டெடுக்க முடியாமல், அவர்கள் பூர்வீக நிலங்களை முற்றிலும் இழந்தனர்.
- **அரசியல் மாற்றங்கள்:** கிளர்ச்சியால் பிரிட்டிஷ் ஆட்சி முறைமையில் கொள்கை மாற்றங்கள் ஏற்பட்டனஆனால் ., மத்தியில் பிரிட்டிஷ் ஆட்சியின் செல்வாக்கு மேலும் வலுவடைந்தது.

**6. கொல் கிளர்ச்சியின் முக்கியத்துவம்:**

- கொல் கிளர்ச்சி, இந்தியாவில் பழங்குடியினர் போராட்டங்களில் மிக முக்கியமானதாகும்.
- இது பொதுவாக இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் எதிர்ப்பைத் தூண்டிய முக்கிய நிகழ்வாக கருதப்படுகிறது.
- கொல் மக்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக தனி ஒரு சமூகமாக போராடியது மட்டுமல்லாமல், பழங்குடியினர் உரிமைகளுக்கான முன்னோடி போராட்டமாகவும் உள்ளது.

**7. கொல் கிளர்ச்சியின் தாக்கம்:**

- கொல் கிளர்ச்சி இந்திய தேசியவாத இயக்கத்தில் ஒரு முக்கிய செயல்பாடாகக் காணப்படுகிறது.
- இது பழங்குடியினர் சமூகத்தின் அடையாளமாகவும், அவர்களது உரிமைகளைப் பெற நினைத்த முயற்சியாகவும் விளங்குகிறது.
- இது மேலும் இந்தியாவில் பிற கிளர்ச்சிகள் மற்றும் தேசியவாத இயக்கங்களுக்கு ஒரு முன்னோடியாக அமைந்தது.

**8. கொல் கிளர்ச்சியின் சரித்திர முக்கியத்துவம்:**

- இந்தியாவில் ஏனைய பழங்குடியினர் கிளர்ச்சிகளை தூண்டியது.
- தேசியவாதம் உருவாகிய பின்னர் கொல் கிளர்ச்சியை மக்களிடையே பொதுவாக புரட்சிக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தியது.
- இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் கொல் கிளர்ச்சி முக்கியப் பங்காற்றியது.

**முடிவு:**

கொல் கிளர்ச்சி பிரிட்டிஷ் ஆட்சியின் கொடுமைகளுக்கு எதிராகக் கொல் பழங்குடியின மக்கள் மேற்கொண்ட முக்கிய போராட்டம் ஆகும். இது இந்திய

தேசிய முன்னோடிகள் மற்றும் சமூக எதிர்ப்புகளுக்கான அடிப்படை விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியது.

**மாப்பிள்ளை கிளர்ச்சி )Moplah Rebellion) - முழுமையான பாடப்பகுதி**

**காலம்:** 1921

**இடம்:** மலபார், கேரளா

**பங்கேற்றவர்கள்:** மாப்பிள்ளைகள் ( முஸ்லீம் விவசாயிகள்), இந்து நில உரிமையாளர்கள், பிரிட்டிஷ் ஆட்சி.

**1. மாப்பிள்ளைகள் யார்?**

- மாப்பிள்ளைகள் கேரளாவின் மாலபார் பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லீம் விவசாயிகள் நிலப்பரப்பில் குறைந்த பெரும்பாலும் இவர்கள் . வேலைசெய்து, சமூக பொருளாதாரத்தில் கீழே உள்ள நிலையில் இருந்தனர்.
- மாலபார் பிரதேசத்தில் பெரும்பாலும் நில உரிமையாளர் வர்க்கம் இந்துக்களாக இருந்ததால், மாப்பிள்ளைகள் அவர்களிடம் நிலங்கள் பறிக்கப்பட்டு, அடிமைத்தனத்திற்கும், நில சுரண்டலுக்கும் ஆளாகி வந்தனர்.

**2. கிளர்ச்சியின் காரணங்கள்:**

- **சர்வதேச கோரிக்கைகள்:** மாலபார் மாகாணத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த முஸ்லீம் விவசாயிகள் நீண்ட காலமாக நில உரிமையாளர்களின் அடிமைச் சுமையிலிருந்து விடுபட சுதந்திரத்தை எதிர்பார்த்தனர்.
- **நில உரிமை சிக்கல்:** பிரிட்டிஷ் ஆட்சி முறைமையின் கீழ் நில உரிமையாளர்கள் தங்களின் நிலங்களை முஸ்லீம் விவசாயிகளிடம் குத்தகைக்கு வழங்கினார்கள், ஆனால் அவர்கள் நில உரிமையைப் பெற இயலவில்லை.
- **பிரிட்டிஷ் ஆட்சியின் கொடுமைகள்:** பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் விதிக்கப்பட்ட வரி சுமைகள், சட்ட நடவடிக்கைகள், மற்றும் அரசியல் கட்டுப்பாடுகள் விவசாயிகளை நெருக்கடியிலும், பொருளாதாரச் சிக்கல்களிலும் வைத்தன.
- **கிளாபத் இயக்கம் )Khilafat Movement):** உலகளாவிய அளவில் முஸ்லீம்கள் கோரிக்கைகளை முன்வைத்து கிளாபத் இயக்கத்தை

தூண்டுகோலாக கிளர்ச்சிக்கு மாப்பிள்ளை இது .தொடங்கினர் (கிலாபத்) .அமைந்தது

3. **கிளர்ச்சியின் தொடக்கம்:**

- 1921-ஆம் ஆண்டு கேரளாவின் மாலபார் மாகாணத்தில், கிளாபத் இயக்கம் மற்றும் காந்தியின் தவறான நெருக்கடி மூலமாக மாப்பிள்ளை விவசாயிகள் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து கிளர்ச்சியைத் தொடங்கினர்.
- கிளர்ச்சியின் முக்கியப் பங்காளர்கள் முஸ்லீம் விவசாயிகளாக இருந்தாலும், சில இந்து விவசாயிகளும் இதில் பங்கேற்றனர்.
- கிளர்ச்சியின் முக்கியக் காரணம் நில உரிமை சிக்கல் மற்றும் பிரிட்டிஷ் ஆட்சியின் கொடுமைகளாகும்.

4. **கிளர்ச்சியின் முக்கிய நிகழ்வுகள்:**

- **ஆரம்பம்:** 1921 ஜூன் மாதம் கிளாபத் ஆட்சி சார்ந்த சலசலப்புகள் மாலபாரில் ஏற்பட்டதால், மாப்பிள்ளைகள் போராட்டத்தை ஆரம்பித்தனர்.
- **பிரிட்டிஷ் படையெடுப்பு:** பிரிட்டிஷ் படைகள் கிளர்ச்சியை அடக்க முதற்கட்டமாக காவல் நிலையங்களை அழித்தனர்.
- **நில உரிமையாளர் தாக்குதல்:** கிளர்ச்சியின் போது மாப்பிள்ளை விவசாயிகள் நில உரிமையாளர்கள் மீது கொடிய தாக்குதல்களை மேற்கொண்டனர் உரிமையாளர்கள் நில பல இதனால் . .கொல்லப்பட்டனர்

5. **கிளர்ச்சியின் விளைவுகள்:**

- **பிரிட்டிஷ் படைகளின் கட்டுப்பாடு:** பிரிட்டிஷ் அரசாங்கம் தனது படைகளை அனுப்பி, மாப்பிள்ளைகள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது.
- **பெரும் மரணங்கள்:** ஆயிரக்கணக்கான மக்கள், குறிப்பாக முஸ்லீம் விவசாயிகள், இந்து நில உரிமையாளர்கள் மற்றும் பிரிட்டிஷ் படைகள் மோதலில் கொல்லப்பட்டனர்.
- **சமூக மற்றும் அரசியல் தாக்கம்:** இந்து மாலபாரில் உறவுகள் முஸ்லீம்- .தகர்ந்தது ஒற்றுமை நிலவிய ஆண்டுகளாக பல .பாதிக்கப்பட்டன

6. **கிளர்ச்சியின் முக்கியத்துவம்:**

- **பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக ஒரு சமூகமாக உருவெடுத்தது:** மாப்பிள்ளை கிளர்ச்சி, விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பெரிய போராட்டமாக திகழ்ந்தது.
- **நில உரிமை விவகாரம்:** மாப்பிள்ளை கிளர்ச்சி விவசாயிகள் நில உரிமை சிக்கல்களை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியது மூலம் இதன் . .முன்வைத்தது உரிமைகளை தொடர்பான சுதந்திரம் மற்றும் உரிமை நில
- **அதிகாரத்துக்கு எதிராக போராட்டம்:** இது அரசியல் மற்றும் பொருளாதார சிக்கல்களுக்கு ஒரு முக்கிய பதிலாகவும், விவசாயிகளின் எதிர்ப்புகளுக்கான வழியாகவும் அமைந்தது.

7. **மாப்பிள்ளை கிளர்ச்சியின் பின்விளைவுகள்:**

கர்சன் பிரபு நிர்வாகத்திறன் மிகு ஆற்றல் படைத்தவர். எனினும் ஏகாதிபத்தியக் கோட்பாடுகளில் ஊறித்திளத்தவர். எனவே திறமையான நிர்வாகம், உறுதியான அரசு என்ற பெயரில் தல நிர்வாகத் தனி உரிமைகளைப் பறித்து அடக்கு முறைக்கணைகளை ஏவினார் பல்கலைகழகம், நகராட்சி மன்றம் ஆகியவற்றை அரசு அதிகாரிகளின் ஆதிக்கத்தின் கீழ் வைத்தார். தனது சொந்த ஆற்றலிலும், அறிவிலும் அதிக நம்பிக்கை வைத்ததால் பிறர் கருத்துக்களுக்கு செவிமடுக்க மறுத்தார்: எதிலும் ஏதேச்சதிகாரமான போக்கினைக் கொண்டார். அதன் காரணமாக தன்னிச்சைப்படி வங்காளத்தை பிரித்தார். இச்செயல்கள் தேசிய இயக்கத்தை வலுப்படுத்தி அன்னிய ஆதிக்க எதிர்ப்பைக் கிளறின.

**வங்கப்பிரிவினை:**

கர்சன் பிரபுவின் ஏதேச்சதிகாரச் செயரான வங்கப்பிரிவினை சுதேசி இயக்கத்தைத் தோற்றுவித்தது. தீவிரவாதிகளை ஊக்குவித்தது. வந்தே மாதரம் என்ற புரட்சிக் கீதத்தை நாடெங்கும் எதிரொலிக்கச் செய்தது.

**பஞ்சம், பிளேக்** :

நாட்டின் பிற பகுதிகளில் பஞசம், பிளேக் வறுமை ஆகிய கொடுமைகள் பரவி கொந்தளிப்பை ஏற்படுத்தின. 1896-97ல் ஏற்பட்ட பஞ்சத்தால் இருபது மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டனர். பூனா வட்டாரத்தில் பரவி பிளேக் நோய் மக்கள் உயிர்களைக்கொள்ளை கொண்டது. அந்நோய்த் தடுப்பு அதிகாரிகளின் அத்துமீறிய செயல் மக்களிடையே ஆத்திரத்தை உண்டு பண்ணியது.

**சூரத் காங்கிரஸ் பிரிவு**

கொள்ளை நோயும் கொடிய பஞ்சமும் மக்களைக் கொள்ளை கொண்டபோது அன்னிய அரசு அடக்கு முறைச் சட்டங்களைக் கட்டவிழ்த்து விட்டது. இதனால் தேசியவாதிகள் பலர் ஆங்கிலேயர் மீது கொண்டிருந்த நல்லெண்ணத்தையும் நம்பிக்கையும் கைவிட்டு தீவிரவாதிகளாக மாறினர். திலகர், பிபின், சந்திரபால், லாலாஜபதிராய் சிதம்பரம்பிள்ளை ஆகிய தீவிரவாதிகள் அரசியல் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி சுதேச உணர்ச்சிகளை கிளறி சுயராஜ்யக் கோஷம் எழுப்பினர். இந்த தீவிரப் போக்குகளை ஆங்கில அரசின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை கொண்டிருந்த மிதவாதிகள் விரும்பவில்லை. அதன் காரணமாக 1907ல் சூரத்தில் கூடிய இந்திய தேசிய காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது. தீவிரவாதிகள் காங்கிரசை விட்டு வெளியேறினர். இப்போது ஆங்கிலேயர் காங்கிரஸில் உள்ள மிதவாதிகளைத் திருப்திப்படுத்த சில அரசியல் சலுகைகளை அளிக்க விரும்பினர். மிதவாதிகளின் தலைவரான கோபாலரிருஷ்ணகோகலே இங்கிலாந்து சென்று இந்திய அமைச்சரைச் சந்தித்து அரசியல் சீர்திருத்தங்கள் செய்வதன் அவசியத்தை வலியுறுத்தினார். தாராளக் கருத்தினரான மார்லி அது பற்றி அரசுப்பிரதியான மின்டோவிற்கு கடிதம் எழுதினார். இந்த இருவரின் முயற்சி காரணமாக 1909ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1809ம் ஆண்டு இந்தியச் சட்டத்தின் முக்கிய கூறுகள் மத்திய சட்டசபை விரிவாக்கம் 1.மத்திய சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 16லிருந்து 60 ஆக உயர்த்தப்பட்டது. தலைமை ஆளுநர் நிர்வாக கவுன்சில் உறுப்பினர்களையும் சேர்த்து மத்திய சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 64 ஆக ஆக்கப்பட்டது. 2.60 பேரில் பாதிக்கு குறையாதவர்கள் அரசுப் பதவிகளில் இல்லாதவர்களாக இருக்க வேண்டும். அவர்களில் ஐவர் தலைமை ஆளுநரால் நியமனம் செய்யப்பட வேண்டும்.

**மாநிலச் சட்டமன்றங்கள் விரிவாக்கப்படல்**

1. சென்னை, பம்பாய், வங்காள மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்த்தப்பட்டது. வடமேற்கு மாநிலம் ஐக்கிய மாநிலமாக (தற்போதைய உத்திரப் பிரதேசம்) பெயர் மாற்றம் பெற்றது. அதற்கும் 50 பேர் கொண்ட சட்டசபை உறுப்பினர் எண்ணிக்கை 30 ஆக

உயர்த்தப்பட்டது. 1912ம் ஆண்டு அஸ்ஸாம், பீஹார் ஆகியவை வங்காளத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனி மாநிலமாக்கப்பட்டது. அங்கும் 30 பேர் கொண்ட சட்டசபை நிறுவப்பட்டது. 2.மாநிலங்களில் அரசுப் பதவி சாராதோர் பெரும்பான்மையினராயிருந்தனர். அவர்களுள் சிலர் அரசரால் நியமனம் பெற்றவர்களாக இருந்ததால் மாநிலங்களிலும் அரசு தரப்பு பெரும்பான்மை பெற்றது. எடுத்துக்காட்டாக 47 பேர் கொண்ட சென்னை மாநில சட்டமன்றத்தில் அவர்கள் கீழ் கண்டவாறு இருந்தனர்.

**நிர்வாக கவுன்சில்களின் விரிவாக்கம**

1. இச்சட்டப்டி சென்னை, பம்பாய் மாநில நிர்வாகக் கவுன்சில்களின் எண்ணிக்கை நான்காக உயர்த்தப்பட்டது. இந்திய அமைச்சர்களின் அனுமதியுடன் வங்காளம் மற்றும் பிற மாநிலங்களுக்கு இதுபோல் நிர்வாகக் கவுன்சில் அமைக்க தலைமை ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

2. முதன்முதல் நிர்வாகக் கவுன்சில்களில் இந்தியர் ஒருவர் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டார். மத்திய நிர்வாகக் கவுன்சிலில் எஸ.பி.சின்ஹா என்பவர் சட்ட உறுப்பினராக நியமனம் பெற்றார். இலண்டனில் உள்ள இந்திய அமைச்சர் ஆலோசனைக்குழுவிற்கு ஏற்கனவே இரு இந்தியர்கள் நியமனம் பெற ்றது குறிப்பிடத்தகுந்தது.

**சட்டசபை பணிகள் அதிகரிக்கப்படல**

1. நிதிநிலை அறிக்கை மீது விவாதம் நடத்தி அது இறுதி வடிவம் பெறுவதற்கு முன் தீர்மானங்கள் கொண்டு வர உறுப்பினர்கள் அனுமதிக்கப்பட்டனர்.
2. துணைக் கேள்விகள் கேட்கவும் அனுமதிக்கப்பட்டனர். தல நிறுவனங்களுக்கு கடனளிப்பது, கூடுதல் மானியமளிப்பது புதுவரிகள் விதிப்பன ஆகியவை பற்றி தீர்மானம் கொண்டு வரவும் அனுமதிக்கப்பட்டனர்.
3. பொதுநலன் சம்பந்தப்பட்ட விஷயங்கள் பற்றி விவாதிக்கவும், தீர்மானங்கள் கொண்டு வரவும் உரிமை பெற்றனர்.
4. ஆனால் தனியார் தீர்மானங்களும் காரணம் காட்டது அனுமதி மறுக்கும் அதிகாரம் தலைமை ஆளுநருக்கு கொடுக்கப்பட்டது. மேலும் சிலவருவாய் செலவினங்கள் பற்றி விவாதமே கூடாது என்றும் விதிக்கப்பட்டது.

**வகுப்பு வாரி பிரதிநிதித்துவ முறை**

இச்சட்டம் முஸ்லீம்களுக்கு தனியாக தேர்தல் தொகுதிகள் ஒதுக்கப்பட்டு தேர்தல் தொகுதிகள் முஸ்லீம்களுக்கௌ ஒதுக்கப்பட்டது. அத்தொகுதிகளில் வாக்களர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதற்கென தனி வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

**தேர்தல் முறைகள்**

1. 1909ம் ஆண்டு சட்டம் தான் முதன் முதலாக சட்டமன்றங்களில் அரசுப் பதவி சாராதோரைத் தேர்ந்தெடுக்க வகை செய்தது. தேர்தல் என்பது முதன்முதலாக அங்கீரிக்கப்பட்டது.
2. ஏற்கெனவே குறிப்பிட்ட முஸ்லீம்களுக்கு தனிவாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு தனிதேர்தல் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன.
3. தேர்தல் நடைமுறைகளை வகுக்கும் அதிகாரம் தலைமை ஆளுநருக்கு அளிக்கப்பட்டது. அவர் ஒரே சீரான வாக்களிப்பு முறைகளை கொண்டு வரவில்லை. அது இடத்திற்கு இடம், இனத்திற்கு இனம் மாறுப்பட்டிருந்தது. சென்னை மாநிலத்தில் வருடத்திற்கு 15000 ரூபாய் வருமானம் உள்ளவருக்கு அல்லது 10000 ரூபாய் வரை நிலவரி கட்ட கூடியவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. வங்காளத்தில் ராஜா அல்லது நவாப் பட்டம் பெற்றவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. மத்திய மாநிலங்களில் கௌரவ பதவி வகிப்பவர்களுக்குக் கூட வாக்குரிமையளிக்கப்பட்டது. ஆண்டுக்கு 3000 ரூபாய் வருமானததிற்கு வருமான வரி செலுத்தும் முஸ்லீமிற்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. ஆனால் இவ்வுரிமை பிறவகுப்பினருக்கு அளிக்கப்பட வில்லை.
4. அரசுக்கெதிரான போராட்டத்தில் கலந்து கொண்டவர்களை தேர்தலில் போட்டியிடாதவாறு தடை செய்யும் அதிகாரம் அரசுக்கு அளிக்கப்பட்டது. 1909ம் ஆண்டு சட்டத்தைப் பற்றிய மதிப்பீடு : 1909ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம் கொண்டுவரப்பட்டதன் நோக்கம் மிதவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காகவே ஆகும். ஆந்த அளவில் அச்சட்டம் பெரும் வெற்றிபெற்றது. மதிவாதிகளின் ஆதிக்கத்தில் உள்ள காங்கிரஸ் இந்த தாராள அரசியலமைப்பு சீர்திருத்தத்தை

கொண்டு வந்ததற்காக மிண்டேதவிற்கும் மார்லிக்கும் நன்றி வெலுத்துவதில் முன்னணியில் நின்றது. சுரேந்திர நாத்பானர்ஜி "நாம் விரும்பியதெல்லாம் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் பொறுமையாய் இருந்தால் நாம் விரும்பியதெல்லாம் பெறலாம்"என்று கூறினார். மேலும்,,,துணைக்கேள்விகள் கேட்கவும், தீர்மானங்கள் கொண்டு வரவும் பெற்ற உரிமை மதிப்புமிக்க சலுகைகள்" எனவும் போற்றினார். குழப்பநிலையை நோக்கி விரைந்து கொண்டிருந்த நாட்டைக் காப்பாற்றிய பெருமை மிண ்டோமார்லிக்கு உரியது." என கோகலே தம் நன்றியை வெளிப்படுத்தினார். இந்தியர்கள் எதிர்பார்த்ததை விட அதிகம் பெற்றிருக்கிறார்கள். என „இந்தியன் ரிவ்யூ" என்ற செய்தித்தாள் தன் மகிழ்ச்சியை வெளியிட்டது. அண்மையில் தோற்றுவிக்கப்பட்ட முஸ்லீம் லீக் கட்சி தம் இலட்சியம் நிறைவேறி விட்டதாகக் களிப்பெய்தியது.

உண்மையில் 1909ம் ஆண ்டுச் சீர்திருத்தம் இந்திய அரசியலமைப்பு வளர்ச்சியில் ஒரு முக்கிய கட்டமாக விளங்குகிறது. பொறுப்பாட்சி என்ற திசையில் பிரதிநிதித்துவ அரசென்னும் பாதையில் ஜனநாயகத்தை நோக்கிச் செல்லும் பயணத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் பெற்றிருப்பது உண்மைதான். ஏனெனில் அதில்,

1. அரசுச் சார்பற்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியது.
2. தேர்தல் முறைகளை புகுத்தியது
3. சட்டமன்றங்களில் விரிவான விவாதங்களுக்கு அனுமதி வினாவெழுப்பி விடை பெறும் உரிமை அளித்தது.
4. நிதிநிலை அறிக்கை மீது விவாதம்.
5. அரசப் பிரதிநிதி நிர்வாகக் கவுன்சிலில் இந்தியருக்கு பிரதிநிதித்துவம்.

ஆகிய தாராள சீர்திருத்தக் கருத்துக்கள் அச்சட்டத்தில் அடங்கியுள்ளன. மத்தியசட்டசபையை சின்னஞ்சிறு பாராளுமன்றமாக மாற்றிய பெருமை மக்கள் குரலை எரிரெதலிக்கும் மக்கள் பிரதிநிதிகளை உருவாக்கும் வாய்ப்பு, அரசுகோமான்கள் முன்பு திறனாய்வு செய்து திருத்தங்கள் இயற்றும் உரிமை ஆகிய சிறப்புகள் இச்சட்டத்திற்கு உண்டு. விடுபட்ட உரிமைகள் பலவாயினும்

கொடுக்கப்பட்ட சலுகைகள் சிலவாயினும் அவை போற்றப்படதக்கக்வையே. குறைகளைகளைந்து நிறைகளைக் கொள்வோம் என்ற கொள்கை அடிப்படையில் நோக்கினால் இச்சட்டம் நிச்சயம் மனநிறைவு தரும்.

எனினும் ஓராயிரம் உரிமைகளை எதிர்பார்த்த தேசியவாதிகளுக்கு இச்சட்டம் ஒரு சில சலுகைகளையே வழங்கியது ஏமாற்றகளித்ததாயிருந்தது. நிஜமான ஜனநாயகத்தை எண்ணியிருந்தோருக்கு நிழலான ஜனநாயகமே காத்திருந்தது. அதற்கு காரணங்கள் பல. முதலாவதாக, இச்சட்டத்தை எனக் கூறினார்.

இரண்டாவதாக, மத்திய சட்டசபையில் அரசுத்தர்பாரின் பெரும்பான்மை சட்டபூர்வமாக நிலைநாட்டப்பட்டது. மொத்த மக்களாட்சிக் கருத்துக்களை கேலிக்கூத்தாக்கி விட்டது. 66 பேரில் 37 பேர் அதாவது பாதிக்கு மேல் அரசப்பதவி வகிப்போராவர். இதுவும் போதாதென்று பதவி சாராதோரில் தலைமை ஆளுநரால் நியமிக்கப்படும் ஐவர் நிச்சயம் அரசையே ஆதரிப்பர்.இதற்கு மேல் தலைமை ஆளுநரின் ரத்து அதிகாரம் அரசையே இரும்பு கவசம்போல் காத்து நின்றது. எனவே சகலவித பாதுகாப்பு ஏற்பாடுகளோடும் அதிகார ஆயுதங்களுடனும் இரும்புக்கவசம் பூண்டு நின்ற வீரனை, சிறுபான்மையினர் என்ற முடமாக்கப்பட்ட பல்வேறு கட்டுபாடு என்னும் விலங்கினால் மாட்டப்பட்ட உரிமையற்ற நிராயுதபாணியான ஒருவன் எதிர்த்து நின்று போரிட்டால் அந்த போரின் முடிவு என்னவாகும்? ஆந்தப்போர்தான் பார்ப்பதற்கு ரசிக்குமா? இத்தகைய வித்தையான காட்சியைத்தான் மிண்டோமார்லி உருவாக்கிய சட்டசபை நமக்கு அளித்தது.

மூன்றாவதாக, மாநில சட்டமன்றங்களில் பதவி சாராதோரின் பெரும்பான்மை நிலைநாட்டப்பட்டிருந்தாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சிறுபான்மையினராக இருந்து குறிப்பிடத்தகுந்தது. அரசுப் பதவி சார்ந்தோரும் நியமனம் செய்யப்பட்ட பதவிசாராதோரும் இணைந்தால் அரசுக்கட்சி பெரும்பான்னைகளுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலச்சுவான்தார்களும், ஐரோப்பியர்களும், முஸ்லீம்களும் இணைந்து செயல்படும் வாய்ப்பு வேறு இருக்கிறது. எனவே இங்கும் அரசுதரப்பின் குரல் என்ற ஒரு கை ஓசைதான் கேட்கும்.

நான்காவதாக, சட்டசபை உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்த இச்சட்டம் அவர்களின் செயல் உரிமைகளை

அதிகப்படுத்தவில்லை. அவர்கள் கொண்டு வரும் எந்த தீர்மானத்தையும் காரணம் காட்டாமல் அரசு நிராகரிக்லாம். கேள்விகேட்கும் உரிமை கொடுக்கப்பட்டது உண்மைதான். ஆனால் அதற்கு பதில் கொடுத்துதான் தீரவேண்டுமென்று கட்டாயமும் இல்லை. நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசு செயல்படுத்தியே தீரவேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. எனவே அரசைக்கட்டுப்படுத்தாத தீர்மானத தை நிறைவேற்றுவதில் அர்த்தமே இருக்கமுடியாது.

எனவே அதிகாரமும் பொறுப்பும் குவிந்துகிடக்கும் ஆட்சிபீடத்தை குறை கூறத்தான் உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறதே தவிர சீர்திருத்தி அமைக்க அல்ல.

ஐந்தாவதாக, வகுப்புவாரிப் பிரதிநிரித்துவம் என்ற புதியதொரு முறை இந்தியரை இந்துக்கள், முஸ்லீம்கள் எனப்பாகுபாடு செய்தது. எல்லா ஏகாதிபத்தியங்களும் கடைபிடிக்கும் பிரித்தாளும் சூழ்ச்சி என்ற ராஜதந்திரக் கொள்கை வெகு ஜாக்கிரதையாக கையாளப்பட்டது. அதன்மூலம் பாகிஸ்தான் பிரிவினை பலமானதொரு அடிப்படை பக்குவமாக போடப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்தான் தோற்றுவிக்கப்பட்ட முஸ்லீம்லீக் கட்சியின் வேண்டுகோள் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒரே கல்லில் இரு மாங்காய் என்பது போல் இம்முறை இந்திய தேசிய சக்திகளை பிளவு படுத்தியது. முஸ்லீம் மக்களை ஆங்கில அரசு அனுதாபிகளாக மாற்றியது. முஸ்லீம்களுக்கு வேண்டுமென்ற அதிக அளவு வீதாசார பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. வாக்குரிமை தகுதியை நிர்ணயிக்க முஸ்லீம்களுக்கும் பிறருக்கும் வெவ்வேறு அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டன. இம்முறை முஸ்லீம் வகுப்புவாக சந்திகளை மட்டும் தூண்டவில்லை. அதற்கு எதிராக இந்து வகுப்புவாத சக்திகளையும் உருவாக்கியது. பிற சிறுபான்மையினரான சீக்கியர் கிறிஸ்துவர் ஹரிஜனங்கள் ஆகியோரும் தனித்தொகுதிமுறை கேட்கத் தொடங்கினார். மக்களாட்சி கருத்துகளுக்கு முரணான இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை இந்திய சமுதாய ஒருமைப்பாட்டிற்கு உலைவைத்தது.

ஆறாவதாக, தேர்தல் என்ற மக்களாட்சி முறையை இச்சட்டம் ஏற்றுக்கொண்டு விட்டது உண்மைதான். ஆனால் சட்டத்தில் எழுத்தளவில் உள்ள அந்த தேர்தல் நாட்டில் செயளவில் கொண்டுவரப்பட்ட பொதுதான் அது நேரடித்தேர்தல் அல்ல,

மறைமுகத்தேர்தல் என்ற உண்மை வெளிப்பட்டது. இன்றைய தேர்தலுக்கு 1909 ம் ஆண்டுச் சட்டப்படியான தேர்தலுக்கும்மலையளவு வேறுபாடு இருந்தது. மேலும் 40 கோடி மக்கள் தொகை கொண்ட இந்த நாட்டின் மத்திய சட்டசபைத் தேர்தலில் வாக்களிக்க தகுதியுடையவர்கள் 650 பேர் தான் மாநில சட்டமன்ற வாக்காளர் தொகை ஏறத்தாழ 200. இந்த மாபெரும் வாக்காளர்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் தாம் 40 கோடி மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் தகுதி படைத்தவர்களாம்.

இறுதியாக, பொறுப்பாட்சிதான் மக்களாட்சி முறையின் சத்தும், சாரமும், அவையிரண்டும் 1909ம் ஆண்டு இந்திய சட்டமன்றங்களுக்கு அடியோடு பற்றாக்குறை இந்திய அரசு, இந்திய சட்டமன்றங்களுக்கும் பொறுபாக்கப்படவில்லை, அது இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்கே பொறுப்பாக இயங்கியது. சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தாலும் ஆட்சி முறைவில் மாற்றமெதுவும் செய்ய இயலாது. எனவே மிண்டோ-மார்லி உருவாக்கிய சீர்திருத்த பூங்காவில் மக்களாட்சி மலரவுமில்லை. பிரதிநிதித்துவ முறை, மணம் வீசவுமில்லை. மாறாக, பொறுப்பற்ற சட்டமன்றமும் உரிமையற்ற உறுப்பினர்களும் தான் பவனி வந்தனர்.

**செம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தங்கள்**

1909ம் ஆண ்டு சட்டம் இந்திய அரசியல் பிரச்சனைகளுக்கு எவ்விதத் தீர்வையும் அளிக்கவில்லை. சட்டசபைக்குப் பொறுப்பற்ற நிர்வாகத்தை அமைத்த இச்சட்டம் ஜனநாயகத்தின் நிழலாகவே காட்சியளித்தது. 1909ம் ஆண்டிற்கு பின் இந்தியாவிலும் உலக அரங்கிலும் நிகழ்ந்த மாபெரும் நிகழ்ச்சிகள் இந்தியர்கள் சிந்தனையிலும் மாறுதல்களைத் தோற்றுவித்தது. அதன்காரணமாக பொறுப்பாட்சி சுயஆட்சிக் கருத்துக்கள் வளர்த்தன. வளர்ந்துவரும் இந்தப் புதிய சூழ்நிலைகள் பிரிட்டிஷ் அரசை புதியதொரு அரசிலமைப்பை உருவாக்க கட்டாயப்படுத்தின. ஆதன் விளைவே 1919ம் ஆண்டு மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டம்.

சட்டம் இயற்றப்படுவதற்கான சூழ்நிலைகள்

1. வன்முறையில் நம்பிக்கை கொண்ட பயங ்கரவாதிகளின் சதிகளும் வெடிகுண்டு வீச்சுகளும்
2. தென்னாப்பிரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய ஆங்கிலக் குடியேற்றங்களில் இந்தியர்கள் இன ஒதுக்கல் கொள்கைக்குட்படுத்தப ்பட்டு இழிவு படுத்தப்பட்டதன் எதிரொலி.

3. இந்தியருக்கு சுய ஆட்சிப் பொறுப்புகளில் பயிற்சி அளிக்க திலகரும், அன்னிபெசன்ட் அம்மையாரும் தொடங்கிய ஹோம்ரூல் இயக்கம்.
4. அரசியல் சீர்திருத்தத்தை வலியுறுத்தி மத்திய சட்டமன்ற உறுப்பினர்கள் பத்தொன்பது பேர்கள் தயாரித்தனுப்பிய குறிப்புகள்.
5. காங்கிரஸ் முஸ்லீம்லீக் கட்சிகளின் 1916ம் ஆண்டு லக்னௌ உடன்படிக்கை ஒருகிணைந்த செயல் திட்டமொன்றை வகுத்தது.
6. தலைமை ஆளுநரின் மேலாதிக்கத்தைப் பாதிக்காத வண்ணம் ஆட்சிப் பொறுப்பில் இந்தியர்களுக்கு அதிக பங்கு அளிக்கவேண்டும் என ஹார்டிஞ்சு பிரபு எழுதிய கடிதம்.

முதல் உலகப்போர் தோற்றுவித்த புதிய சூழ்நிலைகள

1. ”உலகத்தை ஜனநாயத்திற்கு பாதுகாப்பான இடமாக மாற்றுவதற்காகவே இப்போர் நடைபெறுகிறது”. “சுய நிர்ணய உரிமை கோட்பாடுகளுக்காகவே இப்போர் நடைபெறுகிறது: எனப் பிரிட்டிஷ் அரசினர் பகிரங்கமாக அறிவித்தனர்.
2. போருக்கு இந்தியர்கள் அளித்த நிபந்தனையற்ற உதவி பன்னிரண்டு இலட்சம் போர்வீரர்கள் 75 மில்லியன் பவுன் யுத்த நிதி. ஆண்டுதோறும் 20 மில்லியன் பவுன் போருக்கென ஒதுக்கியது. பிரதி நன்றி நோக்காது இவ்வுதவிகள் செய்யப்பட்ட போதிலும் போர் முடிந்ததும் பொறுப்பாட்சி நிச்சயம் என்ற எண்ணத்தின் தோற்றம்.
3. 1917-18ம் ஆண்டுகளில் இந்தியப் பேரரசின் போர்க்கால அமைச்சரவை மற ்றும் மாநாடுகளில் இடம் பெற்றது. போர் முடிவுற்றதும் ஏற்ப்பட்ட வெர்சேல்ஸ் உடன்படிக்கையில் இந்திய அரசு அதன் பொறுப்பில் கையொப்பமிட்டது. சர்வதேச சங்கத்தில் உறுப்பினரானது.
4. இஸ்லாமிய உலகத் தலைவரான துருக்கி சுல்தானை எதிர்த்து பிரிட்டிஷார் போராடியதால் இந்திய முஸ்லீம்களின் பிரிட்டிஷ் எரிர்ப்பு கொள்னை.
5. ஏகாதிபத்தியக் கோட்பாட்டினரான சேம்பர்லீன் இந்தியர் அமைச்சர் பதவியிலிருந்து விலகி தாராள கோட்பாட்டினரான மாண்டேகு அப்பதவி ஏற்றது. பதவி ஏற்றதும் தமது சீர்திருத்த நோக்கத்தை 1917
    1. ஆட்சித்துறையின் ஒவ்வொரு பிரிவிலும் இந்தியர்களை அதிகமாக நியமித்தல்.
    2. சுயஆட்சி நிறுவனங்களைப் படிப்படியாக வளர்த்தல்.
    3. அதன்மூலம் பொறுப்பாட்சி என்ற முற்போக்கு நிலையை அடைதல்.

4. அதே சமயத்தில் இந்தியா பிரிட்டிஷ் பேரரசின் பிரிக்க முடியாத பகுதியாக நீடித்தல்.

அதன்பின் மாண்டேகு இந்தியா வருகை புரிந்து ஐந்தரை மாதங்கள் தங்கி இந்தியர் கருத்துக்களையும் அரசியல் சூழ்நிலைகளையும் பரிந்துக்கொண்டு அரசப் பிரதிநிதி செம்ஸ்போர்டுடன் கலந்து சீர்திருத்தத்திற்கான சில பரிந்துரைகளை விங்கினார். அதனடிப்படையில் 1919 டிசம்பரில் இச்சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

**சட்டத்தின் முன்னுரை**

இச்சட்டத்தின் முன்னுரையில் அதன் சோக்கங்கள் தெளிவாகப்பட்டன. அவை

1. பேரரசின் ஒருங்கிணைந்த அங்கமாக பிரிட்டிஷ் இந்தியாவில் பொறுப்பாட்சி என்ற முன்னேற்ற நிலைமையின் நோக்கத்துடன் ஆட்சித்துறையின் ஒவ்வொரு பிரிவிலும் இந்தியர்களை அதிகமாக சேர்த்தலும் பொறுப்பாட்சி நிறுவனங்களை படிப்படியாக வளர்த்தலும் அரசுக் கோட்பாடுகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.
2. இந்நோக்கம் தொடர்ச்சியான பல நிலைகளில் செயற்படுத்தப்படும்.
3. அவை எப்போது எவ்வாறு செயற்படுத்தப்பட வேண்டுமென்பதைப் பிரிட்டிஷ் பாராளுமன்றமே தீர்மானிக்கும்
4. இந்தியர்களின் ஒத்துழைப்பு பொறுப்புணர்வு ஆகியவற்றைப் பொறுத்துத்தான் பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்கும்.
5. மாநிலங்களில் உள்ள சுயஆட்சி நிறுவனங்களின் வளர்ச்சியோடு, மாநில அரசு மாநிர விஷயங்களில் அதிக அளவு சுதந்தரத்துடன் இயங்கவும் வழிவகை செய்யப்படும்

**இங்கிலாந்தில் செய்யப்பட்ட மாறுதல்கள்**

1. ஏற்கெனவே இருந்தது போல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பான இந்திய அமைச்சரும் அவர்தம் ஆலோசனைக்குழுவும் இந்திய அரசு நிர்வாகத்தின் அனைத்து அம்சங்களையும் கண்காணித்து கட்டுப்படுத்தி இயக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தனர்.மத்திய மாநில சட்டமன்றங்களின் நடவடிக்கைகள் அனைத்தும் அவர் அமைதியின் பேரிலே நடைபெறுவதாகக் கருதப்படும்.
2. மாநிலங்களில் உள்ள மாற்றப்பட்ட துறைகளின் மீது அவரது கட்டுபாடு தளர்த்தப்பட்டது. பேரரசு நலன் மாநிலங்களிக்கிடையே மோதல் போன்ற விஷயங்கள் தவிர கிறவற்றில் கூடிய மட்டும் தலையிடக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.

3. அவரது ஆலோசனைக்குழு 8-லிருந்து 12ற்கு உட்பட்ட உறுப்பினா்களைக் கொண்டிருக்கும். அவா்களில் பாதி போ் இந்தியாவில் பத்தாண்டுகள் பணிபுரிந்தவா்களாக இருக்க வேண்டும்.
4. இந்திய அமைச்சா் அவா்தம் துணைநிலைச்செயலா் அவா்கள் சம்பந்தப்பட்ட துறைகள் ஆகியவற்றின் செலவுகள் பிரிட்டிஷ் கருவூலத்திலிருந்து அளிக்கப்படவேண்டும்.(இதற்கு முன் அவை இந்திய வருவாயிலிருந்து

**தலைமை ஆளுநரும் அவரது கவுன்சிலும்**

1. தலைமை ஆளுநரும் அவரது கவுன்சிலும் முன்போல் இந்திய அமைச்சருக்கும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குமே பொறுப்புள்ளவா்களாக இருந்தனா். இராணுவம் மற்றும் சிவில் நிா்வாகம் சட்டமியற்றுதல், நிதி அதிகாரங்கள் அனைத்தும் அவா் கரங்களில் தான் குவிக்கப்பட்டிருந்தது. சட்டமன்றத்தைக் கூட்டுதல், ஒத்தி வைத்தல் ஆகிய அதிகாரமும் அவரிடமிருந்தன. சட்டசபை நிராகரித்த சட்டங்களைக் கூட அவா் விரும்பினால் அமுல் நடத்தும் சிறப்பதிகாரம் பெற்றிருந்தாா். அவசரச்சட்டம் பிறப்பிக்கும் அதிகாரம் பெற்றிருந்தாா்.
2. எட்டுப்போ் கொண்ட அவருடைய கவுன்சிலில் மூன்று இந்தியா்கள் நியமிக்கப்பட்டனா்.
3. கவுன்சிலா்கள் இந்திய அமைச்சரால் பரிந்துரை செய்யப்பட்டு மன்னரால் நியமிக்கப்பட்டனா். அவா்கள் பதவிக்காலம் ஐந்தாண்டுகள்.
4. தலைமைத் தளபதி கவுன்சிலின் சிறப்பு உறுப்பினராக இருப்பது நீக்கப்பட்டது

**மத்திய சட்டசபை**

மத்திய சட்டசபை இருமன்றங்களைக் கொண்டதாயிருந்தது. கீழ்சபை சட்டப் பேரவை எனவும், மேல்சபை அரசுக் கவுன்சில் எனவும் அழைக்கப்பட்டது. தலைமை ஆளுநா் சட்டமன்றங்களுக்குத் தலைமை வகிக்கும் பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டாா். எனவே அவா் அதன் உறுப்பினராக கருதப்படவில்லை. ஆனால் சட்டமியற்றும் பணியில் ஒருங்கிணைந்தவராகக் கருதப்பட்டாா். சட்ட பேரவையிலும் அரசுக் கவுன்சிலிலு ஆளுநச்தரப்பினரின் பெரும்பான்மையைச் சட்டபூா்வமாக நிலைநாட்டுவது கைவிடப்பட்டது. தோ்ந்தெடுக்கப்பட்டோரே பெரும்பான்மையினராக இருக்க வகை செய்யப்பட்டது.

**சட்டப்பேரவை**

1. 1. அதன் மொத்த உறுப்பினராக 145 போ் அவருள் 104 போ் தோ்ந்தெடுக்கப்பட்டனா். மீதி 41 போ் நியமன உறுப்பினா் அவருள் 26 போ் அரசுப் பதவியாளா். மாநிலங்களில் மக்கள் தொகைக்கு

ஏற்ப தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் தொகை பிரித்துகொடுக்கப்பட்டது. அதுவும் வகுப்புவாரி அடிப்படையில் முஸ்லீம், சீக்கியர், ஐரோப்பியர் எனப் பிரிக்கா்ாட்டது.

2. இதன் ஆயட்காலம் மூன்று ஆண்டுகள். ஆனால் அதைக் கூட்டவோ குறைக்கவோ தலைமை ஆளுநர் அதிகாரம் பெற்றிருந்தார்.
3. முதல் நான்காண்டுகளுக்கு தலைமை ஆளுநரால் நியமிக்கப்படும் நபர் ஒருவர் சட்டப்பேரவைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவார். பின்னர் பேரவையே தலைமை ஆளுநர் ஒப்புதலின் பேரில் தன் தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.
4. மத்திய அரசு அதிகாரப் பட்டியலிலி உள்ள அனைத்து விஷயங்கள் பற்றித் தீர்மானம் கொண்டு வரலாம். பாதுகாப்பு அயல்உறவு, திருச்சபை சம்பந்தமானவை, பொதுக்கடன் ஆகியவை பற்றிய மசோதாக்களை தலைமை ஆளுநரின் முன் அனுமதியின்றி கொண்டுவர முடியாது. அதுபோன்று மாநில அதிகாரப்பட்டியலில் உள்ள விஷயங்கள், மாநில அரசு நிறைவேற்றய சட்டங்கள், மற்றும் அவசரச் சட்டம் பற்றிய மசோதாக்களுக்கும் முன் அனுமதி தேவை.
5. நிதிநிலை அறிக்கை சட்டப் பேரவையின் முன் வவாதத்திற்கு வைக்கப்பட வேண்டும். அதில் சில குறிப்பிடப்பட்ட முக்கிய செலவு இனங்கள் பற்றி வாக்கெடுப்பு நடத்த சபைக்கு உரிமை இல்லை. கிட்டத்தட்ட அறுபது சதவீத தொகை இவ்வாறு சபை வாக்கெடுப்பிற்கு „அப்பாற்பட்டதாகக் கருதப்பட்டது. மீதயுள்ள நாற்பது சதவீத செலவு இனங்கள் முழு உரிமையளிக்கப்பட்டது. அதை தள்ளுபடி செய்யவோ குறைக்கவோ அதிகாரம் அளிக்கப்பட்டது.ஆனால் அத்தொகைகளை அதிகரிக்கும்" உரிமை மறுக்கப்பட்டது. சட்டப்பேரவை நிராகரித்த இனங்களை நாட்டின் நலன்களுக்கு அவசியமானவை எனத் தலையை ஆளுநர் குறிப்பிட்டு அச்செலவினை அனுமதிக்கலாம்.
6. பொதுநலன் சம்பந்தப்பட்ட எந்தக் கேள்விகளும் கேட்கப்படலாம். ஒத்திவைப்பு த ீர்மானங்கள் கொண்டுவரப்படலாம். ஆனால் தலைமை ஆளுநர் மற்றும் அவரது நிர்வாகக்கவுன்சில் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர முடியாது.

**அரசுக் கவுன்சில்**

1. இதன் மொத்த உறுப்பினர் 60. அவருள் 33 பேர் தேர்ந்தெடுக்கப்படுவர். இங்கும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ முறையே கடைப்பிடிக்கப்பட்டது.நியமன உறுப்பினர் 27ல் 17 பேர்

அரசுப் பதவியாளர். இதன் ஆயுள் காலம் 5 ஆண்டு. இதன் தலைவர் தலைமை ஆளுநரால் நியமிக்கப்படுவர்.

2. ஏந்த மசோதாவையும் முதலில் இங்கு கொண்டு வர முடியாது.
3. இச்சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை பெற அதிகப்படியான தகுதி நிர்ணயிக்கப்பட்டது.

**இரு சபைகளுக்குமிடையே உள்ள உறவுகள்**

எந்த மசோதாவும் சட்டமாக வேண்டுமானால் இரு சபையிலும் நிறைவேற வேண்டம். ஆனால் மசோதாக்கள் முதலில் சட்டபேரவையில்தான் கொண்டுவரப்பட வேண்டும். பண மசோதாக்கள் பற்றிய இறுதி அதிகாரம் சட்டபேரவையிடம் தான் இருந்தது. இருசபைகளிடையே கருத்து மோதல் ஏற்பட்டால் கூட்டுக்குழு, கூட்டு மாநாடு, கூட்டுக்கூட்டம் ஆகியவற்றின் ஒன்றுக்கு தலைமை ஆளுநர் ஏற்பாடு செய்து முட்டுக்கட்டைகளை நீக்கமுயலவேண்டும். பொதுவில் சட்டப் பேரவை மக்கள் பிரதிநிதித்துவ மன்றமாகவும் அரசுக் கவுன்சில் சில குறிப்பிட்ட உயர்வர்க்கத்தினரின் பிரதிநிதித்துவ மன்றமாகவும் செயல்பட்டது.

**மத்திய மாநில அதிகாரப் பங்கீடு**

1919ம் ஆண ்டு சட்டம் மாநில அளவில் குறிப்பிட்ட சில துறைகளில் சுய ஆட்சித் திட்டத்தைக் கொண்டு வந்ததால் மாநிலங்களுக்குரிய அதிகாரங்கள் எவை என்பது திட்டமாக வரையறுக்கப்பட வேண்டியதாயிற்று. எனவே இச்சட்டமானது மத்திய மாநில அதிகாரங்கள் எவை என தனித்தனிப் பட்டியல் இட்டுக்காட்டியது.

**மத்திய அரசு அதிகாரங்கள்**: மொத்தம ் 47. அவைகளுக்குள் பாதுகாப்பு, அயல்நாடு, நாணயம ் வெளியிடுதல், செய்திப் போக்குவரத்து, கப்பல் வாணிபம், சுங்கவரி, உப்பு, வருமானவரி, பொதுக்கடன் போன்ற துறைகள் அடங்கியிருந்தன.

**மாநில அதிகாரங்கள** : மொத்தம் 50 அவைகளுள் ஸ்தல சுய ஆட்சி, பொதுசுகாதாரம், மருத்துவ நிர்வாகம், கல்வி, பொதுப்பணி, குடிநீர், நீர்ப்பாசனம், பஞ்ச நிவாரணம், காடுகள் கூட்டுறவு சட்டம், ஒழுங்கு போன்றவை.

**மாநில அரசு இரட்டையாட்சி** : 1919ம் ஆண்டு சட்டம் மாநிலங்களில் ஓரளவு பொறுப்பாட்சியைப் புகுத்தியது. மாநில அதிகாரங்கள் அனைத்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளடங்கிய சட்டசபைக்கு அளிக்கப்படவில்லை. மாறாக, முக்கிய அதிகாரங்கள் ஆளுநராலும் அவரது கவுன்சிலர்களாலும் நிர்வாகிக்கப்பட்டது. இவ்வாறு அதிகாரத்துறைகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஆறுடீவறு நிர்வாக மையங்களால் நிர்வகிக்கப்படும் முறை, இரட்டையாட்சி, எனப்படும். இம்முறை வங்காளம், பம ் பாய்,

சென்னை, பீஹார், ஒரிசா ஐக்கிய மாநிலங்களில் பர்மா, மத்திய மாநிலங்கள் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் கொண்டுவரப்பட்டது.பின்னர் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்திற்கும் இம்முறை விஸ்தரிக்கப்பட்டது. இங்கு மாநில அதிகாரங்கள் „மாற்றப்பட்டத்துறைகள்‟. ஒதுக்கப்பட்ட துறைகள் என இரண்டாகப் பிரிக்கப்பட்டன.

மாற்றப்பட்ட துறைகள்: தலசுய ஆட்சி, பொது சுகாதாரம் மருத்துவம், கல்வி, பொதுப்பணி, மீன்துறை, வேளாண்மை, கைத்தொழில், கூட்டுறவு போன்றவை மாற்றப்பட்ட துறைகள், இவற்றை ஆளுநர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சட்டசபைக்குப் பொறுப்பான அமைச்சர்கள் உதவியுடன் நிர்வகிப்பார்.

**ஒதுக ்கப்பட்ட துறைகள்**: வருவாய், பஞ்ச நிவாரணம், நீர்ப்பாசனம், காடுகள், நீதி, போலீஸ், சிறை, நிதி, ஆலைகள் தொழில் பிரச்சினைகள் போன்றவை ஒதுக்கப்பட்ட துறைகள் இவை ஆளுநரால் அவரது கவுன்சிலர்கள் உதவியுடன் நிர்வகிக்கப்படும்.

**அமைச்சர் குழு** : அமைச்சர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்டு அவர் விரும்பும் வரை பதவியில் நீடிப்பார் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் நடைமுறையில் சட்டசபையில் பெரும்பான்மை கட்சியைச் சேர்ந்தவர்களே அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனா. பெரும்பான்மையினர் ஆதரவை இழந்தவுடன் பதவியயையும் இழந்தனர். அரசு அலுவலர் எவரும் அமைச்சராக நியமிக்கப்படகூடாது. பொதுவில் அமைச்சர்கள் தரும் ஆலோசனைப்படி ஆளுநர் கருத்திற்கு அசைவாக அமைச்சர்கள் செயல்படவில்லை என்றால் அவர்கள் பதவி விலக வேண்டும். அல்லது விலக்கப்பட நேரிடும். அதே சமயத்தில் அமைச்சர்கள் ஊதியம் சட்டசபை வாக்களிப்பிற்குட்பட்டது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் அவர்கள் பதவியிறக்கப்படும் வாய்ப்புமிருந்தது. மாற்றப்பட்ட துறைகளையே அமைச்சர்கள் நிர்வகித்தனர். பொதுவில் மூவர்கொண்ட அமைச்சர் குழுக்களே மாநிலங்களில் அமைக்கப்பட்டன.

**நிர்வாகக் கவுன்சிலர்கள்** : ஒதுக்கப்பட்ட துறைகளை ஆளுநரால் நியமிக்கப்படும் கவுன்சிலர்கள் நிர்வகித்தனர். சென்னை, பம்பாய், வங்காளம், மாநிலங்களில் நான்கு கவுன்சிலர்களும் பிறவற்றில் இரு கவுன்சிலர்களும ் நியமிக்கப்பட்டனர். அவருள் பாதிப்பேர் இந்தியர்களாயிருந்தனர். சட்டசபையில் தங்கள் பதவி காரணமாக உறுப்பினர்களாயிருந்தாலும் சட்டசபைக்குப் பொறுப்பானவர்களல்லர். நும்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மூலம் அவர்களை விலக்க முடியாது. ஆளுநருக்கும் இங்கிலாந்தில் உள்ள இந்தியா அமைச்சருக்குமே பொறுப்பானவர்கள். இவர்கள் பதவிக் காலம் ஐந்து ஆண்டு

**ஆளுநர்:** மாநிலத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான ஆளுநர் தலைமை ஆளுநருக்கும் அவர் வழியாக இந்திய அமைச்சருக்குமே

பொறுப்பானவர்கள். அதைச்சர்கள் மூலமாக சில துறைகளையும் கவுன்சிலர்கள் மூலமாக பிற துறைகளையும்" நிர்வகிப்பர், அமைச்சர்கள் மற்றும் கவுன்சிலர்கள் முடிவினை ஏற்றுக்கொள்ள மறுக்கும் உரிமை அவருக்கிருந்தது. நாட்டு நலன் பாதுகாப்பிற்கு எந்தது என அவர் உறுதியுடன் கூறினால் எந்த தீர்மானத்தையும் தள்ளுபடி செய்யும் அதிகாரமிருந்தது. அவரது அனுமதியின்றி எந்த பண மசோதாவும் சட்ட சபையினுள் வரமுடியாது. நிதிநிலை அறிக்கை ஆளுநரால் தயாரிக்கப்படும். சட்டசபை தள்ளுபடி செய்த பண மசோதாக்களை மூட அமுல்படுத்தும் விசேட அதிகாரம் பெற்றவர் சட்டமன்றங்களைக் கூட்டவும், ஒத்திப்போடவும், கலைக்கவும், அதிகாரம் பெற்றிருந்தார். அவசர நிலை பிரகடனம் செய்து எல்லாத்துறைப் பொறுப்புக்களையும் நாமே ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் படைத்தவர்.

**மாநில சட்டமன்றங்கள்** : மாநில சட்டமன்றங்களில் எழுபது சதவீதத்தினர் தேர்தெடுக்கப்பட்டனர். மீதமுள்ள முப்பது சதவீதத்தினர் நியமிக்கப்பட்டனர். அவருள் பதவி சார்ந்தோரும் சாராதோரும் உண்டு. ஆளுநரின் கவுன்சிலர்கள் பதவி காரணமாக சட்டசபையில் அமரும் உரிமை பெற்றிருந்தனர். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் அவ்வகுப்பினரால் சிலர் ஆளுநரால் நியமனம் பெறுவர். சட்டமன்ற ஆயுள் மூன்றாண்டு காலம். ஆளுநர் விரும்பினால் மேலும் ஓராண்டு நீடிக்கலாம். அமைச்சர்கள் சட்டமன்றத்திற்கு பொறுப்பானவர்கள். எனவே சட்டசபையினரில் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றவர்களையே அமைச்சர்களாய் நியமிக்கும் வழக்கம் ஏற்ப்பட்டது. மாற்றப்பட்ட துறைகள் பற்றிய நிர்வாகங்களை விவாதிக்கும் அவைப்பற்றி வினா எழுப்பும் மசோதாக்கள் கொண்டு வரவும் உறுப்பினர்கள் உரிமை பெற்றிருந்தனர். னோல் பண மசோதாக்களுக்கு ஆளுநரின் அனுமதி தேவை. சட்டசபைத் தலைவரை முதல் நான்காண்டு காலத்திற்கு ஆளுநரே நியமிப்பார். பின்னர் அந்த உரிமை பெறுவர்.

தோ ் தல் வாக்குரிமை

1919ம் ஆண்டு சட்டப்படி பெரும்பான்மை சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும் வாக்காளர் எண்ணிக்கை மிக்க குறைவாக இருந்தது. மொத்த மக்கள் தொகையில் 1.5 சதவீத மக்களே வாக்குரிமை பெற்றிருந்தனர்.

சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டிருந்ததைப்போல் வாக்குரிமை பெற்றவரும் அவர் தம் தகுதியும் மாறுபட்டிருந்தது. கிராம பகுதிகளில் ரூ.10 முதல் 50 வரை வரி செலுத்துவோர் வாக்குரிமை பெற்றனர். நகர்ப்புறங்களில் வருமானவரி செலுத்தும் அளவிற்கு ஆண்டிற்குரூ. 200 வருமானமுள்ளவர்களும்

வீட்டுவரியாக ரூ.36 பெறக்கூடியவர்களும் நகராட்சிக்கு ரூ. 8 வரி செலுத்துவோரும் வாக்குரிமை பெற்றனர். தொடக்கத்தில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படவில்லை.

1909ம் ஆண்டு சட்டப்படி முஸ்லீம்களுக்கு கொடுக்கப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும், சீக்கியர்களுக்கும், ஆங்கிலோ இந்தியர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

நிலவுரிமையாளர், பல்கலைகழகம், வர்த்தகச் சங்கம் ஆகியவற்றிற்கும் பிரதிநிதித்துவம் வழங்க தனித் தொகுதிகள் அமைக்கப்பட்டன.

**இந்திய சிவில் சர்வீஸ்:** இந்திய சிவில் சர்வீஸைச் சார்ந்த அதிகாரிகள் உரிமை நலன்களைப் பாதுகாக்க சில ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவர்களை நியமனம் செய்த உயர் அதிகாரிகளின் தரத்திற்கு குறைந்தவர்களால் அவர்களைப் பதவி நீக்கம் செய்ய முடியாது என விதிக்கப்பட்டது. அப்படி நீக்கம் செய்யப்பட்டவர்களை இந்திய அமைச்சர் மீண்டும் நியமிக்கும் அதிகாரம் பெற்றார். ஆளுநரின் அனுமதியின்றி சட்டமன்ற உறுப்பினர்கள் சிவில் சர்வீஸ் அதிகாரிகளைப் பாதிக்கும் எந்த சட்டத்தையும் நிறைவேற்றுவதியிலிருந்து தடை செய்யப்பட்டனர். புதிய அரசியலமைப்பு சூழ்நிலையில் செயல்படுவது சிரமமானது என உணரும் அதிகாரிகளே ஓய்வு பெற ்று உரிய பென்ஷன் பெற வழிவகை செய்யப்பட்டது

**திறனாய்வு : நிறைகள் :**

நல்லதோ கெட்டதோ, 1919ம் ஆண்டு சீர்திருத்தச் சட்டம் இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் முன்னேற்றமானதொரு கட்டத்தைச் சுட்டிக்காட்டுவதாய் அமைந்துள்ளது. என்பதில் இருவித கருத்துகக்களுக்கு இடமருக்கமுடியாது. இந்தியாவின் மகா சாசனம் எனப்போற்றப்பட்ட மாண்டேகுவின் ஆகஸ்ட் அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட இச்சட்டத்தின் பல முன்னேற்றமான அம்சங்கள் பளிச்சிடுகின்றன.

முதலாவதாக, 60 உறுப்பினர்களைக் கொண்ட 1909ம் ஆண ்டு மத்திய சட்டசபை இப்போது இருசபைகளையும் 205 உறுப்பினர்களையும் கொண்ட மாபெரும் மன்றமாக வளர்ச்சி அடைந்துள்ளது.

இரண்டாவதாக, அதிகார வர்க்கத்தினரின் பெரும்பான்மையை சட்டபூர்வமாக நிலைநாட்டும் வழக்கம் மாறி இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் தெளிவான பெரும்பான்மைக்கு வரை செய்யப்பட்டது. சட்டமன்றத் தலைமைப் பொறுப்பிலிருந்து தலைமை ஆளுநர் விடுவிக்கப்பட்டர்.

மூன்றாவதாக, சட்டத்தின் நோக்கங்களுள் ஒன்றான இந்தியர்களை ஆட்சித்துறையின் அனைத்துப் பிரிவுகளிலும் பங்கேற்குமாறு செய்தல் என்ற

கருத்துக்கேற்ப மூன்று இந்தியர்கள் தலைமை ஆளுநர் நிர்வாகக் கவுன்சிலில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. மாநில ஆளுநர் கவுன்சில்களிலும் பாதிப்பேர் இந்தியர்களாக இருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டது.

நான்காவதாக, மத்திய சட்டமன்றங்களில் சுதந்திரமான விவாதங்கள் நடத்தி, வினாக்கள் எழுப்பி மசோதா கொண்டுவர வாய்ப்புகள் கொடுக்கப்பட்டது. பாராளுமன்ற ஜனநாயக முறைக்கு அடிப்படையிட்டது. அதன் மூலம் அரசுக்கொள்கையில் மக்கள் கருத்துக்களின் செல்வாக்கு பிரதிபலிக்கத் தொடங்கியது.

ஐந்தாவதாக, மாநிலங்களுக்கும் மத்திய அரசிற்குமிடையில் மோதல் ஏற்படாதவாறு தடுத்து சுமூக உறவு நிலவச் செய்யவும் வகையில் அதிகாரப் பங்கீடு செய்யப்பட்டது.

ஆறாவதாக, படிப்படியாக பொறுப்பாட்சி வழங்கிய சுய ஆட்சி நிறுவனங்களை வளர்ச்சியுறச்செய்வோம் எனச் சட்டத்தின் முன்னுரையில் கூறப்பட்டதுபோல் மாநிலங்களில் மாற்றப்பட்ட அதிகாரத்துறைகளில் மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

ஏழாவதாக, சட்டசபைக்கு பொறுப்பான அமைச்சர் குழுவை அமைக்க வழிவகை செய்தது மூலம் பொறுப்பாட்சிக்கு வழிகோலப்பட்டது. முதன் முறையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அமைச்சர்கள் என்ற அதிகார உரிமையோடு நிர்வாகப் பொறுப்பேற்றது. உண்மையிலே முன்னேற்றமான அம்சம்தான்.

இறுதியாக வாக்குரிமையைச் சற்றுப் பரவலாக்கி நேரடித் தேர்தலை உறுதிப்படுத்தியது மக்களாட்சி முறைக் கருத்துக்களை வலுப்படுத்தியது.

**குறைகள் :**

எனினும் இச்சீர்திருத்தம் தேசிய வாதிகளுக்கு சிறிதும் மனநிறைவு அளிக்கவில்லை. இந்திய தேசிய காங்கிரஸ் அச்சீர்திருத்ததை, “போதுமானதுமில்லை: மனநிறைவு அளிக்கவில்லை. ஏமாற்றமளிப்பதாயுள்ளது.” எனக் கண்டம் செய்தது. இத்தகைய மோசமான சட்டத்தை சீர்திருத்தம் என்ற பெயரில் கொண்டு வருவது பிரிட்டிஷாருக்கு இழிவு என எண்ணி அதை ஏற்றுக்கொள்வது இந்தியர்களுக்கு அதைவிட இழிவு என அன்னிபெசண்ட் அம்மையார் குறிப்பிட்டது சற்று பொறுத்தமான விமர்சனம். ஏனெனில் சட்டக்குறைபாடுகள் பல இருந்தன.

முதலாவதாக, சட்டத்தின் முன்னுரிமையில் இந்தியா பிரிட்டிஷ் பேரரசின் ஒருங்கிணைந்த பகுதி எனத் தெளிவாக கூறியிருப்பது எந்தத் தேசியவாதிக்கும் ஏற்புடையதாக இருக்கமுடியாது

இரண்டாவதாக, உலகப்போர் சமயத்தில் பிரிட்டிஷ் அரசியல்வாதிகளின் பேச்சு போர்முடிவுற்றதும் இந்தியாவிற்கு டொமினியன்

அந்தஸ்து வழங்கப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. ஆனால் 1919ம் ஆண்டுச் சட்டம் அத்தகைய அரசியலமைப்பு அந்தஸ்தை அளிக்காததால் இந்தியர் ஏமாற்றமடைந்தனர்.

மூன்றாவதாக, இச்சட்டம் ஜாலிநன் வாலாபாக் படுகொலை என்ற பயங்கர ரத்த வெள்ளத்தின் நடுவிலும் ரௌலட் சட்டமென்ற கொடிய அடக்குமுறைக்களை தேசியவாதிகளை சித்திரவதை செய்த நேரத்திலும் கொண்டுவரப்பட்டது. ரத்தக்கறைப்படிந்த இந்த சீர்திருத்தம் எவ்விதப் பயனையும் அளிக்காது என்ற மக்கள் ஏற்கெனவே முடிவு கட்டி விட்டனா

நான்காவதாக, மத்திய அரசின் தலைமை நிர்வாகம் மத்திய சட்டசபைக்குப் பொறுப்பாகாத நிலையில் அதன் உறுப்பினா் எண்ணிக்கையை மட்டும் வெறுமனே அதிகரித்தது. அர்த்தமற்ற செயலாகக் கருதப்பட்டது. உண்மையில் இச்சட்டம் மத்தியில் தலைமை ஆளுநரின் வரம்பிற்குட்படா வல்லாட்சியைத்தான் நிலைநாட்டியது. ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கும் ஏகாதிபத்திய ஆட்சி பீடத்திற்கு தூபம் காட்டிக்கொண்டிப்பவருக்கு அருகில் உள்ள மக்கள் பிரதிநிதிகளின் ஆலோசனைகளுக்கு செவிமடுக்க ஆசையோ, அவகாசமோ, இல்லாமற் போனது ஆச்சரியமில்லை. அவர்களின் ஆலோசனைகளுக்கோ, ஆட்சேபனைகளுக்கோ ஆரவாரங்களுக்கோ, ஆத்திரமிகும் கூக்குரல்களுக்கோ சிறிதும் அசைத்து கொடுக்காத உறுதியாக நிர்வாகத் தலைமையைத்தான் இச்சட்டம் உருவாக்கியது. சட்டசபைப் பெரும்பான்மையை அலட்சியம் செய்தல், தள்ளுபடி செய்த மசோதாவை கூட செல்லுபடியாக்குதல் நாட்டின் நலனுக்கும் பாதுகாப்பிற்கும் என்ற போர்வையில் எந்த நடவடிக்கையும் எடுத்தல், நம்பிக்கை இல்லாத தீர்மானக் கணைகள் துளைக்காத சட்டபூர்வ பாதுகாப்பு கவசம், பட்ஜெட்டில் பாதிக்கும் மேற்பட்ட தொகை மீது முழு ஆதிக்கம் அவசர நிலைப் பிரகடனம் செய்யும் உரிமை போன்ற முன்னெச்சரிக்கை அதிகாரங்கள் அவரை முழு சர்வாதிகாரியாக மாற றிவிட்டன..

ஐந்தாவதாக, நிர்வாகம் பொறுப்புகளில் இந்தியர்களைப் பங்கு பெறச் செய்தல் என்ற கோட்பாட்டிற்கிணங்க நிர்வாகக் கவுன்சில்களில் இந்தியர்கள் நியமனம் பெற்றது உண்மமதான். ஆனால் அவர்கள் அரசு ஆதரவாளர்களாக,"ஆம்மா சாமிகளாக" இருந்தனரேயன்றி நாட்டு மக்களின் விருப்பு வெறுப்புக்களை பிரதிபலிப்பவர்களாக இல்லைஇ மாற்றுக்றையா அரசு விசுவாசிகளே கவுன்சிலர்களாக நியமனம் பெற்றனர். ஆறாவதாக, இந்திய சமுதாயத்தில் பிளவு மனப்பான்மைகளுக்கு வித்திட்ட வகுப்புலாரிப் பிரதிநிதித்துவ முறை மேலும் விஸ்தரிக்கப்பட்டது. சீக்கியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் தனித்தொகுதி ஒதுக்கப்பட்டது.

ஏழாவதாக, இரட்டையாட்சி கொள்கையளவில் பொது நிர்வாகக் கருத்துகளுக்கு முரணானது: செயலளவில் குழப்பங்களுக்கும் வீண் கால தாமதங்களுக்கும் வழிவகுப்பது. ஆதனால் பல நிர்வாக இடையூறுகள் தோன்றின.

1. .முதலில் இத்திட்டம் சிறந்தொரு நிர்வாக அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத ்துடன் அமைக்கப்படவில்லை. மேலதிகாரம் தங்கள் கையில் இருக்க வேண்டும். என மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் தீட்டப்பட்ட திட்டம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே இத்திட்டத்தின் முதல் பலி நிர்வாகத்திறன்.
2. ஒருங்கிணைந்த நிர்வாகம் தான் திறமையாக உறுதியாக இயங்கும் என்பது அரசியல் அரிச்சுவடிப் பாடமாகும். இரட்டையாட்சியோ ஒருங்கிணைந்த நிர்வாகத்தை உருக்குலைத்தது.
3. துறைகள் அறிவியல் கண்ணோட்டத்துடன் பிரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பிரிக்க கூடாத ஒரு துறை இரண்டாக பிரிக்கப்பட்டு இரு வேறு நபர்களால் நிர்வாகிக்கப்பட்டது. எனவேதான் சென்னை அமைச்சர் k.v. செட்டி தாம் நீர்ப்பாசனத்துறையற்ற வேளாண்மைததுறை அமைச்சர் என குறபைட்டுக் கொணடார். ஆலைகள், மின்வாரம், சுரங்கம் தொழிலாளர் ஆகியவற்றின் மீது அதிகாரமில்லாத தொழில் அமைச்சரை இச்சட்டம் உருவாக்கியது. கல்வி மாற்றப்பட்ட துறையாயினும் ஐரோப்பியக் கல்வி ஒதுக்கப்பட்டதுறைக்கு கொடுக்கப்பட்டது.
4. நிதி ஒதுக்குவதிலும் பாரபட்சம் காட்டப்பட்டது. ஒதுக்கப்பட்ட துறைகளுக்குப் போக மீதமே மாற்றப்பட்ட துறைகளுக்கு அளிக்கப்பட்டது. அதே சமயத்தில் தல வளர்ச்சி துறைகள் அனைத்தும் மாற்றப்பட்ட துறைகளில் தான் அடங்கியிருந்தன.
5. அமைச்சர்கள் இரு எஜமானர்களுக்குப் பணிபுரியும் பரிதாபநிலைக்குத் தள்ளப்பட்டனர். ஒருபுறம் சட்டசபையின் நம்பிக்கையில்லாதத் தீர்மானத்திற்கு அஞ்சியும் மற்றொரு புறம் ஆளுநரின் தயவினை எதிர் நோக்கியும் வாழ வேண்டியவர்களாயினர்.
6. தலைமை ஆளுநரைப் போல் மாநில ஆளுநருக்கும் சிறப்பதிகாரங்களுக்கும் தள்ளுபடி அதிகாரங்களும், தன்னிச்சையாய் செயல்படும் தனி அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருந்தது. மக்களாட்சி முறையை எள்ளி நகையாடுவது போலிருந்தது. சட்டசபையினருக்கு கட்டுபடாத நிர்வாகம் சுய ஆட்சியுமில்லை, பொறுப்பாட்சியுமில்லை உண்மையில் எதேச்சதிகார ஆட்சியாகவே இருந்தது.

**சுயமதிபிட்டு கேள்விகள்**

- சுயராஜ்யம் கட்சின் கொள்கைகளை விவரி
- செல்ம்ஸ்ஃபோர்ட்– இயக்கங்கள் ரூல் ஹோம்
- மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள்.

**அலகு - IV**

**வெகுஜன இயக்கங்களின் சகாப்தம் :காந்தியின் ஆரம்பகால அரசியல் நடவடிக்கைகள் – ரவுலட் சத்தியாகிரகம் - ஒத்துழையாமை இயக்கம் – ஸ்வராஜ் ஜிஸ்ட்கள் - சைமன் கமிஷன் - வட்ட மேசை மாநாடுகள் - சிவில் ஒத்துழையாமை இயக்கம் மற்றும் அடக்குமுறை - இந்திய அரசு சட்டம், 1935மற்றும் மாகாண அமைச்சகங்கள் - சோசலிச சிந்தனைகளின் வளர்ச்சி காங்கிரஸ் மற்றும் உலக விவகாரங்கள் - வகுப்புவாதத்தின் வளர்ச்சி.**

நோக்கங்கள்

- ரவுலட் சட்டம், சத்தியாகிரகம்
- ஒத்துழையாமை இயக்கம்
- இந்திய அரசு சட்டயங்கள்

## காந்திஜி மற்றும் வெகுஜன இயக்கம

மகாத்மா காந்தி குஜராத்தில் உள்ள போர்பந்தரில் 2 அக்டோபர் 1869 இல் பிறந்தார். அவர் தனது பள்ளிப் படிப்பை ராஜ்கோட்டில் முடித்தார், அங்கு அவரது தந்தை ராஜ்கோட்டின் உள்ளூர் ஆட்சியாளருக்கு ஆலோசகராக ணியாற்றினார். இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தபோதிலும், 500 க்கும் மேற்பட்ட ராஜ்யங்கள், சமஸ்தானங்கள் மற்றும் மாநிலங்கள் சுயாட்சிக்கு அனுமதிக்கப்பட்டன, இருப்பினும், அவை பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டு மானியம் செலுத்தி வந்தன. இந்த மாநிலங்கள் சமஸ்தானங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ராஜ்கோட் ஒரு சமஸ்தானமாக இருந்தது.

1888 இல், காந்தி இங்கிலாந்து சென்றார், அங்கு அவர் சட்டத்தில் பட்டம் பெற்றார். சட்டப் பட்டப்படிப்பை முடித்த பிறகு, தென்னாப்பிரிக்காவில் உள்ள ஒரு இந்திய தொழிலதிபரான தாதா அப்துல்லாவிடம், சட்ட ஆலோசகராக சேரும் வாய்ப்பை ஏற்க காந்தி முடிவு செய்தார். காந்தி தென்னாப்பிரிக்காவில் இருபது ஆண்டுகளுக்கு மேல் தங்கியிருந்தார். முதல் வகுப்பு ரயில் பெட்டியிலிருந்து தூக்கி எறியப்பட்டபோது காந்தி ஐரோப்பிய இனவெறியை எதிர்த்துப் போராடத் துணிந்தார். இந்த சம்பவம் ஒரு வலுவான அரசியல் விழிப்புணர்வை

ஏற்படுத்தியது, இது அவரை இந்தியாவிற்கு திரும்பி வந்து போராடுவதற்கான உந்துதலை ஏற்படுத்தியது.

1915 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், மகாத்மா காந்தி இந்தியா திரும்பினார். அவர் இந்தியா திரும்பிய பிறகு, 1931 இல் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் பங்கேற்பதற்காக அவர் ஒருமுறை மட்டுமே நாட்டை விட்டு வெளியேறியதாக அறியப்படுகிறது. கோபால கிருஷ்ண கோகலேயின் ஆலோசனையின் பேரில் அவர் இந்திய நிலைமைகளை நன்கு அறிந்து கொள்ள இந்தியா முழுவதும் விரிவாகப் பயணம் செய்தார். கோகலேவை தனது அரசியல் வழிகாட்டியாகக் கருதிய அவர், அடிக்கடி அவரிடம் ஆலோசனை பெற்றார். அடுத்த சில ஆண்டுகளாக, குஜராத்தின் கேடா மற்றும் பீகாரின் சம்பராண் போன்ற பல்வேறு உள்ளூர் போராட்டங்களில் காந்தி ஈடுபட்டார். இந்த உள்ளூர் போராட்டங்கள் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய அடையாளமாக இருந்தன, ஏனெனில் அவை காந்தியால் தொடங்கப்பட்ட முதல் சத்தியாக்கிரகப் போராட்டமாகும். சம்பாரண் சத்தியாகிரகம் முதல் புரட்சி என்றாலும், சத்தியாகிரகம் என்ற சொல் முதன்முதலில் 1919 ரவுலட் போராட்டத்தின்போதுதான் பயன்படுத்தப்பட்டது.

படிப்படியாக,பீகாரில் சம்பரானில் நடந்த போராட்டம் மற்றும் அகமதாபாத் ஜவுளி ஆலைகளில் நடந்த வேலைநிறுத்தப்போராட்டம் போன்ற பல உள்ளூர் போராட்டங்களுக்கு அவர் தலைமை தாங்கினார். ஆங்கிலேயர்களுக்கு எதிராக அகிம்சை கொள்கையின் அடிப்படையில் காந்தியால் தொடங்கப்பட்ட முதல் சத்தியாகிரகப் போராட்டங்கள் என்பதால், இந்த உள்ளூர் போராட்டங்கள் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய அடையாளமாக இருந்தன. அவரது தலைமை அவருக்கு பரவலான மரியாதையையும் மக்களின் விசுவாசமான ஆதரவையும் பெற்றது, மேலும் அவர் தேசியவாத இயக்கத்தின் கவர்ச்சியான தலைவராக தேசியவாத அரசியலின் தலைமைக்கு விரைவாக உயர்ந்தார்.

இந்தியாவின் மிகவும் பிரபலமான கவிஞரும் எழுத்தாளருமான ரவீந்திரநாத் தாகூர் அவருக்கு மகாத்மா அல்லது “பெரிய ஆன்மா“ என்ற பட்டத்தை வழங்கினார். இந்திய சுதந்திரத்திற்காக பல தலைவர்கள் போராடினாலும், அவர்களில் மகாத்மா காந்தியின் பங்கு

தனித்து நிற்கிறது. அவரது வருகை தேசியவாத இயக்கத்தை வலுப்படுத்தியது மற்றும் அதை ஒரு வெகுஜன இயக்கமாக மாற்றியது.

**சம்பாரன் சத்தியாகிரகம்**

1917 இல் சம்பாரணில் சத்தியாகிரகம் நடந்தது. ஆங்கிலேயருக்கு எதிரான காந்தியின் இயக்கத்தில் இதுவே முதல் பெரிய போராட்டம் ஆகும். இது சத்தியாகிரகம் என்று அறியப்பட்டாலும், இந்த வார்த்தை முதன்முதலில் 1919 ரவுலட் போராட்டத்தின் போது பயன்படுத்தப்பட்டது. சம்பாரண் சத்தியாகிரகம் பீகாரில் உள்ள சம்பாரண் மாவட்டத்தின் ஏழை விவசாயிகளுக்கு ஆதரவாக இருந்தது. இண்டிகோ போன்ற பணப்பயிர்களை வளர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஐரோப்பிய தோட்டக்காரர்களால் நிர்ணயிக்கப்பட்ட மிகக் குறைந்த விலையில் பயிர் வாங்கப்பட்டது. மேலும், ஆங்கிலேயர்களும் விவசாயிகளுக்கு வரி விதிக்கத் தொடங்கினர், இது அவர்களை விளிம்பிற்குத் தள்ளியது. காந்தியைப் பற்றி கேள்விப்பட்ட விவசாயிகள், ஆங்கிலேயர்களுக்கு எதிராக தங்களுக்கு உதவுவதற்காக அவரைத் தங்கள் மாவட்டத்திற்கு அழைத்தனர். காந்தி ராஜேந்திர பிரசாத், ஜே.பி. கிருபாலினி, மகாதேவ் தேசாய் மற்றும் மசார்-உல்-ஹக் போன்ற இளம் தலைவர்களுடன் சம்பாரணுக்கு வந்தார். ஏழை இண்டிகோ விவசாயிகளின் நிலை குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று அவர் கோரினார். காந்தி சம்பாரனை விட்டு வெளியேற உத்தரவிடப்பட்டார், ஆனால் அவர் மறுத்துவிட்டார். அவரது கோரிக்கைகளை அரசு பரிசீலித்து, விவசாயிகளின் நிலைமைகள் மற்றும் அவர்களின் பிரச்சனைகளைக் கண்டறிய ஓர குழுவை நியமித்தது. காந்தியும் கமிட்டியில் உறுப்பினரானார். குழு அறிக்கையின்படி, விவசாயிகள் ஐரோப்பிய தோட்டக்காரர்களின் பிடியில் இருந்து விடுபட்டனர். காந்தி வெகுஜன ஈர்ப்பு கொண்ட தலைவராக உருவெடுத்தார்.

**கேடா**

இதேபோல், குஜராத்தின் கேடாவில், சம்பரானில் உள்ள விவசாயிகளை விட விவசாயிகள் சற்று சிறப்பாக இருந்தனர். ஆனால், பஞ்சத்தால் விவசாயப் பொருளாதாரம் அழிந்தது. மக்களுக்குத் தாங்களே உணவளிக்க முடியாத சூழ்நிலையில், பிரிட்டிஷ் அரசாங்கம் 23 சதவீத வரியை உயர்த்தியது, அது அதே ஆண்டில் பாதிப்பை ஏற்படுத்தியது. கேடா மற்றும் சம்பாரனில் காந்தியின் முயற்சிகள்

தேசியவாத அரசியலில் அவருக்கு ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுத் தந்தது.

**அகமதாபாத் மில் வேலை நிறுத்தம்**

அகமதாபாத்தில் பல ஜவுளி ஆலைகள் இருந்தன, அங்கு காந்தி தனது ஆசிரமத்திற்கு பொருத்தமான இடத்தைத் தேடிக்கொண்டிருந்தார். 1918 ஆம் ஆண்டு அகமதாபாத்தின் தொழிலாளர்களுக்கும் மில் உரிமையாளர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இதற்குக் காரணம் விலைவாசி உயர்வு மற்றும் மில் தொழிலாளர்கள் அதிக ஊதியம் பெற விரும்பினர். இதற்கு மில் உரிமையாளர்கள் சம்மதிக்கவில்லை. காந்தி தொழிலாளர்களை ஆதரித்து ஒரு போராட்டத்தைத் தொடங்கினார், அதில் அவர் அமைதியான எதிர்ப்பைப் பயன்படுத்தினார். காந்தி, தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ய பரிந்துரைத்தார். மேலும் 35 சதவீத ஊதிய உயர்வு கோரினார். எவ்வாறாயினும், முதலாளிகளுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட வேண்டாம் என்று அவர் எச்சரித்தார். தொழிலாளர்களின் உறுதியை நிலைநாட்ட அவர் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார்.

வேலை நிறுத்தத்தை தொடர்ந்த நான்காவது நாளில் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கி, தொழிலாளர்களுக்கு 35 சதவீத ஊதிய உயர்வு வழங்க மில் உரிமையாளர்கள் ஒப்புக்கொண்டனர். மில் உரிமையாளர்களுக்கு அழுத்தம் கொடுப்பதில் அவரது உண்ணாவிரதம் வெற்றி பெற்றது.

காந்தியின் தலைமையின் கீழ், தேசியவாத இயக்கத்தின் தன்மை வெகுவாக மாறியது. அவர் தனது போராட்டங்களில் அகிம்சை கொள்கைகளை ஏற்றுக்கொண்டார். மகாத்மா காந்தி இந்திய மக்களின் நம்பிக்கையைப் பெற்று படிப்படியாக பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான இயக்கத்தைக் கட்டுப்படுத்திய தலைவராக உருவெடுத்தார். அது காந்தியடிகளால் தொடங்கப்பட்ட அகிம்சைப் போராட்டங்கள் மூலம் மட்டுமே 1947 இல் ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேறினர். மகாத்மா காந்தி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான தனது போராட்டத்தில் பயன்படுத்திய வழிமுறைகளை பின்வரும் நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்:

(i) ஒத்துழையாமை மற்றும் சத்தியாகிரகம்: இது காந்தியால் தொடங்கப்பட்ட மிகவும் பொதுவான முறையாகும், அவர் பிரிட்டிஷ்

அதிகாரத்துடன் ஒத்துழையாமை மூலம் அமைதியான போராட்டங்களை நடத்தினார். அவரது மற்றொரு சித்தாந்தம் சத்தியாகிரகம் ஆகும், இது ஒத்துழையாமை, அச்சமின்மை மற்றும் உண்மையின் அடிப்படையில் அச்சமற்ற போராட்டம் என்று காந்தி விளக்குகிறார். இந்திய மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று ஆங்கிலேய அரசை வளைக்க காந்தி சத்தியாகிரகத்தைப் பயன்படுத்தினார்.

(ii) உண்மைத்தன்மை: அகிம்சையைப் போலவே, உண்மையும் காந்தியின் சித்தாந்தங்கள் மற்றும் வழிமுறைகளின் அடையாளமாக இருந்தது. அவர் பிரசங்கம் செய்வது மட்டுமல்லாமல், முழுமையான உண்மையை கடைப்பிடித்தார் என்பது அறியப்படுகிறது, இது பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்துப் போராட அவருக்கு உள் வலிமையைக் கொடுத்தது. உள் வலிமையைத் தவிர, அது ஆங்கிலேயர் மீதான அவரது நோக்கங்களை இந்திய மக்களை நம்ப வைத்தது.

(iii) வெகுஜனங்களின் ஈடுபாடு: ஆங்கிலேயருக்கு எதிராக ஒட்டுமொத்த தேசத்தையும் ஒன்றிணைப்பதில் ஒரு முக்கியமான படியாக, சுதந்திரப் போராட்டத்தில் சாமானியரின் ஈடுபாடு இருந்தது. முன்னதாக, தேசியவாத இயக்கமானது ஒரு சிறிய குழுவான அறிவுஜீவிகளால் நடத்தப்பட்டது.மேலும் தேசிய இயக்கத்தில் வெகுஜனங்கள் ஈடுபடவில்லை. காந்தியின் தலைமையில் இந்தப் போக்கு தலைகீழாக மாறியது.

**ரௌலட் சத்தியாகிரகம்**

முதல் உலகப்போர் முடிந்தவுடன் இந்திய தீவிரவாதிகளையும் புரட்சி வாதிகளையும் அடக்கும் நோக்கத்துடன் முடியவிருந்த இந்திய பாதுகாப்பு சட்டத்திற்கு பதில் புதிய சட்டத்தை கொண்டு வர ஆங்கில அரசு முயன்றது. சிட்னி ரௌலட் என்ற ஆங்கிலேய நீதிபதியைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை அமைத்து இந்தியாவில் அரச விரோத நடவடிக்கைகளை பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. குழு சமர்ப்பித்த அறிக்கையின் படி இரு மசோதாக்கள் தயாரிக்கப்பட்டன. அவை ரவுலட் மசோதாக்கள் என்று அழைக்கப்பட்டன.

ரவுலட் மசோதாவின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- அரசாங்கம் சோதனை எதுவுமின்றி எவரையும் கைது செய்யலாம்

- அபாயகரமான ஆட்கள் என்ற காரணத்தைக் கூறி எவ்வித விசாரணையுமின்றி காலவரையின்றி காவலில் வைக்கலாம்
- அரச விரோத குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என கருதப்படும் ஒரு குறிப்பிட்ட இடங்களில் காவலில் இருக்குமாறு கட்டாயப்படுத்தப்படலாம்
- நடுவர்களின் துணையின்றியே மூன்று உயர்நீதிமன்ற நீதிபதிகள் அரச துரோக வழக்குகளை சாதிக்கலாம்
- அவர்களுடைய தீர்ப்பே இறுதியானது.

இந்த கருப்பு மசோதாக்களை இந்திய தலைவர்கள் கடுமையாக கண்டித்தனர். ரவுலட் சட்டம் ஆங்கில அரசுக்கு வரைமுறை இல்லாத அதிகாரத்தை அளித்தது. இந்த சட்டப்படி செய்தித்தாள்களை காரணமில்லாமல் கட்டுப்படுத்தவும் நிறுத்தவும் செய்யலாம். அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மக்களை கைது செய்து சிறையில் வைக்க முடியு. இந்த சட்டத்தை இந்தியர்கள் கடுமையாக எதிர்த்தனர். இந்தியர்களின் தனி மனித உரிமைகளை அழிக்க வந்த சட்டம் எனவும் இந்தியர்களின் நியாயமான அரசியல் போராட்டங்களை இது முடக்குகிறது எனவும் கருதின. இந்த சட்டம் ரத்து செய்யப்பட வேண்டும் என்று நாடு முழுவதும் மக்கள் கிளர்ந்து எழுந்தனர்.

எஸ்.என்.பானர்ஜி, சீனிவாச சாஸ்திரி, ராமஸ்வாமி அய்யங்கார் போன்ற

தலைவர்கள் ரவுலட் மசோதா நிறைவேற்றப்பட்டால் நாட்டில் வேண்டாத விளைவுகள் ஏற்படும் என்று அரசாங்கத்தை எச்சரித்தார்கள். புல ஊர்களில் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்திய தேசிய காங்கிரஸின் புதிய தலைவரானமகாத்மா காந்தி மசோதாக்கள் விலக்கிக் கொள்ளப்படவில்லை எனில் சத்தியாகிரகத்தை துவக்குவது தவிர தனக்கு வேறு வழி இல்லை என்று அரசாங்கத்திற்கு இறுதி எச்சரிக்கை விடுத்தார். அந்த எச்சரிக்கையை மீறி அரசாங்கம் குழப்பவாதி புரட்சிகர சட்டத்தை நிறைவேற்றியது. அதுவே ரவுலட் சட்டம் என அழைக்கப்படுகிறது.

**சத்தியாகிரகப் போராட்டம்**

ரவுலட் சட்டத்தை முழுமூச்சுடன் எதிர்க்க தீர்மானித்த காந்தியடிகள் 1919 மார்ச் மாதம் பம்பாயில் சத்யாகிரக சபையைத் தோற்றுவித்தார். அனைவரும் சத்தியாகிரக சபதம் எடுத்துக்

கொண்டார்கள். சத்யாகிரக சபையின் கிளைகள் நாட்டின் பல பகுதிகளிலும் துவக்கப்பட்டன. 1919 மார்ச் 30ஆம் தேதி சத்யாகிரக நாளாக நாடெங்கும் அனுசரிக்கப்பட வேண்டும் என்று காந்தி மக்களைக் கேட்டுக்கொண்டார். பின்னர் சில தலைவர்களின் வேண்டுகோளை ஏற்று சத்யாகிரக நாளை ஏப்ரல் 6ஆம் தேதிக்கு காந்தி தள்ளிவைத்தார். மேலும் காந்தி,இந்தியர்கள் ஆங்கிலேயர்களுக்கு தங்கள் எதிர்ப்பைக் காட்ட உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு பெரும் போராட்டத்திற்கும் அகில இந்திய ஹர்த்தால் அல்லது வேலைநிறுத்தத்திற்கும் அழைப்பு விடுத்தார்.ஆனால் காந்தி முன்னதாக அறிவித்த மார்ச் 30ஆம் தேதி அன்று பல இடங்களில் நாடெங்கும் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், கடையடைப்பு, உண்ணாவிரதம் பொதுக்கூட்டங்கள், பிரார்த்தனைகள் ஆகியவை நடைபெற்றன. மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டார். தலைவர்களின் கைதை தொடர்ந்து அகமதாபாத், பம்பாய், டெல்லி, அமிர்தசரஸ் போன்ற இடங்கள் வன்முறைக் களமாக மாறி ஆங்கிலேயர்களும் அரசாங்க அதிகாரிகளும் தாக்கப்பட்டார்கள். பொது சொத்துக்கள் அழிக்கப்பட்டன. துப்பாக்கி சூடுகள் நடந்தன. அகிம்சை ஆயுதத்தைப் பயன்படுத்தும் பக்குவத்தை மக்கள் இன்னும் பெறவில்லை என்பதை உணர்ந்த காந்தி ரவுலட் சத்தியாகிரகத்தை நிறுத்தினார்.

பஞ்சாப் மாகாணத்தில் போராட்ட இயக்கம் மிகவும் வலுவாக இருந்தது, அங்கு இரண்டு காங்கிரஸ் தலைவர்களான டாக்டர். சத்ய பால் மற்றும் டாக்டர் சைபுதீன் கிட்ச்லே ஆகியோர் கைது செய்யப்பட்டு, 10 ஏப்ரல

1919 அன்று தெரியாத இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர். இந்த சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, அமிர்தசரஸ், ஜாலியன்வாலாபாக்கில் 13 ஏப்ரல் 1919 அன்று மக்கள் கூடினர். 1919 ஜாலியன் வாலாபாக் படுகொலை,பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் மிகவும் கொடூரமான சோகங்களில் ஒன்றாக மாறிய ஒரு போராட்டம் ஆகும்.

**சௌரி - சௌரா சம்பவம்**

பீகார் மாநிலத்தில் கோரக்பூர் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தின்

பெயர் சௌரி சௌரா என்பதாகும் .அங்கு நாட்டின் பிற பகுதிகளைப் போல் அந்நியப் பொருட்கள் புறக்கணிப்பு போராட்டம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த போராட்டத்தின் போது ஒரு

போலீஸ்காரர் தொண்டர்கள் சிலரை தாக்கிவிட்டார். அதை அறிந்து 500 தொண்டர்களும் கிராம மக்களும் காவல் நிலையத்திற்கு சென்று அதிகாரியை சந்தித்து முறையிட்டனர். பின் சமாதானம் ஏற்பட்டு அமைதியாக திரும்பிக்கொண்டிருந்த அவர்களை போலீசார் தாக்கி காயப்படுத்திய கூறப்பட்டது. இதனால் கோபமுற்ற மக்கள் கைகலப்பில் ஈடுபட்டனர் .இதனால் ஏற்பட்ட வன்முறை சம்பவத்தில் போலீசார் துப்பாக்கி சூடு நடத்தினர்.

இதனால் மேலும் கோபம் கொண்டு வெகுண்டெழுந்த மக்கள் அங்கிருந்த காவல் நிலையத்திற்கு தீ வைத்தனர். தப்பியோட முயன்ற 21 போலீஸ்காரர்களும் ஒரு சப்-இன்ஸ்பெக்டரும் தீ வைத்து கொளுத்தப்பட்டனர். சௌரி சௌராவில் வெடித்த வன்முறை நிகழ்ச்சி காந்தியை மனம் வேதனை அடையச் செய்தது. அகிம்சை போராட்டம் வன்முறை நிகழ்ச்சிகளுக்கு காரணமாக இருக்கக் கூடாது எனக் கருதினார் காந்தி. மேலும் அஹிம்சை போராட்டத்துக்கு உரிய பயிற்சியும் மக்கள் தரவில்லை என கருதிய காந்தி ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்தை நிறுத்துவது என முடிவு செய்தார்.

சிறைக்கு வெளியே இருந்த காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களைக்
கலந்து பேசிய மகாத்மா காந்தி 1922 பிப்ரவரி 12-ஆம் நாள் ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்தை நிறுத்தினார். ஒத்துழையாமை போராட்டத்தை கைவிட்டு சுதேசி நிர்மாண திட்டத்தை மேற்கொள்ள சொன்னார். காந்தியை அரசாங்கம் கைது செய்தது. விசாரணையின்போது பம்பாய், சென்னை, சௌரி சௌரா மற்றும் பிற இடங்களில் ஏற்பட்ட வன்முறைச் செயல்களுக்கு சாந்தி முழு பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். ஒத்துழையாமை இயக்கப் போராட்டம் திடீரென நிறுத்தப்பட்டதைப் பலரும் கண்டித்தனர்.

கன்னியாகுமரியில் ஒரு கிராமம் வன்முறையில் ஈடுபட்டது என்பதற்காக
இமாலயத்தின் அடிவாரத்தில் உள்ள ஒரு கிராமம் ஏன் தண்டிக்கப்பட வேண்டும் என கேட்டார் மோதிலால் நேரு. போராட்டம் வெற்றிபெற வேண்டிய நேரத்தில் உணர்ச்சிவயப்பட்டு காந்தி நிறுத்தி விட்டார் என குறைபட்டுக் கொண்டார் சி.ஆர்.தாஸ். இயக்கத்தை பலப்படுத்துவதற்கு பதில் காந்தி அதை நிறுத்தி விட்டதை அறிந்து கோபமுற்றார் ஜவகர்லால் நேரு. ஒத்துழையாமை இயக்கத்தில் குறைபாடுகள்

காணப்பட்டாலும், போராட்டம் நிறுத்தப்பட்டாலும் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒத்துழையாமை இயக்கத்தின் சிறப்பை குறைத்து மதிப்பிட முடியாது. முதன் முறையாக காங்கிரஸ் காந்தியின் தலைமையில் இந்திய சுதந்திரத்திற்காக நாடு தழுவிய தீவிர போராட்டத்தில் ஈடுபட்டது. நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பகுதிகளிலும் ஒரே குறிக்கோளை மக்கள் முன்வைத்தனர்.

**சுயராஜ்யக் கட்சி**

**சுயராஜ்யக் கட்சியின் தோற்றம்**

சௌரி சௌரா சம்பவத்தை தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கம் மகாத்மா காந்தியால் திடீரென நிறுத்தப்பட்டது காங்கிரஸ் தலைவர்களுக்கும் மக்களுக்கும் பெருத்த ஏமாற்றத்தை தந்தது. காந்தி உள்ளிட்ட தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். காங்கிரஸ் தலைமை இன்றி தவித்தது. இந்நிலையில் 1922இல் லக்னோவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பான பரிந்துரை வழங்குவதற்காக சட்டமறுப்பு விசாரணை குழு ஒன்றை அமைத்தது. குழு சமர்ப்பித்த அறிக்கையில் காணப்பட்ட பரிந்துரைகளில் முக்கியமானது ஜாலியன் வாலாபாக் படுகொலை, கிலாபத் அநீதி ஆகியவற்றைக் கண்டித்து ஒத்துழையாமை இயக்கத்தினர் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடலாம், சட்டமன்றத்தில் நுழைந்து ஒத்துழையாமை இயக்கத்தை தொடரலாம் என்பதாகும். ஆனால் காந்தியடிகளின் கருத்துக்கு முரணாக இருந்த காரணத்தினால் டிசம்பரில் கயாவில் கூடிய காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு சிறப்பம்சமாக இருந்த சட்டமன்ற புறக்கணிப்பைத் தொடர்வது என முடிவு செய்தது .எனவே சட்டமன்ற நுழைவுக்காக வாதாடிய சித்தரஞ்சன் தாஸ் தனது தலைமைப் பதவியிலிருந்து விலகி புது கட்சியை துவக்கினார். காங்கிரஸ் இரண்டாவது முறையாக பிளவுற்றது. புதிதாக அமைக்கப்பட்ட அமைப்பு சுயராஜ்ஜிய கட்சி ஆகும்.

**மாற்றம் வேண்டாதவர்**

காந்தியடிகளின் வழிமுறைகளில் மாற்றம் இல்லாமல் தொடர்ந்து போராட வேண்டும், சட்டமன்ற புறக்கணிப்பு தொடர வேண்டும் என்று கூறியவர்கள் மாற்றம் வேண்டாதவர் என அழைக்கப்பட்டனர். எம்கே அன்சாரி ரங்கசாமி ஐயங்கார் ராஜகோபாலாச்சாரி ஆகியோர் மாற்றம் விரும்பாத முன்னணித்

தலைவர்கள். சட்டமன்ற நுழைவு ஆழம் தெரியாமல் காலை விடுவது போன்றது. சட்டமன்றத்திற்குள் இருந்து கொண்டு அதை இயங்கவிடாமல் செய்வதென்பது முன்னுக்குப் பின் முரணான செயல் என்றும் அது விடுதலைப் போராட்டத்தின் வேகத்தை குறைத்து விடும் எனவும் மாற்றம் விரும்பாதோர் கருதினர்.அதுபோன்று சட்டமன்றங்களில் மிட்டாய் வழங்கியது போல இருக்குமேயன்றி ரொட்டி தின்றது போல் ஆகாது என இவர்கள் வாதிட்டனர்.

**மாற்றம் வேண்டியவர்**

காங்கிரசின் சட்டமன்ற புறக்கணிப்பு கொள்கையில் மாற்றம் வேண்டும்
என்று விரும்பியவர்கள் மாற்றம் வேண்டியவர் என அழைக்கப்பட்டனர். சித்தரஞ்சன் தாஸ் மோதிலால் நேரு போன்ற தலைவர்கள் மாற்றம் விரும்பிய முன்னணித் தலைவர்கள் ஆவர் .திருத்தப்பட்ட சட்டமன்றம் என்பது அதிகார வர்க்கத்தினர் அணிந்துகொண்ட முகமூடி ஆகும் அதை விலக்க வேண்டும் என்று கூறினார் சித்தரஞ்சன் தாஸ். சட்டமன்றத்திற்குள் நுழைந்து ஆங்கிலேய அரசின் நடவடிக்கைகள் அனைத்தையும் எதிர்த்து ஒத்துழையாமை இயக்கத்தை தொடர்ந்து நடத்த வேண்டும் என்று வாதிட்டனர். மேலும் சட்டமன்றத்தை முடக்க வேண்டும் என்றும் அவர்கள் விரும்பினர்.

1923 ஜனவரி முதல் நாளன்று மோதிலால்நேருவும், சித்தரஞ்சன்தாசும் சுயராஜ்யக் கட்சியைத் தோற்றுவித்தனர். சித்தரஞ்சன்தாஸ் கட்சியின் தலைவராகவும் மோதிலால் நேரு அதன் செயலாளராகவும் செயல்பட்டனர். 1924 ஆகஸ்ட் 16,17 தேதிகளில் கல்கத்தாவில் நடந்த கட்சியின் பொதுக்குழு கூட்டத்தில் அரசியலமைப்புச் சட்டம் தீர்மானிக்கப்பட்டது. சுயராஜ்யக் கட்சியின் நோக்கங்கள் பின்வருமாறு:

- எல்லாவித சட்டபூர்வமான வழிகள் மூலமாகவும் இந்திய மக்கள்
- சுயராஜ்யத்தைப் பெறுதல்
- மத்திய மாநில சட்டமன்றங்களில் அரசாங்கத்தின் சார்பில் கொண்டு வரப்படும் அனைத்து சட்டங்களையும் முறியடித்தல்
- உள்ளாட்சியில் சுயாட்சி மற்றும் நிர்வாகம் பரவல் முறை
- மக்கள் பிரதிநிதிகளுக்கு அரசாங்க அதிகாரிகள் கட்டுப்பட்டிருத்தல் பொதுமக்கள் நலனுக்காக பாடுபடுவதன்

மூலம் அரசாங்க அதிகாரம் பாதிக்காமல் தங்களை பாதுகாத்துக் கொள்தல்

- சமதர்மக் கொள்கைக்கும் சுதந்திர தனிமனித உணர்ச்சிகுமிடையே உள்ள இடைவெளியை குறைத்தல்
- இந்தியாவின் இயல்பான சுயமரியாதையை வலியுறுத்தி நாட்டின் பெருமையை நிலைநாட்டல்

**சுயராஜ்யக் கட்சியின் பணிகள்**

சுயராஜ்யக் கட்சியின் பணிகளை சட்டமன்றத்திற்கு உள்ளேயான பணிகள் சட்டமன்றத்திற்கு வெளியேயான பணிகள் என இருவகையாகப் பிரிக்கலாம். சட்டமன்றத்தில் சுயராஜ்யக்கட்சி அரசாங்க வரவு செலவுத் திட்டத்துக்கு அனுமதி வழங்காது. அரசாங்கம் கொண்டுவரும் சட்ட மசோதாக்களை நிராகரிக்கும். எவ்வித அரசாங்க பதவிகளையும் ஏற்காது. தேசிய நலன்களை பற்றிய தீர்மானங்களை கொண்டு வரும். காங்கிரசின் நிர்மாணப் பணிகளுக்காக வாதாடும். இந்தியாவின் வளம் வீணாவதைத் தடுப்பதற்கான பொருளாதாரக் கொள்கையை பின்பற்றும். நிலச்சுவான்தாரர்கள், குத்தகைதாரர்கள், முதலாளிகள், தொழிலாளிகள் ஆகியோர் இடையே இணக்கமான தொடர்பை உருவாக்க பாடுபடும். சட்டமன்றத்திற்கு வெளியே சுயராஜ்ஜியக் கட்சி இந்து முஸ்லிம்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை நீக்குதல்,பல்வேறு சமுதாய மக்களிடையே ஒற்றுமையை வளர்த்தல், பிராமணர் பிராமணரல்லாதார் இடையே உள்ள பிணக்கை போக்குதல், தீண்டாமையை போக்கி தாழ்த்தப்பட்டோரின் நிலையை உயர்த்துதல், கிராம நிறுவனங்களை ஏற்படுத்துதல், காந்தியின் திட்டத்தை செயல்படுத்துதல், அந்நியப் பொருட்களை புறக்கணித்தல், இந்தியாவின் நிலை குறித்து வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்தல் ஆகியவையாகும்.

**சாதனைகள்**

சுயராஜ்யக் கட்சி காங்கிரஸின் அங்கமாகவே செயல்பட்டது. பபிரிட்டிஷ் அரசின் சுரண்டல் கொள்கையை மக்கள் மத்தியில் வெளிப்படுத்தியது. அதிகாரம்,அதிகார வர்க்கத்திடம் இருந்து மக்களிடம் மாறவேண்டும் என்பதை வலியுறுத்தியது. மத்திய சட்டமன்றத்தில், மோதிலால் நேரு அரசாங்கம் கொண்டுவந்த தேச விரோத நடவடிக்கைகள் அனைத்தையும் எதிர்த்தார். ஏரவாடா மாநில

சட்டமன்றங்களிலும் சுயராஜ்ஜியக் கட்சியினர் அரசின் ஆதிக்கப் போக்கைத் தீவிரமாக எதிர்த்தனர். ஐக்கிய மாகாணத்தில் சுயராஜ்யக்கட்சி கட்டுப்பாட்டோடு செயல்பட்டது. சென்னை சட்டமன்றத்தில் சத்தியமூர்த்தியின் தலைமையில் இயங்கிய சுயராஜ்யக் கட்சி ஆட்சி பீடத்தில் இருந்த நீதிக்கட்சிக்கு பெரிய சவாலாக இருந்தது. நீதிக் கட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை சத்தியமூர்த்தி ஆதரித்தார்.

சுயராஜ்யக் கட்சியின் தலைவராக விளங்கிய சித்தரஞ்சன் தாஸ் 1925
ஜூன் மாதம் மரணமடைந்தார். அவரது மறைவிற்குப் பின் கட்சி பலவீனமடைந்தது. சட்டமன்ற உறுப்பினர்களாக சுயராஜ்யக்கட்சியினர் இருந்தாலும் சட்டமன்றம் செயல்படாமல் இருக்கும் அளவிற்கு இவர்களால் செயல்பட முடியவில்லை. மேலும் மத்திய சட்டமன்றத்தில் தேசிய கட்சிகளுக்கு பெருவாரியான எண்ணிக்கை இல்லை. இவர்கள் பெரும்பான்மை பெற்ற மாநில சட்டமன்றங்களில் கூட எதுவும் சாதிக்க முடியவில்லை .தேர்தலில் பங்கு பெற்ற இவர்கள் சில காரியங்களில் அரசாங்கத்திற்கு ஒத்துழைத்தனர்.அரசாங்கம் இவர்களிடம் பரிவு காட்டியது. இதனால் சுயராஜ்யக் கட்சி சிறிது சிறிதாக வீழ்ச்சி அடைந்தது அதன்பின் நடைபெற்ற தேர்தலில் இக்கட்சி போட்டியிடவில்லை.

சிறையில் நோயால் வாடிக் கொண்டிருந்த காந்தி உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை கொண்டு வந்தார் மோதிலால் நேரு. தீர்மானம் கொண்டுவரப்பட்ட அன்றே காந்தி விடுதலை செய்யப்பட்டார். இந்திய அரசியலமைப்பு சட்டத்தை தயாரிப்பதற்கான ஒரு வட்ட மேஜை மாநாடு கூட்ட வேண்டும் என மற்றொரு தீர்மானத்தின்மூலம் கேட்டுக்கொண்டார் மோதிலால் நேரு. அரசாங்க மசோதாக்கள் சுயராஜ்யக் கட்சியினரின் கடுமையான கண்டனத்துக்கும் எதிர்ப்புக்கும் ஆளாகின. இந்திய நிதி மசோதாவும் சுயராஜ்யக்கட்சியினரால் எதிர்க்கப்பட்டது. இந்திய குற்றச்சட்டத் திருத்த மசோதாவும், நுழைவு சட்டத்திருத்த மசோதாவும்,இந்திய தீர்வைமசோதாவும் நிராகரிக்கப்பட்டன. தேசத் தலைவர்களை கைது செய்தது, இங்கிலாந்தின் இன ஒதுக்கல் கொள்கை, ஐரோப்பிய நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் ,பாராளுமன்ற

நடைமுறைகள் மீறப்படுதல் ஆகியவை பற்றி நாடாளுமன்றத்தில் மத்திய சட்டமன்றத்தில் தேசிய கட்சியினர் வினாக்களை எழுப்பினர்.

**சைமன் கமிஷன்**

சைமன் கமிஷன், 1928, அரசியலமைப்பு தொடர்பான சீர்திருத்தங்களை
ஆய்வு செய்வதற்கும் செயல்படுத்துவதற்கும், அரசாங்கத்தின் செயல்பாடுகளை விசாரித்து பொருத்தமான அறிக்கைகளைத்தயாரிப்பதற்கும் 1927 இல் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட ஏழு பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு சட்டப்பூர்வ ஆணையமாகும். ஆணையத்தின் தலைவர் சர் சைமன் ஜான். 1919 ஆம் ஆண்டு இந்திய அரசுச்சட்டம், பிரிட்டிஷ் இந்தியாவின் மாகாணங்களின் ஆளுகைக்கு இரட்டை ஆட்சியை அறிமுகப்படுத்த இயற்றப்பட்டது. இதற்கு இந்திய மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. இருப்பினும், இந்திய மக்கள் இந்த அரசாங்க வடிவத்தை திருத்த வேண்டும் என்று கோரினர். மேலும், சீர்திருத்தங்களை பரிந்துரைப்பதற்காக பத்து ஆண்டுகளுக்கு ஒரு கமிஷனை நிறுவுவதன் மூலம் அரசாங்க நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை சீர்திருத்துவதற்கான ஒரு விதியையும் இந்த சட்டம் உள்ளடக்கியது. 1920 இல், இங்கிலாந்தில் ஆட்சியில் இருந்த கன்சர்வேடிவ் கட்சியினர், தொழிற்கட்சிக்கு எதிரான தேர்தலில் தோல்வியடைவார்கள் என்று பயந்தனர். அவர்கள் தங்கள் காலனிகளின் மீதான தங்களின் கட்டுப்பாட்டை ஒப்பீட்டளவில் அனுபவமற்ற கட்சிக்கு மாற்றுவது குறித்தும் பயந்தனர். எனவே 1927 இல், பிரதம மந்திரி ஸ்டான்லி பால்ட்வின், தலைவர் சர்ஜான் சைமன் உட்பட ஏழு எம்.பி.க்கள் அடங்கிய ஒரு ஆணையத்தை உருவாக்கினார்.

இந்தியாவின் அரசியலமைப்பு விவகாரங்களின் நிலையை விசாரிக்கும் பொறுப்பு சைமன் கமிஷனுக்கு வழங்கப்பட்டது. பிரிட்டிஷ் இந்தியாவில் கல்வி மற்றும் அரசாங்க பிரதிநிதித்துவ நிறுவனங்களில் சீர்திருத்தங்கள் கமிஷனுக்கு வழங்கப்பட்ட முக்கியப் பணிகளாகும். இந்தியாவில் ஒரு பொறுப்பான அரசாங்கத்தை நிறுவுவது குறித்து அறிக்கை கேட்கப்பட்டது. இந்த ஆணையம் தனது விசாரணையில் பிரிட்டிஷ் அரசு அரசியல் சாசனத்தை கடைப்பிடித்தது என்றும்,

இந்திய மாநிலங்களுடனான பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உறவை கருத்தில் கொள்ளவில்லை என்றும் கண்டறிந்தது.

சைமன் கமிஷன் நாடு முழுவதும் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது, ஏனெனில் தேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கமிஷனில் எந்த இந்தியரும் சேர்க்கப்படவில்லை. பிர்கன்ஹெட்பிரபு, சைமன் கமிஷனில் இருந்து இந்தியர்களின் உறுப்பினர்களை விலக்கியதை நியாயப்படுத்தினார், "கமிஷன் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது, கமிஷனின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இருந்து இருக்க வேண்டியது அவசியம் என்றார்.

இதன் விளைவாக, உறுப்பினர்கள் பயணம் செய்யும் இடமெல்லாம் கமிஷனுக்கு கறுப்புக் கொடி ஏற்றி வரவேற்பு அளிக்கப்பட்டது. உறுப்பினர்கள் நாட்டிற்கு வந்த தினத்தில் நாடு தழுவிய ஹர்த்தால் அனுசரிக்கப்பட்டது.

**சைமன் கமிஷன் புறக்கணிப்பு**

சைமன் கமிஷன் அறிவிக்கப்பட்டது முழுவதும் ஆங்கிலேயப் பிரதிநிதிகளை மட்டுமே கொண்டிருந்தது. எந்த இந்தியரையும் சேர்க்கவில்லை, எனவே வரவிருக்கும் சீர்திருத்தங்கள் ஏதேனும் இருந்தால், இந்திய மக்களின் விருப்பங்களை நிறைவேற்றாது என மக்கள் தெரிந்து கொண்டனர். அனைத்து முக்கிய முடிவெடுக்கும் அதிகாரங்களும் காலனித்துவ அரசாங்கத்தின் கைகளில் இன்னும் உறுதியாக இருப்பதால், இரட்டையாட்சி கேலிக்கூத்தாந ஒன்றாகவே கருதப்பட்டது. முழுவதுமாக ஆங்கிலேயர்களே இடம் பெற்ற சைமன் குழவின் அறிவிப்பு பரவலான எதிர்ப்பை ஏற்படுத்தியது. ஏனெனில் அதில் ஒரு இந்தியர் கூட இல்லை. இதை இந்தியாவில் உள்ள அனைவரும ஒருமனதாக கண்டித்தனர்.

எனவே ஆணையத்தைப் புறக்கணிக்க ஒவ்வொரு கருத்துடைய தலைவர்களாலும் ஒருமனதாக தீர்மானம் செய்யப்பட்டது. ஆணையத்தின் உறுப்பினர்கள் இந்தியாவில் இறங்கிய நாளில் (பிப்ரவரி 3, 1928) அனைத்து முக்கிய நகரங்களிலும் ஹர்த்தால் அனுசரிக்கப்பட்டன. கமிஷனுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம், பேரணிகள் மற்றும் கறுப்புக் கொடிகள் ஏந்தி ஊர்வலங்கள் நடத்தினர்.

"சைமனே திரும்பிப் போ" என்ற வாசகம் பேனர்கள், பதாகைகள் மற்றும் காத்தாடிகளில் கூட பதிக்கப்பட்டது. ஆணையம் செல்லும்

இடமெல்லாம் கருப்புக் கொடிகள் காட்டப்பட்டன. காவல்துறையின் அடக்குமுறை கடுமையாகவும் இரக்கமற்றதாகவும் இருந்தது. ஊர்வலங்கள் தாக்கப்பட்டன.

லாகூரில் தீவிரவாத சகாப்தத்தின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவரான லாலா லஜபதி ராய் மீது மிகவும் கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டது. வயது முதிர்ந்த தலைவரான அவர் லத்திகளால் தாக்கப்பட்டார், படுகாயமடைந்த அவர் சில நாட்களுக்குப் பிறகுமரணமடைந்தார். லாலாலஜபதி ராயின் மரணம் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக மிகப்பெரிய வெறுப்பை உருவாக்கியது. இந்த காலகட்டத்தில், காங்கிரஸுக்குள் ஒரு முக்கியமான வளர்ச்சியாக பூரண சுயராஜ்யம் அல்லது முழுமையான சுதந்திரம் அதன் நோக்கமாக ஏற்றுக்கொண்டது. முழுமையான சுதந்திரம் என்பது பிரிட்டிஷ் தொடர்பிலிருந்து முற்றிலும் துண்டிக்கப்படுவதைக் குறிக்கிறது.

லட்சுமணபுரியில் சைமன் குழுவினருக்கு எதிராக ஜவஹர்லால் நேருவும்
ஜி.பி.பந்தும் நடத்திய எதிர்ப்புக் கூட்டத்தில் தடியடி பிரயோகமும்,துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டது. தேசத் தலைவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் அவர்களின் தேசிய சுயமரியாதையை அவமானப்படுத்துவது போல் இருந்தது. சைமன் குழுவினர் இந்திய மக்களின் ஒட்டுமொத்த வெறுப்பை சம்பாதித்தனர். இறுதியாக சைமன் குழுவின் அறிக்கை 1930இல்இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டது.

**சைமன் குழுவின் அறிக்கை**

**சைமன் குழுவின் பரிந்துரைகள் பின்வருமாறு:**

- மாநில சுயாட்சி கொண்டுவரப்பட வேண்டும். இரட்டை ஆட்சிக்கு பதில் மாநில சுயாட்சி கொண்டுவரப்பட வேண்டும்.
- மாநில நிர்வாகத்தில் மக்கள் பிரதிநிதிகளான அமைச்சர்களுக்கு மேலும் அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்
- மாநில சட்டமன்றங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும்
- மாநில சட்டமன்றத்தில் அரசாங்க சார்புடைய நியமன உறுப்பினர்கள் இருக்கக் கூடாது.

- முஸ்லிம்களுக்கு சிறப்பான போதிய வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்
- உயர் நீதிமன்றங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும்
- மத்தியில் பிரிட்டிஷ் இந்திய பகுதிகளும், மன்னர் மாநிலப் பகுதிகளும் ஒன்றாக இணைந்த கூட்டாட்சி ஏற்படவேண்டும்
- பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை அரசியலமைப்பு சட்டத்தை பரிசீலனை செய்யும் சட்ட கட்டுப்பாட்டுக்கு பதில் தேவையானபோது பரிசீலனை செய்வதற்கு உரிய வகையில் புதிய சட்டம் இயற்றப்பட வேண்டும்
- இந்தியாவிலிருந்து பர்மாவை தனி நாடாக பிரித்துவிட வேண்டும்
- வட மேற்கு எல்லை மாநிலத்தில் சட்டமன்றம் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

சைமன் குழுவின் நோக்கம் நன்றாக இருந்தாலும் அதில் இந்திய எவருக்கும் இடம் தராமல் போனது மாபெரும் அரசியல் தவறாகும்.அதனால்தான் அனைத்துக் கட்சிகளும் சைமன் குழுவை புறக்கணித்தனர். சைமன் குழுவின் வருகையின்போது காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தை கைவிட்டிருந்தாலும், தேசம் தழுவிய புறக்கணிப்பு இயக்கத்தை இதன்மூலம் நடத்தியது. சைமன் குழுவின் அறிக்கையும் தலைவர்களைத் திருப்தி செய்யவில்லை. கவர்னருக்கும், வைசிராய்க்கும் கொடுக்கப்பட்ட அதிக அதிகாரங்கள் மாநில சுயாட்சி திட்டத்தை கேலிக்கூத்தாக்கின.

**நேரு அறிக்கை**

சைமன் குழு நியமிக்கப்பட்டது பற்றி பிரிட்டிஷ் பிரபுக்கள் அவையில் பேசிய இந்திய விவகார செயலாளரான பிர்ஹென்ஹெட் பிரபு இந்தியர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு அரசியல் சட்டத்தை உருவாக்கித் தருமாறு இந்திய தலைவர்களுக்கு சவால் விடுத்தார். 1928 மே மாதம் பம்பாயில் கூடிய மூன்றாவது அனைத்துக் கட்சி மாநாட்டில் இந்திய அரசியல் சட்டத்தை எழுதும் பொறுப்பு மோதிலால் நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்குழுவினர் 25 முறைக்கு மேல் கூடி விவாதித்து அரசியலமைப்பு பற்றி சுயமாக முடிவெடுத்து அவர்களின்

அறிக்கையை 1928 ஆகஸ்ட் 10ஆம் நாள் சமர்ப்பித்தனர். அதுவே நேரு அறிக்கையாகும்.

**நேரு அறிக்கையின் முக்கிய அம்சங்கள்**

- டொமினியன் அந்தஸ்து உடனடியான குறிக்கோளாகவும் பூரண சுயராஜ்யம் இறுதி லட்சியமாக இருக்க வேண்டும்
- இந்தியாவின் அனைத்துப் பகுதிகளலும் இணைந்த கூட்டாட்சி அரசாங்க முறை அமைக்கப்பட வேண்டும்
- வகுப்புவாரி தேர்தல் பிரதிநித்துவம் ஒழிக்கப்படவேண்டும்.
- அரசு எந்த ஒரு மதத்திற்கும் தனிப்பட்ட முறையில் அதிகாரமளித்தல் கூடாது
- சமய சார்பற்ற முறையில் அரசியலமைப்பு இருத்தல்வேண்டும் வடமேற்கு எல்லை மாகாணம் பிற மாநிலங்களுக்கு சமமாகக் கருதப்பட வேண்டும்
- 19 அடிப்படை உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்குதல் வேண்டும்
- மத்திய சட்டமன்றம் இரு அவைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். அப்போதுதான் மக்களுக்கும் மாநிலங்களுக்கும் போதிய அளவில் பிரதிநிதித்துவம் கிடைக்கும்
- இந்திய உச்ச நீதிமன்றமே இறுதி மேல் முறையீட்டு மன்றம் ஆக இருக்கவேண்டும்
- அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட முதல் மூன்று ஆண்டு காலத்திற்குள் மத்திய அமைச்சரவை ஏதேனும் ஒரு காரணம் காட்டி கலைக்கப்படக்கூடாது
- இந்தியாவின் பாதுகாப்பை நிர்வகிக்க ஒரு பாதுகாப்பு குழு அமைக்கப்பட வேண்டும்
- பிரதம மந்திரி மற்றும் அமைச்சர்கள் அரசியல் சட்டம் மற்றும் பாராளுமன்ற சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு செயல்படவேண்டும்
- மன்னர் மாநிலங்கள் அனைத்தும் பாராளுமன்ற அதிகார எல்லைக்கு உட்பட்ட இயங்கவேண்டும்.

**வட்டமேசை மாநாடுகள்**

சைமன் கமிஷன் அறிக்கை ஜுன் 1930இல் வெளியிடப்பட்டபோது இந்தியாவின் அரசியல் சமூகத்தால்

வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பல்வேறு அரசியல் கட்சிகள் பல்வேறு விதமாக கருத்துகளை தெரிவித்துள்ளன. காந்தியின் தலைமையில் சட்டமறுப்பு இயக்கத்தை காங்கிரஸ் தொடங்கியது. நேருஅறிக்கை இறுதியானது அல்ல என்றும், நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களின் பிரதிநிதித்துவத் தலைவர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே பிரச்சினைகளைத் தீர்மானிக்க வேண்டும் என்றும் முஸ்லிம்கள் கருதினர். நாட்டின் அரசியல் சூழ்நிலையில் ஒரு முட்டுக்கட்டை ஏற்பட்டது. ஆங்கில அரசாங்கம் நாட்டு மக்களுக்கான சுயராஜ்யத்தின் எந்த வடிவத்தையும் கருத்தில் கொள்ள விரும்பவில்லை. இது விரக்திக்கு வழிவகுத்தது, இது அடிக்கடி வன்முறை மோதல்களின் வடிவத்தில் வெளிப்படுத்தப்பட்டது.

1931 இல், பிரிட்டனில் 1931 இல் தொழிற்கட்சி அரசாங்கம் மீண்டும அதிகாரத்திற்கு வந்தது. இது இந்தியர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது, ஏனெனில் தொழிலாளர் தலைவர்கள் எப்போதும் இந்தியர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவாகவும் அனுதாபமாகவும் இருந்தனர். புதிய அரசியலமைப்பு சீர்திருத்தங்களை பரிசீலிப்பதற்கு வசதியாக, அரசாங்கத்தால் ஒரு வட்ட மேசை மாநாடு லண்டனில் நடத்தப்பட்டது. அனைத்து சமூகங்களைச் சேர்ந்த இந்திய அரசியல்வாதிகள், அதாவது இந்துக்கள், இந்த மாநாட்டில் முஸ்லிம்கள், சீக்கியர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். அந்த மாநாட்டில், அனைத்து இந்தியர்களின் சார்பாகவும் இந்திய மக்களின் கட்சி என்று கருதப்படும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக தனியாகப் பேச காந்தி முடிவு செய்தார். மற்ற அனைத்துக் கட்சிகளும் குறுங்குழுவாதக் கண்ணோட்டத்தை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும், அவற்றைப் பின்பற்றுவது முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லை என்பதே அவரது வாதம்.

**முதல் வட்ட மேசை மாநாடு**

வட்ட மேசை மாநாட்டின் முதல் அமர்வு நவம்பர் 12, 1930 அன்று லண்டனில் தொடங்கியது.காங்கிரஸைத் தவிர அனைத்துக் கட்சிகளும் இதில் கலந்து கொண்டன. இதற்குக் காரணம், சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடர்ந்து காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் இருந்தனர். நேரு அறிக்கை முழுவதையும் இந்திய அரசியலமைப்புச்

சட்டமாக அமல்படுத்தும் வரை அரசியல் சாசன விவாதங்களில் ஈடுபட மறுத்துவிட்டனர்.

மாநாட்டில் கலந்து கொண்ட 89 உறுப்பினர்களில் 58 பேர் பிரிட்டிஷ் இந்தியாவில் பல்வேறு சமூகங்களில்இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவர். மீதமுள்ள 31 உறுப்பினர்கள் சமஸ்தானங்கள் மற்றும் பிற அரசியல் கட்சிகளை உள்ளடக்கியவர்கள் ஆவர். முஸ்லீம் பிரதிநிதிகளில் மௌலானா முஹம்மது அலி ஜௌஹர், குவைத்-இ- ஆசம், சர் முஹம்மது ஷாபி, சர் ஆகா கான் மற்றும் மௌல்வி ஃபஸ்ல்-இ-ஹக் போன்ற முக்கிய நபர்கள் பங்கு பெற்றனர்.

முதலாம் வட்ட மேஜை மாநாட்டில் வருங்கால இந்திய அரசாங்கம் பற்றி நீண்ட விவாதங்கள் நடைபெற்று மூன்று முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்திய அரசியலமைப்பு பற்றிய முக்கிய முடிவு எடுக்கப்பட்டது. ஆங்கில அரசுக்கு சமமாக இந்தியா திகழ வேண்டும் என்று மக்கள் நினைப்பதால் டொமினியன் அந்தஸ்தை இந்தியா பெற உடனடியாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆங்கிலேயர்களால் காணப்படுகின்ற இந்திய மாநிலங்களும் அரசர்களால் ஆளப்படுகின்ற சமஸ்தானங்களில் ஒன்றுபட்டே ஆக வேண்டும் என்ற கருத்தை சுதேச அரசர்கள் ஏற்றுக்கொண்டனர். எனவே கூட்டாட்சி அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மத்திய அரசையும் மாநில அளவில் பொறுப்புள்ள ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. ஆனால் கட்டுபடுத்தும் அதிகாரத்தை அரசாங்கமே தொடர்ந்து வைத்திருக்கும் என்று முடிவு செய்யப்பட்டது. முதலாவதுவட்டமேசை மாநாட்டில் அரசியல் பிரச்சினைகளில் கருத்து ஒற்றுமை ஏற்பட்டது. ஆனால் வகுப்புவாதப் பிரச்சினை தொடர்பாக கருத்தொற்றுமை ஏற்படவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தனித் தேர்தல் தொகுதி அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. சீக்கியர்களும் இதேபோல் தனித் தேர்தல் தொகுதி வேண்டுமென்றனர். வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பற்றி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. 1931 ஜூலை மாதம் மாநாடு முடிவு பெற்றது.

**காந்தி-இர்வின் ஒப்பந்தம்**

வட்டமேஜை மாநாட்டின் முடிவுகளை காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடர்ந்துநடத்துவதென முடிவு செய்தது.காங்கிரஸ் தலைவர்கள் எல்லாம் சிறைக்கூடங்களில் இருந்தபோதும் போராட்டத்தை தொடங்குவதற்கான ஏற்பாடுகள் ஆர்வத்துடனும் வேகத்துடனும் மேற்கொள்ளப்பட்ட நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த இர்வின் பிரபு காந்தியும் பிற காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களும் விடுதலை செய்யப்படுவார் என்று அறிவித்தார். அறிவிப்பின்படி காந்தியும் காங்கிரஸ் தலைவர்களும் விடுவிக்கப்பட்டனர். காங்கிரஸ் மீது விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டது. ஏனெனில் முதல் வட்டமேஜை மாநாடு முடிந்ததும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதில் மேலும் முன்னேற்றம் காண வேண்டுமானால், இந்திய தேசிய காங்கிரஸின் முழு ஒத்துழைப்பும் ஆதரவும் தேவைப்படும் என்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் உணர்ந்தது. எனவே, வைஸ்ராய் இர்வின் பிரபு காந்தியைபேச்சுவார்த்தைக்கு அழைத்தார். பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, எந்த முன்நிபந்தனையும் முன்வைக்காமல், சட்டமறுப்பு இயக்கத்தை முடிவுக்குக் கொண்டுவர காந்தி ஒப்புக்கொண்டார்.சீனிவாச சாஸ்திரி சேகர் ஆகியோரின் சமரச முயற்சியால் காந்தி வைஸ்ராய் இர்வின் பிரபு சந்திக்கச் சம்மதித்தார். அவ்விருவரின் சந்திப்புகள் 1931 பிப்ரவரி 17 இல் இருந்து மார்ச் 5 வரை நடந்த சந்திப்பு விளைவாக காந்திக்கும் இர்வினுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டது அதுவே காந்தி-இர்வின் ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது.

காந்தி-இர்வின் ஒப்பந்தத்தில் காணப்பட்ட முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- அரசியல் சட்ட சீர்திருத்தங்கள் பற்றிய எல்லைகள் தெளிவாக வரையறுக்கப்படும்
- வட்டமேஜை மாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்
- சட்டமறுப்பு இயக்கம் விலக்கிக் கொள்ளப்படும்
- போலீஸ் அத்துமீறல் பற்றிய விசாரணை வலியுறுத்தப்படமாட்டாது.

- சுதேசி தொழிற்சாலைகளை ஊக்குவிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டதால் விதேசி பொருள் புறக்கணிப்பு கைவிடப்படும்
- சட்ட மறுப்பு இயக்கம் பற்றி அரசாங்கம் பிறப்பித்த ஆணிகள்
- அனைத்தும் விலக்கிக் கொள்ளப்படும்
- மேலும் சட்டமறுப்பு சம்பந்தமாக தொடரப்பட்ட வழக்குகளை அரசாங்கம் கைவிடும்
- சட்டமறுப்பு இயக்கம் சம்பந்தப்பட்ட சம்பந்தமாக கைது செய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்படுவர்
- அபராத தொகை வசூலிக்கப்பட மாட்டாது
- ஆர்ப்பாட்டக்காரர்களை தண்டிப்பதற்காக கொண்டுவரப்பட்ட போலீசார் விலக்கிக் கொள்ளப்படுவர்
- கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் திருப்பி அளிக்கப்படும்
- பிற நகராட்சி சொத்துக்கள் அனைத்தும் வழங்கப்படும்
- பதவியைத் துறந்தோர் மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்
- உப்புச்சட்டம் நடைமுறையிலிருக்கும் என்ற போதிலும் சொந்த உபயோகத்திற்காக மக்கள் உப்பு எடுக்கலாம்.

காந்தி-இர்வின் ஒப்பந்தம் பரஸ்பர நம்பிக்கையின் மீது செய்துகொள்ளப்பட்ட சமாதான உடன்பாடு ஆகும் முதன்முறையாக ஆங்கிலேய அரசாங்கம் காங்கிரசை தனக்கு சமமாக மதித்து காங்கிரஸ் பிரதிநிதியான காந்தியுடன் செய்துகொண்ட சமரசம் உடன்படிக்கையாகும்.

**இரண்டாம் வட்ட மேசை மாநாடு**

மாநாட்டின் இரண்டாவது அமர்வு 7 செப்டம்பர் 1931 இல் லண்டனில் தொடங்கியது. இந்த இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் இந்தியாவின் வருங்கால அரசியல் சட்டமைப்பும் சிறுபான்மையினரின் வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் பிரதானமாக விவாதிக்கப்பட்டன. இவ்விரண்டில் வகுப்புவாத பிரதிநித்துவத்தை பற்றி விவாதிப்பதில் பெரும்பான்மையான பிரதிநிதிகள் ஆர்வத்துடன் இருந்தனர். இந்தியாவிற்கு சுயாட்சி வழங்குவதற்கு முன் சிறுபான்மையினரின் வகுப்புவாத பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்தின்

சார்பில் அறிவிக்கப்பட்டது. ஆனால் காந்தி அந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு வெளியேறாத வரை வகுப்புவாரிப்பிரச்சனை தீராது என காந்தி வாதிட்டார் . தாழ்த்தப்பட்டோருக்கு தனித்தொகுதி வழுங்கப்படும் ஆங்கில அரசின் திட்டத்தை காந்தி எதிர்த்தார். அப்படி வழங்கப்பட்டால் தீண்டாமை நிரந்தரமாக்கப்பட்டுவிடும் என்று கருதிய காந்தி திட்டத்தை அடியோடு எதிர்த்தார். இந்திய தலைவர்களுக்கு இடையே இது பற்றிய கருத்து உடன்பாடு இல்லாததால் சிறுபான்மையினருக்கு அளிக்க வேண்டிய பாதுகாப்புகள் பற்றி பிரிட்டிஷ் அரசாங்கமே முடிவு செய்யும் என்று அறிவித்தார் பிரதமர் ராம்சே மெக்டொனால்டு .அதன் விளைவே வகுப்புவாரி தீர்வு ஆகும். தனது முயற்சியில் தோல்வி அடைந்த காந்தியின் தோல்வியை ஏற்றுக்கொண்டு இந்தியா திரும்பினார். சட்டமறுப்பு இயக்கம் மீண்டும் துவக்கப்பட்டது. ஆங்கிலேயர் அதை கடுமையாக ஒடுக்க முயற்சி எடுத்தனர். காந்தி கைது செய்யப்பட்டு எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார். காங்கிரஸ் சட்டவிரோதமான அமைப்பு என்று அறிவிக்கப்பட்டது. காங்கிரசின் சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன.

**வகுப்புவாரித் தீர்வு**

பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக்டொனால்ட் தனது வகுப்புவாரி தீர்வை

1932 ஆகஸ்ட் 17ஆம் நாள் அறிவித்தார். வகுப்புவாரி பிரிவின்படி முஸ்லிம்கள், இந்தியாவில் உள்ள ஐரோப்பியர்கள், சீக்கியர்கள் ஆகியோருக்கு தனித் தொகுதிகள் ஒதுக்கப்படும். தனித் தொகுதிகளில் இடம்பெறாத பிற தகுதியுடைய வாக்காளர்கள் பொதுத் தொகுதியில் வாக்களிப்பர். தாழ்த்தப்பட்டோருக்கான தனித் தொகுதிகள் ஒதுக்கப்படும். ஆங்கிலோ இந்தியர்கள் தங்களது வகுப்பு வாரியாக வாக்களிப்பர். வர்த்தகம், தொழில், தோட்டத் தொழில் ஆகியவற்றுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் என்ற அம்சங்களை இது கொண்டிருந்தது. காங்கிரஸ் இந்த வகுப்புவாரி தீர்வை கடுமையாக எதிர்த்தது. இந்த வகுப்புவாரித் தீர்வு மக்களிடையே பிரிவை ஏற்படுத்தக்கூடியது என்று அனைவரும் கருதினர். சமயம், வகுப்பு, இடம், தொழில் ஆகியவற்றின் அடிப்படையில் பிரிக்கப்பட்டால்

இந்தியாவின் ஒருமைப்பாடும், ஒற்றுமையும் சீர்குலைந்து விடும் என காங்கிரஸ் கருதியது.

**பூனா ஒப்பந்தம்**

ராம்சே மெக்டொனால்டின் வகுப்ப்வாறித் தேர்வைகண்டு காந்தியடிகள் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தார். பிரிட்டிஷ் பிரதமருக்கு அவர் எழுதிய கடிதத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு தனிப் பிரதிநிதித்துவம் கொடுக்கும் முடிவை மாற்றாவிட்டால் தான் சாகும் வரை உண்ணாவிரதத்தை துவக்கப்போவதாக கடிதம் எழுதினார். பிரதமரிடமிருந்து திருப்தியான பதில் வராத காரணத்தினால் குறித்த நாளில் காந்தி உண்ணாவிரதத்தைத் துவக்கினார். இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக வல்லபாய் படேல், சரோஜினிநாயுடு, அம்பேத்கர், எம்.சி.ராஜா, ராஜகோபாலச்சாரி, ராஜேந்திரபிரசாத் போன்றோர் விரிவாக விவாதித்த பின்னர் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர்.அந்த உடன்பாடே பூனா ஒப்பந்தம் என அழைக்கப்படுகிறது.இப் பூனா ஒப்பந்தம் 1932 செப்டம்பர் 26ஆம் நாள் அறிவிக்கப்பட்டது.

**பூனா ஒப்பந்தத்தின் அம்சங்கள் பின்வருமாறு**:

- தாழ்த்தப்பட்ட மக்களுக்கென தனித் தொகுதிகள் இருக்காது.
- பிற இந்துக்களைப் போலவே பொதுத் தொகுதிகளில் வாக்களிப்பார்கள்
- பொதுத் தொகுதிகளில் தாழ்த்தப்பட்டோருக்கென குறிப்பிட்ட இடங்கள் ஒதுக்கப்படும்
- ஒவ்வொரு ஒதுக்கப்பட்ட இடத்துக்கும் தாழ்த்தப்பட்டோர் நான்கு வேட்பாளர்களை தங்களுக்குள் இருந்து தேர்ந்தெடுப்பர்.
- தாழ்த்தப்பட்டோருக்கு உள்ளாட்சி மண்டர்ந்களிலும் போதுப்பநிகளிலும் போதிய இடங்கள் அளிக்கப்படும்.

**மூன்றாவது வட்ட மேஜை மாநாடு**

இந்தியத் தலைவர்கள் வகுப்புவாத சிக்கலை தீர்ப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மூன்றாவது வட்ட மேஜை மாநாடு 1932 நவம்பர் 17இல் இருந்து டிசம்பர் 24வரை நடைபெற்றது. அம்மாநாட்டிற்கு 46தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிட்டிஷ் அரசாங்க விசுவாசிகள் மட்டுமே பிரதிநிதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர். காங்கிரஸ் இதில் கலந்துகொள்ளவில்லை. இரண்டாவது வட்ட மேஜை

மாநாட்டின் போது அமைக்கப்பட்ட துணைக்குழுக்களின் அறிக்கைகள் பற்றியே விவாதம் நடைபெற்றது. இந்தியக் கூட்டாட்சி, கூட்டாட்சிச் சட்டமன்றம், நீதிமன்றம், மன்னர் மாநிலங்கள் இணைவது போன்ற பல அரசியல் சட்டப் பிரச்சினைகள் பற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டன. இம்முடிவுகளைஎல்லாம் உள்ளடக்கிய வெள்ளை அறிக்கை தயாரிக்கப்பட்டு 1933 மார்ச் மாதம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.அந்த வெள்ளை அறிக்கையின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதுதான் 1935 இந்திய அரசாங்கச் சட்டமாகும்.

**ஒத்துழையாமை இயக்கம்**

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஒத்துழையாமை இயக்கம் ஒரு மிகப் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது. பஞ்சாப் படுகொலையும் அதன்பிறகு நடைபெற்ற ராணுவ நடவடிக்கைகளில் காந்தியின் மனதில் வேதனை ஏற்படுத்தின. பஞ்சாப் படுகொலை பற்றி விசாரித்து அந்த குழுவின் அறிக்கை மக்களுக்கு நீதியின் மேல் அவநம்பிக்கையை ஏற்படுத்தின. அரசாங்கம் துருக்கி சுல்தானுக்கு இழைத்த அநீதிகாந்தியை அதிர்ச்சி அடையச் செய்தது. எனவே ஆங்கில அரசுக்கு எதிராக ஒரு மிகப்பெரிய போராட்டத்தை துவங்க வேண்டியதன் அவசியத்தை காந்தியடிகள்உணர்ந்தார்.

துருக்கி சுல்தானுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக கிலாபத் இயக்கம் 1919இல் துவக்கப்பட்டது. இதை காந்தி ஆதரித்தார். இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒன்று சேர்த்து விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க இது உதவியாக இருக்கும் என்று அவர் கருதினார். 1920 மார்ச் 10ஆம் தேதி காந்திஜி கிலாபத் இயக்க செயல் திட்டத்தில் தான் முதன்முதலாக தனது ஒத்துழையாமை இயக்கத்தைபற்றி காந்தி குறிப்பிட்டுள்ளார்.

காந்தியின் அறிக்கையின் அடிப்படையில்தான் கிலாபத் மாநாடு நியமித்த குழு ஒத்துழையாமை திட்டத்தைப் பற்றிய தனது அறிக்கையை சமர்ப்பித்தது. 1920 ஜூன் இரண்டாம் நாள் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடி ஒத்துழையாமை திட்டம் ஆகஸ்ட் முதல் தேதியன்று செயல்படுத்தப்பட்டது. அதன் முக்கியத்துவத்தை பற்றி முடிவெடுக்க செப்டம்பர் 4ஆம் நாள் லாலா லஜபதிராய் தலைமையில் சிறப்பு காங்கிரஸ் கல்கத்தாவில் கூடியது. அக்கூட்டத்தில் ஒத்துழையாமைஇயக்கத்தைப் பற்றிய தீர்மானத்தை காந்தி முன்மொழிய டாக்டர்கிட்சுலு வழிமொழிய மோதிலால் நேருவும்

அலி சகோதரர்களும் ஆதரித்தனர். சி.ஆர்.தாஸ் போன்ற தலைவர்கள் கடுமையாக எதிர்த்தாலும் ஒத்துழையாமை தீர்மானம் பெரும்பான்மையான வாக்கு வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது. சிறப்பு காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை 1920 டிசம்பரில் நாகபுரி காங்கிரஸ் அங்கீகரித்தது.

ஒத்துழையாமை இயக்கம் என்பது அரசு வெற்றிகரமாக செயல்பட இதுவரை இந்தியர்களை அழைத்து வந்த ஒத்துழைப்பை உறுதி அதனால் ஏற்படுகிற இழப்புகளையும் சோதனைகளையும் பொறுத்துக்கொள்கிறார் ஒரு தார்மீக இயக்கமாக கட்டுப்பாட்டையும் சகிப்புத் தன்மையுமே ஆதாரமாகக் கொண்ட ஒரு இயக்கமாகும்.

**இயக்கத்தின் திட்டங்கள்**

ஒத்துழையாமை இயக்கம் இரண்டு திட்டங்களைக் கொண்டது. ஒன்று எதிர்மறை திட்டம் மற்றது உடன்பாட்டு திட்டமாகும்.

**எதிர்மறைத் திட்டங்கள்**

- தேர்தலில் போட்டியிடாமலும், வாக்களிக்காமலும் சட்டமன்றத்தைப் புறக்கணித்து அரசுக்கு ஒத்துழைக்காமல் இருப்பது
- நீதிமன்றங்களைப் புறக்கணிப்பது, அதாவது வழக்கறிஞர்கள் தங்கள் நீதிமன்றப் பணியைப் புறக்கணிப்பது
- ஆங்கிலக் கல்வி நிலையங்களை புறக்கணிப்பது
- போலீஸ் ,ராணுவ பணிகளைப் புறக்கணிப்பு,
- விதேசி பொருள்கள் குறிப்பாக அந்நியத் துணிகளை பயன்படுத்தாமல் இருப்பது
- அரசு விருந்து மற்றும் விழாக்களில் பங்கேற்காமல் இருத்தல்
- அரசில் கௌரவ உறுப்பினர் பதவி வகிப்பவர்கள் அந்த பதவியை ராஜினாமா செய்தல், அரசாங்கத்தினால் வழங்கப்படும் சிறப்பு பட்டங்கள் மற்றும் விருதுகளை ஏற்க மறுத்தல் ,ஏற்கனவே பெற்றிருந்த பட்டங்களை திரும்பக் கொடுத்தல்
- வரி செலுத்தாமை ஆகியவை எதிர்மறை திட்டத்தில் உள்ள முக்கிய அம்சங்களாகும்.

**உடன்பாட்டு திட்டங்கள்**

- தேசிய பள்ளிகள் கல்லூரிகளில் நாடு முழுவதிலும் ஏற்படுத்தி மாணவர்கள் தேசிய கல்வி நிறுவனங்களில் கல்வி பயில செய்தல்
- வழக்குகளை தனிப்பட்டமுறையில் விசாரித்து தீர்ப்பளிக்க நீதிமன்றங்களை ஏற்படுத்துதல்
- சுதேசி பொருட்களை பயன்படுத்துவதற்காக மக்களிடம் விளக்குதல்
- இந்து முஸ்லீம் ஒற்றுமை காண முயற்சிகளை மேற்கொள்ளுதல் தீண்டாமையை ஒழிக்க பாடுபடுதல்

**இயக்கத்தின் போக்கு**

- இந்திய சட்டமன்றங்களில் களங்கப்பட்ட அமைப்புகளாக கருதிய காந்தி அவற்றைப் புறக்கணிக்க வேண்டுமாறு கேட்டுக் கொண்டார். 1920 நவம்பரில் நடந்த சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் புறக்கணித்தது.
- சட்டமன்ற புறக்கணிப்புக்கு ஆதரவாக தலைவர்கள் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்தனர். இதன் பயனாக காங்கிரஸ் பல மாகாணங்களில் சட்டமன்றத் தேர்தலைப் புறக்கணித்தது.ந
- நீதிமன்றங்களை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கருவிகளாக கருதினார் காந்தி. நீதிமன்றங்களை புறக்கணித்து மக்களின் வழக்குகளை பஞ்சாயத்து மன்றங்களின் மூலம் தீர்த்துக் கொள்ளுமாறு மக்களை அவர் கேட்டுக்கொண்டார். அதன்படி நூற்றுக்கணக்கான வழக்கறிஞர்கள் தங்களது தொழிலை கைவிட்டனர்.
- லாலா லஜபதிராய், ராஜாஜி ,டி.பிரகாசம், வ.உ.சி.போன்றோர் அதிக வருவாய் தரக்கூடிய வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டு நீதிமன்றங்களைப் புறக்கணித்தனர்.
- ஒத்துழையாமை இயக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக அரசாங்க கல்விக்கூடங்களும் புறக்கணிக்கப்பட்டன. அரசு நடத்தும் கல்விக்கூடங்களில் கல்வி கற்பது பாவம் என கருதினார் காந்தி .ஆங்கிலக்கல்வி நஞ்சு கலந்த பால் போன்றது என்று வர்ணித்தார்.
- காந்தியின் வேண்டுகோளை ஏற்று கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் கல்லூரியை புறக்கணித்து ஒத்துழையாமை

இயக்கத்தில் ஈடுபட்டு வந்தனர்.பல பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் மூடப்பட்டன. காசி இந்து பல்கலைக்கழகம் மாணவர்களின் வேலைநிறுத்தத்தால் செயலிழந்தது. அனைத்துக் கடைகளும் மூடப்பட்டன.

- குஜராத் வித்யாபீத், பீகார் வித்யாபீத், வங்காள தேசிய பல்கலைக்கழகம், தேசிய முஸ்லிம் பல்கலைக்கழகம் மற்றும் நூற்றுக்கணக்கான தேசிய பள்ளிகளும் நாடெங்கும் துவக்கப்பட்டன. மாணவர்கள் ஆங்கில அரசு நடத்தும் கல்வி நிலையங்களை விட்டு இந்த தேசிய கல்விக் கூடங்களில் சேர்ந்து பயிலத் தொடங்கினர்.
- வெளிநாட்டுப் பொருட்களை புறக்கணித்தல் இதன் ஒரு பகுதியாக இருந்தது. வெளிநாட்டு துணியை தொட்டாலே பாவம் எனக் கருதியவர் காந்தி. ஏனெனில் இந்திய நெசவுத் தொழில் நசிந்து போனதற்குக் காரணமே மேலைநாட்டு துணிகளில் இறக்குமதியாகும் எனக் காந்தி கருதினார்.
- அலகாபாத்தில் ஜவகர்லால் நேருவின் தூண்டுதலால் துணியை வாங்குவதில்லை என துணி வியாபாரிகள் சபதம் எடுத்தனர். இதை செயல்படுத்துவதற்காக வியாபாரி மண்டல் என்னும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. நாடெங்கும் விதேசி துணி விற்பனை செய்யும் கடைகளை காங்கிரஸ்காரர்களும் கிலாபத் தொண்டர்களும் மறியல் செய்தனர்.
- தமிழ்நாட்டில் பல இடங்களில் துணி வியாபாரிகளே அன்னியத் துணி எதிர்ப்புப் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவாக இருந்தனர். அந்நிய துணிகள் மூட்டை மூட்டையாக பம்பாய் போன்ற பெருநகரங்களில் மக்களால் எரிக்கப்பட்டன. இதற்கு மாறாக கதர் துணி காங்கிரஸ்காரர்களின் இன்றியமையாத ஆடையாக மாறியது.
- நாடு முழுவதும் கைத்தறிகளும் கைராட்டைகளும் நிறுவப்பட்டன. நாட்டுப்பற்று மிக்க தேசிய போராட்ட வீரரின் சின்னமாக கதர் மாறியது .அரசியல் தொண்டர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் ஆகிய அனைவரும் கதர் நூல் நூற்கவும்,கதர் ஆடை அணியவும் முற்பட்டனர். கிராம குடிசைக்

கைத்தொழில்கள் ஊக்குவிக்கப் பட்டன. சுதேசி பொருட்களை விற்பனை செய்வதற்காக சுதேசி கடைகள் திறக்கப்பட்டன.

- அந்நியப்பட்டங்களை தம்மோடு வைத்திருத்தலும், அவர்கள் கொடுத்த விருதுகளால் தம்மை அலங்கரித்துக் கொள்வதும் அவமானமென இந்தியத் தலைவர்கள் கருதினர். எனவே ரபீந்திரநாத் தாகூர், காந்திஜி போன்றோர் ஆங்கில அரசு தமக்கு அளித்த பட்டங்களையும்,விருதுகளையும் திரும்ப அளித்தனர்.
- இப்போராட்டத்தில் போலீஸ், ராணுவப் பணிப் புறக்கணிப்பு மிகவும் முக்கியமானதாக கருதப்பட்டது. குறிப்பாக முஸ்லிம்கள் போலீஸ் ராணுவம் புறக்கணிப்பில் குறியாக இருந்தனர்.
- ராணுவத்தில் பணிபுரிவதோ அல்லது ராணுவத்துக்கு ஆள்சேர்ப்பு உதவி செய்வதோ இஸ்லாமிய நம்பிக்கைக்கும் சட்டத்திற்கும் விரோதமானது என்று அகில இந்திய கிலாபத் குழு அறிவித்தது. ராணுவத்தில் பணிபுரியும் முஸ்லிம்கள் இஸ்லாமிய சட்டங்களை மீறியவர்களாவர் என சமய கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பல்கலைக்கழக மாணவர்கள் பஞ்சாபிற்கும், எல்லைப்புறப் பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.
- மகாத்மா காந்தியும் எந்த இந்தியனும் ராணுவத்திலும் ,அரசுத் துறையிலும் பணியாற்றுவது பாவம் என்று கூறினார்.
- மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட சட்டமன்றத்தை துவக்கி வைப்பதற்காக இந்தியா வருகை புரிந்த காங்கிரஸ் புறக்கணித்தது புறக்கணித்தது. 21 ஜனவரி 10ஆம் நாள் சென்னைக்கு வந்த மக்கள் புறக்கணித்தனர்.கடைகள் அடைக்கப்பட்டன.
- அன்று மாலை மெரினா கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் சார்பில் அவரது வருகை கண்டிக்கப்பட்டது. அதே சமயம் கடற்கரையின் மற்றொரு பக்கத்தில் நீதிக்கட்சியினர் அவருக்கு வரவேற்பு அளித்தனர்.
- கிபி ஏழாம் நூற்றாண்டில் மலபாரில் வந்து தங்கிய அரேபிய வியாபாரிகளின் வழித்தோன்றல்களே மலபார் மாப்பிள்ளைகள் என்ற முஸ்லிம்கள் ஆவர். கிலாபத் இயக்கத்தின் போது எழுச்சி

பெற்ற மாப்பிளைகள் தங்கள் தலைவர்கள் கைது செய்யப்பட்டபோது ஆர்ப்பாட்டம் செய்தனர்.

- அலிமுதலியார் என்ற திருரங்காடி சமயத் தலைவர் அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்வதற்காக ரகசிய ஏற்பாடுகளை செய்து வந்தார். 1921 ஆகஸ்டு மாதத்தில் மலபாரில் உள்ள எரநாடு, வள்ளுவநாடு ஆகிய தாலுகாக்களில் மாப்பிளை முஸ்லிம்கள் கிளர்ச்சி செய்தார்கள்.
- எவ்விதத் தூண்டுதலும் இல்லாமல் அவர்களாகவே கிளர்ந்தெழுந்து ஆங்கிலேயர்களை தாக்கினர். அரசாங்கக் கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. சட்டம் ஒழுங்கு முழுமையாக பாதிக்கப்பட்டது.
- அரசு நிர்வாகம் செயலற்றுப் போனது. பின் அரசாங்கத்துக்கு எதிராக கிளம்பிய இந்த கிளர்ச்சி இந்துக்களுக்கு எதிராக திரும்பியது. அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. அரசு ராணுவத்தின் துணையுடன் இந்த மாப்பிள்ளை கிளர்ச்சியை நசுக்கியது.
- அலி சகோதரர்கள் கைது செய்யப்பட்டனர். ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாக செயல்பட்ட கிலாபத் இயக்கம் மாப்பிளை கிளர்ச்சியில் முடிந்தது. ஹிந்து முஸ்லிம்களிடையே இதன் காரணமாக கருத்து வேறுபாடுகள் வளரத் துவங்கின. தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் பலவீனப்பட்டது.
- அரசுக்கும் மக்களுக்கும் இடையே நல்லெண்ணத்தை வளர்ப்பதற்காக 1921 நவம்பர் 17ஆம் நாள் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்தார். அவரது வருகையை வெற்றிகரமாக கொண்டாடுவதில் அரசாங்கம் ஆர்வமாக இருந்தது. ஆனால் காங்கிரஸ் அவரது வருகையை புறக்கணித்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டது. அவர் வருகையை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் வன்முறை வெடித்தது. இதில் பலர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று காந்தி பரிந்துரைக் கடிதம் எழுதினார்.

- அரசாங்கம் அடக்குமுறையை கைவிடாவிட்டால் சட்ட மறுப்பு இயக்கத்தை பர்தோலியில் துவங்கப் போவதாக எச்சரித்தார். ஆனால் அரசு காந்தியின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை.

**1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்**

மூன்று வட்டமேஜை மாநாடுகளின் விளைவாகப் புதிய அரசியலமைப்புக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது.மாநாட்டு முடிவுகளை உள்ளடக்கிய வெள்ளை அறிக்கை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையின் அடிப்படையில் மசோதாதயாரிக்கப்பட்டு 1935 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. சட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களையும் இந்திய மன்னர் மாநிலங்களையும் கொண்ட அகில இந்திய கூட்டாட்சி அமைக்கப்படும்.
- மாநில இரட்டையாட்சி முறை நீக்கப்பட்டு மத்தியில் இரட்டையாட்சி முறை செயல்படும்.
- மத்திய கூட்டாட்சி சட்டமன்றம், மாநிலங்களவை மக்களவை ஆகிய இரண்டு அவைகளையும் கொண்டிருக்கும். சட்ட அமைப்பு சம்பந்தமான சிக்கல்களையோ மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே எழக்கூடிய வேறுபாடுகளையோ அல்லது ஒரு மாநிலத்தித்துக்கும் இன்னொரு மாநிலத்துக்கும் இடையே ஏற்படக்கூடிய தகராறையோ தீர்த்து வைப்பதற்கென உச்ச நீதிமன்றம் ஏற்படுத்தப்படும்.
- அரசாங்க அதிகாரங்கள் மத்திய பட்டியல், மாநிலப் பட்டியல், பொதுப்பட்டியல் என்று மூன்று வகையாக பங்கீடு செய்யப்பட்டன.
- சிறுபான்மைச் சமுதாயங்களுக்கான தேர்தல் பாதுகாப்புக்களும், இட ஒதுக்கீடுகளும் கொடுக்கப்பட்டன.
- மாநிலம் சம்பத்தப்பட்ட அதிகாரங்களை அமைச்சர்களின் பொறுப்பில்விட்டு மாநில சுயாட்சிக்கு வகை செய்யப்பட்டது.
- இந்திய விவகார செயலருக்கிருந்த இந்திய சபையை நீக்கிவிட்டு அதற்குப் பதில் ஒரு சிலரை கொண்ட ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்பட்டது

- பர்மா இந்தியாவிடமிருந்து பிரிக்கப்பட்டது. ஹைதராபாத்தின் பகுதியாக இருந்த பீகார் மத்திய அரசுடன் இணைக்கப்பட்டது.
- இந்த அரசியல் சட்டத்தின் மாற்றத்தை அரசாங்கம் மட்டுமே செய்ய முடியும்.

**ஆகஸ்டு அறிவிப்பு**

1939 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதி இரண்டாவது உலகப் போர் துவங்கியது. வைசிராய் லின்லித்தோ பிரபு இந்தியத் தலைவர்களை கலந்து ஆலோசிக்காமல் இந்தியாவும் போரில் ஈடுபட்டுள்ளதாக தன்னிச்சையாக அறிவித்தார். காங்கிரஸ் செயற்குழு இந்த அறிவிப்பை வன்மையாகக் கண்டித்தது. இதனால் பல்வேறு அரசியல் அமைப்புகளை சேர்ந்த பிரதிநிதிகளை கலந்து ஆலோசித்த பின்னர் ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட்டார். அதன்படி போர் முடிந்த பின்னர் இந்தியாவின் அரசியல் அமைப்பு முறையை முழுமையாக பிரிட்டிஷ் அரசாங்கம் மறுபரிசீலனை செய்யும் என்றும் உடனடியாக இந்தியாவுக்கு அதிக அளவிற்கு அதிகார மாற்றம் செய்வது என்பது இயலாது என்றும் அந்த வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். இதை காங்கிரஸ் கடுமையாக கண்டித்தது. இந்த அறிவிப்பு மிகுந்த ஏமாற்றத்தை கொடுப்பதாக உள்ளது என்றார் ராஜேந்திர பிரசாத். ரொட்டி கேட்டதற்கு கல்தான் கிடைத்தது என்றார் மகாத்மா காந்தி.

இந்த வெள்ளை அறிக்கையைக் கண்டித்து மாநிலங்களில் ஆட்சி செய்த அனைத்து காங்கிரஸ் அமைச்சர்களும் பதவி விலகினர். எனவே காங்கிரஸ் ஆட்சி செய்த மாநிலங்களில் எல்லாம் கவர்னரின் ஆலோசகர் அரசு ஏற்படுத்தப்பட்டது. மேலும் அங்கு கவர்னரின் அடக்குமுறை ஆட்சி தங்கு தடையின்றி செயல்படத் தொடங்கியது. காங்கிரஸ் அமைச்சர்கள் பதவி விலகியதை கொண்டாடும் பொருட்டு 1939 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 ஆம் நாள் விடுதலை நாளாக கொண்டாட வேண்டும் என முஸ்லீம்களை கேட்டுக்கொண்டார் முகமது அலி ஜின்னா.

1940 ஆண்டு இரண்டாம் உலகப்போரில் இங்கிலாந்து மிகவும் சோதனையான காலத்தில் இருந்தது. அச்சமயத்தில் இங்கிலாந்து பெரும் தோல்வியை சந்தித்துக் கொண்டிருந்தது.எனவே போர் முயற்சியில் இந்தியர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியமான ஒன்றாக அமைந்தது. எனவே இந்தியர்களின் ஆதரவைக் பெறும்

பொருட்டு 1940 ஆகஸ்டு 8 ஆம் நாள் அரசாங்கத்தின் கொள்கை பற்றி அறிவித்தார் வைஸ்ராய் பிரபு.அதுவே ஆகஸ்ட் அறிவிப்பு என அழைக்கப்படுகிறது.

**அந்த அறிவிப்பின்படி,**

- இந்தியாவிற்கு டொமினியன் தகுதியை வழங்குவதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.
- இந்தியர்களே அவர்களது அரசியல் அமைப்பு முறையை வகுத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர்.
- போர் முடிந்த உடனேயே அத்தகைய அரசியல் அமைப்பு முறையை வகுத்துக் கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்படும்.
- புதிய அரசியல் அமைப்பு பிரிட்டிஷ் காமன் வெல்த் பகுதியாக செயல்படும்
- அரசியலமைப்பு மாற்றம் செய்யும்போது சிறுபான்மையினரின் கருத்துக்களுக்கு முழு கவனம் செலுத்தப்படும்
- இந்திய பிரதிநிதிகளுக்கு இடமளிக்கும் வகையில் ஆட்சிக்குழு விரிவுபடுத்தப்படும்
- இந்திய பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்படும்.

முதன்முறையாக இந்தியா பிரிட்டிஷ்காமன்வெல்த் நாடுகளுக்கு இணையானது என்று அறிவிக்கப்பட்டது. இந்தியாவுக்கு டொமினியன்உரிமை வழங்கப்படுவதாக அளிக்கப்பட்ட உறுதிமொழியும் முக்கியமானதாக கருதப்பட்டது. இந்த அறிவிப்பு இந்திய தலைவர்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை. போர் முடிந்தவுடன் டொமினியன் தகுதி வழங்குவதற்கான காலக்கெடு குறிப்பிடப்படவில்லை.

**சோசலிச சிந்தனைகளின் வளர்ச்சி**

1930களின் தசாப்தம் காங்கிரஸுக்கு உள்ளேயும் வெளியேயும் சோசலிச சிந்தனைகளின் விரைவான வளர்ச்சியைக் கண்டது.

1929ஆம் ஆண்டில், அமெரிக்காவில் ஒரு பெரிய பொருளாதார சரிவு அல்லது மந்தநிலை ஏற்பட்டது, இது படிப்படியாக உலகின் பிற பகுதிகளுக்கும் பரவியது, இதன் விளைவாக பெரிய அளவில்) உலகம் முழுவதும் (பொருளாதார நெருக்கடி மற்றும் வேலையின்மை ஏற்பட்டது .ஆனால் சோவியத் யூனியனின்

பொருளாதார நிலை அதற்கு நேர்மாறானது .சரிவு இல்லை என்பது மட்டுமல்ல, 1929க்கும்1936 க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் வெற்றிகரமாக முடிவடைந்தன, இது சோவியத் தொழிற்துறை உற்பத்தியை நான்கு மடங்குக்கும் மேலாக அதிகரித்தது. உலக மந்தநிலை, இவ்வாறு, முதலாளித்துவ அமைப்பை அவப்பெயருக்கு கொண்டு வந்து, மார்க்சியம், சோசலிசம் மற்றும் பொருளாதார திட்டமிடல் ஆகியவற்றின் மீது கவனத்தை ஈர்த்தது .இதன் விளைவாக, சோசலிச கருத்துக்கள் மேலும் மேலும் மக்களை, குறிப்பாக இளைஞர்கள், தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளை ஈர்க்கத் தொடங்கின.

பொருளாதார மந்தநிலை இந்தியாவில் உள்ள விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் நிலைமைகளையும் மோசமாக்கியது 1932 .ஆம் ஆண்டின் இறுதியில் விவசாயப் பொருட்களின் விலைகள் 50 சதவிகிதத்திற்கும் மேல் குறைந்தன.

முதலாளிகள் ஊதியத்தை குறைக்க முயன்றனர் .நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் நிலச் சீர்திருத்தங்கள், நில வருவாய் மற்றும் வாடகைக் குறைப்பு, கடனில் இருந்து நிவாரணம் ஆகியவற்றைக் கோரத் தொடங்கினர்.

தொழிற்சாலைகள் மற்றும் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் பெருகிய முறையில் சிறந்த வேலை நிலைமைகள் மற்றும் அவர்களின் தொழிற்சங்க உரிமைகளை அங்கீகரிக்குமாறு கோரினர் .இதன் விளைவாக, நகரங்களில் தொழிற்சங்கங்கள் மற்றும் கிசான் சபைகள் ) விவசாயிகள் சங்கங்கள் (பல பகுதிகளில், குறிப்பாக உத்தரப்பிரதேசம், பீகார், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கேரளா மற்றும் பஞ்சாப் ஆகிய இடங்களில் விரைவான வளர்ச்சி ஏற்பட்டது.

முதல் அனைத்திந்திய விவசாயிகள் அமைப்பான அகில இந்திய கிசான் சபா 1936 இல் உருவாக்கப்பட்டது .விவசாயிகளும் தேசிய இயக்கத்தில் மிகவும் தீவிரமாக பங்கேற்கத் தொடங்கினர்.

1936இல் லக்னோ காங்கிரஸில் தனது தலைவர் உரையில், சோசலிசத்தை அதன் இலக்காக ஏற்கவும், விவசாயிகள் மற்றும் தொழிலாள வர்க்கத்துடன் தன்னை நெருக்கமாகக் கொண்டுவரவும் நேரு காங்கிரஸை வலியுறுத்தினார்.

1938ஆம் ஆண்டு, காந்தி எதிர்த்த போதிலும், சுபாஷ் சந்திரபோஸ்

மீண்டும் காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் .இருப்பினும், காங்கிரஸ் காரியக் கமிட்டியில் காந்தி மற்றும் அவரது ஆதரவாளர்களின் எதிர்ப்பால் 1939 இல் காங்கிரஸின் தலைவர் பதவியில் இருந்து போஸ் ராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

**காங்கிரஸ் மற்றும் உலக விவகாரங்கள்**

1939-1935காலகட்டத்தில், உலக விவகாரங்களின் வளர்ச்சிக்காக காங்கிரஸ் தீவிரமாக பங்கேற்றது .ஏகாதிபத்தியத்தின் பரவலுக்கு எதிரான எதிர்ப்பின் அடிப்படையில் அது படிப்படியாக ஒரு வெளியுறவுக் கொள்கையை உருவாக்கியது.

பிப்ரவரி 1927 இல், ஜவஹர்லால் நேரு தேசிய காங்கிரஸின் சார்பாக பிரஸ்ஸல்ஸில் நடந்த ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் காங்கிரஸில் கலந்துகொண்டார், பொருளாதார அல்லது அரசியல் ஏகாதிபத்தியத்தால் பாதிக்கப்பட்ட ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து அரசியல் நாடுகடத்தப்பட்டவர்களும் புரட்சியாளர்களும் ஏற்பாடு செய்தனர்.

1927இல், தேசிய காங்கிரஸின் மெட்ராஸ் அமர்வு, அதன் ஏகாதிபத்திய நோக்கங்களுடன் மேற்கொள்ளப்படும் எந்தவொரு போருக்கும் இந்திய மக்கள் பிரிட்டனை ஆதரிக்க மாட்டார்கள் என்று அரசாங்கத்தை எச்சரித்தனர்.

**வகுப்புவாதத்தின் வளர்ச்சி**

இல் 1940, முஸ்லிம் லீக் நாட்டைப் பிரித்து , சுதந்திரத்திற்குப் பிறகு பாகிஸ்தான் என்று அழைக்கப்படும் ஒரு மாநிலத்தை உருவாக்கக் கோரி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

இந்து மகாசபை போன்ற மதவாத அமைப்புகள் இந்துக்களிடையே இருந்ததால் முஸ்லிம் லீக் பிரச்சாரம் பெற்றது.

இந்து மதவாதிகள் இந்துக்கள் ஒரு தனித்துவமான தேசம் என்றும் இந்தியா இந்துக்களின் பூமி என்றும் அறிவித்து முஸ்லிம் வகுப்புவாதிகளை எதிரொலித்தனர் இதனால் அவர்களும் இரு தேசக் கோட்பாட்டை . .ஏற்றுக்கொண்டனர்

பெரும்பான்மையினரின் ஆதிக்கம் குறித்த அச்சத்தை நீக்கும் வகையில் சிறுபான்மையினருக்கு போதிய பாதுகாப்பு அளிக்கும் கொள்கையை இந்து வகுப்புவாதிகள் தீவிரமாக எதிர்த்தனர்.

**சுயமதிபிட்டு கேள்விகள்**

- காந்தியின் ஆரம்பகால அரசியல் நடவடிக்கைகள் விவரி
- சைமன் கமிஷன் - வட்ட மேசை மாநாடுகள்.
- இந்திய அரசு சட்டம், 1935 - காண்க

**அலகு - V**

சுதந்திரம் மற்றும் பிரிவினை தனிநபர் - காங்கிரஸ் அமைச்சர்கள் ராஜினாமா : சத்தியாகிரகம்- கிரிப்ஸ் தூதுக்குழு - வெள்ளையனே வெளியேறு இயக்கம் - சுதந்திரப் போராட்டத்தின் கடைசி ஆண்டுகள் - திய தேசிய ராணுவம்இந் சிம்லா மாநாடு - (47-1945)- காபினெட் தூதுக்குழு அதிகார -பரிமாற்றம் மற்றும் பகிர்வு

**நோக்கங்கள்**

- கிரிப்ஸ் தூதுக்குழு
- வெள்ளையனே வெளியேறு இயக்கம்
- இந்திய சுத்திர போராட்டம்

**1939 இல் காங்கிரஸ் அமைச்சர்கள் ராஜினாமா செய்ததற்கான காரணம்:**

1. **வகுப்புவாத கட்சிகளின் பிரச்சாரம்**

➢ காங்கிரஸுக்கு எதிராக வகுப்புவாதக் கட்சிகளால் தவறான பிரச்சாரம் செய்யப்பட்டது.

➢ சிறுபான்மையினருக்கு எதிராக காங்கிரஸ் பாகுபாடு காட்டுவதாக அவர்கள் குற்றம் சாட்டினர், ஆனால் இதுபோன்ற பிரச்சாரம் உண்மை அடிப்படையில் அல்லாமல் அரசியல் மற்றும் வகுப்புவாத மேலோட்டத்தின் காரணமாக மேற்கொள்ளப்பட்டது.

2. **சந்தர்ப்பவாதிகள் பதவிக்கு நன்மைகளை வாரி இறைத்தனர்**

➢ இந்த நேரத்தில், பல சந்தர்ப்பவாதிகள் இந்த காலகட்டத்தில் காங்கிரஸில் சேர்ந்தனர், இது பதவியின் நன்மைக்காக.

➢ இத்தகைய குணாதிசயங்களைப் பற்றி காங்கிரஸுக்குத் தெரியும், மேலும் காந்தி தனது ஹரிஜன் பத்திரிகையில் காங்கிரஸின் ஊழல் பற்றி வெளிப்படையாக எழுதினார்.

➢ மேலும், பல பிராந்தியங்களில் காங்கிரஸை இத்தகைய கூறுகளில் இருந்து விடுவிக்க ஒரு உந்துதல் மேற்கொள்ளப்பட்டது

3. **காங்கிரஸின் தலைவர் கப்பல் தொடர்பான பிரச்சினைகள்**

➢ இந்த காலகட்டத்தில், காங்கிரஸ் இரண்டு அமர்வுகளை நடத்தியது. 1938 பிப்ரவரியில் சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் ஹரிபுராவில் ஐம்பது முதல் அமர்வு நடைபெற்றது . இந்த அமர்வில் சர்வதேச விவகாரங்கள் மற்றும் இந்தியாவின்

உள்நாட்டு நிலைமை தொடர்பான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

- ஆனால், அடுத்த அமர்வில் (திரிபுரி) காங்கிரஸ் பெரும் நெருக்கடியை சந்தித்தது. இம்முறை குடியரசுத் தலைவருக்கான தேர்தல் நடைபெற்று, போஸ் 1580க்கு 1377 வாக்குகள் வித்தியாசத்தில் பட்டாபி சீதாராமையாவை தோற்கடித்தார்.
- இது இடதுசாரிகளின் வெற்றியாக கருதப்பட்டது
- காந்திஜி கூட இந்தத் தோல்வியைத் தன் தோல்வியாகவே கருதினார்.
- மேலும், செயற்குழு அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டு இறுதியில் போஸ் ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்தார்.

4. **இரண்டாம் உலகப் போரில் இந்தியாவைச் சேர்த்தல்**

- வைஸ்ராய் லின்லித்கோ 1939 இல் இந்தியாவை பிரிட்டனுடன் போர் செய்வதாக அறிவித்தார்
- இந்தியர்களுடன் முன் கலந்தாலோசிக்காமல் போரை அறிவித்ததற்கு காங்கிரஸ் கடும் எதிர்ப்பு தெரிவித்தது
- காங்கிரஸ் செயற்குழு, மத்திய இந்திய தேசிய அரசாங்கம் அமைந்தால் ஒத்துழைக்க வேண்டும் என்றும், போருக்குப் பிறகு இந்தியா சுதந்திரம் அடைவதில் உறுதிமொழி எடுக்கப்படும் என்றும் பரிந்துரைத்தது.
- ஆனால், அரசு தரப்பில் திருப்திகரமான பதில் வரவில்லை
- இதன் விளைவாக, காங்கிரஸைக் கலந்தாலோசிக்காமல் வைஸ்ராய் இந்தியாவை ஏகாதிபத்தியப் போரில் பங்கேற்கச் செய்தார் என்ற காரணத்திற்காக நவம்பர் 1939 இல் காங்கிரஸ் அமைச்சர்கள் பதவியை ராஜினாமா செய்தனர் .

**தனிநபர் சத்தியாகிரகம**

வைஸ்ராய் லின்லித்கோ பிரபுவின் ஆகஸ்ட் அறிவிப்பும் காங்கிரஸ் தலைவர்களுக்கு நம்பிக்கை தரவில்லை. மற்றொரு போராட்டத்தைத் துவக்குமாறு காங்கிரஸ் காந்தியைக் கேட்டுக் கொண்டதற்காக, போர்க்கால நெருக்கடியை மனதில் கொண்ட மகாத்மா காந்தி மக்கள் இயக்கத்திற்கு பதிலாக தனிநபர் சத்தியாக்கிரகத்தை துவக்குவது என தீர்மானித்தார். இந்தியர்களின் விடுதலை உணர்வை உலகுக்குக் காட்ட மேற்கொள்ளப்படும் அடையாள போராட்டமாகவே தனிநபர்

சத்தியாக்கிரகத்தை கருதினார் காந்தி. முதல்தனிநபர் சத்தியாகிரகியாக ஆச்சார்யா வினோபாபாவே தேர்ந்தெடுக்கப்பட்டார். 1940அக்டோபர் 17ஆம் நாள் போரை எதிர்த்து பிரச்சாரம் செய்து சத்தியாகிரகத்தை துவக்கினார். பின்னர் அவர் கைது செய்யப்பட்டு 3 மாதம் சிறை தண்டனை பெற்றார். அடுத்த சத்தியாகிரகி ஜவகர்லால் நேரு ஆவார். அவர் கைது செய்யப்பட்டு அவருக்கு ஆறுமாத காலம் றை தண்டனை வழங்கப்பட்டது. பின்னர் வல்லபாய் பட்டேலும், சுபாஷ் சந்திரபோசும் கைதாகினர். எல்லா மாநிலங்களிலும் காங்கிரஸ் உறுப்பினர்கள் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று கைதாகினர். 1941 ஆம் ஆண்டு இறுதி வரை நடைபெற்ற இந்த சத்தியாகிரகத்தில் கலந்து கொண்ட 30,000
பேர் கைது செய்யப்பட்டனர். தனிநபர் சத்தியாகிரகம் பிரிட்டனின் முயற்சியை ஒன்றும் பாதிக்கவில்லை. மேலும் அதற்கு மக்கள் ஆதரவும் கிடைக்க வில்லை.

வைசிராய் லின்லித்தோ பிரபு மேலும் 5 இந்திய பிரதிநிதிகளை சேர்த்துக்கொண்டு தனது ஆட்சியை விரிவுபடுத்தி இருப்பதாக அறிவித்தார். மேலும், தனி நபர் சத்தியாகிரகத்தின் போது கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்தார். இருப்பினும் காந்தி போராட்டத்தை தொடர்ந்து நடத்த விரும்பினார். ஆனால் போரில் நிலைமை மிகவும் மோசமாகி கொண்டிருந்தமையால் பர்தோலியில் கூடிய காங்கிரஸ் செயற்குழு தனிநபர் சத்தியாக்கிரகத்தை விலகிக் கொண்டதாக 19ஆம் நாள் அறிவித்தது. காந்தியின் வேண்டுகோளுக்கிணங்க சத்தியாகிரக தலைமைப் பொறுப்பில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார். நாட்டின் பாதுகாப்புக்காக மக்களை திரட்டும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. போர் முயற்சியில் காங்கிரஸ் பங்கேற்க முடிந்ததால் ஆங்கிலேய அரசு இந்தியர்களுக்கு உடனடியாக சில அரசியல் சலுகைகளை வழங்க தீர்மானித்தது .அதன் விளைவே கிரிப்ஸ் தூதுக்குழு அமைக்கப்பட்டதாகும்.

**கிரிப்ஸ் தூதுக்குழு**

டிசம்பர் 1941 இல் ஜப்பான் பேர்ல் துறைமுகத்தைத் தாக்கிய பிறகு, ஜப்பானியப் படைகளின் அடுத்த இலக்காக இந்தியா இருக்கும் என்பது தெளிவாகத் தெரிந்தது. ஏப்ரல் 1942 இல், பிரிட்டன் சர் ஸ்டா.ஃ.போர்டு கிரிப்ஸை இந்தியாவுக்கு அனுப்பியது. போருக்குப் பிறகு, பேரரசு மற்றும் காமன்வெல்த்தை விட்டு வெளியேறும் உரிமையுடன்

முழுமையான டொமினியன் அந்தஸ்துக்கான அனைத்து மாகாணங்களுக்கும் அவர் ஒரு வாய்ப்பை வழங்கினார். இந்தியாவுடன் சேர விரும்பாத எந்த மாகாணமும் சுதந்திர நாடாக மாறலாம் என்றும் கிரிப்ஸ் பரிந்துரைத்தார். போர் இந்தியாவை நெருங்கும் போது (சிங்கப்பூர் 15 பிப்ரவரி 1942 அன்று வீழ்ந்தது, ரங்கூன் மார்ச் 8 அன்று மற்றும் அந்தமான் தீவுகள் மார்ச் 23 அன்று), ஆங்கிலேயர்கள் கடைசியாக இந்தியாவின் பொதுக் கருத்தை வென்றெடுக்க சில முயற்சிகளைசெய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. டிசம்பர் 1941 இல், வாஷிங்டனில் சர்ச்சிலுடனான தனது பேச்சுக்களில் இந்திய அரசியல் சீர்திருத்தங்கள் பற்றிய தலைப்பை ரூஸ்வெல்ட் எழுப்பினார். ஜனவரி 2 அன்று, சப்ரு மற்றும் ஜெயகர் போன்ற இந்திய தாராளவாத தலைவர்கள் உடனடி டொமினியன் அந்தஸ்து மற்றும் வைஸ்ராயின் நிர்வாகத்தை தேசிய அரசாங்கமாக விரிவாக்கம் செய்ய வேண்டுகோள் விடுத்தனர்.

ஜப்பான் இந்தியாவை தாக்கும் ஆபத்து இருந்த காரணத்தினால் இந்தியர்களின் ஒத்துழைப்பும், கூட்டு முயற்சியும் அரசுக்கு தேவைப்பட்டது. எனவே போர் முயற்சிகளில் இந்தியாவை ஈடுபட வைப்பதற்காக அரசியல் ரீதியாக தடையாக உள்ள பிரச்சனைகளை சரிசெய்ய வேண்டியதன் அவசியத்தை ஆங்கில அரசு உணர்ந்து கொண்டது. இந்தியர்களின் ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பை உடனடியாக பெற முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்க குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட்டும் வற்புறுத்தினார்.நேச நாடுகளின் சார்பில் போரில் ஈடுபட்டிருந்த நாடுகளில் ஒன்றான தேசிய சீனாவின் தலைவர் சியாங்கே சேக், காந்தி, நேரு போன்ற தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார் .இந்தியர்களின் அரசியல் கோரிக்கைகள் உடனடியாக தீர்க்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். இந்தியாவைப் பற்றிய ஆங்கிலேயரின் கொள்கையில் அடிப்படை மாற்றம் தேவை என்று வலியுறுத்தியவர் அப்போதைய போர்க்கால அமைச்சரவையில் இடம்பெற்ற அட்லி ஆவார். அரசுக்கு அவர் அளித்த யோசனையின் அடிப்படையிலேயே கிரிப்ஸ் தூதுக்குழு அமைக்கப்பட்டது.

1942 மார்ச் 22ஆம் தேதி தனது திட்டங்களுடன் டெல்லி வந்து சேர்ந்தார் ஸ்டா.ஃ.போர்ட் கிரிப்ஸ். இந்தியாவில் உள்ள அனைத்து

தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தினார். வைசிராய் லின்லித்தோ பிரபு மற்றும் காங்கிரஸ் சார்பில் ஜவகர்லால் நேரு ,முஸ்லிம் லீக்கின் சார்பில் முகமதலி ஜின்னா, பின்தங்கிய உறுப்பினர்களின் சார்பில் டாக்டர் அம்பேத்கர், இந்து மகா சபையின் சார்பில் சவர்க்கர் ,லிபரல் கட்சியின் சார்பில் டி.பி.சாப்ரு ஆகியோர்களை சந்தித்து பேசினார். தான் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் தான் ஏற்கனவே கொண்டு வந்த திட்டத்தின் அடிப்படையிலும் 1942 மார்ச் 30 இல் தனது ஏற்பாடுகளை அறிவித்தார். இதுவே கிரிப்ஸ் ஏற்பாடுகள் எனப்படுகிறது.

**கிரிப்ஸ் ஏற்பாடுகள்**

- போர் முடிந்தவுடன் இந்தியாவுக்கு பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் இருந்து பிரிந்து செல்லக்கூடிய அதிகாரத்தோடு கூடிய டொமினியன் அந்தஸ்து வழங்கப்படும்.
- போர் முடிந்த உடனேயே இந்திய அரசியல் சட்டத்தை வரைவதற்கான அரசியலமைப்பு சட்ட மன்றம் ஏற்படுத்தப்படும்
- இந்திய அரசியல் நிர்ணய சபையில் சபையில் இந்தியாவில் இருந்தும் சுதேச சமஸ்தானங்களில் இருந்தும் பிரதிநிதிகள் இடம்பெறுவார்கள்
- பிரிட்டிஷ் இந்திய உறுப்பினர்கள் மாகாண சட்டமன்ற பேரவைகளினால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்
- சுதேச சமஸ்தான பிரதிநிதிகள் சமஸ்தான மன்னர்களால் நியமிக்கப்படுவார்கள்
- அரசியல் நிர்ணய சபை இயற்றிய அரசியல் சட்டத்தை பிரிட்டிஷ் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டு அந்த அடிப்படையில் இந்தியாவுடன் உடன்படிக்கை ஏற்பாடு பிரிட்டிஷ் அரசாங்கம் செய்து கொள்ளும்
- புதிய அரசியல் சட்டத்தை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லாத இந்திய மாநிலம் மாற்றம் எதுவும் இல்லாமல் இப்போது நடைமுறையில் உள்ளது போன்று தொடர்ந்து செயல்படலாம்
- அரசியல் நிர்ணய சபையின் புதிய அரசியல் சட்டத்தை ஏற்பதும் ஏற்க மறுப்பதும் சுதேச மன்னர்களின் விருப்பத்திற்கு விடப்படும். அதுபோலவே இந்தியாவுடனாவது அது விரும்புகிற

எந்த மாநில அரசுடன் ஆவது அல்லது எதனுடனும் சேராமல் இருப்பதும் அவர்களின் மேலான விருப்பத்திற்கு விடப்படும்

- சிறுபான்மையினர் பிரச்சினையை பற்றி விவாதிக்கப்படும்
- அதிகார மாற்றம் பற்றிய பிரச்சினைகள் அனைத்தும் இந்திய அரசியல் நிர்ணய சபைக்கும் அரசாங்கத்திற்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தியதன் விளைவாக ஏற்படும் உடன்படிக்கை மூலமாக தீர்க்கப்படும்
- தற்போது உள்ள அரசியல் சட்டத்தில் மாறுதல்கள் எதுவும் செய்யப்பட மாட்டாது.
- புதிய அரசியலமைப்பு சட்டம் தயாரிக்கப்படும் வரை ராணுவ நடவடிக்கைகள் பாதுகாப்பு ஆகியவைகளை ஆங்கில அரசை தொடர்ந்து மேற்கொள்ளும்.

இந்தியாவிலுள்ள சபைகளிலும், காமவெல்த் சபையிலும் இந்தியாவின்
முக்கிய பிரிவினரின் தலைவர்கள் நேரடியாக கலந்து கொள்ளலாம்.

கிரிப்சின் “ விரைந்து மூழ்கிக் கொண்டிருக்கும் வங்கியின் பெயரில் பின் தேதியிட்டு வழங்கப்பட்ட காசோலை” என்று வர்ணித்தார் மகாத்மாகாந்தி.

**வெள்ளையனே வெளியேறு இயக்கம்**

கிரிப்ஸ் திட்டம் மீதான அதிருப்தியால் வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகஸ்ட் 1942 இல் தொடங்கியது..இயக்கம் வன்முறையாக மாறியதால் பல தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். சுபாஷ் சந்திர போஸ் மற்றும் இந்திய தேசிய ராணுவத்தின் பங்களிப்பு பற்றி விவாதிக்காமல் இந்திய சுதந்திரப் போராட்டம் பற்றிய புரிதல் முழுமையடையாது. இந்த பிரிவு இந்தியாவை அதன் சுதந்திரத்தை நோக்கி நகர்த்திய முக்கிய நிகழ்வுகளை விவாதிக்கும். பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக்குழு நிறுவுதல் மற்றும் மவுண்ட்பேட்டன் பிரபுவால் முன்மொழியப்பட்ட திட்டம் போன்ற நிகழ்வுகள் அடங்கும். இந்தியப் பிரிவினை மற்றும் அதனுடன் நடந்த இனவாதக் கொலைகள் குறித்தும் விவாதிக்கப்படும்.

**வெள்ளையனே வெளியேறு இயக்கம.**

கிரிப்ஸ் முன்மொழிவு நேரு மற்றும் காங்கிரஸால் நிராகரிக்கப்பட்டது,

அதற்குப் பதிலாக இந்தியாவில் முடிவெடுக்கும் முழு அதிகாரம் இந்தியர்களுக்கு இருக்கும் முழுமையான அமைச்சரவை அரசாங்கத்தைக கோரியது. மாகாணங்களின் சுதந்திரம் என்ற கருத்து மத்திய ஆட்சியுடன் வலுவான மற்றும் ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்கும் காங்கிரஸின் நோக்கத்திற்கு எதிரானது. இந்தக் கோரிக்கைகளை பிரிட்டிஷ் அரசு நிராகரித்தது. ஜப்பான் எந்த நேரத்திலும் இந்தியாவின் மீது படையெடுத்த கூடிய அபாயம் இருந்தது அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் பிரிட்டன் இந்தியாவைக் காப்பாற்றும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. ஆங்கிலேயர் நாட்டை விட்டுச் சென்றால் இந்தியாவை தாக்குவதற்காக காரணம் இருக்காது என்று கருதிய மகாத்மா காந்தி வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் துவக்கினார்.

**இயக்கத்திற்கான சூழ்நிலைகள்**

**இயக்கம் வெடித்ததற்கான காரணங்கள் பின்வருமாறு:**

கிரிப்ஸ் தூதுக்குழுவால் இந்தியர்களுக்கு ஏமாற்றமே ஏற்பட்டது.அது அமெரிக்கர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அனுப்பப்பட்ட அமைப்பு என்று இந்தியர்கள் நம்பினர் கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வியை அடுத்து அரசாங்கம் இந்திய தலைவர்களுக்கு திருப்தி அளிக்க கூடிய தீர்வை வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அப்படி எதுவும் நிகழவில்லை. இந்தியா ஒரு நாடாக இல்லாமையால் யாரிடம் அதிகாரத்தை கொடுப்பது என்று தெரியவில்லை என்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிலை காங்கிரஸ் தலைவர்களை மேலும் கோபப்படுத்தியது. ஜப்பானிய ஆக்கிரமிப்பின் விளைவாக இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான இந்திய அகதிகள் குடிபெயர்ந்தனர். அதுபோல ஆங்கிலேயர்களும் தப்பி வந்தனர். ஆனால் ஆபத்து குறைந்த பகுதி ஆங்கிலேயர்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டதைக் கண்ட காங்கிரஸ் தலைவர்கள் கொதித்தெழுந்தனர்.

அர்த்தமற்ற போரின் மீது கோபமும் விரோதமும் இருந்தது, குறிப்பாக

பர்மியப் போரில் காயமடைந்த ஆயிரக்கணக்கான வீரர்கள் திரும்பியபோது அனைவரும் வேதனையுற்றனர்.உணவு தானியங்களின் விலைகள் உயர்ந்தன் அரிசி மற்றும் உப்பு தட்டுப்பாடும் இருந்தது.

இந்தியாவில் நிறுத்தப்பட்டுள்ள பெரும்பாலான பிரிட்டிஷ், அமெரிக்க மற்றும் ஆஸ்திரேலிய வீரர்கள் இந்தியர்களை மோசமாக நடத்தினார்கள் அவர்களில் பலர் இந்திய பெண்களை கற்பழித்தனர். வங்காளம் மற்றும் அசாமில் சாதாரண மனிதர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன

வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் ஜப்பானியர்களின் தாக்குதலின் அச்சம்

காரணமாக அழிக்கப்பட்டது. காந்தி ஹரிஜனில் எழுதினார், „கிழக்கு வங்காளத்தில் உள்ள மக்களுக்கு படகுகள் இல்லாமல் இருப்பது, முக்கிய உறுப்புகளை வெட்டுவது போன்றது" (3 மே 1942).

உணவு தானியங்களின் நெருக்கடியின் போது, இந்தியச் சந்தைகள கறுப்புச் சந்தையாளர்கள் மற்றும் லாபம் ஈட்டுபவர்களால் கட்டுப்படுத்தப்பட்டன. இது குறிப்பாக கிழக்கு இந்தியாவில் உள்ள ஏழைகளை மிகவும் பாதித்தது.

யுத்தம் சில வர்த்தகர்களையும் முதலாளித்துவ செல்வந்தர்களையும் ஆக்கியது, ஆனால் பனியாக்கள் மற்றும் மார்வாரிகளின் பெரும் பகுதியினர் மலாயா மற்றும் பர்மாவில் 1942 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து இழப்புகளை சந்திக்கத் தொடங்கினர். காங்கிரஸ காரியக் கமிட்டியில் இருந்த முதலாளித்துவக் கூறுபாடு அதைக் கவனித்தது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஜப்பானியர்களின் வெற்றிக் கதை ஐரோப்பியர்களின், குறிப்பாக ஆங்கிலேயர்களின் மேன்மையை நிராகரித்தது.

சிங்கப்பூர், மலேயா பர்மா ஆகியவை ஒன்றன்பின் ஒன்றாக ஜப்பானால்

கைப்பற்றப்பட்ட போது ஜப்பானிய ராணுவம் இந்தியாவுக்குள் நுழைவதற்கான அபாயம் இருந்தது .இந்தியாவை இங்கிலாந்து காப்பாற்றும் என்ற நம்பிக்கை இல்லாத நிலையை உருவாகியது. இந்த நெருக்கடியை சமாளிக்க வெள்ளையனை வெளியேற்றி இந்தியாவை காப்பாற்றத் துணிந்தனர் காங்கிரஸ் தலைவர்கள்.

இங்கிலாந்துக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் ஜப்பானுக்கு ஆதரவு

கொடுத்தார் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ். ஜப்பானோடு ஒத்துழைக்குமாறு இந்திய மக்களையும் கேட்டுக்கொண்டார். ஜப்பானிய

வெற்றி கண்டு மக்கள் மகிழ்ந்தனர். ஆனால் காங்கிரஸ் ஜப்பானிய ஆக்கிரமிப்பு ஆதிக்கத்தை விரும்பாமல் இந்திய விடுதலைப் போராட்டத்தை நெறிப்படுத்த எண்ணினர்.

ஆனால் காந்தி ஜப்பானுக்கு ஆதரவு தருவதை விரும்பவில்லை. அவருடைய கூற்றுப்படி ஜப்பான் இந்தியாவைத் தாக்கினால் இங்கிலாந்து சிங்கப்பூர் மலேசியா பர்மாவில் செய்ததுபோல் எதிர்ப்பின்றி பணிந்துவிடும். அந்நிலையில் ஜப்பானிய ராணுவம் ஆங்கில ஏகாதிபத்தியத்தை விட மோசமாக இருக்கும். மாறாக இங்கிலாந்து இந்தியாவை விட்டு வெளியேறினால் ஜப்பான் இந்தியாவை தாக்குவதற்கான காரணம் எதுவும் இருக்காது. எனவே ஜப்பான் இந்தியாவை தாக்குவதற்கு முன் ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டியதன் அவசியத்தைப் பற்றி காந்தி ஹரிஜன் பத்திரிகையில் தொடர்ந்து எழுதினார். எனவே அந்நியன் வெளியேற வேண்டும் என்பதே காந்தியின் தீர்க்கமான தீர்மானம் ஆகும்.

காந்தியின் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் பற்றி விவாதிப்பதற்காக காங்கிரஸ் செயற்குழு 1942 ஜூலை 14-ஆம் தேதி வார்தாவில் கூடியது. காந்தியின் முடிவை அபுல் கலாம் ஆசாத், ஜவகர்லால் நேரு, செய்யது முகமது, அலி ஆசப் ஆகியோர் எதிர்த்தனர். இறுதியில் அனைவரும் காந்தியின் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டனர். அத்தீர்மானம் ஒரு சில மாற்றங்களோடு பம்பாயில் ஆகஸ்டு 7 8 தேதிகளில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கமிட்டியால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.அக்கூட்டத்தில் பேசிய காந்தி நான் உங்களுக்கு சிறிய மந்திரத்தைச் சொல்லிக் கொடுக்கிறேன். செய் அல்லது செத்துமடி என்பது அந்த மந்திரமாகும். ஒன்று நாம் இந்தியாவை விடுவிக்கவேண்டும் அல்லது அந்த முயற்சியில் உயிர் துறக்க வேண்டும். மீண்டும் அடிமை நிலையில் இந்தியாவை பார்ப்பதற்கு நாம் உயிர் வாழ கூடாது என்றார்.

**போராட்டத்தின் போக்கு**

காங்கிரஸ் கமிட்டி கூட்டம் 1942 ஆகஸ்ட் 8 இரவு 10 மணிக்கு முடிவுற்றது. ஆனால் அதிகாலையில் காந்தியும் காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். ஒரு வாரத்துக்குள் நாடு முழுவதும் உள்ள முக்கிய காங்கிரஸ் தலைவர்களை அரசாங்கம் கைது செய்துவிட்டது. அகில இந்திய காங்கிரஸ் சட்டவிரோதமான அமைப்பு என அறிவிக்கப்பட்டது. காங்கிரசிலிருந்து நிதி அனைத்தும்

கைப்பற்றப்பட்டது. காங்கிரஸ் கட்சியின் வெளியீடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. கடைகள் அடைப்பு தடை செய்யப்பட்டது. காங்கிரஸ் இயக்கத்தை பற்றிய செய்திகளை வெளியிடக் கூடாது என பத்திரிகைகள் தடை செய்யப்பட்டன. சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட மாநில அரசாங்கங்களுக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டது. இத்தகைய அடக்குமுறை நடவடிக்கைகள் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை துவக்கத்திலேயே அடக்கி விடலாம் என அரசு முடிவு செய்தது. ஆனால் ஆங்கிலேய அரசு அடக்குமுறையை கையாண்டதை வானொலி வழியாகவும், ஆங்காங்கு உள்ள அதிகாரிகள் வழியாகவும் கேள்விப்பட்டு மக்கள் கொதித்தெழுந்தனர். மக்கள் தன்னிச்சையாக கிளர்ச்சியில் ஈடுபட துவங்கினர். அவர்களுக்கு தெரிந்த முறைகளை எல்லாம் மக்கள் கையாண்டு போராட்டத்தை முன்னெடுத்தார்கள். காங்கிரஸ் ஊழியர்கள் பொதுக்கூட்டங்களின் மூலம் அரசாங்கத்தின் செயலை கண்டித்தார்கள். வியாபாரிகள் கடையடைப்பு செய்தார்கள். தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். மாணவர்கள் கல்விக் கூடங்களை புறக்கணித்தனர். விவசாயிகள் வரிகொடாக் கிளர்ச்சியைத் துவக்கினர். பல அரசாங்க ஊழியர்கள் பதவிகளை துறந்தார்கள். ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன .கடைகள், சாராய கடைகள், ஜவுளிக்கடைகள், நீதிமன்றங்கள், காவல் நிலையங்கள் ஆகியவை மறியல் செய்யப்பட்டன. கடலோரப் பகுதிகளில் உப்பு வரி சட்டம் மீறப்பட்டது.நீதிமன்றங்கள் புறக்கணிக்கப்பட்டன. இந்தப் போராட்டத்தில் பெண்களும் பெருவாரியாக கலந்து கொண்டனர்.

தலைவர்கள் எல்லாம் சிறையில் இருந்த காரணத்தினால் கண்காணிப்பும் கட்டுப்பாடும் இல்லாத மக்கள் கூட்டம் வன்முறை செயல்களில் ஈடுபட ஆரம்பித்தது. ஆகஸ்ட் 11 12 தேதிகளில் மட்டும் டில்லியில் பொதுமக்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்தனர். 114 பேர் படுகாயமடைந்தனர். பொதுமக்களின் வன்செயல்கள் போலீசாரின் துப்பாக்கிச் சூடு இதுவே அன்றாட நிகழ்ச்சிகளாகின. நிலைமை நாளுக்குநாள் கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருந்தது. மக்களுக்கு வழிகாட்ட தலைவர்கள் வெளியில் இல்லை. ஏனெனில் பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டிருந்தனர். போலீஸ் அடக்குமுறை தொடர்ந்ததாலும், அவசர சட்டங்களை கொடுமையாலும், மக்களின் கோபம் மேலும் அதிகரித்தது. காங்கிரஸ் பொது அறிவிப்பு எதுவும் விடவில்லை என்பதால் தனிப்பட்ட

தொண்டர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்தனர். இது வெகு விரைவில் மகத்தான இயக்கமாக வலுவடைந்தது. கர்நாடகா ஆகிய பகுதிகளில் விவசாயிகள் ஆங்கில ஆட்சிக்கு எதிராக ரகசிய கொரில்லா போராட்டத்தை தொடர்ந்தனர். மனோகர் லோகியா, அருணா ஆச.ஃ.ப் அலி, ஜெயபிரகாஷ் நாராயண் ஆகியோர் ரகசிய புரட்சி இயக்கத்தின் முன்னணித் தலைவராக விளங்கினர். வன்முறைப் புரட்சி நடவடிக்கைகள் நாடெங்கும் பரவின. கடுமையான அடக்குமுறை ஆட்சியை அரசு கட்டவிழ்த்து விட்டது. தடியடி தாக்குதல், துப்பாக்கிச் சூடுகள், கூட்டங்கூட்டமாக தொண்டர்களை கைது செய்தல் ஆகியவை நடந்தேறின. விசாரணை இல்லாமல் தண்டனைகள் வழங்கப்பட்டன. இறுதியில் அரசாங்கம் புரட்சியை அடக்கியது. 1942 நவம்பர் மாதம் முடிவதற்குள் வெள்ளையனே வெளியேறு புரட்சி அடங்கியது.

**வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள்**

மற்ற போராட்டங்களை போல் இந்த போராட்டமும் அகிம்சை வழியில இருக்க வேண்டும் என காந்தி விரும்பினார். ஆனால் தலைவர்கள் கைது செய்யப்பட்ட காரணத்தால் போராட்டங்கள் வன்முறை பாதைக்கு திரும்பின. அதன் வீழ்ச்சிக்கான காரணங்களை பின்வருமாறு கூறலாம்.

தலைவர்கள் கைது செய்யப்பட்ட காரணத்தினால் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தலைமையற்றபோராட்டமாக மாறியது. பம்பாய் காங்கிரஸ் கூட்டம் முடிந்த மறுநாளே தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு விட்டனர். செயல்திட்டத்தை பற்றி மக்களுக்கும் ஒரு தெளிவில்லாத காரணத்தினால் மக்கள் வன்முறை பாதையில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்களுக்கு தெளிவான திட்டம் எதுவும் கொடுக்கப்படவில்லை. நேரு கொடுத்த திட்டங்கள் ஐக்கிய மாகாணத்துக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது .போராட்டத்தை கொடுப்பதற்கு முன் காந்தி கைது செய்யப்பட்டு விட்டார். ஒவ்வொரு இடங்களிலும் நடைபெற்ற புரட்சிகளின் முன்னேற்றங்கள் பற்றி காங்கிரஸ் தொண்டர்கள் முழுவதும் அறிந்திருக்கவில்லை. கட்டுப்பாடு இல்லாததால் ஒவ்வொரு மாநிலமும் அதை தன் போக்கில் போராட்டத்தை நடத்தியது. ஒரு பகுதியில் நடப்பது மறு பகுதிக்கு தெரியாமல் போய்விட்டது. இதனால் இயக்கம் வலுவிழந்தது.

போராட்டக்காரர்களிடையே செய்தி போக்குவரத்து இல்லை. கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் ரகசியமாக செய்திகளை அனுப்ப

முடியவில்லை. ஹிந்து முஸ்லிம்களிடையே பதட்ட நிலை ஏற்பட்டபோது துவங்கப்பட்ட ஆசாத் முஸ்லிம் வானொலி இயக்கத்தை நடத்த பயன்படவில்லை வெள்ளையனே வெளியேறு இயக்கம் காங்கிரஸ் இயக்கமாகவே கருதப்பட்டது. தேசிய இயக்கமாக கருதப்படவில்லை. முகமது அலி ஜின்னா முஸ்லிம்களை போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டாம் என கேட்டுக் கொண்டார். இந்து மகாசபையும் அப்போராட்டத்தில் ஆர்வம் காட்டவில்லை. நேச நாடுகள் பக்கம் சேர்ந்ததால் இந்திய கம்யூனிஸ்டுகள் அரசாங்கத்தை ஆதரித்தனர்.

எனவே ஆர்எஸ்ட் போராட்டத்திற்கு அனைத்து அமைப்புகளின் ஆதரவு கிடைக்கவில்லை. பொருள் வசதியின்மையும் தோல்வியடைய காரணம் ஆனது. பணம் படைத்தவர்கள் பல காரணங்களினால் பொருள் உதவி செய்ய முன்வரவில்லை. ஆயுத பலமும் பொருள் வசதியும் பெற்ற ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப்போராடுவதற்கு தேவையான பொருள் வசதி புரட்சியாளர் இடம் இல்லை. ஆங்கிலேய அரசாங்கம் போராட்டத்தை துவக்க அவகாசம் அளிக்கும் என்றும் ,போராட்டத்தை ஒடுக்க முன் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது என்றும் நம்பினார் காந்தி. காந்தியடிகளின் நம்பிக்கை பொய்யானது. சியாங்கே ஷேக், ரூஸ்வெல்ட் போன்றோர் இந்தியாவுக்கு துணையாக இருப்பார்கள் என்று எதிர்பார்த்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தவாறு எதுவும் நடக்கவில்லை.

அரசாங்க ஊழியர்களும் போலீசும், ராணுவத்தினரும் அரசாங்கத்திற்கு விசுவாசமாக இருந்தனர். போலீசும், ராணுவமும் இணைந்து நின்று போராட்டத்தை அடக்கினர். கிளர்ச்சியை ஒடுக்க நிர்வாக இயந்திரம், போலீஸ். ராணுவம் அனைத்தையும் அரசு முடுக்கி விட்டது.கிளர்ச்சியை அடக்க அது எந்த முறையையும் கையாள தயங்கவில்லை. அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு முன்னால் தலைமையும் தக்க திட்டமும் இல்லாத காரணத்தினால் வெள்ளையனே வெளியேறு இயக்கம் வீழ்ச்சியுற்றது.

**புரட்சியின் சிறப்புகள்**

இந்திய விடுதலை போராட்டத்தில் எப்போதும் இல்லாத அளவிற்கு பெண்களும் பங்கேற்றனர். அருணா ஆசப் அலி சுலோச்சனா கிருபாளினி போன்ற பெண்களும் பள்ளி கல்லூரி மாணவிகளும் கலந்து கொண்டனர், ஏகாதிபத்தியத்தின் மீது இந்தியா கொண்டிருந்த

சீற்றத்தையும் சுதந்திரம் அடைய நாடு கொண்டிருந்த உறுதியையும் இந்த புரட்சியை உலகிற்கு தெளிவாக உணர்த்தியது. இந்த மக்கள் சக்திக்கு முன்பு இனி ஆங்கில அரசு அதிக நாட்கள் ஈடு கொடுக்க முடியாது என்பது உறுதி செய்யப்பட்டது. ஜமீன்தார்களும் நிலச்சுவான்தார்களும் இந்த இயக்கத்திற்கு உதவினர். அரசாங்க அலுவலர்கள் குறிப்பாக கீழ்நிலை ஊழியர்கள் போராட்டத்திற்கு மறைமுகமாக உதவி செய்தனர் .மக்கள் சுதந்திரம் பெற தங்களின் உரிமையை நிலைநாட்டிக் கொள்ள தியாகங்களையும் துன்பங்களை ஏற்றுக் கொள்ளும் உறுதி அவர்களின் போராட்டத்தின் மூலம் தெரியவந்தது. முஸ்லிம்கள் இந்த இயக்கத்தை ஆதரிக்கவில்லை ஆயினும் எதிர்க்கவில்லை. இப்போராட்டத்தை தலைவர்கள் சிறையில் இருந்தபோது மக்கள் எழுச்சியுடன் நடத்தினர்.

இந்த போராட்டத்தின்போது நாட்டின் சில பகுதிகளில் இணை அரசாங்கங்கள் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இரண்டாம் உலகப் போரை காரணம் காட்டி பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த இயக்கத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது. இந்த இயக்கம் சுபாஷ் சந்திரபோஸின் இந்திய தேசிய ராணுவம் தாக்குதல் தொடங்க தூண்டுகோலாக இருந்தது.

**இந்திய தேசிய ராணுவம**

**நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்**

நேதாஜி என்று அழைக்கப்படும் சுபாஷ் சந்திரபோஸ் இந்திய சுதந்திரப்

போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவர். அவர் ஆசாத் ஹிந்த் ∴பௌஜ் (இந்திய தேசிய இராணுவம்) நிறுவனர் ஆவார். இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவருவதே இந்த ராணுவத்தின் நோக்கமாக இருந்தது.1897ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் தேதி ஒரிசா மாநிலம் கட்டாக்கில் பிறந்தார். அவரது தந்தை ஒரு வழக்கறிஞர் மற்றும் அவரது தாயார் ஒரு சமய நம்பிக்கையுடைய பெண் ஆவார். சிறுவயது முதலே தேசபக்தி கொண்டிருந்தார். அவர் பிரசிடென்சி கல்லூரியில் இருந்தபோது, பேராசிரியர் ஓடன் இந்தியாவுக்கு எதிரான சில கருத்துக்களை தெரிவித்தார். இதனால் கோபமடைந்த போஸ் தனது பேராசிரியரை தாக்கினார். இந்த செயலுக்காக அவர் கல்லூரியில் இருந்து நீக்கப்பட்டார். பள்ளியிலும் கல்லூரியிலும் சிறந்த மாணவராக இருந்தார். 1911 இல், கல்கத்தா

மாகாணத்தில் மெட்ரிகுலேஷன் தேர்வில் முதலிடம் பெற்றார். முதல் வகுப்பில் தத்துவத்தில் பட்டப்படிப்பை முடித்தார். 1919 இல், அவர் தனது தந்தையால் இந்திய சிவில் சர்வீசஸ் தேர்வில்பங்கேற்க இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். இந்தத் தேர்வில் நான்காம் இடம் பெற்றார் நேதாஜி. ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பிறகு, அவர் தனது சிவில் சர்வீசஸ் பயிற்சியை விட்டுவிட்டு 1921 இல் இந்தியாவுக்குத் திரும்பினார். திரும்பி வந்த பிறகு, அவர் இந்திய தேசிய காங்கிரஸில் உறுப்பினரானார். தேஷ்பந்து சித்தரஞ்சன் தாஸின் கீழ் பணியாற்ற மகாத்மா காந்தி அவருக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், தாஸ் அவரது „அரசியல் குரு" ஆனார். 1928 இல், மகாத்மா காந்தி ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார், அதில் அவர் இரண்டு ஆண்டுகளுக்குள் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்க வேண்டும் என்று ஆங்கிலேயரிடம் கோரினார். இரண்டு ஆண்டுகளுக்குள் ஆங்கிலேயர்கள் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றத் தவறினால், பூரண சுயராஜ்யத்துக்காகப் போராட அனைத்து இந்தியர்களுக்கும் காங்கிரஸ் அழைப்பு விடுக்கும் என்றும் அவர் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆங்கிலேயர்களுக்கு காந்திஜி வழங்கிய காலகட்டத்தை போஸ் மற்றும் நேரு எதிர்த்தனர். பின்னர், அவர் காலத்தை ஒரு வருடமாக குறைத்தார். நேரு புதிய தீர்மானத்திற்கு வாக்களித்தார், ஆனால் போஸ் இந்தத் தீர்மானத்திற்கு வாக்களிக்க மறுத்துவிட்டார்.

1930 இல், சட்டமறுப்பு இயக்கத்தின் போது போஸ் கைது செய்யப்பட்டார். காந்தி-இர்வின் ஒப்பந்தத்திற்குப் பிறகு, அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவர் ஒப்பந்தத்தையும் இயக்கத்தை திரும்பப் பெறுவதையும் எதிர்த்தார். பின் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். உடல்நலக்குறைவு காரணமாக, ஓராண்டுக்குப் பிறகு சிறையில் இருந்து வெளியே வந்தார். அவர் இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்டு ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டார். இரு நாடுகளுக்கும் இடையே அரசியல்-கலாச்சார தொடர்புகளை மேம்படுத்த ஐரோப்பாவில் சில மையங்களைத் திறக்க அவர் முயற்சிகளை மேற்கொண்டார். சிறிது காலம் கழித்து, அவர் இந்தியாவுக்குள் நுழைந்தார், தடையை மீறிய காரணத்திற்காக மீண்டும் ஒரு வருடம் கைது செய்யப்பட்டார். 1937-ல் காங்கிரஸ் ஏழு மாநிலங்களில் ஆட்சிக்கு வந்த போது அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

1938ல் ஹரிபுரா காங்கிரஸ் மாநாட்டின் தலைவரானார். அதே ஆண்டில்,

அவர் ஒரு திட்டக்குழுவை நிறுவினார். அவரது பதவிக்காலம் முடிந்ததும், திரிபுரி காங்கிரஸ் கூட்டத் தலைவரானார். இரண்டாம் உலகப் போரின் போது, அவர் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார், அதில் அவர் ஆறு மாதங்களுக்குள் இந்தியாவில் ஆங்கிலேயர்களின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று கோரினார்.

ஆங்கிலேயர்கள் அவ்வாறு செய்யத் தவறினால் நாட்டில் கிளர்ச்சி ஏற்படும் எனவும் அவர் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த தீர்மானத்தை சில காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்த்தனர். இதையடுத்து, தலைவர் பதவியை ராஜினாமா செய்து பார்வர்டு பிளாக் என்ற அமைப்பை உருவாக்கினார். இதற்குப் பிறகு, அவர் இந்தியாவில் ஒரு வெகுஜன இயக்கத்தைத் தொடங்கினார், அதற்கு ஏராளமான மக்கள் ஆதரவளித்தனர். இதற்காக அவர் கல்கத்தாவில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். 1941 இல், அவர் ஆப்கானிஸ்தான் வழியாக ஜெர்மனியை அடைந்தார். ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போரிட ஜெர்மனி மற்றும் ஜப்பானின் உதவியைப் பெற்றார். விரைவில், அவர் ரேடியோ பெர்லின் ஊடகத்தைப் பயன்படுத்தினார் மற்றும் அவரது ஒலிபரப்புகள் இந்தியர்களிடையே உற்சாகத்தைத் தூண்டின.

1943ல் சிங்கப்பூர் சென்று ஆசாத் ஹிந்த் ஃபௌஜ் என்ற அமைப்பை உருவாக்கினார். இந்த இராணுவத்தின் பெரும்பாலான வீரர்கள் இந்திய போர்க் கைதிகள். ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போரிட வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தப் படை இந்தியாவுக்குச் சென்றது. இந்தியாவிற்கு செல்லும் வழியில், அந்தமான் நிக்கோபார் தீவுகளை விடுவித்தது. 1944 இல், இந்த இராணுவத்தின் தலைமையகம் ரங்கூனுக்கு மாற்றப்பட்டது. மார்ச் 18, 1944 இல், இராணுவம் பர்மா எல்லையைக் கடந்து இந்தியாவை அடைந்தது. எனினும், இரண்டாம் உலகப் போரில் ஜப்பானும் ஜெர்மனியும் தோற்கடிக்கப்பட்டன, இதனால இராணுவத்தால் அதன் நோக்கத்தை நிறைவேற்ற முடியவில்லை.

சில ஆதாரங்களின்படி, ஆகஸ்ட் 18, 1945 அன்று தைவானின் தைபே (ஃபார்மோசா) மீது விமான விபத்தில் போஸ் இறந்தார். இருப்பினும், இந்தக் கூற்றை நிரூபிக்க எந்த ஆதாரமும் இல்லை. இதனால், அவரது மரணம் இன்னும் மர்மமாகவே உள்ளது.

**இந்திய தேசிய ராணுவம்**

இந்திய தேசிய இராணுவம் (INA) 1942 இல் சுபாஷ் சந்திர போஸால்
நிறுவப்பட்டது. அவர்கள் இரண்டாம் உலகப் போரின் போது (1939-1945) இந்திய மண்ணில் இருந்து காலனித்துவ சக்திகளை தூக்கி எறிய வேண்டும் என்ற நோக்கத்துடன் அச்சு நாடுகளுக்கு பக்கபலமாக இருந்தனர். இந்திய தேசிய ராணுவம் „ஆசாத் ஹிந்த் ∴பௌஜ்" என்றும் அழைக்கப்பட்டது.

ஜப்பானியப் படைகள் 1941 இல் மலாயாவில் ஆங்கிலேயர்களைத் தோற்கடித்தன. இந்த சம்பவம் தென்கிழக்கு ஆசியாவில் வசிக்கும் இந்திய மக்களுக்கு உத்வேகம் அளித்தது. இந்தியர்கள் ஒன்று கூடி தென்கிழக்கு ஆசியாவில் இருந்து பல சங்கங்களை ஏற்பாடு செய்தனர். பிரீதம் சிங் அத்தகைய அமைப்பின் தலைவராக இருந்தார். அவர், ஜப்பானிய அதிகாரி மேஜர் புஜிஹாராவுடன் சேர்ந்து, மோகன் சிங்கிடம் கைப்பற்றிய இந்திய வீரர்களைக் கொண்டு இந்திய இராணுவத்தை உருவாக்குமாறு கோரினர். முதலில் தயக்கம் காட்டினாலும், மோகன் சிங் சம்மதித்ததால், புஜிஹாரா அவரிடம் சரணடைந்த சுமார் 40,000 இந்திய வீரர்களை ஒப்படைத்தார். இது இந்திய தேசிய ராணுவம் உருவாவதற்கு வழி வகுத்தது. சிங்கப்பூர், பிப்ரவரி 1942 இல் ஜப்பானியரிடம் சரணடைந்தது. அப்போது ஜப்பானில் வசிக்கும் புரட்சிகர ஆர்வலர் ராஷ் பிஹாரி போஸ், ஜப்பானில் வாழும் சுதந்திர இந்தியர்களஎன்ற சங்கத்தை ஏற்பாடு செய்தார். ஜூன் 15, 1942 இல் பாங்காக்கில் ஒரு மாநாடு நடைபெற்றது, அங்கு ஒரு தேசிய இந்திய இராணுவம் அமைக்கப்படும் என்று முடிவு செய்யப்பட்டது. ஐந்து பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டு அதன் தலைவராக ராஷ் பிஹாரி போஸ் நியமிக்கப்பட்டார். இந்திய தேசிய ராணுவம் உருவாக்கம் முறையாக அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், சுபாஸ் சந்திர போஸ் 17 ஜனவரி 1941 அன்று கல்கத்தாவை விட்டு வெளியேறி ஆப்கானிஸ்தான் வழியாகப் பயணம் செய்து ஜெர்மனிக்கு வந்தார். பெர்லினில், அவர் நாடுகடந்த இந்திய அரசாங்கத்தை ஏற்பாடு செய்தார். மேலும் ஜெர்மனிக்கு ஆதரவை வழங்கினார். அவர் தனது நோக்கங்களையும் குறிக்கோள்களையும்

பெர்லின் வானொலி மூலம் ஒலிபரப்பத் தொடங்கினார். தொடர்பை ஏற்படுத்தினார். போஸ், அடோல்∴ப் ஹிட்லருடனும், ஜப்பானுடனும் தொடர்பு கொண்டார், இந்தியாவில் மிகப்பெரிய உற்சாகம் கிளர்ந்தெழுந்தது. ஜெர்மனியில் உள்ள இந்தியர்கள் அவருக்கு "நேதாஜி" என்ற பட்டத்தை வழங்கினர், இந்த நேரத்தில் "ஜெய்-ஹிந்த்" என்ற முழக்கம் இங்கு தொடங்கப்பட்டது.

ஜூன் 1943 இல் டோக்கியோவுக்கு வந்த போஸ், ஜப்பானியப் பிரதம மந்திரி ஹிடேகி டோஜோவால் (1941-44) அன்புடன் வரவேற்கப்பட்டார். ஜப்பான் இந்தியாவுக்கு உதவி செய்தது. 1943 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் தேதி போஸை சிங்கப்பூர் வந்தடைந்தபோது பெரும் கூட்டம் சிங்கப்பூரில் திரண்டது. ஜூலை 4 ஆம் தேதி ராஷ் பிஹாரி போஸ் ராஜினாமா செய்தார். மேலும் போஸ் கிழக்கு ஆசியாவில் இந்திய சுதந்திர இயக்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். ஆகஸ்ட் 25 அன்று, போஸ் இந்திய தேசிய ராணுவத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். 1943 ஆம் ஆண்டு அக்டோபர் 21 ஆம் தேதி, ஆசாத் ஹிந்தின் தற்காலிக அரசாங்கத்தை அமைப்பதாக அறிவித்தார், 23 ஆம் தேதி பிரிட்டன் மற்றும் அமெரிக்கா மீது போரை அறிவித்தார்.

அதன்பின் நேதாஜி சிங்கப்பூரில் இருந்து டோக்கியோ சென்றார் ஜப்பான பிரதமர் டோஜோ நேதாஜியும் கிழக்காசிய மாநாட்டில் கலந்துகொண்டன. அந்த மாநாட்டில்தான் ஜப்பான் பிரதமர் அந்தமான் நிக்கோபார் தீவுகளை நேதாஜியிடம் ஒப்படைத்தார். அதன்பின் அந்தமானுக்கு சென்ற நேதாஜி அந்தமானுக்கு ஷாகித் என்ற பெயரையும் நிக்கோபாருக்கு சுயராஜ் என்ற பெயரையும் சூட்டினார். இடைக்கால அரசாங்கத்தின் தலைமை மையத்தை சிங்கப்பூரிலிருந்து ரங்கூனுக்கு மாற்றினார். 1944 பிப்ரவரி 4ஆம் நாள் நேதாஜி தனது வரலாற்று சிறப்புமிக்க இந்தியப்படையெடுப்பை ரங்கூனில் இருந்து துவங்கினார். இந்திய தேசிய ராணுவம் இந்தியா பர்மா எல்லையில் பிரிட்டிஷ் படையின் எதிர்ப்பை முறியடித்து இந்தியாவுக்குள் நுழைந்தது. இந்திய மண்ணில் தேசிய கொடி ஏற்றப்பட்டது. தேசிய கீதம் இசைக்கப்பட்டது. கடுமையான போருக்குப்பின் ஜப்பான் இந்திய தேசிய இராணுவ கூட்டுப் படை 1944 ஏப்ரல் 6இல் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த கொஹிமாவைக் கைப்பற்றியது. மே மாதத்துக்குள் இம்பாலும் கூட்டுப்படை வசம் வந்துவிடும் என்று

எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பருவ மழை குறுக்கிட்டதால் ராணுவ தளவாடங்களும் உணவுப்பொருட்களும் வந்து சேர்வது தடைபட்டது. மேலும் அப்பகுதியில் பிரிட்டிஷ் கூடுதல் படையினர் வந்ததால் கூட்டுப்படை பின்வாங்க நேர்ந்தது.

பிரிட்டிஷ் படை 1945 மே மாதம் ரங்கூனைக் கைப்பற்றி 23 ஆயிரம இந்திய இராணுவத்தினரை போர்க் கைதிகளாகப் பிடித்தது. பின்னர் அவர்கள் விசாரணைக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். 1945 ஆகஸ்ட் 15ஆம் நாள் ஜப்பான் சரணடைந்தது. நேதாஜியின் நோக்கம் நிறைவேறவில்லை. ஆனாலும் அவர் ரஷ்யாவின் துணையோடு பிரிட்டனுக்கு எதிராக போரிட திட்டமிட்டார். ஆனால் ரஷ்யா செல்லும் வழியில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் 1945 ஆகஸ்ட் 18 இல் தேசிய சீனாவின் தலைநகர் தைபையில் நடந்த விமான விபத்தில் அகால மரணம் அடைந்தார்.

**இந்திய தேசிய ராணுவம் பற்றிய மதிப்பீடு**

நேதாஜி தலைமையில் செயல்பட்ட இந்திய தேசிய ராணுவம் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. இந்திய தேசிய ராணுவ வீரர்களின் போராட்டம் வெள்ளையனே வெளியேறு இயக்க போராட்டத்திற்கு இணையாக நடத்தப்பட்டது. அதுமட்டுமன்றி பிரிட்டிஷ் ராணுவத்தில் இருந்து இந்திய அதிகாரிகள் மற்றும் வீரர்களை கொண்டு இனியும் இந்தியாவை அடக்கியாள முடியாது என்ற உண்மையை புதிய அரசாங்கம் உணர்ந்து கொண்டது. ஒன்பதுநாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய சுதந்திர தற்காலிக அரசாங்கமும் இந்திய தேசிய ராணுவத்தின் வீரச் செயல்களும் இந்தியாவுக்கு சர்வதேச அந்தஸ்தை கொடுத்தன. மேலும் இந்திய விடுதலையின் அவசியத்தை உலகநாடுகள் உணரவும் செய்தன. இரண்டாம் உலகப் போர் முடிந்த பின் இந்திய அரசாங்கம் இந்திய தேசிய ராணுவ அதிகாரிகள் சிலர் மீது வழக்கு தொடர்ந்தது. அரசாங்கத்தை எதிர்த்து போரிட்டனர் என்று அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது. இவ்வழக்கு ஷாநவாஸ், லட்சுமி சேகல் மற்றும் தில்லான் ஆகிய மூவரை மையமாகக் கொண்டிருந்தது. 1945 நவம்பர் 5ஆம் நாள் டெல்லி செங்கோட்டையில் துவங்கிய இந்த வழக்கு நாட்டு மக்களிடையே பெரும் பரபரப்பையும் பதட்டத்தையும் ஏற்படுத்தியது. குற்றம்சாட்டப்பட்ட அதிகாரிகளின் சார்பாக வழக்கை எதிர்கொள்ள காங்கிரஸ் தீர்மானித்தது. வழக்கு நடத்த நிதி திரட்டப்பட்டது. 12

ஆண்டுகளுக்குப் பிறகு நேரு வழக்கறிஞர் சீருடை அணிந்து வழக்கு விசாரணையில் வாதிட்டார். நீதிமன்றம் அதிகாரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதால் கூறி அவர்களை வாழ்நாள் முழுவதும் நாடுகடத்த தீர்ப்பளித்தது. பின்னர் 1946ஜனவரி 3ஆம் நாள் பிரிட்டிஷ் தலைமைத் தளபதி தண்டனையை குறைத்து உத்தரவிட்டார். பின்னர் பிரிட்டிஷ் அரசாங்கம் வழக்கை தள்ளுபடி செய்தது. இந்திய தேசிய ராணுவ அதிகாரிகள் மீதான செங்கோட்டை வழக்கு இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கிய மைல்கல் ஆகும்.

**வேவல் திட்டம்**

இந்திய விடுதலை குறித்த தனது திட்டத்தினை அரசப்பிரதிநிதியான வேவல்பிரபு 1945, ஜீன், 14ல் வானொலி அறிக்கையின் மூலம் வெளியிட்டார். அதன்படி: 1. சும எண்ணிக்கையிலான இந்து-முஸ்லீம் உறுப்பினர்களைக் கொண்டதாக நிர்வாகசபை விரிவாக்கப்படும் 2. நிர்வாகசபை இடைக்கால அரசாகச் செயல்படும் 3. பின்னாளின் இந்தியர்கள் தங்களுக்கென தனியே ஓர் அரசியல் அமைப்பை உருவாக்கிக் கொள்ளலாம் 4. மாநிலங்களிலும் கலப்பு அமைச்சரவைகளே ஏற்படும்.

வேவல் திட்டம் வெளியானதும் சிறையிலிருந்த காங்கிரசுத் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அத்திட்டத்தைப் பற்றி விவாதிக்க 1945, ஜீன் 29ல் சிம்லாவில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. இந்தியத் தலைவர்கள் 22 பேர் கலந்துக்கொண்ட அம்மாநாட்டில் முஸ்லீம் லீக் ஏற்றுக்கொள்ளும் முஸ்லீம்களே முஸ்லீம்களின் பிரதிநிதிகளாக நிர்வாகசபையில் இடம்பெற வேண்டுமென ஜின்னா வலியுறுத்தியதால் வேவலின் திட்டம் தோல்வியுற்றது. இந்து-முஜ்லீம் வேற்றுமை ஆட்சியாளர்களுக்கு மகிழ்ச்சியையே அளித்தது.

**காபினெட் தூதுக்குழு**

இரண்டாம் உலகப்போர் முடீவுற்றதும் இந்திய அரசியல் சூழ்நிலை முற்றிலும் மாறியது. இங்கிலாந்தில் நடைபெற்ற தேர்தலில் தொழிற்கட்சி வெற்றிபெற்று அட்லி பிரதமரானார். தேர்தல் கால உறுதி மொழிகளுக்கேற்ப இந்தியரின் தேவையை உணர்ந்து சில அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சிறையிலிருந்த அரசியல் தலைவர்கள் அனைவரையும் வேவல் பிரபு விடுதலை செய்தார். இந்தியாவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பொருட்டு சர் ஸ்டா.ஃபோர்டு கிரிப்ஸ், பெதிக்லாரன்ஸ், அலெக்நாண்டர் ஆகியோர் அடங்கிய

தூதுக்குழு ஒன்று இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 1943, மார்ச், 23ல் இந்தியாவை அடைந்த அக்குழு மறுநாள் டில்லியை அடைந்தது. காங்கிரசு தலைவர்களுடனும், முஸ்லீம் லீக் தலைவர்களுடனும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னும் ஒரு முடிவும் ஏற்படாது போகவே தனது தனித்திட்டத்தை அக்குழு அறிவித்தது. **அக்குழுவின் பரிந்துரைகளாவன:**

- பிரிட்டிஷ் இந்தியப் பகுதியும், சுதேச அரசுகளும் இணைந்த இந்திய நாடு உருவாக வேண்டும். வெளிவிவகாரம், பாதுகாப்பு, போக்குவரத்து, நிதி போன்றவை அதன் பொறுப்பிலிருக்கும்.
- இந்திய, சுதேச அரசுப் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றம் ஏற்படும் வகுப்புவாதச் சிக்கல் குறித்த சட்டம் இரு பெரும் சமுதாய உறுப்பினர்களின் பெரும்பாலான உறுப்பினர்களும், சட்டமன்றத்தின் பெரும்பாலான உறுப்பினர்களும் இருக்கும்போதே நிறைவேற்றப்படும்.
- மைய அரசுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளைத் தவிர்த்து ஏனைய துறைகளனைத்தும் மாநிலங்களிடமே இருக்கும்.
- மாநிலங்கள் விரும்புமாயின் அவைக்குழுக்களாக இணைந்தும் இயங்கலாம்.
- மைய, மாநில அரசியல் அமைப்பினை 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மறுபரிசீலனை செய்திட உரிய உரிமைகள் அதில் இடம் பெற்றிருக்க வேண்டும்.
- மறைமுகத் தேர்தலின் மூலம் 385 உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் அமைப்புச் சபை ஏற்படுத்தப்படும். அதில் மாநிலங்களின் உறுப்பினர்களாக 292 பேரும், சுதேச அரசுகளின் உறுப்பினர்களாக 93 பேரும் இருப்பர்.
- இனவழி மக்கள் தொகைக்கேற்ப மாநிலங்களின் உறுப்பினர் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படும.
- நாட்டுபிரிவினை வேண்டாத இந்து உறுப்பினர்களும், பாக்கிஸ்தான் பிரிவினை
- வேண்டும் முஸ்லீம உறுப்பினர்களும் மாநிலங்களுக்கான அரசியல் சட்டத்தை உருவாக்கிய பின்னர் மைய அரசின் அரசியல் சட்டத்தை உருவாக்க வேண்டும்.

- அரசியல் சட்டம் உருவாகும் வரை இந்தியர்களையே கொண்ட இடைக்கால அரசு ஒன்று ஏற்பட வேண்டும்.
- அதிகாரமாற்றம் குறித்து அரசியல் அமைப்பு அவைக்கும், ஆங்கில அரசுக்குமிடையே ஓர் உடன்பாடு ஏற்பட வேண்டும்.

காபினெட் தூதுக்குழுவின் பரிந்துரைப்படி 1946, ஜீலையில் அரசியல் அமைப்பு அவைக்கான தேர்தல் நடைடிபற்றது. மாநிலங்களிலிருந்து 292 பேரும், தலைமை ஆணையாளர்களின் ஆட்சிப்பகுதிகளிலிருந்து 4 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதில் காங்கிரசுக்கு 212 இடங்களும், முஸ்லீம் லீக்கு 73 இடங்களும், பிற கட்சிகளுக்கு 11 இடங்களும் கிடைத்தன.

**இடைக்கால அரசு**

அமைச்சகத தூதுக்குழுவின் பரிந்துரைகளை இரு கட்சியினரும் தொடக்கத்தில் ஏற்றுக் கொண்டனர். 1946, ஆகஸ்டு, 12ல் ஓர் இடைக்கால அரசை அமைக்குமாறு ஜவஹர்லால் நேரு கேட்டுக் கொள்ளப்பட்டார். அவ்வரசில் இடம் பெறவேண்டிய முஸ்லீம உறுப்பினர்களை நியமிக்கும் உரிமை முஸ்லீம் லீகுக்குஅளிக்கப்படவேண்டுமென ஜின்னா வலியுறுத்தியதை அரசப் பிரதிநிதியும், தூதுக்குழுவினரும் ஏற்க மறுக்கவே நேருவின் தலைமையிலான இடைக்கால அரசில் பங்கு கொள்ள முஸ்லீம் லீக் மறுத்துவிட்டது.

1946, ஆகஸ்டு16ம்நாளை „நேரடி செயல் நாள்"(Direct Action Day) என அறிவித்தார் ஜின்னா. ஆதன் விளைவாக நாடெங்கும் இந்து-முஸ்லீம் லகங்கள் தோன்றின. அந்நாள் இந்திய வரலாற்றில் கறுப்புக்கறை படிந்த நாளாயிற்று. கல்கத்தாவில் மட்டும் ஏழாயிரம பேர்இனக் கொலைக்கு ஆளாயினர். கொலையும், கொள்ளையும் அழிவின் எல்லையைச் சந்தித்தன. இறுதியில் அரசப்பிரதிநிதியின் தலையீடு காரணமாக இடைக்கால அரசில் இடம் பெற முஸ்லீம் லீக் இணங்கியது. அரசில் இடம் பெற்ற முஸ்லீம் லீகினர் அரசரின் நண்பர்களாகவும், உள்ளிருந்து குழிப்பறிப்போராகவும் இயங்கியதால் இடைக்கால அரசு தடுமாறியது.

**இந்தியப் பிரிவினை**

1947 **ஆம் ஆண்டு இந்தியப் பிரிவினையானது பிரிட்டிஷ் இந்தியா இரண்டு தனித்தனி நாடுகளாகப் பிரிக்கப்பட்டது :யூனியன் ஆ∴ப் இந்தியா மற்றும்**

டொமினியன் ஆஃப் பாகிஸ்தான் .இந்த பிரிவினை இரண்டு தனி நாடுகளை உருவாக்க வழிவகுத்தது .இப்போதெல்லாம், இந்தியாவின் டொமினியன் இந்திய குடியரசு என்றும், பாகிஸ்தானின் டொமினியன் பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசு என்றும் அழைக்கப்படுகிறது.

1947ல் நடந்த இந்தியப் பிரிவினை தெற்காசிய வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இதன் விளைவாக பிரிட்டிஷ் இந்தியா இந்தியா மற்றும் பாகிஸ்தான் என இரு சுதந்திர நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. இந்த பிரிப்பு மத அடிப்படையிலானது, இந்தியா முக்கியமாக இந்துவாகவும், பாகிஸ்தான் முஸ்லிம்களுக்கான தனி தாயகமாகவும் உருவாக்கப்பட்டது. பிரிவினையானது வளர்ந்து வரும் மத பதட்டங்கள் மற்றும் தனி நாடுகளுக்கான கோரிக்கைகளின் பிரதிபலிப்பாகும்.

இரண்டு புதிய நாடுகளுக்கு இடையே மில்லியன் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்ததால் இந்த செயல்முறை வன்முறை மற்றும் வெகுஜன இடம்பெயர்வுகளால் குறிக்கப்பட்டது. பிரிவினையானது இனவாத கலவரங்கள் மற்றும் மதங்களுக்கிடையேயான மோதல்களுடன் சேர்ந்து வரலாற்றில் மிகப்பெரிய மற்றும் மிகவும் துயரமான மனித இடம்பெயர்வுக்கு வழிவகுத்தது. இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில், குறிப்பாக சர்ச்சைக்குரிய காஷ்மீர் பிராந்தியத்தில், தொடர்ந்து பதட்டங்கள் நிலவி வருவதால், பிரிவினையின் மரபு அப்பகுதியில் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

**இந்தியப் பிரிவினையின் வரலாறு**

- வங்கப் பிரிவினை மத அடிப்படையில் நடந்தபோது, இந்தியப் பிரிவினைக்கான விதைகள் விதைக்கப்பட்டதாகக் கூறலாம்.
- வைஸ்ராய் லார்ட் கர்சன் , பரவலான சீற்றம் மற்றும் எதிர்ப்புகளுக்குப் பிறகு தனது எண்ணத்தை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.
- 1916 இல் லக்னோவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் , இந்திய தேசிய காங்கிரஸும் முஸ்லிம் லீக்கும் லக்னோ ஒப்பந்தத்தின் கீழ் முன்னோடியில்லாத வகையில் ஒத்துழைப்பில் ஈடுபட்டன.
- பிரிட்டிஷ் அரசாங்கத்தின்" மத நடுநிலை "போலியானது என்ற முஸ்லிம் லீக்கின் கவலைகளால் இது தூண்டப்பட்டது.
- இதன் விளைவாக துருக்கியும் பிரிட்டனும் போரில் ஈடுபட்டிருந்தன.

- மெக்கா, மதீனா மற்றும் ஜெருசலேமில் உள்ள புனித தளங்களின் பாதுகாவலராக, துருக்கியின் சுல்தான் இஸ்லாத்தின் கலீஃபா அல்லது ஆன்மீகத் தலைவராக அங்கீகரிக்கப்பட்டார்.
- துணைக்கண்டத்தின் முஸ்லிம்கள் மீதான பிரித்தானிய நோக்கங்களின் மீதான அவநம்பிக்கை இதன் விளைவாக மட்டுமே வளர்ந்தது.
- பெரிய சுயராஜ்யத்தை அடைவதற்காக, முஸ்லீம் லீக் காங்கிரஸில் இணைந்தது.
- மாற்றாக, மாகாண சட்டமன்றம் மற்றும் இம்பீரியல் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் ஆகிய இரண்டிலும் முஸ்லிம்களுக்கு தனித் தொகுதிகளை ஏற்படுத்த காங்கிரஸ் ஒப்புக்கொண்டது.
- லக்னோ ஒப்பந்தம் இறுதியில் 1916 இல் கையொப்பமிடப்பட்டது, இருப்பினும் ஒப்பந்தத்தின் முழு மாற்றங்களும் அடுத்தடுத்த ஆண்டுகளில் வெளிப்பட்டன.
- பஞ்சாப் மற்றும் வங்காளத்தில் உள்ள முஸ்லீம் பெரும்பான்மையை விட உத்தரபிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்களைச் சேர்ந்த முஸ்லீம் உயரடுக்கின் ஒரு சிறிய குழு இந்த ஒப்பந்தத்தின் மூலம் அதிக பயனடைவார்கள் என்று கருதப்பட்டது.
- இந்த வெளிப்படையான உண்மை இருந்தபோதிலும், இந்த ஒப்பந்தம் இந்திய சுதந்திர இயக்கத்தில் ஒரு குறிப்பிடத்தக்க திருப்புமுனையாகப் பாராட்டப்பட்டது.
- இது கண்டத்தின் இரு பெரிய அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பைக் கண்டது, அவற்றின் வேறுபாடுகளை ஒதுக்கி வைத்தது.

**சுயமதிபிட்டு கேள்விகள்**

- வெள்ளையனே வெளியேறு இயக்கம்
- காபினெட் தூதுக்குழு -
- சிம்லா மாநாடு

**Recommended Readings**


- Bandyopadhyay, Sekhar, *From Plassey to Partition: A History of Modern India,* Orient Longman, New Delhi, 2006
- Chandra, Bipan, et. al., ed., *India's Struggle for Independence*, Penguin Random House India, New Delhi, 2016
- Grover, B.L. and Alka Mehta, ed., *A New Look at Modern Indian History: From 1707 to the Modern Times,* S. Chand & Co. Ltd., New Delhi, 2018
- Masselos, Jim, *Indian Nationalism: A History,* New Dawn Press, 2005
- Sarkar, Sumit, *Modern India, 1885-1947,*Laxmi Pub., New Delhi, 2008


**References**


1. Chand, Tara, *History of Freedom Movement in India, Vol. I - IV,* Pub. Div., New Delhi, 2017
2. Dutt, R.P., *India Today,* Read Books, 2008
3. Hasan, Mushirul, ed., *India's Partition* - *Process Strategy and Mobilization,* OUP, New Delhi, 1993
4. Mehrotra, S.R., *The emergence of the Indian National Congress*, Rupa& Co., 2007
5. Sitaramayya, Pattabhi B., *The History of Indian National Congress, 1885-1935,* Indian National Congress Working Committee, 1935
6. Sitaramayya, Pattabhi B., *The History of Indian National Congress, 1935-1947,* Padma Pub., 1947